# THE
# TEACHING OF JESUS.

# சற்குரு இயேசு போதித்த
# போதனைசாரம்.

இது

கனம் J. P. JONES பண்டிதரால்

இயற்றப்பட்டது.

NEW YORK
PUBLIC
LIBRARY

FIRST EDITION, 1,000 COPIES.

PASUMALAI:
Printed at the American Mission Lenox Press.

1908.

Digitized by Google

# முகவுரை.

## PREFACE.

சற்குருவாகிய இயேசுவானவர் திருவுளம்பற்றிய உபதேசங்களைக் காட்டும் இந்த நூலானது இந்தியா தேசத்து வாலிபருக்காகவும் தேவ ஊழியருக்காகவும் உண்டாக்கப்பட்டது. அவர்கள் இதை ஆராய்ந்து ஆழமாய்ப் படித்துவருவதால் அவர் திருவாய் மலர்ந்தருளின இரட்சிப்பின் சத்தியங்களைப் பூரணமாய்க் கற்று நேசித்து தங்கள் ஜீவியத்தின் ஆதாரமாக வைத்து நடக்கவேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம். நானே சத்தியமாயிருக்கிறேன் என்றவர், என்னிடத்தில் வந்து கற்றுக்கொள்ளுங்களென்று சொன்னாரே. பலபேரும் இந்தப் பரம அழைப்பைக் கேட்டு அவரண்டையில் சேர்ந்து அவர் உரைத்த சத்தியங்களைப் பிடித்து தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும்படி இந்த நூலானது உதவியாயிருக்கத்தக்கதாக பரிசுத்த ஆவியானவர் இதை உபயோகிப்பாராக.

J. P. J.

GOODSPEED 5 FEB 1932

Digitized by Google

Digitized by Google

# பொருளடக்கம்.


பக்கம்.

பாயிரம் ... ... ... ... ... 1, 2

பாடம்.

I. இயேசுவின் போதனைக்கு மூலாதாரமான நூல்கள் ... ... ... 3—5

II. இயேசு போதித்த போதனையின் பொதுவான குறிப்புகள் ... ... 5—10

III. கிறிஸ்துவின் போதனைகளுக்கும் பழைய ஏற்பாட்டின் போதனைகளுக்குமுள்ள சம்பந்தம் ... ... ... 10—12

IV. தமதுகாலத்திலிருந்த போதகன்மார்களைக் குறித்து இயேசு கொண்ட அபிப்பிராயம் ... ... ... 13, 14

I. அதிகாரம். இயேசு தம்மைக்குறித்துப் போதித்தவைகள் .... (15—59)

பாடம்.

I. காலம் நிறைவேறல் ... ... 15—17

II. சினப்டிக் (Synoptic) சுவிசேஷங்களுக்கும் யோவான் சுவிசேஷத்துக்கும் ஒற்றுமை ... ... ... 17—19

III. மேசியா ... ... ... 19, 20

IV. மனுஷகுமாரன் ... ... ... 21, 22

V. இந்தப் பெயரின் கருத்து ... ... 22, 23

VI. தேவகுமாரன் ... ... ... 24, 25

VII. நமது கர்த்தரின் மட்டேத்தன்மை ... 25, 26

VIII. நித்தியகுமாரன் ... ... ... 27, 28


Digitized by Google

| பாடம். | | பக்கம். |
|---|---|---|
| IX. | அவர் பாவமற்றவர் ... ... | 28, 29 |
| X. | அவர் பாவமற்றவர் (முடிவு) ... ... | 30, 31 |
| XI. | கடைசி நியாயாதிபதி ... ... | 31, 32 |
| XII. | கடைசி நியாயாதிபதி (தொடர்ச்சி) ... | 32—34 |
| XIII. | தேவனை வெளிப்படுத்துகிறவர் ... | 34, 35 |
| XIV. | அவர் மனிதருடைய இரட்சகர் ... | 35—37 |
| XV. | மனிதருடைய இரட்சகர் (தொடர்ச்சி) | 37, 38 |
| XVI. | மனிதருடைய இரட்சகர் (யோவான் சுவிசேஷத்தில் காணப்படுகிறபடி) ... | 39, 40 |
| XVII. | இயேசுவின் மரணம் ... ... | 40—42 |
| XVIII. | இயேசுவின் சிலுவை மூலாதாரமானது | 42—44 |
| XIX | சிலுவை மூலாதாரமானது (தொடர்ச்சி) | 44, 45 |
| XX. | அவர் மரணம் (தொடர்ச்சி) ... | 46, 47 |
| XXI. | அவர் மரணம் (தொடர்ச்சி) ... ... | 47—49 |
| XXII. | அவர் மரணம் (தொடர்ச்சி) ... ... | 49, 50 |
| XXIII. | அவர் மரணம் (முடிவு) ... ... | 51 |
| XXIV. | இயேசுவின் பிற்கால ஜீவியமும் ஊழியமும் (a) உயிர்த்தெழுதல் ... | 52, 53 |
| XXV. | ஷை (தொடர்ச்சி) (b) பரிந்துபேசுதல் | 54, 55 |
| XXVI. | ஷை (தொடர்ச்சி) (c) இரண்டாம் வருகை ... ... ... | 55, 56 |
| XXVII. | ஷை (தொடர்ச்சி) இரண்டாம் வருகை (தொடர்ச்சி) ... | 56—58 |
| XXVIII. | ஷை (முடிவு) இரண்டாம் வருகை (யோவான் சுவிசேஷத்தின்படி) ... | 58, 59 |

II. அதிகாரம். கிறிஸ்து பிதாவைக்குறித்துப் போதித்தது ... (60—66)

| பாடம். | | |
|---|---|---|
| I. | எதிருவமை ... ... ... | 60—62 |


Digitized by Google

பாடம். பக்கம்.

II. இந்த பிதாத்துவத்தின் அர்த்தமென்ன? 62, 63
III. பிதாத்துவத்தின் தன்மை (தொடர்ச்சி) 64, 65
IV. யோவான் சுவிசேஷத்தில் காணப்படும் பிதாத்துவம் ... ... 66

III. அதிகாரம். இயேசு பரிசுத்த ஆவியானவரைப்பற்றிப் போதித்தது (67—75)

பாடம்.

I. பழைய ஏற்பாட்டிலுள்ள பரிசுத்த ஆவியானவர் ... ... ... 67, 68
II. பரிசுத்த ஆவியானவர் ஒரு ஆள் ... 68, 69
III. கர்த்தருடைய ஜீவியத்தில் பரிசுத்த ஆவியானவர் ... ... ... 69, 70
IV. பரிசுத்த ஆவியின் கிரியை... ... 71, 72
V. பரிசுத்த ஆவியின் கிரியை (தொடர்ச்சி). 72, 73
VI. ஆவியானவரின் கிரியை (முடிவு) ... 73—75

IV. அதிகாரம். தேவனுடைய இராச்சியத்தைப் பற்றி இயேசு போதித்தது (76—95)

பாடம்.

I. இந்த இராச்சியத்தின் பெயர் ... 76, 77
II. இந்த இராச்சியத்தின் தன்மை. 1. இது ஆவிக்குரிய இராச்சியம்... ... 78, 79
III. ஷை (தொடர்ச்சி) 2. தற்கால இராச்சியமாயும் வருங்கால இராச்சியமாயும் இருந்தது ... ... ... 79—81
IV. ஷை (தொடர்ச்சி) 3. சர்வஜன இராச்சியம் 81, 82
V. ஷை (தொடர்ச்சி) 3 சர்வஜன இராச்சியம் 83
VI. ஷை (முடிவு) 3. சர்வஜன இராச்சியம் 84, 85
VII. இந்த இராச்சியத்தின் அங்கத்தாராவதற்கு அவசியமான நிபந்தனைகள் ... 85, 86

Digitized by Google

| பாடம். | | பக்கம். |
|---|---|---|
| VIII. | நிபந்தனைகள் (தொடர்ச்சி).... ... | 87, 88 |
| IX. | நிபந்தனைகள் (முடிவு) ... .... | 88, 89 |
| X. | தேவனுடைய இராச்சியத்தின் அங்கத்துவத்திற்குரிய குறிப்புகள் ... | 89, 90 |
| XI. | தேவனுடைய இராச்சியத்தின் அங்கத்துவம் (முடிவு) ... ... ... | 90—92 |
| XII. | இந்த இராச்சியத்தின் ஆசீர்வாதங்கள்... | 92, 93 |
| XIII. | இந்த இராச்சியத்தின் ஆசீர்வாதங்கள் (முடிவு) ... ... ... | 94, 95 |

V. அதிகாரம். மனிதனைப்பற்றி இயேசு போதித்தது .... ... (96—103)

| பாடம். | | |
|---|---|---|
| I. | இவ்வுலகத்திலுள்ள சிருஷ்டிகளில் மனிதனே தேவனுடைய பார்வையில் மேலானவன் ... ... ... | 96, 97 |
| II. | மனிதன் தேவனுடைய குமாரன் ... | 97, 98 |
| III. | அவன் கெட்டகுமாரன் ... ... | 99, 100 |
| IV. | பிசாசின் பிள்ளை... ... ... | 100, 101 |
| V. | சிறுபிள்ளைகளைப்பற்றி இயேசு போதித்தது ... ... ... | 102, 103 |

VI. அதிகாரம். சீஷனைப்பற்றி இயேசு போதித்தது .... (104—179)

| பாடம். | | |
|---|---|---|
| I. | சீஷன் ... ... ... | 104, 105 |
| II. | சீஷன் படிப்பிக்கப்படக்கூடியவனாயிருக்கவேண்டும் ... ... | 106, 107 |
| III. | சீஷன் இயேசுவுக்குப் பின்செல்லுகிறவன் ... ... ... | 108, 109 |
| IV. | ஷை ஷை (தொடர்ச்சி)... | 109, 110 |


Digitized by Google

| பாடம். | | பக்கம். |
|---|---|---|
| V. | சீஷன் இயேசுவுக்குப்பின்செல்லுகிறவன் | 111, 112 |
| VI. | சீஷன் சிலுவை சுமக்கிறவன் ... | 112—114 |
| VII. | சீஷனும் உண்மையும் ... ... | 114—116 |
| VIII. | சீஷனும் உண்மையும் (தொடர்ச்சி) ... | 116, 117 |
| IX. | சீஷனும் உண்மையும் (முடிவு) ... | 117, 118 |
| X. | சீஷனும் ஊழியத்தில் உண்மையும் ... | 119, 120 |
| XI. | ஷை (முடிவு) ... | 121, 122 |
| XII. | சீஷனும் ஜெபமும் ... ... | 123, 124 |
| XIII. | சீஷனும் ஜெபமும் (தொடர்ச்சி) ... | 124—126 |
| XIV. | ஷை ஷை ... | 126, 127 |
| XV. | ஷை ஷை ... | 127, 128 |
| XVI | ஷை ஷை ... | 129, 130 |
| XVII. | ஷை ஷை ... | 130, 131 |
| XVIII. | ஷை ஷை ... | 132, 133 |
| XIX. | ஷை (முடிவு) ... | 134, 135 |
| XX. | சீஷனும் ஐசுவரியமும் ... ... | 135, 136 |
| XXI. | சீஷனும் ஐசுவரியமும் (தொடர்ச்சி) ... | 137, 138 |
| XXII. | சீஷனும் ஐசுவரியமும் (முடிவு) ... | 138—140 |
| XXIII. | சீஷனும் உலகமும் ... ... | 140, 141 |
| XXIV. | சீஷனும் உலகமும் (முடிவு) ... | 141, 142 |
| XXV. | சீஷனும் சோதனையும் ... ... | 143, 144 |
| XXVI. | சீஷனும் சோதனையும் (முடிவு) ... | 145, 146 |
| XXVII. | சீஷனும் விசுவாசமும் ... ... | 146, 147 |
| XXVIII. | சீஷனும் விசுவாசமும் (முடிவு) ... | 148—150 |
| XXIX. | சீஷனும் மனத்தாழ்மையும்... ... | 150, 151 |
| XXX. | சீஷனும் மனத்தாழ்மையும் (தொடர்ச்சி) | 151, 152 |
| XXXI. | சீஷனும் மனத்தாழ்மையும் (முடிவு) ... | 152—154 |
| XXXII. | சீஷனும் தீமையைச் சகித்தலும் ... | 154, 155 |


Digitized by Google

| பாடம். | | பக்கம். |
|---|---|---|
| XXXIII. | சீஷனும் தீமையைச் சகித்தலும் (தொடர்ச்சி) ... ... ... | 155—157 |
| XXXIV. | சீஷனும் தீமையைச் சகித்தலும் (முடிவு) | 157, 158 |
| XXXV. | சீஷனும் சத்தியவேதமும் ... ... | 158—160 |
| XXXVI. | சீஷனும் சத்தியவேதமும் (முடிவு) ... | 161 |
| XXXVII. | சீஷன் எல்லா மனிதனையும் நேசிக்கவேண்டும் ... ... ... | 162, 163 |
| XXXVIII. | சீஷன் எல்லாரிடத்திலும் அன்புகூரவேண்டும் (முடிவு) ... ... | 163—165 |
| XXXIX. | சீஷனும் சகோதர அன்பும் ... | 165—167 |
| XL. | சீஷனும் மன்னித்தலும் ... ... | 167, 168 |
| XLI. | சீஷனும் மன்னித்தலும் (முடிவு) ... | 169, 170 |
| XLII. | துன்பப்படுகிற சீஷன் ... ... | 170—172 |
| XLIII. | சீஷனும் துன்பமும் (முடிவு) ... | 172, 173 |
| XLIV. | சீஷனும் தேவனுடைய இராச்சியம் பரம்புதலும் ... ... ... | 174, 175 |
| XLV. | சீஷனும் இராச்சியமும் (தொடர்ச்சி)... | 176, 177 |
| XLVI. | சீஷனும் இராச்சியமும் (முடிவு) ... | 177—179 |

## VII. அதிகாரம். திருச்சபையைக் குறித்து இயேசு போதித்தது.... (180—188)

| பாடம். | | |
|---|---|---|
| I. | திருச்சபையின் தன்மை ... ... | 180—182 |
| II. | திருச்சபையின் தன்மை (தொடர்ச்சி)... | 182, 183 |
| III. | திருச்சபையின் தன்மை (முடிவு) ... | 184, 185 |
| IV. | திருச்சபை ... ... ... | 186, 187 |
| V. | திருச்சபை (முடிவு) ... ... | 187, 188 |

Digitized by Google

பக்கம்.

VIII. அதிகாரம். சாத்தானையும் தீய ஆவிகளையும்பற்றி கிறிஸ்து போதித்தது .... (189—190)

பாடம்.

I. தீய ஆவிகளின் வல்லமை ... ... 189, 190
II. பிசாசு பிடித்தல் ... ... 191, 192
III. இயேசுவும் சாத்தானும் ... ... 193, 194

IX. அதிகாரம். மறுமையைக்குறித்து இயேசு போதித்தது... (195 206)

பாடம்.

I. உயிர்த்தெழுதலும் அழியாமையும் ... 195, 196
II. பக்தரின் பின்னிலைமை ... ... 197, 198
III. பக்தரின் பின்னிலைமை (தொடர்ச்சி)... 198—200
IV. பக்தரின் பின்னிலைமை (முடிவு) ... 200, 201
V. அவபக்தரின் பின்னிலைமை ... 202, 203
VI. அவபக்தரின் பின்னிலைமை (முடிவு) ... 204—206

Digitized by Google

Digitized by Google

## CONTENTS.

PAGES.

Introduction ... ... ... ... 1, 2

I. The Sources of the Teaching of Jesus ... .. ... 3—5

II. The General Character of Our Lord's Teaching ... ... ... 5—10

III. The Connection of Christ's Teaching with the Old Testament ... 10—12

IV. What was the Attitude of Jesus towards the Religious Teachers of His Day? ... ... ... 13, 14

CHAPTER I. JESUS' TEACHING CONCERNING HIMSELF... ... (15—59)

STUDY.

I. The Fullness of Time ... ... 15—17

II. The Synoptics and John Harmonized 17—19

III. The Messiah ... ... ... 19, 20

IV. The Son of Man ... ... 21, 22

V. The Significance of this Name ... 22, 23

VI. The Son of God ... ... 24, 25

VII. Our Lord's Limitations... ... 25, 26

VIII. Eternal Son ... ... ... 27, 28

IX. He is Sinless ... ... ... 28, 29

X. Do. (*Continued*) ... 30, 31

Digitized by Google

| STUDY. | | PAGES. |
|---|---|---|
| XI. | Last Judgment ... ... | 31, 32 |
| XII. | Do. (*Continued*) ... | 32—34 |
| XIII. | Revelation of God ... ... | 34, 35 |
| XIV. | The Savior of Men ... ... | 35—37 |
| XV. | Do. (*Continued*) ... | 37, 38 |
| XVI. | The Savior of Men (John's Gospel). | 39, 40 |
| XVII. | The Death of Jesus .. ... | 40—42 |
| XVIII. | His Cross Fundamental ... ... | 42—44 |
| XIX. | Do. (*Continued*) ... | 44, 45 |
| XX. | His Cross (*Continued*) ... | 46, 47 |
| XXI. | Do. (*Continued*) ... | 47—49 |
| XXII. | Do. (*Continued*) ... | 49, 50 |
| XXIII. | Do. (*Concluded*) ... | 51 |
| XXIV. | His Future Life and Work (Resurrection) ... ... | 52, 53 |
| XXV. | Do. (Intercession) ... | 54, 55 |
| XXVI. | Do. (His Second Coming) ... | 55, 56 |
| XXVII. | Do. Do. (*Continued*) | 56—58 |
| XXVIII. | Do. (*Concluded*) (The Gospel of John). ... | 58, 59 |

CHAPTER II. CHRIST'S TEACHING ABOUT THE FATHER... ... (60—66)

| STUDY. | | |
|---|---|---|
| I | A Contrast ... ... ... | 60—62 |
| II. | What does this Fatherhood Mean? | 62, 63 |
| III. | What does this Fatherhood Mean? (*Continued*) ... ... | 64—65 |
| IV. | Fatherhood in John's Gospel ... | 66 |

Digitized by Google

PAGES.

CHAPTER III. JESUS' TEACHING ABOUT THE HOLY SPIRIT ... (67—75)

STUDY.

I. The Holy Spirit in the Old Testament ... ... ... 67, 68
II. The Personality of the Holy Spirit 68, 69
III. The Holy Spirit in the Life of our Lord ... ... ... 69, 70
IV. The Work of the Spirit ... 71, 72
V. Do. (*Continued*) 72, 73
VI. Do. (*Concluded*) 73—75

CHAPTER IV. JESUS' TEACHING ABOUT THE KINGDOM OF GOD... (76—95)

STUDY.

I. The Name of the Kingdom ... 76, 77
II. The Nature of this Kingdom ... 78, 79
III. The Nature of this Kingdom (*Continued*) ... ... 79—81
IV. The Nature of this Kingdom (*Continued*) ... ... 81, 82
V. Do. (*Continued*) ... 83
VI. Do. (*Concluded*) ... 84, 85
VII. The Conditions of Membership in this Kingdom ... ... 85, 86
VIII. Do. (*Continued*) ... 87, 88
IX. Do. (*Concluded*) ... 88, 89
X. Membership in the Kingdom ... 89, 90
XI. Do. (*Concluded*)... 90—92
XII. The Blessings of the Kingdom ... 92, 93
XIII. Do. (*Continued*)... 94, 95

Digitized by Google

PAGE

CHAPTER V. JESUS' TEACHING CONCERNING MAN .. 96—103

STUDY

I. Man Supreme among God's Creatures .. 96

II. Man is a Son of God .. 97

III. He is a Lost Son .. 98

IV. He is a Son of the Devil .. 100

V. Jesus' Teaching about Children .. 102

CHAPTER VI. OUR LORD'S TEACHING CONCERNING THE DISCIPLE .. 104—1??

STUDY

I. The Disciple .. 104

II. The Disciple must be Teachable .. 105

III. The Disciple a Follower of Jesus .. 105

IV. Do. Do. (continued) .. 10?

V. Do. Do. (continued) .. [illegible]

VI. The Disciple a Cross-Bearer .. 112

VII. The Disciple and Service .. 11?

VIII. Do. Do. (continued) .. 116

IX. Do. Do. (continued) .. 11?

X. The Disciple and [illegible] .. 11?

XI. Do. Do. (continued) .. 12?

XII. The Disciple and Prayer .. 125

XIII. Do. Do. (continued) .. 12?

XIV. Do. Do. (continued) .. 126

XV. Do. Do. (continued) .. 127

XVI. Do. Do. (continued) .. 12?

XVII. Do. Do. (continued) .. 13?

XVIII. Do. Do. (continued) .. 13?

Digitized by Google

| STUDY. | | PAGES. |
|---|---|---|
| XIX. | The Disciple and Prayer (*Concluded*) | 134 |
| XX. | The Disciple and Wealth ... | 135, 136 |
| XXI. | Do. Do. (*Continued*) ... | 137, 138 |
| XXII. | Do. Do. (*Concluded*) ... | 138—140 |
| XXIII. | The Disciple and the World ... | 140, 141 |
| XXIV. | Do. Do. (*Concluded*) ... | 141, 142 |
| XXV. | The Disciple and Temptation ... | 143, 144 |
| XXVI. | Do. Do. (*Concluded*) ... | 145, 146 |
| XXVII. | The Disciple and Faith ... | 146, 147 |
| XXVIII. | Do. Do. (*Concluded*) ... | 148—150 |
| XXIX. | The Disciple and Humility ... | 150, 151 |
| XXX. | Do. Do. (*Continued*) ... | 151, 152 |
| XXXI. | Do. Do. (*Concluded*) ... | 152—154 |
| XXXII. | The Disciple and Non-resistance... | 154, 155 |
| XXXIII. | Do. Do. (*Continued*) ... | 155—157 |
| XXXIV. | Do. Do. (*Concluded*) ... | 157, 158 |
| XXXV. | The Disciple and the Bible ... | 158—160 |
| XXXVI. | Do. Do. (*Concluded*) ... | 161 |
| XXXVII. | The Disciple must Love all Men... | 162, 163 |
| XXXVIII. | Do. Do. (*Concluded*) ... | 163—165 |
| XXXIX. | The Disciple and Brotherly Love... | 165—167 |
| XL. | The Disciple and Forgiveness ... | 167, 168 |
| XLI. | Do. Do. (*Concluded*) ... | 169, 170 |
| XLII. | The Disciple under Persecution ... | 170—172 |
| XLIII. | Do. Do. (*Concluded*) ... | 172, 173 |
| XLIV. | The Disciple and the Spread of the Kingdom ... ... ... | 174, 175 |
| XLV. | Do. Do. (*Continued*) ... | 176, 177 |

Digitized by Google

PAGES.

CHAPTER V. JESUS' TEACHING CONCERNING MAN... ... (96—103)

STUDY.

I. Man Supreme among God's Creatures... ... ... 96, 97
II. Man is a Son of God ... ... 97, 98
III. He is a Lost Son ... ... 99, 100
IV. He is a Son of the Devil ... 100, 101
V. Jesus' Teaching about Children ... 102, 103

CHAPTER VI. OUR LORD'S TEACHING CONCERNING THE DISCIPLE ... (104—179)

STUDY.

I. The Disciple ... ... ... 104, 105
II. The Disciple must be Teachable... 106, 107
III. The Disciple a Follower of Jesus. 108, 109
IV. Do. Do. (*Continued*). 109, 110
V. Do. Do. (*Concluded*)... 111, 112
VI. The Disciple a Cross-Bearer ... 112—114
VII. The Disciple and Sincerity ... 114—116
VIII. Do. Do. (*Continued*)... 116, 117
IX. Do. Do. (*Concluded*)... 117, 118
X. The Disciple and Faithfulness ... 119, 120
XI. Do. Do. (*Concluded*)... 121, 122
XII. The Disciple and Prayer ... 123, 124
XIII. Do. Do. (*Continued*) ... 124—126
XIV. Do. Do. (*Continued*) ... 126, 127
XV. Do. Do. (*Continued*) ... 127, 128
XVI. Do. Do. (*Continued*) ... 129, 130
XVII. Do. Do. (*Continued*) ... 130, 131
XVIII. Do. Do. (*Continued*) ... 131—133

Digitized by Google

| STUDY. | | PAGES. |
|---|---|---|
| XIX. | The Disciple and Prayer (*Concluded*) | 134 |
| XX. | The Disciple and Wealth ... | 135, 136 |
| XXI. | Do. Do. (*Continued*) ... | 137, 138 |
| XXII. | Do. Do. (*Concluded*) ... | 138—140 |
| XXIII. | The Disciple and the World ... | 140, 141 |
| XXIV. | Do. Do. (*Concluded*) ... | 141, 142 |
| XXV. | The Disciple and Temptation ... | 143, 144 |
| XXVI. | Do. Do. (*Concluded*) ... | 145, 146 |
| XXVII. | The Disciple and Faith ... | 146, 147 |
| XXVIII. | Do. Do. (*Concluded*) ... | 148—150 |
| XXIX. | The Disciple and Humility ... | 150, 151 |
| XXX. | Do. Do. (*Continued*) ... | 151, 152 |
| XXXI. | Do. Do. (*Concluded*) ... | 152—154 |
| XXXII. | The Disciple and Non-resistance... | 154, 155 |
| XXXIII. | Do. Do. (*Continued*) ... | 155—157 |
| XXXIV. | Do. Do. (*Concluded*) ... | 157, 158 |
| XXXV. | The Disciple and the Bible ... | 158—160 |
| XXXVI. | Do. Do. (*Concluded*) ... | 161 |
| XXXVII. | The Disciple must Love all Men... | 162, 163 |
| XXXVIII. | Do. Do. (*Concluded*) ... | 163—165 |
| XXXIX. | The Disciple and Brotherly Love... | 165—167 |
| XL. | The Disciple and Forgiveness ... | 167, 168 |
| XLI. | Do. Do. (*Concluded*) ... | 169, 170 |
| XLII. | The Disciple under Persecution ... | 170—172 |
| XLIII. | Do. Do. (*Concluded*) ... | 172, 173 |
| XLIV. | The Disciple and the Spread of the Kingdom ... ... ... | 174, 175 |
| XLV. | Do. Do. (*Continued*) ... | 176, 177 |


Digitized by Google

| STUDY. | | PAGES. |
|---|---|---|
| XLVI. | The Disciple and Prayer (*Concluded*) | 177—179 |

CHAPTER VII. THE TEACHING OF JESUS ABOUT THE CHURCH ... (180—188)

| STUDY. | | |
|---|---|---|
| I. | The Character of the Church ... | 180—182 |
| II. | Do. Do. (*Continued*) ... | 182, 183 |
| III. | Do. Do. (*Continued*) ... | 184, 185 |
| IV. | Do. Do. (*Continued*) ... | 186, 187 |
| V. | Do. Do. (*Concluded*) ... | 187, 188 |

CHAPTER VIII. JESUS' TEACHING CONCERNING SATAN AND THE POWERS OF EVIL... ... (189—194)

| STUDY. | | |
|---|---|---|
| I. | The Power of Evil Spirits ... | 189, 190 |
| II. | Devil Possession ... ... | 191, 192 |
| III. | Jesus and Satan ... ... | 193, 194 |

CHAPTER IX. JESUS' TEACHING ABOUT THE FUTURE... ... (195—206)

| STUDY. | | |
|---|---|---|
| I. | Resurrection and Immortality ... | 195, 196 |
| II. | The Future of the Godly ... ... | 197, 198 |
| III. | Do. Do. (*Continued*) ... | 198—200 |
| IV. | Do. Do. (*Concluded*) ... | 200, 201 |
| V. | The Future of the Wicked ... | 202, 203 |
| VI. | Do. Do. (*Concluded*) ... | 204—206 |

Digitized by Google

# THE TEACHING OF JESUS.

# சற்குரு இயேசு போதித்த போதனாசாரம்.

## பாயிரம்.

## INTRODUCTION.

இயேசுவானவர் எல்லாப் போதகர்களிலும் பெரியவர். 'அந்த மனிதன் பேசுகிறதுபோல் ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை' என்று பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்னதாகச் சொல்லப்பட்ட இந்த வார்த்தைகள் இன்றைக்கும் உண்மையாகவேயிருக்கின்றன. தற்கால சாஸ்திரிமார் யாவரும் இவருடைய வார்த்தைகளை அதிகமாய் மதித்து வருகிறார்கள். மனிதருடைய ஜீவியத்தை மேன்மைப்படுத்துகிறதிலே எக்காலத்திலும் எத்தேசத்திலும் இருந்தவர்களுடைய ஜீவியத்தைப்பார்க்கிலும் அவருடைய ஜீவிய மாதிரி மகா விசேஷமாயிருந்தது எப்படியோ, அப்படியே மனிதர்களுடைய சிந்தனைகளைச் சுத்தப்படுத்தி உயர்த்துகிறதிலே சகல குருமாருடைய உபதேசங்களைப் பார்க்கிலும் இவருடைய உபதேசம் விசேஷமுள்ளது.

இந்தியா தேசத்திலே கர்த்தருடைய வசனத்தைப் படிப்பதற்குத் தற்காலமே மிகவும் ஏற்றது. இத்தேசத்தாருக்குள்ளே கல்விமான்களநேகர் இயேசுவை அதிகமாய் மதிக்கிறபடியால் அவர் போ

Digitized by Google

தித்தவைகள் இன்னவையென்று கற்றுக்கொள்ள மென்மேலும் வாஞ்சிக்கிறார்கள். அப்போஸ்தலர் உபதேசித்தவைகள் எவையென்று அறிய அவர்கள் ஆத்திரப்படுகிறதில்லை. ஆனால் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டிருக்கிற நல்லபிப்பிராயத்தினால் அவருடைய போதனைகளை ஆராய்வதையே முக்கியமாக்கிக்கொள்ளுகிறார்கள். இந்தியாவிலே, "கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்கிற வினா விசேஷித்ததாயிருக்கிறபடியினால், இயேசுவானவர் உரைத்தவைகளும் போதித்தவைகளும் என்னவென்று கற்றறிய ஜனங்களுக்கு நற்சமயம் கிடைத்திருப்பது பெரிய சிலாக்கியந்தான்.

தற்காலத்தில் கிறிஸ்தவர்கள் இயேசுவின் வார்த்தைகளை அதிகமாய் மதித்து ஆவலோடே படித்து ஆராய்ந்து வருவதுபோல, முந்தின எந்தக் காலத்திலும் அவைகளைப் படித்துவந்தார்கள் என்று காணப்படவில்லை. முந்தின நூற்றாண்டுகளில், கிறிஸ்தவர்களுடைய மதக்கொள்கைகளை ஸ்தாபித்ததிலே அப்போஸ்தலருடைய உபதேசத்தை, விசேஷமாக, பவுல் அப்போஸ்தலனுடைய உபதேசத்தைப் பிரதானப்படுத்தி வந்தார்கள். தற்காலத்திலே அப்போஸ்தலருடைய வார்த்தைகளல்ல, இயேசுவின் வார்த்தைகளே பிரதானமாய் எண்ணப்படுகின்றன. பவுலும் அவன் கூட்டாளிகளும் எழுதினவைகளல்ல, கிறிஸ்து போதித்தவைகளையே அறிந்துகொள்ளுவதற்கு இத்தேசத்தார் அதிகமாய் ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். அப்போஸ்தலருடைய உபதேசத்தை விட்டுக் கிறிஸ்து போதித்தவைகளுக்குத் திரும்பி வருவதே நமக்கு நலம். நம்முடைய விசுவாசத்தின் மூலகர்த்தா அவர்தான். கிறிஸ்துமார்க்க போதனைகள் ஒவ்வொன்றிற்கும் அவருடைய வார்த்தைகளே மூலாதாரமாயிருக்கவேண்டும். கிறிஸ்துவின் போதனையையே ஆதாரமாக வற்புறுத்திச் சொல்வது கடந்த அரை நூற்றாண்டாகக் கிறிஸ்தவர்களின் விசுவாசத்தையும் கொள்கைகளையும் அதிகமாய் மாற்றியிருக்கிறது. நமது மார்க்கத்தைக்குறித்து நாம் நன்றாய் அறியவேண்டுமானால் கிறிஸ்துவை நாம் நன்றாய் அறியவேண்டும். நமது எண்ணங்கள் ஏறவேண்டிய பிரகாசம்பொருந்திய நித்திய கன்மலை அவர்தான். கிறிஸ்தவ மார்க்கத்தின் அஸ்திபாரமும் உற்பத்தியும் அவரே, அவரே அதை ஸ்தாபித்தவர்; அவரே அதின் மொத்தப் பொருள். அவர்தான் கிறிஸ்தவ மார்க்கம். அவரை நாம் எவ்வளவுக்கு அறிகிறோமோ அவ்வளவுக்கு நாம் நமது மதத்தை அறிந்துகொள்ளக்கூடும். அவரை அதிக நன்றாய்க் கற்றறிகிறவன் நல்ல கிறிஸ்தவன். நாம் அவரை அறியவேண்டுமானால் அவருடைய வார்த்தைகளை நன்றாய் ஆராய்ந்து கற்றுக்கொள்ளவேண்டும்.

Digitized by Google

# I. இயேசுவின் போதனைக்கு மூலாதாரமான நூல்கள்.

## THE SOURCES OF THE TEACHING OF JESUS.

இவைகள் நாலு சுவிசேஷங்கள்தான். வேறு இல்லை. இச் சுவிசேஷங்களில் எழுதப்படாத அநேக வார்த்தைகள் முதலாம் நூற்றுண்டிலே பரம்பியிருந்தன. இவைகளிற் சிலது கடந்த கொஞ்சக் காலத்துக்குள் பற்பல நூல்களின் பூர்வீக நகல்களிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் நம்முடைய ஆராய்ச்சியின் ஆதாரங்கள் சதுர் சுவிசேஷங்கள்தான். இவைகளில் இரண்டு சுவிசேஷங்கள் அப்போஸ்தலரல்லாதவர்களால் எழுதப்பட்டவைகள். ஆயினும் இவைகள் யாவும் அவரோடு புழங்கி நெருங்கின சம்பந்தமுள்ளவர்களாயிருந்த அவருடைய அன்பான சீஷர்களால் எழுதப்பட்டன.

இச்சுவிசேஷங்களை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். மத்தேயு, மாற்கு, லூக்கா, என்பவர்கள் எழுதினவைகள், ஒரே பார்வையுள்ள சுவிசேஷங்கள் என்றர்த்தங்கொள்ளும் சினுப்டிக்சு (Synoptics) என்னப்படும். ஏனென்றால் அவைகள் நமது ஆண்டவரின் ஜீவியத்தை ஒரே நோக்கமாய்த் தொடுத்துச் சொல்வதினால்தான். அவைகள் அவருடைய புறம்பான சரித்திரத்திற்குரிய குறிப்புகளை விஸ்தரித்துக் காட்டி பொதுவாக அவர் கலிலேயாவிற் செய்த ஊழியத்தை மாத்திரம் குறிப்பிடுகின்றன. யோவான் சுவிசேஷமோ அவரது மனுஷீக தன்மையைவிட தெய்வீக தன்மையையே விசேஷித்துப் பேசுகிறது. அதுவுமன்றி, அவர் யூதேயாவைத் தமக்கு மத்தியஸ்தானமாக்கிக்கொண்டு எருசலேமுக்கு 5 தரம் பிரயாணஞ்செய்து தமது ஊழியத்தை நடப்பித்ததை இது விபரிக்கிறது. சில சமயங்களில் முந்தின மூன்று சுவிசேஷங்களும் சரீர சுவிசேஷங்கள் (Bodily Gospels) என்றும், யோவான் சுவிசேஷம் ஆவிக்குரிய சுவிசேஷம் (Spiritual Gospel) என்றும் சொல்லப்படுகின்றன. முதல் மூன்றிலே, நமது ஆண்டவர் பொதுவான ஜனங்களுக்குச் செய்த பிரசங்கங்கள் அழுத்திக் காட்டப்படுகின்றன. யோவான் சுவிசேஷத்திலோ, இயேசு தம்முடன் நெருங்கியிருந்த சீஷருக்குச் செய்த பிரசங்கங்கள் வற்புறுத்திச் சொல்லப்படுகின்றன. யோவான் சுவிசேஷத்தில் இயேசுவானவர் தமது மேசியாத்துவத்தை தமது ஊழியத்தினாரம்பத்திலேயே வெளிப்படுத்துகிறார். ஆனால் சினுப்டிக் சுவிசேஷங்களில் தமது ஊழியத்தின் கடைசிபரியந்தம் அவர் அதை வெளிப்படுத்தவில்லை.

Digitized by Google

மேலும் இச்சுவிசேஷங்கள் நமது ஆண்டவரின் வசனங்களை எடுத்து எழுதும் போங்கில் வித்தியாசப்படுகின்றன. சினுப்டிக் சுவிசேஷகர்கள் அவர் சொன்ன வார்த்தைகளையே நேராய் எடுத்து எழுதுகிறார்கள். யோவான் சுவிசேஷகனோ பொதுவாக அவருடைய வார்த்தையின் கருத்தைப் பிடித்துத் தன் சுயவார்த்தையில் எழுதுகிறான்.

சினுப்டிக் சுவிசேஷங்களுக்கும் யோவான் சுவிசேஷத்திற்கும் இவ்வித பேதங்கள் இருப்பதினாலே தற்கால கிறிஸ்தவ நூலாசிரியர்களிலநேகர் நாலாவது சுவிசேஷம் அவருடைய அன்பான சீஷனாகிய யோவானால் எழுதப்படாமல் அப்பெயரையுடைய பிற்காலக் கிறிஸ்தவன் ஒருவனால் எழுதப்பட்டதென்று வாதிக்கிறார்கள். அல்லாமலும் அவர்களுடைய சாட்சியம் சில விஷயங்களில் வித்தியாசப்படுகிறபடியால், ஆண்டவருடைய ஜீவியத்தைக்குறித்தும் போதனைகளைக்குறித்தும் தர்க்கிக்கும்போது அதைப் பிரத்தியேகமான ருசுவாக எடுத்து எழுதுவது வழக்கமாயிருக்கிறது. இந்தப் புஸ்தகத்திலோ, அந்த சாட்சியத்தை வித்தியாசப்படுத்தவேண்டிய இடங்களில் தவிர மற்றப்படி அதைப் பிரிக்கமாட்டோம்.

இந்த நாலு சுவிசேஷங்களில் ஒன்றாவது சரித்திரமல்ல; அவைகள் ஆண்டவருடைய சரித்திரமாக எழுதப்படவுமில்லை. சரித்திரத்துண்டுகளாயிருக்குமேயொழிய அவைகள் முழுச்சரித்திரங்களல்ல. யோ: 20: 31ல் பார்க்கிறபடி, "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும்" இவைகளெல்லாம் விசேஷித்த நோக்கத்தோடு எழுதப்பட்டிருக்கின்றன. இந்தச் சுவிசேஷங்களில் சிற்சில விகற்பங்கள் காணப்படுகின்றன. ஆகிலும் மொத்தத்தில் அவைகள் அவரை ஆச்சரியமான விதமாய்க்காட்டும் நாலு படங்கள்போலிருக்கின்றன. மேலும் தனித்தனியாக இந்த நாலுபேரும் அவனவன் தன்தன் நோக்கத்திற்கும் கருத்துக்கும் இசைவாக இந்தச் சுவிசேஷங்களை எழுதினபடியினாலே நமது ஆண்டவருடைய ஜீவியத்தைத் தெளிவாயும், பூரணமாயும் வாசித்தறியலாம். இப்படி இவர்கள் நாலுபேரும் கிறிஸ்துவைப்பற்றி நான்குவிதமாய் எழுதியிருக்கிறபடியால் அவைகள் ஒரு ஆளினால் எழுதப்பட்ட ஒரே சரித்திரத்தைப் பார்க்கிலும் அதிக இன்பமும் பிரயோஜனமுமுள்ளவைகளாயும், வாசிப்பவரின் மனதைப் பரவசப்படுத்துகிறவைகளாயும் இருக்கின்றன.

படிப்பறியாத இப்படிப்பட்ட சிலபேர் ஒருவரோடொருவர் கலந்து பேசாமல், இந்தப் பத்தொன்பது நூற்றாண்டாக உலகத்தா

Digitized by Google

ளைப் பரவசப்படுத்தி உலக இரட்சகருடைய வடிவைப் பூரண வகையாய்க் காட்டத்தக்கதாக இந்த நாலு சுவிசேஷங்களை எழுதினது அவர்கள் சுயமாய் எழுதாமல் தேவாவியினால் நடத்தப்பட்டு எழுதினார்களென்பதற்கு நிசமான ருசு என்று சொல்லவேண்டும்.

——:o:——

## II. இயேசு போதித்த போதனையின் பொதுவான குறிப்புகள்.

### THE GENERAL CHARACTER OF OUR LORD'S TEACHING.

சுவிசேஷத்திலே அவருடைய போதனைகளை நாம் கவனிக்கும் போது சில விசேஷித்த குறிப்புகளைக் காணலாம்.

(1) அவருடைய போதனைகள் வாய்மொழியாக வந்தவைகள். ஒரு புஸ்தகமாவது, பிரசங்கமாவது அவர் எழுதவேயில்லை. அவர் எழுதினார் என்பதற்கு ஒரேயொரு சிறு குறிப்பு மாத்திரம் உண்டு. "இயேசு குனிந்து விரலினாலே தரையில் எழுதினார்" என்பதே. (யோ. 8: 6.) ஆயினும் என் வார்த்தைகள் ஒருக்காலும் ஒழிந்துபோகாதென்று அவர் பூரண நம்பிக்கையோடே பிரசங்கித்தார். "வானமும் பூமியும் ஒழிந்துபோகும், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை." (மத். 24: 35.)

தம்முடைய போதனைகள் நிலைவரமான அச்சுப்பதிப்புள்ளதாயிருக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் அவர் போதிக்கவில்லை. ஆச்சரியமான ஆழ்ந்த கருத்துள்ள வார்த்தைகளை அவர் பெரும்பாலும், தற்செயலாய் தம்மிடத்தில் வந்தவர்களுக்குப் போதித்தார். ஒப்பற்ற உவமைகள் அங்கங்கே வழியருகிலும் கடலருகிலும் இருந்த சிறு சிறு கூட்டத்தாருக்குச் சொல்லப்பட்டது. வேறே எந்தப் பிரசங்கியாவது இவ்வித நூதனவகையாய்ப் போதித்ததுண்டா? பலனைப் பற்றிய இவ்வளவு கவலையீனமும் முயற்சியின் பிரயோசனத்தைப்பற்றிய இவ்வளவு அக்கறையின்மையும் வேறே யாரிடத்திலும் காணப்பட்டதா? தம்முடைய ஜீவ வார்த்தைகளை மனிதருடைய இருதயத்தில் நிலைவரமாய்ப் பதிக்கவேண்டுமென்பதே அவருடைய முழுத் தீர்மானம். வேதபாரகரைப்போல அவர் போதியாமல் தாமே ஜனங்களை நேருக்கு நேராய்ச் சந்தித்து மனமும் இருதயமும் தொடும்படி செய்து போதிப்பதினாலேயே தமது சத்தியங்களை மனிதருடைய இருதயத்தில் பதிக்கக்கூடுமென்று அவர் அறிந்தார். ஆகையால்

Digitized by Google

இயேசுவானவர் ஜீவனுள்ளதும், தனித்த ஆளுக்குரியதுமான வகையாய்ப் போதித்தார். அவர் தமது சத்தியத்தையும் ஜீவியத்தையும் யாதாமொரு புஸ்தகத்தாளில் எழுதிவைக்காமல் உலகத்துக்குச் சாட்சிகளாகவும் சத்தியத்தைக் கூறும் தூதர்களாகவும் இருக்கும்படி தாம் தெரிந்துகொண்ட பன்னிரு சீஷர்களின் இருதயப்பலகைகளில் எழுதிவைக்கவேண்டுமென்று எண்ணினார். “சகல மனிதராலும் அறியப்பட்டும் வாசிக்கப்பட்டும் இருக்கிற நிருபங்கள் நீங்கள்தானே” (2 கொரி. 3: 2) என்பது அப்போஸ்தலனுடைய வார்த்தைகளாய் மாத்திரமல்ல, நமது கர்த்தரின் முழுக் கருத்தாயும் நோக்கமாயும் இருந்தது.

அக்காலத்தில் எழுத்து வித்தையானது பூரணமாய்க்கண்டுபிடிக்கப்பட்டிருந்தபோதிலும் மற்ற மதங்களின் தலைவர்களாகிய மோசே, மகமது, கன்பியூசியஸ் என்பவர்களுக்கு மாறாகவும் இந்தியாவிலிருந்த புத்தனுக்கு ஒப்பாகவும் இயேசுவானவர் ஒரு நூலையும் எழுதிவைத்துப் போகவில்லை. தமது சத்தியங்களை ஒரு நூலாக எழுதிக்கொடுப்பதைப் பார்க்கிலும் அவைகளைத் தமது சீஷர்களின் காதுகளில் வாய்மொழியாகப் போட்டு அவைகளை அவர்கள் தங்கள் மனதிலே வைத்து கிரகித்து, உற்சாகத்தோடும் எழுப்புதலோடும் அவைகளை அவர்கள் உலகத்துக்குப் போதிக்கச்செய்வதே உசிதமென்று கண்டார்.

(2) அவர் கிருபையோடும் கண்டிப்போடும் போதித்தார். தங்களுடைய சுபாவ நெறிகேட்டையுணர்ந்து அவரிடத்தில் அறிக்கை செய்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று வந்த பாவிகளின்பேரில் அவர் மிகவும் கிருபையுள்ளவராயிருந்தார். அன்பு நிறைந்த அவரது வார்த்தைகளைக் கேளுங்கள். “வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே, நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.” (மத். 11: 28.) “மகளே, திடன்கொள்.” (மத். 9: 22.) “பயப்படாதே, சிறு மந்தையே, உங்களுக்கு இராச்சியத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்.” (லூக். 12: 32) “எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்திலனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச்சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச்சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன், உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று.” (மத். 23: 37.)

இருதயக் கடினமுள்ள மாய்மாலக்காரரையோ அவர் மெத்தப் பயங்கரமாய்க் கண்டித்தார். போலியான ஜீவியஞ் செய்துகொண்

Digitized by Google

டிருந்த பரிசேயரைப்பார்த்து: " பரிசேயரே! வேதபாரகரே! உங்களுக்கு ஐயோ," என்றும் (மத். 23: 39), விரியன் பாம்புக்குட்டிகளே, (மத். 12: 34), வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே, (மத். 23: 27), பிசாசின் பிள்ளைகளே, என்றும் (யோ. 8: 44), அவர் பேசிய வார்த்தைகளைப் பார்க்கிலும் அதிக கடினமான வார்த்தைகள் கிடையாது. அவர் தமது கண்டிப்பான சாபவார்த்தைகளை எப்போது, எவ்விதமாய் உபயோகிக்கவேண்டுமென் றறிந்திருந்ததோடு சமயம் நேரிடும் போது அவைகளை உபயோகிக்க ஒருக்காலும் கூசவுமில்லை. தமது சீஷர்களிடத்திலுங்கூட சமயம் நேரிடும்போது அவர் இவ்வித கண்டிப்பான வார்த்தைகளை உபயோகித்தார். தம்மைக் கடிந்துகொண்ட பேதுருவைப்பார்த்து: " அப்பாலே போ, சாத்தானே" (மத். 16: 23) என்றும், யூதாசைப்பற்றி " உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான்" என்றும் (யோ 6: 70), இழந்துபோனவர்களைக்குறித்து, "அங்கே அவர்கள் புழு சாவாமலிருக்கும் " என்றும் (மாற். 9: 48) சொன்னார்.

யோவான்ஸ்நானகன் உக்கிரமுள்ள பிரசங்கியாய் மாத்திரம் இருந்தான். பாவிகளைக் கண்டவுடனே அவர்கள் பேரில் அவன் பயங்கரமான சாபங்களைக் கூறினான் இயேசுவோ, உக்கிரகத்தோடுகூட தயையும் அன்புங்கூட்டி வழங்கினார். அனாவசியமாக அவர் ஜனங்களுடைய மனதைப் புண்ணாக்க விரும்பவில்லை.

(3) அவர் தம்மைத் தமது போதகத்தின் மையப்பொருளாக வைத்துப் போதித்தார்.

அவர் போதனையெல்லாம் அவரிலேயே நிறைவேற்றம் அடைந்ததென்று அவராலேயே ரூபிக்கப்பட்டது; அவர் ஜீவியத்திலே கையாடப்படாத ஒரு சத்தியமாவது இல்லை.

" நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் " (யோ. 14: 6), " ஜீவ அப்பம் நானே" (யோ 6: 35), " நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் " (யோ. 11: 25), " என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் " (யோ. 11: 25).

தாம் போதித்த சத்தியங்களுக்கெல்லாம் தாமே மையப்பொருளென்றும், நிறைவேற்றமென்றும் அறிந்து போதித்தார். ஞானம் நிறைந்த அவரது நித்திய வார்த்தைகளின் உயிருள்ள அவதாரம் அவரே. ஆகையினால்தான் அவருடைய வார்த்தைகள் திவ்விய மகத்துவமுள்ள வார்த்தைகளாயிருந்தன.

Digitized by Google

(4) அவர் அதிகாரத்தோடு போதித்தார். அவர் போதித்த வார்த்தைகளுக்கும் பரிசேயர் போதித்த வார்த்தைகளுக்குமுள்ள வித்தியாசம் இங்கேதான் காணப்படுகிறது (மாற். 1: 22.) வேதபாரகர், ஒவ்வொன்றுக்கும் பூர்வீக குருக்கள்மாருடைய வார்த்தைகளை ஆதாரமாக எடுத்துப்பேசுவார்கள். நமது ஆண்டவரோ, "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று சொல்லிப் போதித்தார். (மத். 6.) மற்றவர்களுடைய அபிப்பிராயங்களை அவர் எடுத்துச்சொல்லாமல், திவ்விய ஞானத்தினால் தாமே உணர்ந்து அறிந்த பூரண சத்தியங்களை எடுத்துரைத்தார். அவர் எல்லா சத்தியங்களையும் பரம ஞானத்தினால் அனுபவமாய் அறிந்து போதித்தபடியால் தாமேயல்லாமல் வேறு ஆதாரம் அவருக்கு அவசியமாயிருந்ததில்லை. "மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்கிற வார்த்தைகளினால் எத்தனையோ தரம் தமது போதனையைத் துவக்கியிருக்கிறார். இவ்விதமாய் இரட்டிப்பான நிச்சயத்தோடு தம்முடைய வார்த்தைகள் உண்மையுள்ளவைகளென்று காட்டுகிறார். போதிக்கும்படிக்கு உலகத்திற்கு வந்தவரானபடியால் தாம் போதிக்கப்பாத்திரமும் பாத்தியதையும் உடையவரென்று அறிந்திருந்தார். இவ்விதமாய் அவர் தமது வார்த்தைகளை விஸ்தரித்துத் தெளிவாக்கவும், மாற்றவேண்டியவைகளை மாற்றவும், மோசேயின் பிரமாணத்தையுங்கூட ரத்துச்செய்யவும் கூடியவராயிருந்தார் (மத். 5; மாற். 10: 1—12).

(5) அவருடைய போதனைகள் ஒழுங்குபடுத்தப்பட்டவைகளும் சாஸ்திரீயமானவைகளுமல்ல. மலைப்பிரசங்கத்திற்கும் இக்காலத்துப் பிரசங்கங்களுக்கும் எவ்வளவோ வித்தியாசம்! பிரிவுகளும் உட்பிரிவுகளும் சாஸ்திரமுறையும் அதற்குக் கிடையாது. ஆகிலும் அவருடைய வார்த்தைகள் ஒழுங்கற்றவைகளாயிருக்கவில்லை. புறம்பான ஒழுங்கையும் போங்கையும் அவர்கவனியாமல் தமது பிரசங்கத்தைக் கேட்டவர்களின் உள்ளான ஜீவனுக்கு வேண்டிய விசேஷித்த வகையை அனுசரித்துப் போதிப்பதே அவருடைய காரியமாயிருந்தது. அக்காலத்தில் தம்மைத் தேடிவந்த ஆத்துமாக்களின் தேவை இன்னதென்று அவர் அறிந்து அதற்கு ஏற்றபடி போதிக்கவேண்டுமென்பதே அவருடைய பிரசங்கப்பொருளை ஒழுங்குபடுத்துவதற்குத் திறவுகோலாயிருந்தது. கல்விப்போங்கை முற்றிலும் தவிர்த்து சீர்கெட்டவர்களுக்கு ஏற்றபடி அன்பு நிறைந்த இருதயத்திலிருந்து அவர்களுக்குப் போதித்தார்.

(6) அவர் கேட்போர் மனதிற்கு இசைவாகப் போதித்தார். அவரது போதனைகள் அர்த்தம் பொருத்தமற்றவைகளாயிருக்கவில்

Digitized by Google

லே. பெருமையும் வெறுமையுமான பரிசேயருடைய துவித ஜீவியத்தை அம்புபோல் குத்தத்தக்கதாக அவர் தமது வார்த்தைகளைப் பேசினரென்று அவர் போதனைகளைப் படிப்பதினால் தெரியவரும். தன்னை ஆபிரகாமின் புத்திரனென்று பெருமையாய் எண்ணிக் கொண்டவனும் கோழைத்தனம் நிறைந்தவனுமாயிருந்த நிக்கொதேமுவைப்பார்த்து, "நீ மறுபடியும் பிறக்கவேண்டும்" என்று சொன்னர் (யோ. 3). கிணற்றண்டை வந்த ஸ்திரீக்கு அன்பாயும் அருமையாயும் சொன்ன வார்த்தைகளையும் பாருங்கள் (யோ. 4). அந்த மேலறையிலே அவர் தமது சீஷருக்குச் செய்த ஆச்சரியமான பிரசங்கமென்ன? (யோ. 14—16 அதி.) அவருடைய குறிப்புகள் யாவும் சமயோசிதமானவைகளாயும் போதனைகளைக் கேட்டவர்களுடைய மனதை உணர்த்தி ஏவக்கூடியவைகளாயுமிருந்தன

(7) அவருடைய பிரசங்கங்கள், தக்க திருட்டாந்தங்களும் ஜனங்கள் மனதில் படக்கூடிய உவமைகளும் நிறைந்திருந்தன. தமது வார்த்தைகளை உதாரணங்களினால் பலப்படுத்தினர். தீமையோடெதிர்த்து நிற்கப்படாதென்பதைப்பற்றி அவர் சொன்னதைப் பாருங்கள் (மத். 5: 39—41). தர்மம், ஜெபம், உபவாசம் முதலியவைகளைக் குறித்த போதனைகளும் அப்படியே தக்க உவமைகளால் தெளிவாக்கப்பட்டன. (மத். 6: 1—18.) அவருடைய திருட்டாந்தங்களெல்லாம் பொருளுக்கு ஏற்றவைகளாயும், இயற்கையிலும் சரித்திரத்திலும் அவர் அனுபவமாய்க் கண்டறிந்தவைகளாயும் இருந்தன. விதைகள், புஷ்பம், பறவை முதலியவைகளை அவர் அடிக்கடி எடுத்துப் பேசினர் (லூக். 12: 6). ஜனசங்க சம்பந்தமான அனேக சாதாரணகாரியங்களையும் அவர் விட்டுவிடவில்லை. உதாரணமாக: நல்ல சமாரியன், கெட்டகுமாரன், ஏழை விதவை போட்ட இரண்டு காசு, பரிசேயனும் ஆயக்காரனும் ஜெபம்பண்ணினது முதலியன.

உவமைகளினால் திருட்டாந்தப்படுத்திப் பொருளைத் தெளிவாக்குகிறது ஆண்டவருக்கு மெத்தப்பிரியம. ஆவிக்குரிய ஆழ்ந்த சத்தியங்களை, யாவர்க்கும் நன்ருய்த்தெரிந்த புறம்பான காரியங்களோடு ஒப்பிட்டு அவைகளைத் தெளிவாக்கினர். இந்த உவமைகள் கொஞ்சங்குறைய எல்லா மனுஷீக ஜீவியத்தையும் அனுபவத்தையும் குறிப்பிடுகிறது. தமது ஊழியத்தின் முதல் பாகத்தில் இது உத்தமமான வகையல்லவென்று தமது அனுபவத்தில் கண்டறிந்ததினால் தமது ஊழியத்தின் கடைசி பாகத்தில்தான் இந்தப்பலமான வகையை உபயோகித்தார். தமது இராச்சியத்தின் சத்தியங்களைப் பணிவோடும் உண்மையோடும் கேட்டுணர்ந்துகொள்ள வேண்டுமென்று வந்தவர்களுக்கு இது உதவியும் பிரயோஜனமுமாயிருக்கும்படிக்கும், தமது

Digitized by Google

போதனைகளில் குற்றங் கண்டுபிடித்து குதர்க்கம்பண்ணும்படி காத்துக்கொண்டிருந்தவர்களுக்கு அவைகள் மறைவாயிருக்கும்படிக்கும் இப்படி உவமைகளாகப் போதித்தார்.

(8) அதுவுமல்லாமல் தமது போதனைகளைக் கேட்டவர்களின் சக்திக்குத்தக்கதாக அவர் அடக்கமாய்ப் போதித்தார். உங்கள் முத்துக்களைப் பன்றிகள்முன்போடாதிருங்கள் என்று சொன்னவர் அவர்தான். (மத். 7: 6.) "இன்னும் அநேக காரியங்களைக்குறித்து நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது; அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" என்று தம்முடைய சீஷர்களுக்குத் தமது ஊழியத்தின் கடைசி காலத்திலுங்கூட சொல்லிவந்தார். (யோ. 16: 12.) தமது மேசியாத்துவத்தை வெளிப்படுத்தாமல் ஆச்சரியமான விதமாய் எவ்வளவு அடக்கமுள்ளவராயிருந்தார். ஜனங்கள் தேவனுடைய இராச்சியத்தைப்பற்றி நன்றாய்ப் போதிக்கப்பட்டு, அதின்னதென்று அவர்கள் தெளிவாய் அறிந்துகொள்ளும் வரைக்கும் இந்த விஷயத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள ஆயத்தமற்றவர்களாயிருந்தார்கள். அதுவரைக்கும் அவர் தம்மை மனுஷகுமாரனென்று மாத்திரம் சொல்லிவந்தார். தமது கிரியைகளையும் வல்லமையையுங்குறித்து மற்றவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டாமென்று அநேகந்தடவை தமது சீஷர்களுக்கும் மற்ற ஜனங்களுக்கும் கட்டளையிட்டார். ஜனங்களின் அறிவீனத்தினிமித்தமும் சீஷர்களின் அசமந்தத்தினிமித்தமும் அவர் தமது போதனைகளைச் சிறுகச்சிறுக வெளிப்படுத்தவேண்டியதாயிருந்தது.

——:o:——

## III. கிறிஸ்துவின் போதனைகளுக்கும் பழைய ஏற்பாட்டின் போதனைகளுக்குமுள்ள சம்பந்தம்.

### THE CONNECTION OF CHRIST'S TEACHING WITH THE OLD TESTAMENT.

நமது கர்த்தர் போதித்தவைகளின் கருத்து புத்தப்புதிதானவைகளல்ல. அவர் யாதாமொரு புதிய சத்தியத்தை வெளிப்படுத்தும்படி வரவில்லை. பழையவைகளும், ஜனங்கள் கைக்கொண்டும் கைக்கொள்ளாமலும் அரைகுறையாய் விட்டுவிட்டவைகளுமான சத்தியங்களைத் திரும்பவும் உயிர்ப்பித்து உறுதிப்படுத்துவதும், அளவுக்கு

Digitized by Google

மிஞ்சி அவர்கள் ஊன்றிக் காட்டிவந்த சத்தியங்களை மட்டுப்படுத்திக் காட்டுவதுமே அவருக்கு மகிமை. பழைய ஏற்பாட்டு வசனங்களை அவர் புறக்கணித்துத் தள்ளாமல் தெய்வாதிகாரமுள்ளவைகளென்றே அவைகளை அடிக்கடி மேற்கோளாக எடுத்துப்பேசினார். பூர்வீக தீர்க்கதரிசிகள் சொன்ன வார்த்தைகளைப் பலதரமும் அதிகாரத்தோடு எடுத்துப்பேசி அவைகளை உறுதிப்படுத்தினார். சமாரியா ஸ்திரீயோடே அவர் பேசினபோது மற்ற எந்த யூதனும் சொல்லக்கூடியதுபோல, நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம். ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது (யோ. 4: 22) என்று தெளிவாகச் சொன்னார். இவ்விதமாக அநேக விஷயங்களில் அவர் யூதனுக்கு யூதனாகவே பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களைத் திவ்யாதிகாரமுள்ளவையென்று ஊன்றிப்பேசினார். ஒரு புதிய மார்க்கத்தை ஏற்படுத்தவேண்டுமென்பது அவரது நோக்கமேயல்ல. அவருடைய போதனைகள் யூதர்காலத்துப் பாலபோதனைகளின் நிறைவேற்றமாயிருந்தன. தேவன் இஸ்ரவேலரைத் தெரிந்துகொண்ட காலத்தில், பயிற்றுவிக்கப்படாத அவர்களுடைய இளம்பிராயத்துக்குத் தக்கதாகத் தமது சத்தியங்களைப் போதித்துவந்தார். அநேக நூற்றாண்டுகளாக அவர் தம்முடைய ஜனங்களுக்குப் பாடத்தின்மேல் பாடமும் சட்டத்தின்மேல் சட்டமும் போட்டு அவைகளில் அவர்கள் தேறி ஒரு பெரிய ஜனமாக விருத்தியடையும்படிக்கு அவர்களை நடத்தினார்.

கிறிஸ்து வந்தபொழுதோ, இஸ்ரவேலருக்கும் மற்றெல்லா மனிதர்களுக்கும் முதற்றரமான மார்க்கபோதனைகளைக் கொண்டுவந்தார். பூர்வீக தீர்க்கதரிசிகளின் போதனைகளை எடுத்துக்கொண்டு அவைகளின் மேலான கருத்தும் சரியான நோக்கமுமின்னதென்று விளக்கி, ஜனங்கள் சரியாய்க் கைக்கொள்ளாமல் மங்கிப்போகும்படி விட்டிருந்த பழைய ஏற்பாட்டு மூல சத்தியங்களின் முக்கியத்தைத் துல்லியமாக்கி, அவைகளுக்கும் தமதுபேரில் வைக்கும் விசுவாசத்திற்குமுள்ள மெய்யான சம்பந்தத்தைத் தெளிவுறக் காண்பித்தார். உதாரணமாக: தேவன் பரமபிதாவாயிருக்கிறாரென்று பழைய ஏற்பாடு போதித்தது. ஆனால் இந்தச் சத்தியம் அவரது இராஜரீக வல்லமையால் மிகுதியாய் மூடப்பட்டது. இயேசுவானவரோ, இந்தக் கருத்தை மாற்றி, தேவனுடைய பிதாத்துவத்துக்கு அவருடைய இராஜரீகத்தையும் மற்றெல்லா இலட்சணங்களையும் கீழ்ப்படுத்திக் காட்டினார். இராஜரீகமுள்ள கர்த்தனாகவல்ல, அன்புள்ள பரமபிதாவாக தேவனை வெளிப்படுத்துவதே அவருடைய முக்கிய வேலை.

தேவனுடைய இராச்சியமென்பது, பழைய ஏற்பாட்டின் கா

Digitized by Google

லத்திலே அதிகம் வற்புறுத்தப்பட்ட கருத்தாயிருந்தது. அதற்குப் பின்னை யூதருடைய காலத்திலோ ஜனங்கள் அந்த இராச்சியத்திற்குரிய உன்னத கருத்தைத் தாழ்த்தி அது டம்பமும் உலக அதிகாரமும் பொருந்திய ஒரு இராச்சியமென்று எண்ணினார்கள். இயேசு இந்தக் கருத்தை மாற்றி, இது முற்றிலும் ஆவிக்குரியதென்று காட்டினர்.

பழைய ஏற்பாட்டு மார்க்கமானது தங்களுக்கு மாத்திரமுரியதென்பது யூதர் கருத்து. புதிய ஏற்பாட்டின் காலத்திலோ ஒரு விஷயத்தில், அது தேவனுக்கும். தனித்தனியான ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் சம்பந்தமான காரியமென்றும், மறுவிஷயத்தில் அது அவருக்கும் மொத்தமாக மனுக்குலத்தார் யாவருக்கும் சம்பந்தமான காரியமென்றும் திட்டமாய் விளங்கினது.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவாவியானவர் எல்லா ஜனங்களுக்குள்ளும் உலாவினர். புதிய ஏற்பாட்டின் காலத்திலோ ஆவியானவருடைய ஊழியம் தனித்தனி ஆத்துமாக்களைச் சார்ந்ததாயிருந்தது (யோ. 4: 14).

ஆகையினால் நமது ஆண்டவர் யூதருடைய வேதவாக்கியங்களைக் குறித்து: நான் அழிக்கவல்ல நிறைவேற்றவே, அதாவது, பழைய ஏற்பாட்டிலுள்ள சகல சத்தியங்களின் சரியான கருத்தும் நோக்கமுமின்னதென்று காட்டும்படிக்கே வந்தேன் என்றார். (மத். 5: 17.)

யூதருடைய வேதாகமங்களில் பூரணமான உபதேசத்தின் வித்துக்கள் எல்லாம் அடங்கியிருக்கிறது. ஆனால் சர்வஜன மார்க்கத்தின் சகல சத்தியங்களுக்கும் அதற்குரிய பூரணகருத்தைக் கொடுத்து அதது மேலான நிறைவேற்றம் அடையும்படிக்குக் கிறிஸ்து வெளிப்படவேண்டியது அவசியமாய் இருந்தது. இதைத்தான் கிறிஸ்துவானவர் நிறைவேற்றினர். பூர்வீக யூதமார்க்கத்தைக் குறித்து அவர் காட்டிய மனம் இதுவே. இவ்வளவு மகத்தான வேலையை உலகத்தில் எவரும் செய்யவில்லை

## IV. தமது காலத்திலிருந்த போதகன்மார்களைக்குறித்து இயேசு கொண்ட அபிப்பிராயம்.

### WHAT WAS THE ATTITUDE OF JESUS TOWARDS THE RELIGIOUS TEACHERS OF HIS DAY?

சில விஷயத்தில் அவர்கள்பேரில் அனுதாபத்தையும் சில விஷயத்தில் வெறுப்பையுங் காட்டிவந்தார்.

(1) அவர் பூலோகத்துக்குவந்த காலத்திலே யோவான்ஸ்நானகன்தான் விசேஷித்த போதகன். யூத ரபிகள் நிறைந்த அந்நாட்டில், இவனுடைய சத்தந்தான் தீர்க்கதரிசியின் சத்தம். இயேசு யோவானுடைய சீஷர்களில் ஒருவராகத் தமது ஊழியத்தை ஆரம்பித்தார். யோவானுடைய கையினாலே அவர் ஞானஸ்நானம்பெற விரும்பினார். யோவானுடைய சீஷர்களில்தான் தமது முதல் சீஷர்களைத் தெரிந்துகொண்டார். யோவான் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளில் கடைசியானவன். பழைய தீர்க்கதரிசிகளைப் பார்க்கிலும் யோவான் பெரியவன். பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் ஒன்றாய் இணைக்கும் சங்கிலி இவன்தான். உள்ளபடி அவன் புதிய ஏற்பாட்டின் காலத்தைச் சேராதவனாயிருந்தும் அக்காலத்தை அவன் நோக்கிப் பார்த்து தேவனுடைய இராச்சியத்திற்காகவும் அதின் இராஜாவுக்காகவும் மனிதனை ஆயத்தப்படுத்துகிற கண்ணியத்தைப்பெற்றான்.

யோவான் தன் காலத்திலிருந்த மார்க்கானுசாரிகளான வேதபாரகர், சதுசேயர், எசேனர் முதலியவர்களோடு சம்பந்தப்பட்டவனல்ல. யூதர்களுக்கு நன்றாய்த் தெரிந்திருந்த நியமத்தின் மூலமாய் ஜீவியத்தின் உடன்படிக்கைக்குள் பிரவேசிக்க ஒவ்வொருவரையும் தாராளமாய் அழைத்தான். யூதர்கள் பிராமணர்களைப்போல ஸ்நானம் முதலிய சடங்காசாரங்களில் விசேஷித்தவர்களாயிருந்தார்கள் (மாற். 7: 3, 4). யோவான் ஞானஸ்நான தீட்சையைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்கள் எல்லாரையும் அழைத்தான். இந்தத் தீட்சை மனந்திரும்புதலைக் குறிப்பிடும். இதிலே பழைய ஜீவியத்தைத் தவிர்த்துவிட்டோமென்பதும், பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டோமென்பதும் அடங்கியிருக்கிறது (மாற். 1: 4). இந்தத் தீட்சைக்கு ஒரு முன்பார்வையுண்டு; இந்தத் தீட்சையைப் பெற்றவன் கிறிஸ்துவினுடைய இராச்சியத்திலே பிரவேசிக்கப் பக்குவப்படும் ஆயத்த வகுப்பைச் சேர்ந்தவன் என்பதும் இதிலேயடங்கும்.

Digitized by Google

யோவானுடைய பிரசங்கம் அதிக கண்டிப்புள்ளதாயிருந்ததோடு, வசப்படாத பொல்லாதவர்களின்பேரில் ஆக்கினையையும் நியாயத்தீர்ப்பையுங் கூறுகிறதாயிருந்தது. அவன் கூறின மனந்திரும்புதல் வெறும் வெளிச்சடங்காயிராமல் உள்ளான இருதயத்தின் காரியமாயிருந்தது.

இவ்விதமாய் யோவான் கிறிஸ்துவுக்கென்று ஜனங்களை ஆயத்தப்படுத்தினதுமன்றி, விசேஷமாய் அவர் அருளப்போகிற பரிசுத்த ஆவியின் புதிய ஞானஸ்நானத்தை முன்னறிந்தவனுயுமிருந்தான். (லூக். 3: 16.)

யோவான் இயேசுவானவருக்கு ஞானஸ்நானங்கொடுத்தபின்பு அவரை மேசியாவாக மதித்து (யோ. 1: 33), "அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்" (யோ. 3: 30) என்முன். இன்னும், இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு, இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியென்று அவரைக் குறித்துச் சாட்சி கூறினன் (யோ. 1: 29). ஆகையினலே இயேசு, யோவான் தமக்கு முன் தூதனுக வந்தவனென்று எண்ணி அவன்மேல் பூரண அன்புடையவராய் அவனைக்குறித்து: ஸ்திரீகளிடத்தில் பிறந்த எல்லாரிலும் யோவானே பெரியவனென்முர். நவமான இராச்சியத்தின் சிலாக்கியங்களையும் அதின் உன்னத ஞானத்தையும் பெற்றுகொள்ள இன்னும் ஒருவரும் வராதிருக்கையில் அவனைப்பற்றி இவ்விதமாய்ச் சொன்னுர் (மத். 11: 11).

(2) ஆனல் அக்காலத்தில் பிரபலியமாயிருந்த வேதபாரகப் பரிசேயக்குருக்களைக்குறித்து கர்த்தர் அதிக சலிப்பும் வெறுப்புமுள்ளவராயிருந்தார். ஏனென்முல், அவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட சத்தியமாகிய மணியை விட்டுவிட்டு, பதரை மாத்திரம் பிடித்துக் கொண்டிருந்தபடியால், அவர்களிடத்திலிருந்து ஒன்றையும் அறிந்துகொள்ள அவர் விரும்பவில்லை. அவர்கள் பேர்போன மாய்மாலக்காரராயும் சடங்காசாரப்பிரியராயும் இருந்தார்கள. ஆகையினலே ஆண்டவர் அவர்களைக் குறித்து மிகவும் அரோசிகமுடையவராய் மாத்திரமல்ல, தம்மை எப்போதும் குற்றம்பிடிக்கிற திண்டுமுண்டுக்காரரான சத்துருக்களென்றும் எண்ணினர்.

இப்படிப்பட்ட சத்துருக்களின் போதனைகளிலிருந்தும் அவர் சிலவற்றை எடுத்துத் தமக்குச் சொந்தமாக்கிக்கொண்டார். ஜடவாதமான அவர்களுடைய ஆபாசக்கொள்கைகளிலிருந்து அவைகளைப் பிரித்துத், தமது ஆவிக்குரிய கருத்துகளை அவைகளுக்குள் அமைத்து, உயிர்த்தெழுதல், கடைசி நியாயத்தீர்ப்பு, ஆபிரகாமின் மடிக்கும் ஜெகின்னவுக்குமிடையிலுள்ள நிலைமை என்பவைகளைப் பற்றிய கொள்கைகளை ஏற்றுக்கொண்டவராயிருந்தார்.

Digitized by Google

1-ம அதிகாரம்.

# CHAPTER I.

# இயேசு தம்மைக்குறித்துப் போதித்தவைகள்.

## JESUS' TEACHING CONCERNING HIMSELF.

1-ம் பாடம்.

## STUDY I.

### காலம் நிறைவேறல்.

*The Fullness of Time.*

“ நீங்கள் கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?” இது மகா விசேஷமான கேள்விதான். கிறிஸ்துவை அறிவதே மேலான அறிவும் நித்திய ஜீவனுமாயிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தம்மைப்பற்றி நன்றாயறியவேண்டுமென்று இயேசு விரும்புகிறார். மனுஷகுமாரனாகிய “என்னை ஜனங்கள் யாரென்று சொல்லுகிறார்கள்” என்று அவர் கேட்டார். (மத். 16: 13.) கிறிஸ்து தம்மைப் பற்றிச்சொன்னவைகளை நன்றாய்ப் படிப்பதுதான் அவரை அறிகிறதற்கு உத்தமமும் நிச்சயமுமான வழி. இயேசுவைப்பற்றி அப்போஸ்தலர் சொன்ன வார்த்தைகளைப் பார்க்கிலும் அவர் தாமே தம்மை உலகத்திற்கு வெளிப்படுத்தும்படி சொன்னவைகள் மிகவும் சிறந்தவை.

காலம் நிறைவேறினபோதுதான் இயேசுவானவர் மனிதருக்குத் தம்மைக்குறித்துப் பூரணமாய் வெளிப்படுத்தினார். இவ்விஷயத்தில் அவர் அடக்கமாயிருந்தாரென்று முன்னே பார்த்தோம். தமது ஊழியத்தின் கடைசியிலேதான், தம்மைக் கிறிஸ்துவென்று பகிரங்கமாய் வெளிப்படுத்தினார். பிசாசுகள் தம்மை இன்னாரென்று அறிந்திருந்தபடியால் அவைகள் தங்கள் வாயைத்திறந்து பேசுகிறதற்கு அவர் இடங்கொடுக்கவில்லை (மாற். 1: 34). மேலும் அவர் தம்மைக்

Digitized by Google

குறித்துப் பிரசித்தம்பண்ணுதபடிக்குக் கட்டளையிட்டார் (மாற் 8:30; 3: 12; 5: 43; 7: 36). மனிதருடைய சாட்சிகளையும் பிசாசுகளின் சாட்சிகளையும் இப்படியே அவர் புறக்கணித்துத் தள்ளினர்.

அவருடைய ஊழியத்தின் கடைசிப் பாகத்தில் ஜனங்கள் அவரை ஒரு தீர்க்கதரிசியென்று மாத்திரம் எண்ணிவந்ததாக நாம் பார்க்கிறோம் (மாற். 8: 27, 28). தமக்குக் கீர்த்தி வரவேண்டாம் என்பதினிமித்தமல்ல, வேறே முகாந்தரத்தினிமித்தம் அவர் இப்படிக்கட்டளையிட்டார். மேசியா வருவாரென்று யூதர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். ஆகிலும் வரப்போகிறவரைப்பற்றித் தப்பான கருத்துக்கொண்டு இவ்வுலகத்திற்குரிய ராஜாவாயிருப்பாரென்று அவர்கள் எண்ணினர்கள். ஆகையினலே அவர் தமது இராஜ்ஜியத்தின் உள்ளான தன்மையின்னதென்றும் தம்முடைய இராஜத்துவமின்னதென்றும் அவர்களுக்கு முதலாவது போதிக்கவேண்டியதாயிருந்தது. மற்றப்படி அவர்கள் பலாத்காரமாக அவரைப் பிடித்துத் தங்களுக்கு இராஜாவாக்கியிருப்பார்கள். அதினலே அவர் தமது வேலையை முடிக்குமுன்னே மரணக்கினைத்தீர்ப்பு அடையவேண்டியதாயிருக்கும். ஐயாயிரம் பேரை அவர் போஷித்தபின்பு அவர்கள் அதேவண்ணமாக அவரைப் பிடித்து இராஜாவாக்கிப்போடவேண்டுமென்று ஆத்திரப்பட்டதாக நாம் பார்க்கிறோம். அவரோ, அவர்களுடைய யோசனையைக் குலைத்துப்போட்டார் (யோவா. 6: 15).

அவருடைய பிரசித்த ஊழியத்தின் கடைசிகாலத்தில், அவருடைய வேலை முடிவடையப்போகிறபோது, இனித் தமது காரியத்தை அடக்கிவைத்திருப்பது அவசியமில்லையென்று நினைத்து அவர் தமது மேசியாத்துவத்தை வெளிப்படையாகத் தெரிவித்தார்.

மற்ற விஷயங்களிற்போலவே இவ்விஷயத்திலும் யோவான் சுவிசேஷமும் சிறைப்டிக் (Synoptic) சுவிசேஷங்களும் வித்தியாசப்படுகிறது கவனிக்கப்படத்தக்க காரியம். யோவான் சுவிசேஷம் முதலாம் அதிகாரத்திலே (யோ. 1: 29—51) அவரது மேசியாத்துவம் தெளிவாய் உரைக்கப்பட்டிருக்கிறது. இயேசு தம்மிடத்தில் வருகிறதைக்கண்டு, "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி" என்று யோவான்ஸ்நானகனும், "ரபி, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் இராஜா" என்று நாத்தான்வேலும் அறிக்கையிட்டார்கள். 3: 16—21ல் சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகள் ஆக்கியோனுடையவைகளாயிராமல் இயேசுவினுடையவைகளாயிருந்தால் இவைகளுங்கூட அவர் தம்மைக்குறித்துக் கூறிய சாட்சிகளாயிருக்கும்.

Digitized by Google

கலிலேயாவிலே அவர் தமது ஊழியத்தை ஆரம்பிக்கப்போன போது இடைவழியில் சமாரிய ஸ்திரீக்குத் தமது மேசியாத்துவத்தைப்பற்றி வெகு தெளிவாய் வெளிப்படுத்தினார். 4: 26 "உன்னிடத்தில் பேசுகிற நானே அவர்" என்ற வார்த்தைகள் பாவியான அந்த ஸ்திரீக்கு அவருடைய இராஜத்துவத்தை வெளிப்படுத்தின அதிசய வார்த்தைகளாயிருந்தன. இந்த வார்த்தைகளினாலும், பின்னாலே அவர் செய்த பிரசங்கத்தினாலும் புறக்கணிக்கப்பட்ட சமாரியராகிய அந்த ஊராரும் உணர்வடைந்து, மெய்யாகவே இவர் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்றார்கள் (வாக். 42). தேவாலயத்திலிருந்து புறக்கணித்துத் தள்ளப்பட்ட பார்வையடைந்த குருடனுக்கும் தம்மைக் குறித்து உருக்கத்தோடும் தெளிவோடும் இதை வெளிப்படுத்தினார். (யோ. 9: 35—38).

முதல் மூன்று சுவிசேஷங்களின் முதல் பாகத்திலே நாம் பார்க்கிறபடி இயேசுவானவர் தம்முடைய மேசியாத்துவத்தை வெளிப்படுத்தாமல் அடக்கி வைத்திருந்தாரென்றும், யோவான் சுவிசேஷத்திலோ, அவர் தம்மைத் தெளிவாய் வெளிப்படுத்தினாரென்றும் காணப்படுகிறது நிசந்தான்.

## தியானம்.

### MEDITATION.

*அநேக நூற்றாண்டுகளின் ஆயத்தத்திற்குப்பின் காலம் நிறைவேறினபோது இயேசு வந்தார். உலகமோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரை ஏற்றுக்கொள்ள மனிதனுக்குப் பூரண மனம் உண்டாவதற்காக தேவனுடைய ஏற்பாடுகளின் பூரணம் காத்திருக்கவேண்டியது. கிறிஸ்துவைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

———:O:———

## II-ம் பாடம்.

### STUDY II.

## சினாப்டிக் (Synoptic) சுவிசேஷங்களுக்கும் யோவான் சுவிசேஷத்துக்கும் ஒற்றுமை.

### THE SYNOPTICS AND JOHN HARMONIZED.

நான்காம் சுவிசேஷத்தில் காணப்படுகிறதிலே அவர் தம்மை மேசியாவென்று தனித்தனி ஆட்களுக்கும் தமது சிஷர்களுக்குமாத்



Digitized by Google

திரம் தெரிவித்தாரென்று நாமறியவேண்டியது. இது, பொதுவாய் அவருடைய அடக்கமான குணத்திற்கு மாமுனதல்ல.

கலிலேயரைப்பார்க்கிலும் யூதர்கள் தமது மேசியாத்துவத்தை நன்றாய் அறிந்துகொள்ளக்கூடியவர்களென்ற எண்ணத்தினால் யூதேயாவில் அவர் ஊழியஞ்செய்யும்போது மாத்திரம் இப்படித் தம்மைக் குறித்துத் தெரிவிக்கத் துணிந்தாரென்று பார்க்கிறோம். யூதர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்து மேசியாவின் வருகையையும் தீர்க்கதரிசனக் குறிப்புகளையும் நன்றாயறிந்திருந்தார்கள். கலிலேயரோ, வேத அறிவு அற்றவர்களாயிருந்தார்கள். ஆகையினாலேதான் ஆண்டவர் கலிலேயாவில் தம்மை வெளிப்படுத்தாமல் யூதேயாவிலே தமது மேசியாத்துவத்தை முன்னறிவிப்பாரென்று நாம் எதிர்பார்க்கலாம்.

கலிலேயருடைய குணரீதியையும் நாம் கவனிக்கவேண்டும். கிறிஸ்துவைக்குறித்து அவர்கள் கொண்ட உலகபிரகாரமான எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்ளும்படிக்கு அவர்கள் எவ்வளவு ஜாக்கிரதையும் படபடப்புமுள்ளவர்களாயிருந்தார்கள். யோவானே இந்த வித்தியாசத்தைப்பற்றிச் சொல்லுகிறான் (6: 14, 15).

ஆகிலும் யோவான் சுவிசேஷகனுங்கூட கிறிஸ்துவின் மேசியாத்துவத்தை வெளிப்படுத்துவதில் அடக்கமாயிருந்தானென்பதற்கு அத்தாட்சிகளுண்டு. யோவான்ஸ்நானகன் கிறிஸ்துவைச் சந்தித்து அவருக்கு ஞானதீட்சை கொடுத்தபிறகும் தன் பிரசங்கவூழியத்தை விடாமல நடத்திவந்தானென்று இந்தச் சுவிசேஷத்தில்தான் சொல்லியிருக்கிறது (3: 23). அவன் அவருக்கு ஞானஸ்நானங்கொடுத்தபிறகு, என் வேலை முடிந்துவிட்டது; மேசியாவும் வந்து வேலையைத் துவங்கிவிட்டார், இனி நான் அவருக்கு ஊழியக்காரன் மாத்திரம் என்று சொல்லித் தன்வேலையை விட்டுவிட்டு அவரோடுகூடத் திரிந்ததாக சிலர் நினைப்பார்கள் ; அப்படி யொன்றையும் நாம் இங்கே பார்க்கிறதில்லை.

இயேசு தமது ஊழியத்தை ஆரம்பித்தபின் எருசலேமிலிருந்த யூதர்கள், அவர் மேசியாதானோ அல்லவோ என்ற சந்தேகத்தினால் அவரைக் குறித்துப் பொறுமையற்றவர்களாயிருந்தார்களென்று இதே சுவிசேஷத்தில் பார்க்கிறோம் (10: 24). எவ்வளவு காலம் நீர் வாயை மூடிக்கொண்டிருப்பீர் ? நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லுமே, என்று கேட்டார்கள். அவர்கள் அவரை மேசியாவென்று எண்ணியிருந்தால் இப்படிக் கேட்டிருக்கமாட்டார்கள்.

Digitized by Google

## தியானம்.
## MEDITATION.

*தமது தன்மையையும் தாம் அனுப்பப்பட்ட நோக்கத்தையும்பற்றி இயேசு ஆச்சரியமான விதமாய் அடக்கமாயிருந்ததை நினைத்துப்பார்!*

*அபிஷேகம்பண்ணப்பட்ட அவரைச் சரியாய் அறிவதற்கு நாம் அபிஷேகம் பண்ணப்படவேண்டியது அவசியம்.*

———:O:———

## III-ம் பாடம்.
## STUDY III.

## மேசியா.
## THE MESSIAH

*காலம் நிறைவேறினபோது, இயேசு தம்மை மேசியா, அல்லது கிறிஸ்துவென்று தெரிவித்தார். மேசியாவென்ற எபிரேய பதமும் கிறிஸ்துவென்ற கிரேக்க வார்த்தையும் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று அர்த்தங்கொள்ளும். அவரது ஊழியத்தின் கடைசிப்பருவத்தில், அவர் யூதர்களின் பரிசுத்த தலைநகரியை நோக்கிச் செல்லும்போது தம்மை இராஜாவென்று பகிரங்கமாய்க் காண்பித்து கர்த்தருடைய நாமத்தினால் வருகிற இராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையுமுண்டாவதாகவென்று சீஷர்கள் மிகுந்த சத்தத்தோடே தம்மை மகிமைப்படுத்த இடங்கொடுத்தார். முறுமுறுத்த பரிசேயரைப்பார்த்து, இவர்கள் பேசாமலிருந்தால் இந்தக் கல்லுகளே கூப்பிடும் என்று சொன்னார். (லூக். 19: 29—40.) அவருடைய சத்துருக்கள் அவரைப் பிடித்துக்கொண்டபோது, யூதருடைய அதிகாரி அவரைக் காவலில் போட்டு, அவருடைய வாய்ப்பிறப்பிலேயே அவரைக் குற்றப்படுத்தும் நோக்கமாய், 'நீர் ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா?' என்று கேட்டான். இயேசு: நான் அவர்தான், மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார். (மாற். 14: 61, 62.) இப்படி அவர் தம்மை இராஜாவென்றும் தமது இராஜரீக உரிமைகள் இன்னவையென்றும் வெளியரங்கமாய்ச் சொன்னது, அவரது சத்துருக்கள் அவரைக் கொலைக்குத்தீர்ப்*

Digitized by Google

புச்செய்து, அவரது தலைக்குமேலாக சிலுவைமரத்தில், இவர் யூதரு டைய இராஜா என்ற விலாசத்தை எழுதிக்கட்ட காரணமாயிருந்த து. இவ்விதமாய் அவர் தமது ஊழியத்தின் முற்பாகத்தில், தக்க முகாந்தரங்களினால் தமது மேசியாத்துவத்தை மறைத்துவைத்திருந் தபோதிலும், தமது ஊழியத்தின் கடைசிகாலத்தில் தம்மைக்குறித் துத் தெளிவாய் வெளிப்படுத்தி தேவனுடைய கிறிஸ்துவாகவும், யூ தர்களின் இராஜாவாகவும் மனிதர் கைகளில் தம்மை ஒப்புக்கொடுத் தார்.

இந்த நாமதேயத்தின் தாற்பரியம் என்ன? யூதகள் 'தாவீதின் குமாரன்' என்ற இதை அர்த்தப்படுத்தினார்கள். (மத். 22: 42; மாற். 10: 47.) மேசியா வருவார், அவர் வந்து எருசலேமில் தமது பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்து தமக்கும் அவர்க ளுக்கும் சத்துருக்களாயிருந்தவர்களெல்லாரையும் கீழ்ப்படுத்தி ஜனங் களை நீதியோடும் நியாயத்தோடும் அரசாளுவார் என்றும், அவர் யா வராலும் ஜெயிக்கப்படக்கூடாதவராய் மிகுந்த வல்லமையுடனே உ லகத்துக்குரிய சகல ராஜரீக ஜெயசின்னங்களோடும் தோன்றியிருப் பாரென்றும் அவர்கள் பெருநினைவு கொண்டிருந்தார்கள்.

நமதாண்டவரோ தமது இராச்சியம் முற்றிலும் ஆவிக்குரிய தென்ற கருத்துடையவராயிருந்தார். அவருடைய போதனைகளி லெல்லாம் தமது இராச்சியம் புறம்பான இராச்சியமல்ல, அது மனு ஷனுடைய ஆவிக்கும், ஆத்துமாவுக்கு மாத்திரமடுத்ததென்று அறிந் து போதித்தார். திவ்ய ஊழியத்திற்காக பரிசுத்த ஆவியினால் அபி ஷேகம்பண்ணப்பட்ட கிறிஸ்து தாமே என்று பகிரங்கப்படுத்தினார்.

மற்றவர்கள் அவரை மேசியாவென்று சொன்னபோது அவர் அதை மறுக்கவில்லை. பர்திமேயு குருடன், அவரை நோக்கி, இயேசு வே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டபோ தும் (மாற். 10: 47—49), தமது சீஷர்கள் தம்மை இன்னாரென்று அறிக்கையிட்டபோதும் அவர்களை அவர் தடுக்கவில்லை. பிலாத்து வின் முன்னிற்கும்போது, அவர் தமது உத்தியோகத்தை மறுக்கா மல் ஒத்துக்கொண்டார் (மாற். 15: 2).

## தியானம்.

### MEDITATION.

இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ள இந்தியாவை ஆயத்தப்படுத்த நாம் என்ன செய்கிறோம்? தேவனுடைய பேராசீர்வாதங்கள் அவைகளை அ றிகிறவர்களுக்கே கிடைக்கும். யூதருடைய கண்கள் பூமியை நோக்கிக்கொ ண்டிருந்தன; பரலோகத்தின் பெரிய காட்சி அவர்களுக்குத் தெரியாமல் கடந் துபோனது.

Digitized by Google

## IV-ம் பாடம்.
## Study IV.

## மனுஷகுமாரன்.
## The Son of Man.

அவர் மனிதகுமாரனுயுமிருந்தார். (மத். 9: 6; 12: 8.) இது அவர்தாமே தமக்கென்று அருமையாகத் தெரிந்துகொண்ட நாமம். இது சுவிசேஷங்களில் தமக்கென்று அவரால் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆகிலும் அவர் காலத்திலிருந்த வேறொருவரும் இந்தப் பெயரை அவருக்கு உபயோகிக்கவில்லை. ஒரேயொரு தடவை மாத்திரம் அவருடைய சத்துருக்கள் மனுஷகுமாரனென்று அவரது வாயிலிருந்து வந்த வார்த்தையையே பிடித்துக்கொண்டு அவரைக் கேள்வி கேட்டார்கள். (யோவா. 12: 34.) சீஷர்களில் ஸ்தேவான் மாத்திரம் இரத்தச்சாட்சியாய் மரித்தபோது இந்தப் பெயரை உபயோகிக்கிறுன். (அப். 7: 56).

பொதுவாய்ச் சொல்லப்போனுல், மனுஷகுமாரன் என்கிறபேர் விசேஷமாய் சினைப்டிக் சுவிசேஷங்களில் வருகிறது. தேவனுடைய குமாரன் என்கிற நாமமோ யோவான் சுவிசேஷத்தில் அதிகமாய் வருகிறது.

பழைய ஏற்பாட்டில் இந்த வார்த்தை உபயோகிக்கப்பட்டிருக்கிறது. எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு இது பிரியமான வார்த்தை. (2: 1; 3: 1.) இங்கே இது பொதுவாய் மனுஷீக பெலவீனத்தைக் குறிக்கிறது. சங்கீதக்காரனும் இதே கருத்துடன் உபயோகிக்கிறுன். (சங். 8: 4.) தானியேல் தீர்க்கதரிசனத்தில் இது கண்ணியத்தையும் மகிமையையும் குறிக்கிறது. (7: 13.)

இயேசுவுக்கு இந்தப் பெயர் அதிக அருமை நிறைந்த கருத்துள்ளதாயிருந்தது. இதைக்கொண்டு அவர் தமது மேசியாத்துவத்தை வெளிப்படுத்த நினைக்கவில்லை. ஜனங்கள் தம்மை மேசியாவென்று கண்டுகொள்ளாதபடிக்கு அதை மறைக்கத்தக்க பெயர்தான். அப்படியில்லாவிட்டாலும், இவர் தேவன்தானே, அல்லவோவென்று ஜனங்கள் சந்தேகப்பட்டு மவுனமாயிருக்கும்படிக்கு ஈரர்த்தமான இந்தப்பெயரை அவர் உபயோகித்து வந்தாரென்று நாம் சொல்லவேண்டியது.

Digitized by Google

## தியானம்.

## MEDITATION.

*இயேசு தமது தேவத்துவத்தை வெளிப்படுத்துவதிலும் பார்க்க தமது மனுஷத்துவத்தை வெளிப்படுத்துவதில் அதிகமாய்ப் பிரியப்பட்டார். மனிதர் தம்மைத் தள்ளிவிட்டாலும் தாம் மனிதஜாதியைச் சேர்ந்தவர்களிலொருவரென்று சொன்னார். மனிதராகிய தமது இனத்தவரை தேவனுடைய மெய்யான பிள்ளைகளாக்க அவர் மனுஷகுமாரனானார்.*

———:o:———

## V-ம் பாடம்.

## STUDY V.

## இந்தப் பெயரின் கருத்து.

## THE SIGNIFICANCE OF THIS NAME.

இந்த நாமத்திற்குள்ளே 3 விசேஷித்த காரியங்கள் அடங்குமென்று சொல்லலாம்.

(*a*) இயேசுவினுடைய உள்ளான மனுஷீகத்தன்மையும் அவருக்கும் மனுக்குலத்தாருக்கும் இருக்கவேண்டிய நெருங்கின சம்பந்தமும் இதிலடங்கியிருக்கிறது. அவர் ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனிதகுமாரன். மனுஷீகரூபத்தை அவர் எடுத்துவந்தது மாத்திரமல்ல, மெய்யாகவே, மனிதரில் ஒரு மனிதனாகவும், அவர்கள் குலத்திலே ஒரு மெய்யான அங்கமாகவும் இருக்கிறார். இது அவரது தாழ்மையைக் காட்டும். நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை. (மத். 8: 20.) மனுஷகுமாரன் ஊழியங்கொள்ளும்படிவராமல் ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்படியாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார். (மத். 20: 28.) ஒருவேளை இதுவே இந்த நாமத்தினுடைய விசேஷித்த கருத்தாயிருக்கும். நமக்கு அவரை இன்னாரென்றுகாட்டி மெய்யாகவே அவர் நம்மிலொருவர் என்று வெளிப்படுத்துகிறபடியினால் இந்தப் பெயர் அவருக்குப் பெருமையாகவும், கிறிஸ்தவர்களுக்கு அருமையாகவும் இருக்கிறது.

(*b*) அவர் பிரத்தியேகமான மனிதகுமாரன். இங்கிலீஷில் இது குறிக்கப்பட்ட ஒரு ஆளைச் சுட்டிக்காட்டுகிறது. The Son of

Digitized by Google

Man. இவர் ஒரு சாதாரண மனுஷகுமாரனல்ல; இவர் நம்மில் ஒருவராயிருந்தபோதிலும் பிரத்தியேகமானவரும், நமக்கு மேலானவருமாயிருக்கிறார். மாசற்ற பரிபூரணமும் தாழ்மையான ஊழியமும் சுயவெறுப்பும் நிறைந்த அவரது ஜீவியம், அவர் அதீதவஸ்துவென்றும் மனுக்குலத்தாருக்கு ஒப்பற்ற முன்மாதிரியுமானவரென்றும் காட்டுகிறது.

(c) சிலவேளை இந்த நாமம் கண்ணியத்தையும் வல்லமையையும் தெரிவிக்கும்.

நமது ஆண்டவர் தானியேல் தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகளின் கருத்தை நன்றாயறிந்தவராயிருந்தார். தீர்க்கதரிசி அந்த திருநாமத்திற்கு எவ்வளவு கண்ணியத்தைக் கொடுக்கிறாரோ, அவ்வளவாய் இவரும் அவருக்கு உன்னதமான கனத்தைக் கொடுக்கிறார் என்பது பின்வரும் வசனங்களில் விளங்கும். "மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வரும்போது அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்." (மத். 16: 27.) "எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ அந்த மனுஷனுக்கு ஐயோ." (மத். 26: 24.) பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரமுண்டு. (மத். 9: 6) மனுஷகுமாரன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவராயிருக்கிறார் (மத். 12: 8.)

ஆண்டவர் தாமே இந்த நாமத்தை எந்தக் கருத்தோடே அனுசரித்தாரென்று நாம் அறியாவிட்டாலும், ஜனங்களுக்கு, அவர் மேசியாவென்று அது காட்டினதில்லை. ஏனென்றால் அவர்கள் அவரை மேசியாவென்று எண்ணினதில்லை.

## தியானம்.

### Meditation.

*இயேசுவின் தாழ்மையில் அவரது மேலான மகத்துவத்தைப்பார். மனுஷகுமாரனானதினாலே, மனுஷகுமாரரெல்லாருக்கும் இருக்கக்கூடியதை அவர் வெளிப்படுத்தினார்.*

*இரட்சகராகிய கிறிஸ்துவே, நீரும் மனிதன்தான்; நீர் துன்புற்று சோதிக்கப்பட்டீர்; உமது பட்சமுள்ளதும் ஆராய்கிறதுமானபார்வை வெட்கம் மூடும் காயங்களை வலைவயறுக்கும்.*

Digitized by Google

## VI-ம் பாடம்.
## Study VI.

### தேவகுமாரன்.
### Son of God.

*அவர் தேவகுமாரனாயுமிருந்தார்.*

சினாப்டிக் சுவிசேஷங்களில் ஆண்டவர் இந்த நாமத்தைத் தமக்கு உபயோகித்ததாக நாம் பார்க்கிறதில்லை. ஆகிலும் மத்தேயு சுவிசேஷத்தில் தேவனைத் 'தமது பிதா' என்று 21 தரம் சொல்லுகிருர். இந்த வார்த்தையைக் காட்டுகிற அருமையும் நெருங்கியதுமான சம்பந்தத்தை அவர் செய்த ஜெபத்தில் பார். "பிதாவே, வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது. சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது." (மத். 11: 25—27; லூக் 10: 21, 22.) இந்த வசனங்களில் எவ்வளவு தைரியமாய் அவர் தேவனுக்கும் தமக்குமுள்ள ஐக்கியத்தை எடுத்துரைக்கிருர்.

ஆகிலும் மற்றவர்கள் இந்தப் பெயரை அவருக்கு அடிக்கடி வழங்கினதாக சினாப்டிக் சுவிசேஷங்களில் பார்க்கலாம். அவர் ஞானஸ்நானம் பெற்றபோது, "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்ற சத்தம் இவர் காதில் தொனித்தது. (மத். 3: 13.) பிசாசுகளுங்கூட, "இயேசுவே, தேவனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்கும் என்ன" என்று சத்தமிட்டன. படவிலே பயம்பிடித்திருந்த சீஷர்கள் மெய்யாகவே இவர் தேவனுடையகுமாரன் என்ருர்கள். (மத். 14: 33.)

யோவான் சுவிசேஷத்தில், இயேசு இந்தப் பெயரை தமக்கு உபயோகிக்கிருர். மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அது இப்பொழுதே வந்திருக்கிறது அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள். (5. 25.) (10: 36, 11: 4ஐயும் பார்க்க.) நூறுதரத்திற்கு மேலாக அவர் தேவனைத் தமது பிதா என்றழைக்கிருர். இயேசுவின் மேசியாத்துவத்தைப்பற்றி சினாப்டிக் சுவிசேஷங்களுக்கும், யோவான் சுவிசேஷத்திற்கும் இன்னொரு வித்தியாசம் உண்டு. முந்தினவைகளில் அவர் தம்முடைய தூதினால் மறைக்கப்படுகிருர். பிந்தினதிலோ அவரால் தூது மறைக்கப்படுகிறது. அ

Digitized by Google

வரே பிரதானம் யோவான் தன் ஆண்டவர்பேரில் வைத்த பேரன்பே இதற்குக் காரணம்.

தேவகுமாரன் என்னும் நாமம், இயேசு தேவனுக்குச் சமானமானவர் என்கிற கருத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. இயேசுவின் சத்துருக்களும் அப்படியே எண்ணினார்கள். "என் பிதா இதுவரைக்கும் கிரியை செய்து வருகிறார்; நானும் கிரியை செய்து வருகிறேன்" என்றார். அவர் தேவனை தமது பிதாவென்று சொல்லித் தம்மை அவருக்குச் சமமாக்கினதினாலேதான் யூதர்கள் அவரைக் கொலைசெய்யமென்மேலும் வகைதேடினார்கள். (யோ. 5: 17, 18.) (10: 30–33ஐயும் பார்க்க.)

## தியானம்.

## MEDITATION.

தேவகுமாரனாயிராத மனுஷகுமாரன் மனிதனுடைய இரட்சகராயிருக்கமுடியாது. அவர் பரலோகத்துக்கும் பூலோகத்துக்குமுரியவரானதால் கடைசிபரியந்தம் இரட்சிக்கக்கூடியவர். இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னே அவருக்கு தேவதூஷணம் என்னப்பட்டது இப்போது கிறிஸ்தவர்கள் யாவருக்கும் மகிமையும் பெருமையுமாயிருக்கிறது.

———:o:———

## VII-ம் பாடம்.

## STUDY VII.

## நமது கர்த்தரின் மட்டுத்தன்மை.

## OUR LORD'S LIMITATIONS.

ஆகிலும், நாலாவது சுவிசேஷத்தில், இயேசுவானவர் தாம் மட்டுள்ளவரென்பதையும் சொல்லுகிறார்.

பிதா தம்மை அனுப்பினபடியினாலே, தாம் சுயமாய் வரவில்லையென்றும் (5: 37), தாம் கொண்டுவந்த சத்தியம் தாம் தேவனிடத்தில் கேட்டுப் பெற்றுக்கொண்டதென்றும் சொல்லுகிறார். தாமாய் அவர் பேசவில்லை (8. 40). மேலும் தாம் செய்கிற கிரியைகளனைத்தையும் பிதாவினிடத்திலிருந்து பெற்றுச் செய்துவருவதாகத் திட்டமாய்ச் சொல்லுகிறார். "மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்க

Digitized by Google

ளுக்குச் சொல்லுகிறேன். பிதாவானவர் செய்யக் குமாரன் காண் கிறதெதுவோ அதையேயன்றி வேறொன்றையும் தாமாய்ச் செய்ய மாட்டார். அவர் எவைகளைச் செய்கிருரோ, அவைகளை குமாரனும் செய்கிருர்" என்றும் (5: 19—30), "என் சித்தத்தின்படியல்ல, என் பிதாவின் சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்து இறங் கிவந்தேன்" என்றும் சொல்லுகிருர் (6: 38).

இயேசுவானவர் மட்டுள்ளவராயிருந்தாரென்பதற்கு சினுப்டிக் சுவிசேஷங்களில் அநேக அத்தாட்சிகளுண்டு. அவருடைய அறிவு மட்டுப்பட்டதாயிருந்தது. (மாற். 13: 32.) அவரது அதிகாரமும் அப்படியே. (மாற் 10: 40). அவர் தமது அற்புதக் கிரியைகளை யெல்லாம் தேவ ஆவியினுல் நடப்பித்தார் (மத். 12: 28; லூக். 11: 20 ஐயும் பார்க்க).

இந்தக் குறிப்புகள் யாவும், இயேசுவானவர் தமது பிதாவினு டைய சித்தத்திற்கு அடங்கியிருந்தாரென்று காட்டுகின்றன. இரட் சண்ய கிரியையை நிறைவேற்றும் உத்தியோக விஷயமாய், அவர் பி தாவுக்குக் கீழ்ப்பட்டவரென்று இது காட்டுகிறதே யொழிய வேறல்ல.

ஆகிலும், யோவான் சுவிசேஷகன் இயேசுவின் தேவ தன்மை யை அழுத்திக்காட்டவேண்டுமென்ற நோக்கமாய் 'தேவகுமாரன்' என்ற பெயரை உபயோகிக்கிருன். மற்ற அப்போஸ்தலரைப் பார்க் கிலும் அவருடைய தேவதன்மையைத் தெளிவாய் எடுத்துக்காட் டும்படிக்கு இந்தப் பெயரை அடிக்கடி வழங்குகிருன்.

## தியானம்.

## MEDITATION.

கிறிஸ்துவானவர் பிதாவின்மேல் சார்ந்திருந்தார் என்பதிலிருந்து கற்றுக் கொள்ளும் பாடமென்ன? சுவிசேஷத்தின் மிகவும் ஆழமான இரகசியமும் முக்கிய மகிமையும் இதிலிருக்கிறது.

உலகங்களை சிருஷ்டித்த அவர் பெத்லெகேமில் முன்னணையில் கிடத்தப் பட்டார். திரளான ஜனங்களைப் போஷித்தவர் பசியுற்றிருந்தார்! ஆசீர்வதிக் கப்பட்ட தேவன் கெத்செமனேயில் பாடுபட்டு சிலுவையில் மரித்தார்!

———:0:———

Digitized by Google

## VIII-ம் பாடம்.
## STUDY VIII.

## நித்திய குமாரன்.
## ETERNAL SON.

நாலாவது சுவிசேஷத்தில் நமது ஆண்டவர் நித்தியகுமாரனென்றும் சொல்லப்படுகிறார். சுவிசேஷத்தின் ஆரம்பத்தில் "தேவனோயிருந்த நித்திய வார்த்தை" என்றழைக்கப்படுகிறார். ஆதியிலே சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. வானத்திலிருந்து வந்தபடியினால் உலகத்திற்கு வருமுன்னே தாம் இருந்ததாகவும் (8: 23), தாம் பரலோகத்திலிருந்து வந்தபடியால் பரலோகத்திற்கே போவதாகவும், பரலோகத்திலிருந்து இறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயலலாமல் பரலோகத்திற்கேறினவன் ஒருவனும் இல்லையென்பதாகவும் இயேசு சொல்லுகிறார் (3: 13). நமது கர்த்தர் தமது முன்னிருப்பைப்பற்றி அடிக்கடி பேசுகிறார். பிதாவே, உலகம் உண்டாகிறதற்குமுன்னே, உம்மிடத்தில் எனக்குண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்தில் மகிமைப்படுத்தும் (17: 5). மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்? (6: 62). யூதரோடு தர்க்கிக்கையில் "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்" என்கிறார். நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்தில் வந்தேன். மறுபடியும் உலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன். அதே பிரகாரம் தமது சீஷர்களுக்குத் தெளிவாய்ச் சொன்னார் (16: 28—30).

சினாப்டிக் சுவிசேஷங்களில் கிறிஸ்துவின் முன்னிருப்பைக் குறித்து சாடையான குறிப்புகளிருந்தாலும், நேரானவை கிடையாது. தேவனுக்கும் தமக்கும் ஆதிமுதற்கொண்டிருந்த ஐக்கியத்தைப் பற்றியும் பிதாவோடு தாம் நித்தியராயிருந்தாரென்பதைப்பற்றியும் இயேசு அறிந்தவராயிருந்தாரென்பதற்குச் சந்தேகமில்லை.

இயேசுவின் நித்திய குமாரத்துவம், வெறும் சாஸ்திரீயமான உபதேசமல்ல. இயேசுவானவர் யாரென்று ஆராய்ந்து அறிவதினால்தான், தேவனைப்பற்றிய நமது எண்ணங்களும் ஆவிக்குரிய ஜீவியத்தின் மூலப்பிரமாணங்களும் அமையும். இயேசு நித்தியகுமாரனென்பது நிசமானால், அவர் பூலோகத்திற்கு அனுப்பப்பட்டு வந்த

Digitized by Google

து மகா மகத்தான தயை நிறைந்த காரியம்தானே. இயேசு கிறிஸ்துவில் நாம் தேவனைச் சுயமான மனுஷரூபமாய்க் காண்கிறோம்.

## தியானம்.
## MEDITATION.

தாம் முன்னே நித்தியமாயிருந்ததைப்பற்றி இயேசு ஏன் பெருமைபாராட்டினார்? கிறிஸ்து பூமியில் ஜீவித்த சுருக்கமான ஜீவியத்தை இரண்டு நித்திய கடல்களின் அலைகளால் மோதப்படும் ஒரு சிறு தீவாக எண்ணிப்பார். கிறிஸ்துவின் தெய்வீகமும் நித்தியத்துவமும் ஒரே சத்துக்குரிய இரண்டு தன்மைகளாம்.

———:o:———

## IX-ம் பாடம்.
## STUDY IX.

## அவர் பாவமற்றவர்.
## HE IS SINLESS.

**தா**ம் பாவமற்றவரென்பதை அறிந்திருந்தார். இந்த விஷயத்தில் அவர் மனிதனுக்குப் பிரத்தியேகமானவர். அப்போஸ்தலரும் அவர் பாவமற்றவரென்றே உறுதியாய் நினைத்தார்கள். அவர் மாசில்லாத் தூயமை யுள்ளவராகையால் அவருக்கும் தங்களுக்கும் பெரிய வித்தியாசமிருந்ததென்று அறிந்திருந்தார்கள்.

(*a*) அவர் பாவ அறிக்கை செய்யவில்லை. சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருக்கும் அவரது ஜெபங்களைக் கவனமாய் வாசித்துப் பாருங்கள். ஜெபத்திலேதான் மனிதர் தங்களைத் தேவனுக்கு முன்பாகத் தாழ்த்தி, பாவங்களை அறிக்கையிட்டு, மன்னிப்புக்காகக் கெஞ்சிக் கேட்கிறார்கள். பாவ அறிக்கை ஜெபத்தின் விசேஷித்த பாகமென்று போதித்தவர் அவர்தான். தமது சீஷர்களுக்கு அவர் சொல்லிக்கொடுத்த ஜெபத்தில், எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும் என்பது முக்கியமான விண்ணப்பம். ஆயக்காரன் பரிசேயன் உவமையைக் கொண்டு, பாவ அறிக்கை, ஜெபத்தின் சாரமும் சிறப்புமென்று போதித்தார். (லூக். 28: 9—14.) உண்மையுள்ளவர்கள் யாவரும் தங்கள் அபாத்திர நிலைமையையுணர்ந்து தேவனிடத்தில் பாவஅறிக்கை செய்கிறார்கள். எவ்வளவு கனிவாய் அவர்கள் தங்கள்

Digitized by Google

பாவத்தை அறிக்கையிடுகிறார்களோ அவ்வளவாய் அவர்கள் உத்தமர்களாக விளங்குகிறார்கள் என்று நாம் எண்ணிக்கொள்ளுகிறோம்.

தாம் ஏதாவது ஒரு குற்றம் செய்ததாகவும், தாம் தேவனை விட்டு வழிவிலகியிருந்ததாகவும் ஒரு வார்த்தையாகிலும் அவர் சொல்லவில்லை. (லூக். 10: 21, 22; யோ. 11: 41, 42.) தேவனிடம் அவர் பரிந்துபேசின சிறந்த ஜெபத்தைக் கவனமாய் வாசித்துப் பாருங்கள். (யோ. 17.) பாவ அறிக்கையைப்பற்றிய ஒரு வார்த்தையாவது அதில் காணப்படுகிறதா?

வனாந்தரத்தில் அவர் சோதிக்கப்பட்டதைக்குறித்தும் வாசியுங்கள். (மத். 4: 1—11) இந்தப் பொல்லாங்கனோடு போராடி ஜெயங்கொண்டதைப்பற்றி, அவர் தமது சீஷர்களுக்கும் பிற்காலத்தில் விபரித்திருப்பார். இரண்டு சுவிசேஷங்களிலும் சொல்லப்பட்டிருக்கிற இந்தச் சரித்திரத்திலே, சாத்தானின் தாக்குகளில் எதற்காவது அவர் இடங்கொடுத்தாரென்று பார்க்கிறோமா? ஆதிமுதல் அந்தம்வரை அவர் ஜெயகம்பீரனாய் விளங்கினாரல்லவா? சோதனையான இந்தப்போரில் அவர் ஆத்துமா குன்றிப்போனதா? இல்லை. முதற்சோதனையில் அவர் ஏதாவது தன்னயமாய்த் தமது வல்லமையைப் பிரயோகித்தாரோ? இரண்டாவதில் ஜனங்களைத் தகாதவகையாய் அவர் பிரியப்படுத்தினாரோ? கடுமையான மூன்றாம் சோதனையில், அவர் தமக்குச் சித்தியுண்டாகும்படி தகாதவகையாய் நடந்தாரோ? அப்படியில்லவேயில்லை. ஒரு அணுவளவு சந்தேகமுமின்றி இம்மும்மடங்கான சோதனையில் சுத்தபரிசுத்தராய் விளங்கி ஜெயங்கொண்டு, பரிசுத்தமும் உண்மையும் நிறைந்து ஆவியோடே தமது ஊழியத்திற்குப் புறப்பட்டுப்போனாரல்லவா?

## தியானம்.

## MEDITATION.

பாவிகளுடைய இரட்சகர் பாவமற்றவராய் ஏன் இருக்கவேண்டும்? இந்த மார்க்கத்தின் எல்லா அனுசாரங்களுக்கும் ஆதார அஸ்திபாரத்துக்கும் உள்ள இந்த விசேஷத்தைக் கவனிக்கப்பார்.

அவர் சாத்தானை ஜெயித்தபோதிலும் அவனுடைய தந்திரங்களை அறிந்து அவனுடைய வல்லமையை உணர்ந்தவரானதால், சோதிக்கப்படுகிற விசுவாசியோடு அவர் அனுதாபப்பட்டு உதவிசெய்யக் கூடியவராயிருக்கிறார்.

Digitized by Google

## X-ம் பாடம்.
## STUDY X.

### அவர் பாவமற்றவர். (தொடர்ச்சி.)
### HE IS SINLESS. (*Continued.*)

மனுக்குலத்தாருக்குக் கடைசி நியாயத்தீர்ப்புக் கொடுக்க வருகிறவரென்று இயேசு தம்மைக் குறித்துச் சொல்லுகிறார். (மத். 13: 41, 42.) எல்லா மனிதரையும் நியாயந்தீர்த்து, பாவமன்னிப்பைப்பெறாத ஒவ்வொருவனுக்கும் ஆக்கினைத்தீர்ப்பைக் கொடுக்கிறவர் தாமே பாவமற்றவராயிருக்கவேண்டும். மற்றவர்கள் செய்த கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்புக்கொடுக்கிறவர், மீறப்பட்ட எந்தப்பிரமாணத்திற்காக அவர் ஆக்கினையைக் கொடுக்கப்போகிறாரோ, அந்தப் பிரமாணத்தை அவர்தாமே முதலில் நிறைவேற்றினவராக இருக்கவேண்டும்.

இதற்கும் மேலாக, பாவங்களை மன்னிக்கத் தமக்கு அதிகாரமுண்டென்று அவர் சொன்னது அவர் பாவமற்றவராயிருந்தாரென்று காட்டுகிறது. ஒரு பெரியபாவி, மற்றப்பாவிகளுக்கு முன்பாகநின்று, "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்," (மத். 11: 28) என்று கூறினனென வைத்துக்கொள்ளுவோம். இயேசுவானவரிடத்தில் மன்னிப்பைப்பெற்ற பெரும்பாவிகளைப்போன்ற சிலபேருக்கு இவனும் பாவமன்னிப்பைக் கொடுக்கத் துணிவானானல் அவர்கள் பார்வையிலே அது நிகரற்ற பரிகாசம் என்று காணப்படும். (மாற். 2. 10.) ஆயினும், பரிசேயருடைய காலமுதல் இதுவரை ஒருவரும் நமது கர்த்தர் பாவங்களை மன்னிக்கிறவர் என்ற விஷயத்தை எதிர்பார்க்கவில்லை.

இயேசுவானவர், ஒரு தடவை தமது எதிரிகளைப் பார்த்து, என்னிடத்தில் பாவமுண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்? (யோவா. 8. 46) என்று கேட்டபோதும் தாம் பாவமற்றவரென்று திட்டமாய்க்காட்டினர். இப்படி அவர் கேட்டபோது, ஜனங்கள் நிசமாகவே இவரிடத்தில் ஏதாவது குறை அல்லது பாவம் இருக்கக் கண்டிருந்தார்களானல் உடனே அவர்கள் தடையும் தாமதமுமின்றி அதை எடுத்துக்காட்டியிருப்பார்கள். ஆனல் ஜனங்களோ ஒன்றும் பேசாது வாயை இறுக்கி மூடிக்கொண்டார்கள். பிற்

காலத்தில் அவர் தமது சீஷர்களைப் பார்த்து, இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான்! அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை என்றார். (யோவான் 14: 30.) சாத்தான் மற்றவர்களைச் சோதித்ததைப் பார்க்கிலும் நமது ஆண்டவரை அதிகமாய்ச் சோதித்தான் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் அவனுக்கு அவரிடத்தில் ஒன்றுமில்லை. அவர் எப்பொழுதும் விழிப்பாயிருந்து தமது ஆத்துமாவைக் காத்துக்கொண்டபடியினால் அவரை ஜெயிக்கிறதற்கு அவனுக்குக் கொஞ்சமென்கிலும் இடமில்லாதிருந்தது.

## தியானம்.

## MEDITATION.

கிறிஸ்து சாத்தானுக்கு ஒருதரம் இடங்கொடுத்திருப்பாரானால், தாம் இரட்சகரென்று அவர் சொன்னதை அது எவ்வளவாய்க் கெடுத்திருக்கும்?

என்னைப் பாவமுள்ளவனென்று காட்டுங்கள் என தமது சத்துருக்களைப் பார்த்து 2,000 வருஷக்காலமாய் இயேசு கேட்டும் ஒருவனும் அவரைக் குற்றப்படுத்த முன்னுக்கு வரவில்லை. மனஸ்தாபப்படும் பாவிகளுக்கு இது பெரும் சந்தோஷமே. அவர் நமது பலவீனங்களை அறிந்திருக்கிறார்; ஆனால் அவைகளுக்கிடங்கொடுக்கப்படாதென்று நமக்குக் காட்டியிருக்கிறார்.

——:o:——

## XI-ம் பாடம்.

## STUDY XI.

## கடைசி நியாயாதிபதி.

## LAST JUDGMENT.

சகல மனிதருக்கும் அவர் கடைசி நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறவர். உலகத்துக்கு வந்து மனிதரால் நியாயந்தீர்க்கப்பட்ட அவர் மறுபடியும் திரும்பி வந்து எல்லாருக்கும் மேலான நியாயாதிபதியாக நியாயந்தீர்ப்பது ஆச்சரியந்தான். ஆகிலும், உலகத்தின் கடைசி நியாயாதிபதியாக மனிதனை நியாயந்தீர்க்கப் போகிறேன் என்ற அறிவை அவர் அடிக்கடி காட்டினார்.

மலைப்பிரசங்கத்தில் இந்தக் காரியம் வைக்கப்பட்டிருக்கிறது. "அந்நாளில் அநேகர் என்னைநோக்கி: கர்த்தாவே, கர்த்தாவே, உம

Digitized by Google

து நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோமல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோமல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச்செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" (மத். 7: 21—23). தாம் எல்லாருடைய குணங்களையும் ஆராய்ந்து நியாயந்தீர்க்கப் போகிறவரென்று இந்த வார்த்தைகளினாலே காட்டுகிறார்.

களைகளைப்பற்றிய உவமையிலும் இந்த உபதேசத்தை தெளிவுற எடுத்துச் சொல்லுகிறார். (மத். 13: 36—43.) மனிதகுமாரன்தான் தமது தூதர்களையனுப்பி நல்லவர்களையும் பொல்லாதவர்களையும் வெவ்வேறாகப் பிரித்து அவரவர்களுடைய கிரியைக்குத்தக்கதாக அவரவர்களுக்குப் பலனளிக்கிறவர்

மேகாசனத்தில் வீற்றிருந்து, வானசேனைகளால் சூழப்பட்டு, இந்த வேலையை நடப்பிக்கும்படிக்குத் திவ்ய வல்லமையும் பரலோக மகிமையும் பொருந்தினவராய்க் காணப்படுவார்.

## தியானம்.

## MEDITATION.

கடைசி நாளில் நியாயந்தீர்க்கிற அவர் உன்னுடைய ஒவ்வொரு கிரியையையும்பற்றி தினசரி நியாயந்தீர்க்கிறார் அல்லவா? இயேசு ஜீவியத்தின் விதையை விதைக்கவந்தார். தமது கோதுமையை தமது களஞ்சியத்தில் சேர்க்கக் கடைசிக்காலத்தில் வருவார்.

———:o:———

## XII-ம் பாடம்.

## STUDY XII.

## கடைசி நியாயாதிபதி. (தொடர்ச்சி.)

## LAST JUDGMENT. (*Continued.*)

நமது ஆண்டவர், ஒலிவமலையிலே கடைசி நியாயத்தீர்ப்பைக் குறித்து அன்றிரவு சொன்ன அந்தப் பெரிய உவமையில், இந்த உன்னத சம்பவத்தின் விசேஷமகிமை மகா அலங்காரமாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. (மத். 25: 31—46.) அந்த பெரிய விசாரணையைக்

Digitized by Google

குறித்த விபரத்தில், இந்த விசாரணையின் முழுநோக்கம், கடைசித் தீர்மானம், அது நீடித்திருக்கும் காலம், அதின் பலன் ஆகிய இவைகளைக்குறித்தும், சர்வஜனங்களும் இதற்குட்படுவோர்களென்பதைக்குறித்தும் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது.

சகலருக்கும் நியாயாதிபதி என்பதில் அவரது சர்வஞானம் விளங்குகிறது. மல்கியாவின் தீர்க்கதரிசனத்தில் தேவனுடைய ஞாபகப் புஸ்தகம் ஒன்றைக்குறித்து வாசிக்கிறோம். இது சகலஜனத்தையும் ஞாயத்துக்குக் கொண்டுவருகிறவரின் சர்வஞ்ஞத்துவத்தைக் காட்டுகிற செய்யுள்வர்ணிப்பேயன்றி வேறல்ல.

உலக இரட்சகராக, அவர் சகல மனிதர்மேலும் அதிகாரமும் பாத்தியமுமுடையவர். உலகத்திற்கு ஜீவனைக்கொடுக்கவந்த இந்த மகா புருஷன் அந்த ஜீவனை ஏற்றுக்கொண்டவர்களுக்கு அல்லது ஏற்றுக்கொள்ளாதவர்களுக்குத் தக்கபலனைக்கொடுக்க அதிகாரமுடையவர். இன்னும் சொல்லப்போனால், அவர் கொடுக்கப்போகிற கடைசி நியாயத்தீர்ப்பு, ஜீவனுக்கும் நியாயத்தீர்ப்புக்கும் அதிபதியாயிருக்கிறவனை ஏற்றுக்கொண்டதற்கும் ஏற்றுக்கொள்ளாததற்கும் தக்கதாகயிருக்கும். ஆகவே, இரட்சிக்கும் வல்லமையுடையவரே நியாயத்தீர்ப்புக் கொடுக்கவும் அதிகாரமுடையவராயிருக்கிறார் என்பது சரியே.

அவர் நியாயந்தீர்ப்பவரென்று காட்டுகிறதற்கு ஏற்ற வேறு வாக்கியங்கள் யோவான் சுவிசேஷத்தில் உண்டு.

(*a*) நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் அதிகாரம் பிதாவினால் அவருக்குக் கொடுக்கப்பட்டது. (5: 21, 22.)

(*b*) தாம் ஜீவனையுடையவராயிருந்தபடியினாலே, நியாயத்தீர்ப்புநாளில், தாம் யாருக்கு ஜீவனைக்கொடுக்கவேண்டுமென்று விரும்புகிறாரோ, அவர்களுக்கு அதைக்கொடுக்க அதிகாரமுடையவர். (யோவா. 5: 26, 27.)

(*c*) இந்தத்தீர்ப்பு, மனிதனுடைய கிரியைக்குத் தக்கதாயிருக்கும். பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும், அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். (5: 28, 29.)

(*d*) இந்த நியாயத்தீர்ப்பு, மனிதர் அவரிடத்தில் காட்டிய அவர்களுடைய மனதுக்குத்தக்கதாயிருக்கும். ஒருவன் என் வார்த்தை



Digitized by Google

களைக் கேட்டும் விசுவாசியாமற்போனால் அவனை நான் நியாயந்தீர்ப்ப தில்லை. அவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் (12: 47, 48).

அவர் தாமே உலகத்திலிருந்தபோதுங்கூட மனிதருடைய உள்ளிந்திரியங்களையும், அவர்களுடைய குணசீலங்களையும் நன்றாயறிந்தவராயிருந்ததால் அவர் மனிதனை நியாயந்தீர்க்கக்கூடியவர். (யோ. 2: 24, 25; 4: 18: 29.) சீமோன் பேதுருவினுடைய மனதையும் உற்று கவனித்தாரென்று பார்க்கிறோம். பேதுரு தன்னை அறிந்திருந்ததைப் பார்க்கிலும், நமதாண்டவர் அவன் மனதைக் கூர்ந்து ஆராய்ந்திருந்தார். (லூக். 22: 31—33.)

## தியானம்.

### MEDITATION.

தேவனுடைய ஞாபகப் புஸ்தகத்திலே உன் ஜீவியத்தைப்பற்றி என்ன தீர்ப்பு தினசரி எழுதப்படுகிறது? நமது ஜீவியத்திற்கு நமது கிரியைகளும், நமது கிரியைகளுக்கு நமது அன்பும், நமது அன்புக்கு கிறிஸ்துவிலுள்ள நமது விசுவாசமும் அடையாளமாகும். சகலமும் அவருக்குத் தெரியும்.

———:O:———

## XIII-ம் பாடம்.

## STUDY XIII.

### தேவனை வெளிப்படுத்துகிறவர்.

### REVELATION OF GOD.

தேவனை வெளிப்படுத்துகிறவரென்று அவர் தம்மைக்குறித்துச் சொன்னார். கர்த்தருடைய தூதன் யோசேப்பினிடத்தில் வந்து "அவருக்கு இம்மானுவேல்" என்று பெயரிடுவாயாக என்றான். "தேவன் நம்மோடிருக்கிறார்" என்பது அதினர்த்தம். (மத். 1: 21–23.) அவர் அவதார புருஷனாய், நித்தியமாய், சுயம்புவாய் இருக்கிற தேவன்! அவனை நேசித்த அப்போஸ்தலன் தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை! பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவனை வெளிப்படுத்தினார் (யோவா. 1: 18) என்று எழுதுகிறான். இதுதான் இயேசுவின் முக்கியவேலை—தேவனை வெளிப்படுத்துவது. அவர் வார்த்தை என்னப்பட்டவர் (யோவா. 1: 1).

Digitized by Google

அவர் வார்த்தையானவராக, தேவனுடைய பரிபூரண சித்தத்தை மனிதருக்கு வெளிப்படுத்துகிறவர்.

பிதாவோடு தமக்கு நெருங்கிய சம்பந்தமுண்டென்கிறார்.

(*a*) பிதாவினிடத்திலிருந்து வந்தவர் (யோவா. 5: 37; 6: 57).

(*b*) தாம் மாத்திரம் பிதாவை அறிந்தவர் (யோ. 10: 14, 15). குமாரனும், குமாரன் எவனுக்கு அவனை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர வேறொருவனும் பிதாவை அறியான். (மத். 11: 27, 30; லூக். 10: 22).

(*c*) உலகத்தோற்றமுதல் பிதாவின் மகிமை பொருந்தினவர். (யோவா. 17: 5).

(*d*) தாமும் பிதாவும் ஒன்று; (யோவா. 17: 21; 14: 11; 5: 17, 18).

(*e*) என்னைக் கண்டவன் பிதாவைக்கண்டான். (யோ. 14: 9). கிறிஸ்துவைக்காண்பது அளவற்ற தேவனைக் காண்பதற்குச் சமம். கிறிஸ்துவிலேமாத்திரம் நாம் தேவனை முகமுகமாய்ப் பார்க்கக்கூடும்.

## தியானம்.

## MEDITATION.

வெளிப்படுத்துகிறவர் ஒருவரில்லாமல் தேவனையறிவது கூடாதகாரியம். மனிதனுடைய உதவியற்ற வெளிச்சம் தேவனைச்சுற்றியிருக்கிற இருளை ஊடுருத்துச்செல்லமுடியாதென்று இந்து வேதாந்தியும் மேற்கத்திய அவித்தையனும் சொல்வது சரியே. ஆனால் இயேசுகிறிஸ்துமூலமாய் தேவன் திரையை நீக்கி இருளிலிருந்து வந்து பிரகாசித்தார். இயேசு நமக்கு தேவனுடைய கருத்தும் ஜீவனுமாகிய வார்த்தை.

———:o:———

## XIV-ம் பாடம்.

## STUDY XIV.

## அவர் மனிதருடைய இரட்சகர்.

## THE SAVIOR OF MEN.

தாம் மனிதனை இரட்சிக்கிறவரென்று தம்மைப்பற்றிச் சொன்னார். தமக்குள்ள இந்த அறிவை எப்பொழுதும் எங்கும் வெளிப்படுத்தினார். அவர் பிறக்குமுன்னே அவருக்கு இயேசு என்று பேரி

Digitized by Google

டும்படி தேவதூதன் கட்டளையிட்டான். ஏனெனில், அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்! என்றான். (மத் 1: 24.)

யோவான் ஸ்நானகன், இயேசு தன்னிடத்தில் வருகிறதைக் கண்டு, "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி" என்றான். (யோவா 1: 29.)

இயேசு தாம் அவதார புருஷனாக வந்த நோக்கம் இன்னதென்று தாமே வெளிப்படுத்தினார். மனுஷகுமாரன் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும் அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார். (மத். 20: 28).

மனிதன் சீர்கெட்டுப்போனான் என்பது இயேசுவுக்குத் தெரிந்தகாரியம். அவர் பிதாவோடு தமக்கிருந்த ஐக்கியத்தைவிட்டுத் தமக்குச் சொந்தமானவர்களிடத்தில் வர முற்றிலும கூடாதவராயிருந்தார். அவரது வாயிலிருந்து புறப்பட்ட ஞானமும் கிருபையும் நிறைந்த வார்த்தைகளில், காணமற்போன ஆடு, காணமற்போன காசு, காணமற்போன மகன் (கெட்டகுமாரன்) என்னும் உவமைகள் தான் அதிக அருமையானவைகள் (லூக். 15). இந்த உவமைகளைச் சிலர் இரட்சிப்பின் உவமைகள் என்று சொல்லுவதும் தகுதியே. முதலாவது உவமை பாவிகளை இரட்சிக்கும்படி கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் நடப்பிக்கும் அளவற்ற அன்பும், நீடிய பொறுமையுமான கிரியையை வெளிப்படுத்துகிறது. மிகுந்த வருத்தத்துடனே, எந்த மோசத்தையும் பொருட்டாயெண்ணமல், மேய்ப்பன் அங்குமிங்கும் ஓடி காணமற்போன ஆட்டைத் தேடிப்பார்க்கிறான். அதைக் கண்டு பிடித்தவுடன் எவ்வளவு ஆவலுடனே அவன் அதைத்தூக்கித் தன் தோளின்மேல் போட்டுக்கொண்டு தன்னோடுகூட சந்தோஷப்பட தன் சிநேகிதர்களை அழைக்கிறான். அப்படியே மனந்திரும்புகிற ஒரே பாவியைக்குறித்து பரலோக வாசிகளுக்குள்ளும் சந்தோஷமிருக்கிறது. மனுஷனுடைய நிர்ப்பந்த ஸ்திதியையும், உதவியற்ற நிலைமையையும் இயேசு நன்றாய் அறிந்திருந்தார். திவ்விய அன்பினால் நிறைந்தவராய், பூலோகத்திற்கு வந்து அவனைத் தேடிக் கண்டு பிடித்து அவனை மீட்டுக்கொண்டு பரலோகத்தின் வாடாத சுதந்தரத்தை அவனுக்குக் கொடுத்தார். பாவத்தினால் குன்றிச் சீர்கெட்டுப் போன ஆத்துமாவின் மனந்திரும்புதலைக் குறித்து மேலான வாசஸ்தலங்களில் உண்டாகும் மட்டற்ற சந்தோஷம் எவ்வளவென்று அவருக்குத்தான் தெரிந்திருந்தது.

இந்த உவமையோடு, இன்னொரு விசேஷித்த பாகத்தைக் கவனிப்பதும் நலம். (யோவா. 10: 1—29.) தமது ஆடுகளுக்காகத் த

Digitized by Google

மது உயிரைக் கொடுக்க மனங்கோணாத நல்ல மேய்ப்பனின் படம் இதில் காட்டப்படுகிறது. (வாக். 11.) தம்முடையவைகளை அறிந்தும் தம்முடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிற நல்ல மேய்ப்பன் அவரே. (வாக். 14.) பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட ஆத்துமாவை இந்த இரட்சாபெருமானின் கைகளிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலுங்கூடாது. "நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை; ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை. அவைகளை எனக்குத்தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார். அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது" என்று சொல்லுகிறார். (வாக். 28: 29.) இவ்விதமாய் இயேசுவினால் மீட்கப்பட்ட ஆத்துமாவின் பூரண இரட்சிப்பைக்குறித்த இரட்டிப்பான நிச்சயத்தை நாம் இதனால் அறிந்துகொள்ளுகிறோம்.

## தியானம்.
## MEDITATION.

பாவமன்னிப்பின் சமாதானத்தையும், இரட்சிப்பின் நிச்சயத்தையும், சுத்திகரிப்பின் இன்பத்தையும், பாவத்தை ஜெயிக்கும் வல்லமையையும் இயேசு உன்னில் உண்டாக்கியிருக்கிறாரா? தன்னுண்ட "பாவிக்கும்" கந்தைத்துணியையுடுத்த பசியுள்ள கெட்டகுமாரனுக்கும் தேவனுடைய ஆசீர்வாதம் வந்தது. நமது கர்த்தரால் மோட்சத்துக்கு உயர்த்தப்படும் தாழ்ந்த நிலையுள்ள இவர்களை அற்பமாய் எண்ணவேண்டாம். நமது இரட்சிப்பு ஜீவனுக்கேதுவான ஜீவன். அவர் மரித்ததால் நாம் பிழைத்திருக்கிறோம்.

———:o:———

## XV-ம் பாடம்.
## STUDY XV.

## மனிதருடைய இரட்சகர். (தொடர்ச்சி.)
## THE SAVIOR OF MEN. (*Continued.*)

பிணியாளிகளைச் சொஸ்தமாக்கின அவரது அற்புதங்கள் ஆத்துமாவை இரட்சிக்கிற அவரது செயலுக்கு உவமைகளாயிருக்கின்றன. திமிர்வாதக்காரனைச் சொஸ்தமாக்கினபோது அவர் அவனுக்குச் சரீ

Digitized by Google

ரசுகத்தைக் கொடுத்ததுமாத்திரமல்ல, ஆத்தும சுகமாகிய பாவமன்னிப்பையுங் கொடுத்தார்.

ஒன்று மற்றொன்றுக்கு அடையாளக் குறிப்பாயிருந்ததுமன்றி, அதற்கு உபதுணையாயுமிருந்தது. (மாற். 2: 1—7.) அவரது அற்புதங்களெல்லாம் அவர் ஆத்துமாக்களையும் இரட்சிக்க வல்லமையுடையவரென்று உறுதிப்படுத்துகின்றன.

அவர் பாவிகளை இரட்சிப்புக்கென்று தம்மிடம் அழைத்தார். "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்! நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." (மத். 11: 28.) "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன்" (யோவா. 7: 37). "என்னிடத்தில் வருகிறவனை நான் ஒருபோதும் தள்ளுவதில்லை" (யோவா. 6: 37). தாம் அதிகமாய் நேசித்த எருசலேமைக்குறித்து, "எருசலேமே, எருசலேமே, கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச்சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச்சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று" என்று கூறினார். (லூக். 13: 34.) பரிசுத்தக்கூட்டத்தாராக, அவரும் அவரது சீஷர்களும் ஒலிவமலையில் தருகியிருந்தபோது, இந்தப் பெரியபட்டணத்திலும் அதைச்சூழவிருந்த கிராமங்களிலுமுள்ள இலட்சக்கணக்கான ஜனங்கள்பேரில் கவிந்திருந்த அவரது அன்பு எவ்வளவு உருக்கமும் மாட்சிமையுமானதென்று பாருங்கள்.

அவர் பாவங்களை மன்னிக்கிறவராயுமிருந்தார். திமிர்வாதக்காரன் விஷயத்தில் மாத்திரமல்ல; பெரும் பாவியாயிருந்த அந்த ஸ்திரீ அவரது வல்லமையுள்ள இரட்சிப்பின் சந்தோஷத்தை உணர்ந்து, அவர் கிட்ட வந்து, அவர் பாதங்களில் பரிமளதைலம் பூசினபோது, இவள் செய்த அனேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது. இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே (லூக். 7: 47) என்று சொன்னார்.

## தியானம்.
## MEDITATION.

ஜெபத்துக்கு மறுமொழியாக, மனிதருடைய தேகத்தை இயேசு இப்போது குணமாக்குகிறாரா?

வருத்தமுள்ள நமது படுக்கையண்டை தையலற்ற அவரது வஸ்திரத்தின் குணமாக்கும் வல்லமையுண்டு. ஜீவியத்தின் நெருக்கமான வேளையில் நாம் அவரைத் தொடும்போது மறுபடியும் சுகமடைகிறோம்.

Digitized by Google

## XVI-ம் பாடம்.
## STUDY XVI.

### மனிதருடைய இரட்சகர். (யோவான் சுவிசேஷத்தில் காணப்படுகிறபடி.)

### THE SAVIOR OF MEN (JOHN'S GOSPEL).

யோவான் சுவிசேஷத்தில் அவரது இரட்சணிய ஊழியம் அநேக திருஷ்டாந்தங்களினால் மிகவும் வற்புறுத்திக் காட்டப்பட்டிருக்கிறது. நாலாவது சுவிசேஷத்திலடங்கிய போதனைகளின் விசேஷம் இரட்சிப்பின் குறிப்புகளும் ஆசீர்வாதங்களும் அவருக்குள்தானே நிறைவாயிருந்தது என்பதே.

உலகத்திற்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும்படிக்குப் பிதாவானவர் தமது குமாரனை அனுப்பினார். ஆகையினால், வனாந்தரத்தில் சர்ப்பமானது உயர்த்தப்பட்டதுபோல அவனை விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு நித்திய ஜீவன் உண்டாகும்படி அவர் தமது சீஷர்களால் உயர்த்தப்படவேண்டும். (3: 13—15.)

தாகமுள்ளவனெவனோ அவனுக்கு இனி ஒருக்காலும் தாகமுண்டாகாதபடி அவனுக்கு நித்திய ஜீவனையளிக்கிறார் (4: 10, 14).

ஜீவ அப்பமும் ஜீவ தண்ணீரும் அவர்தான். அவரே, விசுவாசிக்கிற ஒவ்வொரு ஆத்துமாவையும் போஷித்து பலப்படுத்த வல்லமையுடையவர்.

உலகத்திற்கு ஒளியும் அவரே. (யோ. 8: 12.) மரண இருளிலிருந்து ஜீவ ஒளிக்கு அவர் ஆத்துமாவைக் கொண்டுவருகிறார். அந்த ஒளிதான் நித்திய ஜீவன்.

உயிர்த்தெழுதலும் நித்தியஜீவனும் அவரே. துயரமுள்ள மார்த்தாளுக்குச்சொன்ன அவரது ஆச்சரியமான வார்த்தைகள், நிர்ப்பாக்கியமுள்ள கணக்கற்றபேருக்கு அளவற்ற ஆறுதலைக் கொடுத்துக்கொண்டே வந்திருக்கிறது. நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான். (11: 25, 26.)

உயிர்த்தெழுதலின் உபதேசம் அவரில் திருஷ்டாந்தமடைந்தது மாத்திரமல்ல அவரே அதற்கு மூலகர்த்தாவுமானவர். தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் நம்பிக்கையையும் நிச்சயத்தை

Digitized by Google

யுமுண்டுபண்ணுகிறது அதுவே. நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்றும் அவர் சொன்னார். (14: 6.) வழியாகிய அவர் மூலமாயும், நித்திய சத்தியமாகிய அவரிலும் ஆத்துமாவின் ஜீவனாகிய அவனை உட்கொண்டும், மனிதர் என்றைக்கும் பூரண இரட்சிப்பைக் கண்டடையவேண்டும்.

'நித்திய ஜீவனென்பது' யோவான் சுவிசேஷத்திற்குரியதும் யோவானுக்கு மிகவும் பிரீதியுமான பதம். அது கொஞ்சங்குறைய 'தேவனுடைய இராச்சியம்' என்பதற்குச் சமமான கருத்துள்ளது. அது மனிதருடைய ஆத்துமாக்களில் நடப்பட்டு, நித்தியகாலமாய் முளைத்தோங்கி வளருகிற ஜீவ விதை. கர்த்தர் அதைப் 'பரிபூரண ஜீவன்' என்றும் சொல்லுகிறார். (10: 10). கர்த்தர்கொடுப்பது எதுவோ அது பரிபூரணமாய்க்கொடுக்கப்படும். சகல நன்மைகளும் அடங்கியிருக்கிற அவரது முக்கிய ஈவாகிய இந்த ஜீவனை நீடூழிகாலமாக, நிறைவான சந்தோஷத்தைப் பிறப்பிக்கத்தக்கதாக தமது பிள்ளைகளுக்கு ஏராளமாய் அளிக்கிறார்.

இவ்விதமாக இயேசுவானவர் இரட்சிப்பைக் கொடுக்கும்படியாக மாத்திரமல்ல, பரிபூரணமும் நித்தியமுமான இரட்சிப்பின் முதற்பொருளாகத் தம்மைத்தாமே கொடுக்கும்படி வந்தார்.

## தியானம்.

## MEDITATION.

*நமது மார்க்கம் நிகழ்காலத்துத் தன்மையுள்ள மார்க்கம். "நான் இருக்கிறேன்" என்பதாய் கர்த்தர் உரைத்ததே அதின் மூலாதாரம்.*

——:o:——

## XVII-ம் பாடம்.

## STUDY XVII.

## இயேசுவின் மரணம்.

## THE DEATH OF JESUS.

சிலுவை மரணமானது, தாம் செய்யவேண்டிய ஊழியத்தின் பிரதான பாகமென்று அவர் எப்போதும் உணர்ந்தவராயிருந்தார். தம்முடைய மரணத்தைப்பற்றிய இந்த விசேஷித்த அறிவை அவர்

Digitized by Google

எப்போது பெற்றுக்கொண்டாரென்று நமக்குத் தெரியாது. சிறுபிராயத்தில் அவர் கலிலேயாவின் மலைகளிலும் நாசரேத்தைச்சேர்ந்த நாடுகளிலும் தனிமையாகச் சுற்றித்திரிந்த காலத்திலோ, வேறெந்தக் காலத்திலோ நாமறியோம். அவர் ஞானஸ்நானம்பெற்ற நாள்முதல் மரணபரியந்தமும் சிலுவையின் நிழல் அவர்மேல் தங்கியிருந்ததென்றே நாம் நிச்சயமாய்ச் சொல்லவேண்டும்.

மேசியாவானவர் பாடுபடுகிறவராயிருப்பாரென்று பழைய ஏற்பாட்டில் தெளிவாய்ச்சொல்லியிருக்கிறது. விசேஷமாய்ப் பூர்வீக பலிகள், அதாவது, பஸ்கா, பிராயச்சித்தப்பலிகள் யாவும் (லேவி. 16) மனிதனுக்குப் பிணையாளியாக அவர் படப்போகிற பாடுகளைக் குறிப்பிட்டவை. இந்தக் கருத்து ஏசாயா 53-ம் அதிகாரத்தில் தீர்க்கதரிசன மேனாயாகத் தெளிவாயும் திட்டமாயும் காட்டப்பட்டிருக்கிறது. இது நிறைவேறுகிறதற்கு 700 வருஷங்களுக்கு முன்னதாகவே ஜனங்கள் கிறிஸ்துவின் சிலுவைமரணக்காட்சியை நேருக்கு நேராய்க் கண்டதுபோல அவருடைய திவ்ய மரணத்தை இந்த வசனங்களின் மூலமாய் மெய்யாய் உணர்ந்தவர்களாயிருந்தார்கள்.

யூதர்களோ, மேசியாவைக்குறித்து இவ்விதக் கருத்துக்கொண்டவர்களல்ல. அவர் வெற்றிவேந்தராகவும் நித்திய ஜெயகெம்பீரனாகவும் இருப்பார் என்பதே அவர்கள் எண்ணம். "கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறாரென்று வேதத்தில் சொல்லியதை நாங்கள் கேட்டிருக்கிறோம். அப்படியிருக்க, மனுஷகுமாரன் உயர்த்தப்படவேண்டியதென்று எப்படிச்சொல்லுகிறீர்" (யோ. 12: 34.) என்பதுதான் அவர்களுடைய ஓயாத கேள்வி.

தீர்க்கதரிசிகள் தரிசனங்கண்டு போதித்த காலத்துக்குப்பின்பு, அநேக நூற்றாண்டுகளாக யூதர்கள் புறச்சாதியார் கைகளிற் சிக்கி, கடுந்தீர்வைகளினாலும் மற்றுமனேக கொடுமைகளினாலும் ஒடுக்கப்பட்டபோது, மேசியா எப்போது வருவார், நாங்கள் படும் உபத்திரவங்களினின்று எங்களை விடுவித்து, எங்கள் சத்துருக்களை அடித்து நொறுக்கி எங்களுக்கு எங்கள் சொந்த இராச்சியத்தைக் கொடுப்பது எக்காலம்? அன்னிய ஜாதியாரின்மேல் நாங்கள் ஆளுகைசெய்யுங்காலம் எப்போ வருமென்று சொல்லி ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய புறம்பான நிலைமை மிக்க பரிதாபக் கோலமாயிருந்தபடியினால் மேசியாவைக்குறித்து அவர்களுடைய ஆவிக்குரிய எண்ணங்களெல்லாம் உலகப்பிரகாரமாயிருந்ததென்று நாமறிகிறோம். யூதர்களின் நோக்கம் இப்படிப்பட்டதாயிருந்தபடியினால் அவர்கள் எண்ணிய எண்ணத்திற்கு மாறாக பாடுபடுகிற மேசி

Digitized by Google

யாவைக்குறித்தும் ஆவிக்குரிய இராஜ்யத்தைக்குறித்தும் தமது சீஷர்களின் மனதிலும் அழுந்தச்செய்வது கூடாதகாரியமாயிருந்தது.

தமது பிரசித்த ஊழியத்தின் கடைசிப்பாகம் வரைக்கும் தமது பாடுகளைக்குறித்து தம்முடைய சீஷருக்குத் தெரிவிக்கத் துணியவில்லை. தாம் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவென்று முதலாவது அவர்களை உணர்த்துவது அவருக்கு அவசியமாயிருந்தது. அவருடைய பாடுகளைக்குறித்து கற்றுக்கொள்வதைப்பார்க்கிலும் இதைக் கற்றுக்கொள்வது அவர்களுக்கு இலேசு.

## தியானம்.

## MEDITATION.

இந்துமார்க்கத்தின் சூலாயுதத்தையும் மகமதுமார்க்கத்தின் இளம்பிறையையும் பார்க்கிலும் சிலுவையானது நமது விசுவாசத்துக்கு அதிக உறுதியான அடையாளம். அதுவே கிறிஸ்துமார்க்கத்துக்கு "வல்லமை வீடு" (power house) மானது.

———:o:———

## XVIII-ம் பாடம்.

## STUDY XVIII.

## இயேசுவின் சிலுவை மூலாதாரமானது.

## HIS CROSS FUNDAMENTAL.

சிலுவைமரணம் அவர்களுடைய விசுவாசத்திற்கு மூலஉபதேசமாக இருந்தபடியினால் அதைப்பற்றி ஏற்கனவே அவர் பேசவேண்டியதாயிருக்கும். தமது ஊழியத்தின் ஆரம்பத்தில் தேவாலயத்தைச் சுத்திகரித்தபோதுங்கூட அவர் யூதர்களைப் பார்த்து: "இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், நான் அதை மூன்றுநாளைக்குள்ளே எழுப்புவேன்" என்றார். (யோ. 2: 19.) அதற்குக் கொஞ்சக்காலத்திற்குப் பின்பு, "மணவாளன் அவர்களை விட்டு எடுபடுங்காலம் வரும். அந்நாளிலே அவர்கள் உபவாசிப்பார்கள்" (மாற். 2: 20) என்று சொன்னார். ஆனால் அவருடைய மரணத்திற்கு ஆறு மாதத்திற்கு முந்தித்தான் இதை ஒழுங்காகவும் திட்டமாகவும் போதிக்கத் தொடங்கினார். 'தேவனுடைய கிறிஸ்து' என்று சீஷர்கள் முதன்முத

Digitized by Google

லாக அவரைப்பற்றி அறிக்கையிட்டபொழுது அவர் சந்தோஷப்பட்டுத் தமது பாடுகளைக்குறித்து அவர்களுக்கு இன்னும் சற்று திட்டமாய்ப் போதிக்கவேண்டிய காலம் வந்துவிட்டதென்று கண்டார். பேதுருவுக்கும் மற்றச் சீஷருக்கும் இந்தப் போதனை நூதனமாகவும் விபரீதமாகவும் காணப்பட்டது. பேதுரு இப்படிப்பட்ட பாடுகள் தன்னுடைய கர்த்தரின் பெலவீனத்தைக் குறிக்குமென்றெண்ணி, அப்படி அவர் தம்மை ஒப்புக்கொடுக்கப்படாதென்று கண்டித்தான். (மத். 16: 13—23.) கர்த்தரோ, அவனைப்பார்த்து: "எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கேற்றவைகளைச் சிந்தியாமலிருக்கிறாய்," என்று அவனைக் கண்டித்தார். (லூக். 9: 18—22) (மாற். 8: 31ஐயும் பார்க்க.) அதே சமயத்தில் ஆண்டவர் நான் பாடுபடவேண்டியது எப்படியோ, நீங்களும் அப்படியே பாடுபடவேண்டியது அவசியம் என்று வெளிப்படுத்தினார். ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால் தன்சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் என்றார். (மத். 16: 24.)

சீஷர்கள் யூதருக்குரிய எண்ணங்களையும் எதிர்பார்க்குதலையும் கொண்டவர்களாயிருந்ததால், தங்களுக்கு மேசியாவாகக் காணப்பட்டஇயேசுவானவருக்கும் பாடுகள்சம்பவிக்குமென்று நினைப்பது அவர்களுக்கு மிகவும் வருத்தமாயிருந்தது. ஆறு மாதமாகத் தம்முடைய மரணத்தைக்குறித்து அவர் அடிக்கடி பேசி அதற்கென்று அவர்களை ஆயத்தப்படுத்தி வந்தபோதிலும், அவர்கள் அதைப்பிடித்து ஏற்றுக்கொள்ளக்கூடாதவர்களாயிருந்தார்கள். தம்முடைய வல்லமை சிறிதுகாலத்துக்கு மங்கிப்போவதைக்குறித்து இப்படி உவமானமாக முன்னுரைத்தாரென்றும், பிற்காலத்தில் அவர் மகிமையான வல்லமையடைகிறபோது அது நீங்கிப்போகுமென்றும் அவர்கள் எண்ணினார்களாக்கும். ஆகையினாலே, அவருடைய மரணத்தைக் கண்டபோது அவர்கள் முற்றிலும் மனமடிவுள்ளவர்களானார்கள்; அவர் உயிர்த்தெழுந்தபின்பு, அற்றுப்போன அவர்களுடைய நம்பிக்கை திரும்ப அவர்களுக்கு இலேசாய் வரவில்லை. "இஸ்ரவேலனை மீட்டு இரட்சிப்பவர் அவர்தான் என்று நாங்கள் நம்பியிருந்தோம்; அவரோ எங்களைக் கைவிட்டுவிட்டார்". என்று எம்மாவூருக்குப் போன இரண்டு சீஷர் அங்கலாய்த்தார்கள். (லூக். 24: 8—11, 21.)

## தியானம்.

### Meditation.

யூதர்களுக்கும் கிரேக்கருக்கும் சிலுவை இடறலாயிருந்ததுபோலவே, இந்துக்களுக்கும் அது என் இடறலாயிருக்கிறது? இயேசு சுமந்த சிலுவைக்

Digitized by Google

கும் நம்மில் ஒவ்வொருவரும் சுமக்கவேண்டிய சிலுவைக்கும் சம்பந்தமென்ன?

பேதுருவும் நாமும் பாடுபடுகிற கிறிஸ்துவை விரும்பாமல் ஜெயங்கொள்ளும் கிறிஸ்துவை விரும்புகிறபடியால் நமது குருட்டாட்டம் எவ்வளவு பெரிது!

———:o:———

## XIX-ம் பாடம்.
## STUDY XIX.

### சிலுவை மூலாதாரமானது. (தொடர்ச்சி.)
### HIS CROSS FUNDAMENTAL. (*Continued.*)

பல வகையாய் நமது ஆண்டவர் தமது மரணத்தைக் குறித்துப் போதித்தார்.

(*a*) மரிப்பதற்காகவே தாம் நியமிக்கப்பட்டவரென்பதையும் தமது மரணத்தைப்பற்றித் தீர்க்கதரிசிகள் முன்னுரைத்திருக்கிறார்களென்பதையும் அவர் ஏற்கனவேயறிந்து, "இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; மனுஷகுமாரனைக்குறித்தும் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவைகளெல்லாம் நிறைவேறும்" (லூக். 18: 31). என்று தமது சீஷரிடத்தில் சொன்னார். இதுவே பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளினுடைய பாரம். "மனுஷகுமாரன் தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ," என்றாரல்லவா? (மத். 26: 24). தமக்குப் பிரியமானால் இவ்வித மரணத்திலிருந்து தாம் விலகிக்கொள்வது கூடிய காரியமென்று அறிந்திருந்தார். ஆயினும் அப்படிச்செய்வாரானால் இவ்விதமாய்ச் சம்பவிக்கவேண்டுமென்கிற வேதவாக்கியங்கள் எப்படி நிறைவேறும்? (மத். 26: 54). அவரைக்குறித்துத் தீர்க்கதரிசனம் இவ்விதம் அடிக்கடி கூறினதினாலும் அவருடைய மரணத்தின் அவசியத்தை அவர் எப்போதும் அறிந்திருந்தபடியினாலும் மனிதரை இரட்சிக்கும் மகத்தான வேலையானது ஒவ்வொரு நிமிஷமும் அவருடைய மனதை உறுத்திக்கொண்டேயிருந்தது.

(*b*) ஆகையினாலே, தேவன் மனிதருக்குக் கொடுக்கும் கிருபையின் எத்தனங்களில் தமது மரணமே மிகவும் அவசியமானதென்று கண்டார். "கிறிஸ்து இவ்விதமாய்ப் பாடுபட்டு மகிமையடைய

Digitized by Google

வேண்டுமென்பது தகுதியாயிருக்கிறது. (லூக். 24: 20. "நான் உங்களுடனே கூடயிருக்கையில் எல்லாக்காரியங்களும் நிறைவேற வேண்டுமென்று நான் உங்களுக்குச் சொல்லுகிற வார்த்தைகள் இவைகளே" (மத். 16: 21 பார்க்க).

இவ்வவசியம் அவருடைய மனதில் எவ்விதமாய்த் தங்கியிருந்தது? தீர்க்கதரிசனம் நிறைவேற வேண்டுமென்பது சரிதான். ஆனால் இதைப்பார்க்கிலும் அது அவருக்கு அதிகக் கருத்துள்ளதாயிருந்தது. இயேசுவானவர், தாம் நிறைவேற்றவந்த கிரியையில் அவருடைய மரணம் விசேஷித்த காரியந்தான். மனிதனுடைய இரட்சிப்புக்கு சிலுவையே இன்றியமையாத அவசியமென்று அவர் உறுதியாய் உணர்ந்திருந்தார். கெத்செமனேயில் அவர் செய்த உருக்கமான ஜெபத்தைக் கவனியுங்கள். அவர் "முகங்குப்புற விழுந்து, பிதாவே, கூடுமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படிசெய்யும்; ஆயினும் என் சித்தத்தின்படியல்ல, உமது சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று சொல்லி ஜெபித்தார். (மத். 26: 39.) இப்படிப்பட்ட மரணத்திற்கு அவர் தம்மை ஒப்புக்கொடுக்க அவருடைய மனுஷீக தன்மை பின் வாங்கினபோதிலும் சிலுவையில் மாத்திரந்தான் தம்முடைய இரட்சிப்பின் ஊழியம் பூரணப்படுமென்று ஆழ்ந்துணர்ந்திருந்தபடியால் அவர் அதை ஏற்றுக்கொள்ள மனங்கோணாதவராயிருந்தார். தேவ தீர்மானமும் மனிதருடைய தேவையும் ஒன்றாய்ச்சேர்ந்து அவருடைய மனதிலே சிலுவையின் அவசியத்தை உணர்த்திக்காட்டிற்று.

## தியானம்.

### MEDITATION.

*மனிதனுக்காக தேவன் ஏன் பாடுபடவேண்டும்? பாடில்லாத இரட்சிப்பின் வழியை அவர் கண்டுபிடித்திருக்கக்கூடாதா?*

*சிலுவையைப்பற்றிய கேள்வி கேட்கும் நித்திய கேள்வியே. பதிலாகப் பாடுபடுதல் அன்பின் பிரமாணம். இந்தப் பிரமாணம் ஜீவியத்தின் பிரமாணம்.*

Digitized by Google

## XX-ம் பாடம்
## Study XX.
### அவர் மரணம். (தொடர்ச்சி.)
### His Cross. (*Continued.*)

(*c*) ஆயினும், அவர் மரணம் தன்னிஷ்டமானதென்று அவர் அறிந்துபோதித்தார். மேற்சொல்லிய அந்தப்புறமான அவசியத்தைப் பார்க்கிலும் அவர் உள்ளத்திலே அவனை நெருக்கின இந்த மன ஆத்திரமே விசேஷம். மரணத்திலிருந்து தப்பித்துக்கொள்ள தமக்கு வலலமையிருந்ததென்று அவர் அறிந்துகொண்டார் வைராக்கிய சீஷனை பேதுருவைப்பார்த்து, அவர்: "நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால் அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா" என்று கேட்டார். (மத் 26: 53) ஒவ்வொரு தேவதூதனும் தாராளமாய் அவனைச் சத்துருக்களின் கைகளினின்று விடுவித்து சிலுவைப் பாடுகளிலிருந்து அவனை இரட்சிக்கக்கூடும். ஜனங்களுடைய எண்ணங்களையும் ஆலோசனைகளையும் தாறுமாருக்கக்கூடிய வல்லமை தமக்கிருந்ததென்று அறிந்திருந்தார். ஆயினும் அவர் தம்மைப்பற்றி வெளியிட்டுச் சொல்லுகிற ஆச்சரியமான வார்த்தைகளைக்கேளுங்கள்: "நான் என்ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான். நானே அதைக் கொடுக்கிறேன். அதைக்கொடுக்கவும் எனக்கு அதிகாரமுண்டு; அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரமுண்டு". (யோ. 10: 17, 18.) அவர் இவ்விதமான பாடுகளை அனுபவிக்கும்படி தாம் நியமிக்கப்பட்டவரென்றும், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களெல்லாம் தம்மாலே நிறைவேற்றம்பெறவேண்டுமென்றும் அறிந்தவராயிருந்தாலும், தேவனுக்கென்றும் கெட்டுப்போன மனிதனுக்கென்றும் தம்மை ஜீவபலியாக மனதார ஒப்புக்கொடுத்தாரென்பதை நிச்சயித்து அறிந்துகொண்டார்.

இயேசு தம்மைத்தாமே பலியாகப் பிரதிஷ்டை பண்ணின இந்த இரகசியமும், ஆட்டுக்குட்டியானவர் அடிக்கப்படும்படிக்கு நித்தியகாலமாய்ப் பிரதிஷ்டை பண்ணப்பட்ட இரகசியமும் தேவன் தாமே வெளிப்படுத்தின பரம இரகசியமாயிருக்கிறது. (வெளி. 13: 8.)

Digitized by Google

கிறிஸ்துவினுடைய பலியானது கட்டாயமின்றி, சுயமாகச் செலுத்தப்பட்டதால்தான் அது உன்னதமான ஆவியின் வல்லமைபொருந்தியதாயிருந்தது

கிறிஸ்துவினுடைய மரணத்தின் கருத்தும் அதின் வல்லமையுமென்ன? ஆண்டவர் இதை அநேக உவமானங்களினால் வற்புறுத்திக் காட்டியிருக்கிறார்.

(i) சிலுவையிலே உயர்த்தப்பட்ட தம்மை, மோசேயினால் வனாந்தரத்தில் உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பத்திற்கு ஒப்பிட்டார். அதை நோக்கிப்பார்த்த யாவருக்கும் ஜீவன் வந்தது (யோ. 3: 14, 15). சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை கெட்டுப்போன மனிதர் உண்மையான விசுவாசத்தோடு நோக்கிப்பார்க்கையில், இரகசியமான விதமாய் அவர்களுக்குச் சீவன் வருகிறது. அதே சம்பந்தமாக, அவர் தமது சீஷரை நோக்கி: "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடமாக இழுத்துக்கொள்ளுவேன்" என்றார். தாம் இன்னவிதமாய் மரிக்கப்போகிறதைக் குறித்து இப்படிச் சொன்னார். சிலுவையிலே பாடுபடுகிற இரட்சகரில் விளங்கிய இந்த வல்லமையுள்ள பரம சத்தியத்தைப்போல், வானத்திலும் பூமியிலும் வேறெந்த வல்லமையும் மனிதரைக் கவர்ந்து மறுரூபப்படுத்தவில்லை.

## தியானம்.

## Meditation.

*சிலுவையின் தரிசனம் நம்மை எம்மட்டுக்கு மறுரூபமாக்கியிருக்கிறது? மரணத்துக்குத் தம்மை மனதார ஒப்புக்கொடுத்ததே அதன் பயன். இப்படி தம்மை ஒப்புக்கொடுத்ததினாலே அவர் கடைசிபரியந்தம் இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்.*

———:o:———

## XXI-ம் பாடம்.

## Study XXI.

### அவர் மரணம். (தொடர்ச்சி.)

### His Cross. (*Continued.*)

(ii) பஸ்கா ஆட்டுக்குட்டியின் உவமானம். (மத். 26: 26; மாற். 14: 16—22; லூக். 25: 15). பஸ்கா விருந்து யூதருக்கு மகா

Digitized by Google

அருமையான கருத்துள்ளதாயிருந்தது. இதோடு சேர்த்துத்தான் ஆண்டவர் தமது திவ்விய நற்கருணையை ஸ்தாபித்தார். அவர்கள் மேசையைக் கிட்டிச்சேர்ந்தபோது, துண்டுதுண்டாக்கப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியின் இறைச்சி அவர்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்தது. இதைக்கொண்டு தாம் மனுக்குலத்தாருக்காகப் பிட்கப்படப் போகிற தமது சரீரத்தைக்குறித்துப் பேச அவருக்குச் சமயம் கிடைத்தது. இஸ்ரவேலரின் வீட்டுக்கதவு நிலைகளில் தெளிக்கப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் அவர்களுடைய குடும்பங்களை மரணத்தினின்று இரட்சித்தது. அவர் உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவாட்டுக்குட்டியாயிருந்தார். அவரது ரத்தத்தின் மூலமாய்த்தான் எங்குமுள்ள மனிதர் இரட்சிப்பைக்கண்டடைகிறார்கள். இஸ்ரவேலர் அடித்துப்புசித்த கணக்கற்ற ஆட்டுக்குட்டிகள் தமக்கு முன்னடையாளமாயும், அவைகளின் பலி தம்மில் நிறைவேற்றம் பெற்றதாயும் இருக்கிறதென்று அறிந்துகொண்டார். இவ்விதமாய் யூதருடைய பலிகளெல்லாம் அவருடைய மரணத்தின் பிரதிபலித் தன்மையைக் காட்டிவந்தன.

(iii) அவர் மீட்கும் பொருளானவர்.

"மனுஷகுமாரன் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் (மத். 20: 28). "அநேகரை மீட்கும்பொருளாக" என்றல்ல, 'அநேகருக்குப் பதிலாக மீட்கும்பொருளானார்' என்பதுதான் இதன் சரியான திருப்புதல். இது யாத். 21: 30ல் சொல்லப்பட்ட பழைய ஏற்பாட்டுக் கருத்துக்குச் சரியாயிருக்கலாம்.

இவ்விதமாக அவர் மனிதனுடைய மீட்பை ஒருவகையில் கிரயத்துக்கு வாங்கிக்கொண்டாரென்று சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்லும்போது, வியாபார விஷயத்தைக் குறித்ததாக இதை வியாக்கியானம் பண்ணக்கூடாது. ஆண்டவர் தம்மை மனிதருக்காகவும், மனிதருக்குப் பதிலாகவும், அவர்களுடைய இரட்சிப்புக்கென்றும் தம்மை ஒருவகையாய் ஒப்புக்கொடுத்தாரென்று மாத்திரம் நாம் சொல்லக்கூடும். அவர் யாரிடம், எப்படி கிரயங்கொண்டாரென்று சொல்லப்படவில்லை. நாம் அதை விசாரிக்கவும் அவசியமில்லை. தம்முடைய மரணத்துக்கும் நம்முடைய நித்திய ஜீவனுக்குமுள்ள சம்பந்தத்தை 'மீட்கும் பொருள்' என்கிற பதத்தினால் நமக்கு அறிவித்தார். அதுவே நமக்குப்போதும்.

(iv) தமது ஆடுகளுக்காக ஜீவனைக்கொடுக்கிற நல்ல மேய்ப்பன். "நானே நல்லமேய்ப்பன், நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்" (யோ. 10: 11, 15). அவர் தம்

Digitized by Google

மூடைய ஆடுகளை அவைகளின் சத்துருக்களினின்றும் விடுவிக்கிறார். யோ. 10: 15—18 வாக்கியங்களிலே இயேசுவானவர் தமது மரணத்தை எதிர்பார்த்தவராயிருந்தாரென்றும் பார்க்கிறோம்.

## தியானம்.

## MEDITATION.

நமது இரட்சிப்பின் விலைமதியாத தன்மையைக் கவனித்துப்பார். பதிலாக ஒப்புக்கொடுத்தது என்கிற சொல் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷமுடிய ஓடுகிற தங்கக்கம்பியாம். அது வானத்தையும் பூமியையும் கட்டுகிறது மாத்திரமல்ல, மனிதருக்குரிய எல்லா சம்பந்தத்திலும் அன்பின் பாஷையாகவுமிருக்கிறது.

——:o:——

## XXII-ம் பாடம்.

## STUDY XXII.

### அவர் மரணம். (தொடர்ச்சி.)

### HIS CROSS. (*Continued.*)

(v) மிகுந்த பலனைக் கொடுக்கத்தக்கதாக விதைக்கப்பட்ட கோதுமை மணியினுடையசாவுக்குத் தமது மரணத்தை ஒப்பிடுகிறார். "கோதுமை மணியானது நிலத்திலே விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்; செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும்." யோ. 12: 24.

நமது ஆண்டவர் சொன்ன இந்த அருமையான வார்த்தைகளினாலே அவருடைய மரணம் மற்றவர்களுடைய ஜீவனில் நல்ல பலனைத்தரக்கூடிய சக்தியுள்ளதாயிருக்கிறதென்று அறிகிறோம்; மரிக்காவிட்டால், அவர் 'தனித்து' துக்கமுள்ளவரும் செல்வாக்கற்றவரும் தமது ஜீவியத்தில் ஒரு பலனையும் காணாதவருமாயிருப்பார். அவருடைய மரணமே மற்றவர்களுக்குப் பரமாசீர்வாதம் நிறைந்த அறுப்பைக் கொடுக்கும்.

அவர் இதே சத்தியத்தை எல்லா மனிதருக்கும், விசேஷமாய்த் தம்மைப் பின்பற்றுகிற யாவர்க்கும் தெரிவிக்கிறார். இது யாவர்க்கும் பொதுவான சத்தியம். "தன் ஜீவனை சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான். இந்த உலகத்தில தன் ஜீவனை வெறுக்கிறவனோ



Digitized by Google

அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்" என்பது பொதுவான பிரமாணம். (யோ. 12: 25.)

(vi) அவருடைய இரத்தம் உடன்படிக்கையின் இரத்தமே. அது புதிய உடன்படிக்கையின் இரத்தம். "இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது." (மாற். 14 24; லூக். 22: 20.)

பழைய ஏற்பாட்டிலே இரத்தம் உடன்படிக்கை செய்யவும், அதை முத்திரித்து உறுதிப்படுத்தவும் உபயோகிக்கப்பட்டது (யாத். 24: 8; சகரி. 9: 11). அந்த இரத்தம் மரணத்தின் இரத்தமாயிருக்கவேண்டும். பாவிகளுக்கென்று பிரதிபலியாக இடப்பட்ட அந்த ஜெந்துக்களின் இரத்தமே உதவும். ஆகையால் தேவன் மனிதனோடு கிருபையாய்ச் செய்த அவரது ஜீவனுள்ள உடன்படிக்கையை நிறைவேற்றவே நமது அருமை இரட்சகர் பாடுபட்டு மரித்தார்.

(vii) அது பாவமன்னிப்பு உண்டாகும்படி சிந்தப்பட்ட புதிய உடன்படிக்கைக்குரிய இரத்தம். அவர் தமது இரத்தத்தைச் சிந்தினதின் பலன் இதுவே. (மத். 26: 28.) "இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை" என்று அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம், பாவங்களை மன்னிக்கும் சக்தி தமது மரண புண்ணியத்தினாலேதான் அவருக்குக் கிடைத்தது.

சிலுவை மரணந்தான் அக்காலத்தில் மிகவும் கேவலமானது. பிலி. 2: 6.) ஆகிலும் அதுவே கிறிஸ்தவர்களுக்கு வல்லமையும் சகல மகிமைக்கும் காரணமுமான அடையாளக்குறிப்பாயிற்று. (கலா. 6: 14).

## தியானம்.

### Meditation.

நீ உன்னுடைய ஜீவியத்தில் எம்மட்டுக்குத் தனித்திருக்கிறாய்? சிலுவைப்பாட்டினால் வருகிற ஐக்கியத்தை நீ அதிகமாய்த் தேடுகிறாயா? கிறிஸ்துவோடு இரத்த உடன்படிக்கை செய்திருக்கிறாயா? கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தே நான் மேன்மைபாராட்டுவேன்.

Digitized by Google

## XIII-ம் பாடம்.
## Study XIII.

### அவர் மரணம் (முடிவு.)
### His Cross (*Concluded*).

5. கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாய்த்தான் கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய ஆகாரத்தைக் கண்டடைகிறார்கள். திருவிருந்தைசகுறித்து கர்த்தர் போதித்த போதனையின் கருத்து இதுவே. (யோ. 16: 49—51.) இது நொறுக்கப்பட்ட அவரது சரீரத்துக்கும் சிந்தப்பட்ட அவரது இரத்தத்திற்கும் அடையாளமான விருந்து. கிறிஸ்துவிலே நாம் பங்கடைவதில் ஆத்தும போஷிப்புமாத்திரமல்ல, நித்திய ஜீவனும் நமக்குக்கிடைக்குமென்று யோ. 6: 53—55ல் பார்க்கிறோம். "என் மாமிசத்தைப்புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவனுண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யாகவே போஜனமாயிருக்கிறது; என் இரத்தம் மெய்யாகவே பானமாயிருக்கிறது" என்றார்.

6. நமது கர்த்தர் தமது மரணத்தின் மூலமாய் ஒரு விசேஷித்த பிரகாரம் தமது ஊழியத்தைச்செய்து முடித்தார். "முடிந்தது" என்பது சிலுவையில் அவர் சொன்ன மகா கருத்துள்ள வார்த்தை. தமது தாழ்மை, பாடுகள், முதலியவைகள் அந்தச் சமயத்தில் சிலுவையிலே முற்றுப்பெற்றதை அவர் பின்னோக்கிப் பார்த்ததுமாத்திரமல்ல, தாம் அனுபவித்த அகோர வேதனைகள் மனுக்குலத்தாருக்குத் தாம் உண்டாக்கின மகத்தான இரட்சிப்பு பூரணமடைதலைக் காட்டினவென்று அறிந்தவராயுமிருந்தார்.

### தியானம்.
### Meditation.

கர்த்தருடைய இராப்போஜனம் எம்மட்டுக்கு உனக்கு ஞாபகசின்னமாகவும், எம்மட்டுக்கு இளைப்பாற்றும் விருந்தாகவுமிருக்கிறது? சிலுவையின் மேல் தமது வேலை முடிந்ததென்று எந்தக்கருத்தில் ஆண்டவர் சொன்னார்?

திருப்தி செய்யும் ஆகாரம் கிறிஸ்துவே. நித்திய ஜீவனுக்குரிய பரிபூரணத்தை ஆத்துமா அவரில்தான் கண்டுகொள்ளும். 'நித்தியஜீவன்' என்பது ஒவ்வொரு விசுவாசிக்கும் இயேசுவிலிருக்கிற நித்திய பரிபூரணத்தையும் ஐசுவரியத்தையும் குறிக்கும்படி யோவான் உபயோகிக்கும் பதம்.

Digitized by Google

## XXIV-ம் பாடம்.

## STUDY XXIV.

## இயேசுவின் பிற்கால ஜீவியமும் ஊழியமும்.

## HIS FUTURE LIFE AND WORK.

### (a) உயிர்த்தெழுதல்.

### RESURRECTION.

*நமது ஆண்டவர் தமது மரணத்தோடே தமது ஊழியம் முடிந்துபோகும் என்று நினைக்கவில்லை. அதற்குப் பின்னும் அவர் அதிகமாய் முயற்சிசெய்து மனிதருக்காகப் பெருங்காரியங்களை நடப்பிக்க யோசனையுள்ளவராயிருந்தார்.*

*அவர் பொதுவாய்த் தமது மரணத்தோடேகூட தமது உயிர்த்தெழுதலையும் சேர்த்துப் பேசியேவந்தார். (மாற். 8: 31; 9: 31; 10; 34; யோ. 2: 19.) "மூன்று நாளைக்குப் பின்பு அவர் உயிரோடெழுந்திருப்பார்" என்பது தமது பாடுகளைக் குறித்த விபரத்தின் பல்லவியாயிருந்தது மரணம் அவனை அடக்கிவைக்கக்கூடாதிருந்தது. அவர் அபஜெயப்பட்டுப் போவாரென்று மற்றவர்கள் நினைத்திருக்கையில் அவர் பெரிய ஜெயம் அடைந்தார். பெரிய சத்துருவாகிய மரணம் அவருக்கும் அவர் மூலமாய் அவரது சிஷர்யாவர்க்கும் கீழ்ப்பட்ட வல்லமையாயும், ஜீவனுக்கு வழிநடத்திக்கொண்டுபோகிற தூதனுயும் மாறிவிட்டது.*

*உயிர்த்தெழுதல் நாளுக்கும் பெந்தெகோஸ்தே நாளுக்கும் இடையில் வருகிற ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவர் அவர்களுக்குத் தரிசனமானார். (யோ. 20: 16, 17, 19; லூக். 24: 15; மாற். 16: 9; மத். 28: 18 முதலிய.) இவ்வண்ணமாய் ஓய்வுநாட்களில் மாத்திரம் தரிசனங்கொடுத்ததினால் அந்த நாளுக்குக் கர்த்தருடைய நாளென்று ஆதிக்கிறிஸ்தவர்கள் பேர்வைத்தார்கள். தமது உயிர்த்தெழுதலின் உண்மையை அவர்களுக்கு உணர்த்தும்படி அவர் மிகவும் பிரயாசப்பட்டார். அவர்கள் அதை உடனே நம்பாததினால் அவர்களை மிகவும் கண்டித்தார். அவர்களுக்கு அவர் தரிசனமாகி உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற்போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக்குறித்தும் இருதயக்கடினத்தைக்குறித்தும் அவர்களைக் கடிந்துகொண்டார். தோமாவை*

Digitized by Google

நோக்கி, "நீ உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப்பார், உன் கையை நீட்டி என் விலாவிலே போடு; அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு" என்று சொல்லிக் கண்டித்தார் (யோ. 20: 26—29).

மார்த்தாளைப்பார்த்து, அவளைத் தைரியப்படுத்தக்கூடியதும் கண்டிக்கத்தக்கதுமான வார்த்தைகளை உபயோகித்தார். நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் என்றார். (யோ. 11: 25, 26.) இந்தச் சமயத்தில் மாத்திரமல்ல, வேறு சமயங்களிலும் இவர் தமது உயிர்த்தெழுதலைப்பற்றிப் போதித்தார். அவரை விசுவாசிக்கிறவர்களெல்லாரும் நித்திய ஜீவனுக்கென்று மறுபடியும் எழுந்திருக்கவேண்டும். "நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்." (யோ. 14: 19.)

தாம் உயிர்த்தெழுந்தபின் நாற்பதுநாளாகத் தமது சீஷர்களுக்குத் தரிசனமானார். அவர்களுடைய விசுவாசத்தை ஸ்திரப்படுத்தவும், உயிர்த்தெழுந்த தம்மை அவர்கள் உறுதியாய் நம்பவும் இப்படித் தரிசனமாகிப் பரலோகத்துக்கு ஏறிப் பிதாவிடம் சேர்ந்தார். (அப். 1: 6—11.)

## தியானம்.

## MEDITATION.

ஆண்டவர் உயிர்த்தெழுந்தபிற்பாடு தமது சீஷர்களுக்கு மாத்திரம் ஏன் தரிசனமானார்? பவுல் அப்போஸ்தலன் அறிந்ததுபோல, உன் ஜீவியத்தின் அனுபவமாக அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிகிறாயா?

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் கிறிஸ்துமார்க்கத்தின் போர்க்களம்! ஏனெனில் அது நமது விசுவாசத்தின் இயல்புக்கு மேலான தன்மைக்கு அடையாளமும், இயேசு போதித்த எல்லாவற்றிற்கும் தேவனுடைய சாட்சியுமானது.

Digitized by Google

## XXV-ம் பாடம்.
## STUDY XXV.

# இயேசுவின் பிற்கால ஜீவியமும் ஊழியமும் (தொடர்ச்சி).
# HIS FUTURE LIFE AND WORK (*Continued*).

## (*b*) பரிந்துபேசுதல்.
## INTERCESSION.

*பரலோகத்தில் பரிந்துபேசுகிற வேலை.*

இயேசுநாதர் இவ்வுலகத்திலிருந்தபோது தம்முடையவர்களுக்காக அதிகமாய்ப் பிரார்த்தனை செய்தார். அவர் செய்ததும் எழுதப்பட்டதுமான எல்லா ஜெபங்களிலும் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில் மேலறையிலே அவர் சீஷர்களுக்காகப் பரிந்துபேசின ஜெபமே விசேஷம். (யோ. 17.)

தாம் உலகத்தைவிட்டுப் போனபோதிலும், பரிந்துபேசுதலான ஜெபத்தை விட்டுவிடமாட்டேனென்று கடைசியாய்க் கூடிவந்திருந்த சமயத்திலுங்கூடத் தமது சீஷர்களுக்கு உறுதியாய்ச் சொன்னார். நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன் என்றார். (யோ. 16: 7.)

தாம் போனபின்புங்கூட அவர்கள் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டுமென்று சீஷர்களுக்குப் போதித்தார். "நீங்கள் என் நாமத்தினாலே எதைக்கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாய் அதைச்செய்வேன்" (யோ. 14: 13). மறுபடியும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்ளுவதெதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார். ஆகையால் ஜெபத்திலே நம்பிக்கையாயிருங்கள். உறுதியாய்த் தரித்திருங்கள். ஏனெனில் பிதாவண்டையில் ஒருவர் உங்களுக்காகப் பரிந்துபேசுவார் என்றார். (யோ. 15: 7, 16; 16: 24.)

இந்த வசனங்களினால் தாம் சீஷர்களின்மேல் வைத்திருந்த கரிசனை குறைந்துபோகாமல், முடிவுபரியந்தமும் இருக்குமென்று காட்டினார். அது மாத்திரமல்ல, தாம் பிதாவிடத்தில் போய் பரிந்து பேசுவதினால் பரிசுத்தாவியானவர் உங்களிடத்தில் வந்து உங்கள் பக்கத்

Digitized by Google

தில் நின்று உங்களுக்கு உதவிசெய்து உங்களைத் தைரியப்படுத்துவார் என்றார். "நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட யிருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை (பரிந்துபேசுகிறவர்) அவர் உங்களுக்குத் தந்தருளுவார்." (யோ. 14: 16—18.)

## தியானம்.

## MEDITATION.

பரிந்துபேசும் ஜெபபாடத்தை அவரிடத்தில் படித்துக்கொண்டாயா? (யோ. 17.) கிறிஸ்து பரிசுத்தஆவியால் பக்தருக்குள் வாசம்பண்ணி அவர்களுடைய வேண்டுதல்களை வசனிக்கிறார். அவர் சிம்மாசனத்திலுட்கார்ந்து அதே வேண்டுதல்களை பிதாவினிடம் சொல்லுகிறார். இதுவே நமது விசுவாசத்தின் இரகசியமும், கிறிஸ்தவனுக்கு உன்னத உதவியும் ஆறுதலுமாயிருக்கிறது.

———:o:———

## XXVI-ம் பாடம்.

## STUDY XXVI.

## இயேசுவின் பிற்கால ஜீவியமும் ஊழியமும் (தொடர்ச்சி).

## HIS FUTURE LIFE AND WORK (*Continued*).

### (c) இரண்டாம் வருகை.

### HIS SECOND COMING.

*தமது இரண்டாம் வருகையைக்குறித்து அவர் போதித்தது.*

பழைய ஏற்பாட்டிலாவது யூதருக்குரிய மற்ற எந்த நூல்களிலாவது மேசியா இரண்டுதரம் வருவாரென்பதைப்பற்றி ஒன்றும் எழுதப்படவில்லை. அவர்கள் எதிர்பார்த்திருந்தபடி மேசியாவானவர் ஒருதரம் மாத்திரம் வருவார், வந்து தமது வேலையை முடித்துத் தங்களோடேயிருப்பார் என்றுநினைத்தார்கள் ஆகையினாலே தமது மரணம் சீக்ஷிரமா உறுதியாய் தம்மைவிட்டுப் பிரிக்கமாட்டாதென்று இயேசு அவர்களுக்குப்பேசிய வார்த்தைகள் மிகவும் கவனிக்கப்படத்

Digitized by Google

தக்கதே. நான் திரும்பிவந்தபின் என் இராச்சியத்துக்கடுத்த மீதியான காரியங்களைச் செய்து முடிப்பேன் என்றார்.

1. சினுப்டிக் சுவிசேஷங்களின்படி, இயேசு தமது சீஷர்களைப்பார்த்து, நான் உலகத்திற்குத் திரும்பிவருவேன். சர்வ வல்லமையோடும் அதிகாரத்தோடும் நான் வந்து பிரசன்னமாயிருப்பேனென்று போதித்தார். (மத். 25: 31.) இந்த வார்த்தைகளை நன்றாய்க் கவனித்து வாசிக்க அந்தக் காட்சி எவ்வளவு விசேஷித்ததாயிருந்தது! அவர் எல்லா மனிதர்களையும் நியாயந்தீர்க்கவருவாரென்று அது சொல்லுகிறது.

**அவர் வருகிற காலம் ஒருவனுக்குந் தெரியாது.**—ஆகையால் சீஷர்கள் அந்த வருகைக்கு விழிப்போடே காத்திருக்கவேண்டுமென்றார். எஜமான் வரும்போது விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். (லூக். 12: 35—44.) பத்துக் கன்னிகைகளைப்பற்றிய உவமைகளைப் பார்த்தால் விழிப்புமாத்திரமல்ல, ஆயத்தமும் வேண்டுமென்றும் (மத். 25: 1-11), அவர் திடீரென்று வருவாரென்றும் போதித்திருக்கிறது. "நோவாவின் நாட்களில் நடந்ததுபோல, மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும்." (லூக். 17: 26—30, 34.)

## தியானம்

### Meditation.

ஆண்டவர் உலகத்திற்கு ஏன் மறுபடியும் வரவேண்டும்? அவர் வருகிற திட்டமான நாளைப்பற்றி யோசிப்பது விருதா. அவருடைய வருகைக்காக எப்போதும் ஆயத்தமாயிருப்பது நல்லது. வரப்போகிற அந்த மகிமைக்காக விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் ஆவலாய் எதிர்பார்த்திருப்பது புத்தி.

———:O:———

## XXVII-ம் பாடம்.
## Study XXVII.

## இயேசுவின் பிற்கால ஜீவியமும் ஊழியமும் (தொடர்ச்சி).
## His Future Life and Work. (*Continued.*)

### இரண்டாம் வருகை (தொடர்ச்சி).
### His Second Coming (*Continued*).

சில வாக்கியங்களைப் பார்க்கும்போது அவரது இரண்டாம் வருகை அப்போஸ்தலருடைய காலத்தில் வருவதுபோலத் தோன்றும்.

Digitized by Google

அவர் அவர்களை நோக்கி: இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய இராச்சியம் பலத்தோடே வருவதைக் காணுமுன் மரணத்தை ருசி பார்ப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (மாற். 9: 1; மத். 16: 27, 28ஐயும் பார்க்க).

இயேசுவானவர் தமது கடைசி வருகையையும் எருசலேமின் அழிவையும்பற்றி கலந்துபேசுகிறாரென்று நாம் நினைக்க இடமுண்டு. (மத். 24: 15—17.) எருசலேமின் அழிவு கர்த்தருடைய வருகையைக் குறிப்பதாக எண்ணப்பட்டது. ஆனால் அந்த வருகைக்கும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் வித்தியாசமுண்டு. அது தான் கர்த்தருடைய பெரிதான நாள். அந்த வருகை கடைசியில் நடக்கும். அதோடு இந்த ஏற்பாடு முடியும்.

அவர் வருகையின் தன்மை சொல்லப்படிருக்கிறது.— மத். 25: 31ல் (மாற். 14: 62) சொல்லப்பட்டிருப்பவை ஒப்பனையான வார்த்தைகளாயிருந்தபோதிலும் அவர் மெய்யாகவே இராஜரீக மகத்துவங்களுடன் தோன்றுவார் என்பதைத்தெரிவிக்கிறது. எளிமைக் கோலம்பூண்டு தரித்திரனாக மாட்டுக்கொட்டிலில் பிறந்தவர், இப்போது சர்வ வல்லவராகவும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறவராகவும் பரம மகத்துவமுடையவராகவும் வருவார்.

### அவரது வருகையின் நோக்கம்.

அவர் முதலாவதாக தமது சீஷர்களை ஒன்றாகக்கூட்டித் தமது ஆனந்த பாக்கியத்தில் சேர்க்க மகிமையடைந்த இரட்சகராக வருவார். "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்." (யோ. 14: 2, 3.) அதுவுமன்றி மேற்கண்டபடி, அவர்களுடைய ஜீவியத்துக்குத்தக்கபடி சகல ஜனங்களையும் நியாயந்தீர்க்க வருவார். தாம் மரித்து அவர்களைவிட்டு எடுபட்டுப்போனாலும் அவர்களிடம் திரும்பி வருவாரென்றும், பிதாவினிடம் தான்போவது அவர்களுக்கு நன்மையாய் முடியுமென்றும் சொன்னார் இக்கடைசி நாள் தீர்ப்பினால் நமது மனுக்குலத்தாருடைய சதாகால நிலைமை திட்டமாக்கப்படும். (யோ. 25: 46.)

## தியானம்.

### MEDITATION.

இயேசுவின் முதலாம் வருகையையும் இரண்டாம் வருகையையும் ஒன்றோடொன்று எப்படி ஒப்பிடுவார்? அவர் வரும்போது என்ன ஆசீர்வாதங்களைக் கொண்டுவருவார்? தம்முடையவர்களைச் சோதித்து அவர்களுக்குப் ப

Digitized by Google

லனளிக்க வருகிருரென்பதை நினை. அப்போது பக்தரின் பொறுமைக்கு வெகுமதி கிடைக்கும்; நித்தியத்தின் சந்தோஷம் அவர்கள் முகத்தைப் பிரகாசிப்பிக்கும்.

——:O:——

## XXVIII-ம் பாடம்.

## Study XXVIII.

## இயேசுவின் பிற்கால ஜீவியமும் ஊழியமும் (முடிவு).

## His Future Life and Work (*Concluded.*)

### இரண்டாம் வருகை—யோவான் சுவிசேஷத்தின்படி.

### His Second Coming—the Gospel of John.

ii. யோவான் சுவிசேஷத்தில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வித்தியாசமாய்க் காட்டப்பட்டிருக்கிறது. இவ்வருகை, அவர் தமது சீஷர்களை ஆற்றித்தேற்றி பலப்படுத்தி அனலாக்க அவர்களுடைய இருதயத்துக்குள் ஆவிக்குரிய பிரகாரம் வருகிறவருகையாயிருக்கும். "என்றென்றைக்கும் உங்களுடனே கூடயிருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்." (யோ. 14: 16.) 18-ம், 20-ம் வாக்கியங்களில் தாமே வருவதாகச் சொன்னுர். "நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன். உங்களிடத்தில் வருவேன்." பரிசுத்தாவியின் வருகையில் தாமே வருவார். பெந்தெகோஸ்து நாளில்தான் அவர் வருகை காணப்பட்டது. அப்போதுதான் தமது சரீரமாகிய சபையை உயிர்ப்பித்து அதில் வாசம்பண்ண பரிசுத்த ஆவியானவராக வல்லமையோடு உலகத்துக்கு வந்தார் (யோ. 16: 12—16).

அவர் ஆவியின் பிரகாரம் வந்து சபையில் வாசம்பண்ணுவார் என்பதற்கு இசைவாக சினுப்டிக் சுவிசேஷங்களிலுங்கூட சில வசனங்களுண்டு. "இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினுலே எங்கே கூடியிருக்கிருர்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என்ருர் (மத். 18: 20). இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்ருர். (மத். 28: 20.) இப்படியே அவர் மெய்யாக பெந்தெகோஸ்து நாளில் திரும்பிவந்து வரங்களைக் கொடுத்தார். அந்த நாள்முதல் இதுவரைக்கும் அவர் தமது திருச்சபை நடுவே வாசமாயிருக்கிருர்.

Digitized by Google

## தியானம்.

## MEDITATION.

அவர் வருகையைப்பற்றி சிறுப்பிடிக் சுவிசேஷங்களுக்கும் யோவான் சுவி சேஷத்துக்கும் என்ன பேதமுண்டு? யோவானில் சொல்லியிருக்கிறபடி அவர் வருகையின் நிச்சயம் உன் அனுபவத்தில் நிறைவேறியிருக்கிறதா? கிறிஸ்து மறுபடியும் வரப்போயிருக்கிறாராயினும் அவர் இங்கே இருக்கிறார். "நான் மறுபடியும் வருவேன்" என்று சொன்னவர், "இதோ, சகல நாளும் நான் உங்களோடிருக்கிறேன்" என்றும் சொன்னார். இப்போது சமுகமாயிருக்கிற கிறிஸ்து! இனிமேல் வரப்போகிற கிறிஸ்து! என்ன ஆச்சரியமான கருத்து!

Digitized by Google

## II-ம் அதிகாரம்.
## CHAPTER II.

# கிறிஸ்து பிதாவைக்குறித்துப் போதித்தது.
## CHRIST'S TEACHING ABOUT THE FATHER.

### I-ம் பாடம்.
### STUDY I.

#### எதிருவமை.
#### *A Contrast.*

பிதாவை வெளிப்படுத்தும்படிக்குக் கிறிஸ்து வந்தார். அவருடைய பிதாத்துவத்தைப்பற்றி பழைய ஏற்பாட்டில் மட்டாகச்சொல்லியிருக்கிறது. ஆகையினால் அவர்தான் தேவனுடைய பிதாத்துவத்தைப்பற்றி முதன்முதலாகப் போதித்தாரென்று நாம் சொல்லக்கூடாது. ஆயினும் அவர்தான் இந்த உபதேசத்தை வற்புறுத்திப்பேசி முன் ஒருக்காலும் செய்யாதவண்ணம் முக்கியப்படுத்தினார். வேறெந்த மதத்திலும் காணாதபிரகாரமாகவும் அளவாகவும் அவர் தமது மதத்திலே இந்தப் பிதாத்துவத்தைப்பற்றிய விஷயத்தைத் தெளிவாய்க் காட்டினார். இந்தியாவின் பூர்வீக மதத்தில் தேவன் ஒருக்காலும் அறியப்படவில்லை. பரமபிதாவாகக் காணப்படவேயில்லை. அதைக்குறித்து அவைகள் போதிக்கிறது சொற்பம். "பரமபிதா" என்பது இந்த நூல்களில் சொல்லப்பட்டிருந்தாலும் இந்துக்களின் கருத்தில் அது இடம்பெறவில்லை.

கிரேக்க, ரோமை மதங்களிலே இந்த உபதேசம் கொஞ்சம் காணப்படும். ரோமருடைய பிரதான தெய்வம் ஜுப்பிற்றர். தேவபிதா. (Jupiter, Zeuspiter—Zeus=தேவன், piter=பிதா). ஆயினும் அந்த மதங்களில், தேவன் மனிதருக்கு பிதாவென்று சொல்லுவதைக்காணோம். யூதமார்க்கத்துக்குள் இந்தக்கொள்கை இருந்தபோதிலும் அவர்கள் தேவனைப்பற்றிக்கொண்டிருந்த நீதித்தன்மையும் பரி

Digitized by Google

சுத்த தன்மையும் அவருடைய பிதாத்துவத்தை மறைத்துப்போட்டது

இயேசுவானவரோ, இதை ஓர் பிரதான உபதேசமாகவும் அவர் மதத்தின் மையப்பொருளாகவும் வெளிப்படுத்தினார். கிழக்கத்தியருக்கு அருமையானதாகிய மாதாத்துவம் பிதாத்துவத்துக்குள் அடங்கும். தேவன் உலகங்களைவிட்டு அப்புறப்பட்டு மறைந்துபோயிருக்கிறார். ஆகையால் அவர் சர்வலோகங்களையும் ஜனங்களையும் தேவதூதர்கள் மூலமாய் நடத்திவருகிறாரென்று யூதர்கள் போதித்தார்கள் இயேசுவோ, ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்துக்கும் ஜீவியத்துக்கும் சமீபமாய்ப் பரமபிதாவைக் கொண்டுவந்தார். மற்ற மதங்களை ஸ்தாபித்த எவரைப் பார்க்கிலும் இவரோ தமது சீஷர்களுடைய கண்களை பரலோகத்திற்கு நேரே ஏறெடுக்கவும், "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே," என்று அன்போடும் உண்மையோடும் நம்பிக்கையோடும் சொல்லவும் செய்தார். இதற்கு மேலான உபதேசம் ஒருக்காலும் மனிதனுக்குச் சொல்லப்படவில்லை. கர்த்தருடைய ஜெபமே எக்காலத்தவருடைய ஜெபமும் மனிதருடைய இருதயத்தின் தேவையைத் திறக்கக்கூடிய திறவுகோலுமாயிருக்கிறது. ஏனெனில் அது மனிதனுடைய பிள்ளையடைவான தன்மையையும் தேவனுடைய பிதாத்துவத்தையும் வெகு தெளிவாய்க் காட்டும். இதுதான் இயேசு பண்ணிய உபதேசங்களின் உச்சிப்பொருள். சுவிசேஷங்களில் எத்தனைதரமோ இது வருகிறது. பழைய ஏற்பாட்டில் தேவனுடைய பிதாத்துவம் அபூர்வம். மத்தேயு சுவிசேஷத்தில் 'பிதா' வென்பதும் 'உங்கள் பிதா' வென்பதும் 'என் பிதா' வென்பதும் 40 தடவைக்குமேல் வருகிறது யோவான் சுவிசேஷத்தில் 'பிதா' என்பது 60 தடவைக்குமேல் சொல்லப்படுகிறது. இவ்விதமாய் பழையஏற்பாட்டின் காலத்தில் அதிகபயங்கரமும் மரணத்துக்கு ஏதுவுமாயிருந்த தேவ சமுகத்தின் காட்சியை இயேசுவானவர் ஜீவனுக்கும் சந்தோஷத்திற்கும் மாற்றி, ஜனத்துக்கு அது பிரியமாயிருக்கச்செய்தார். இயேசுதாமே தேவனைத் தமது பிதாவாக மதித்து சந்தோஷித்தார். 'பிதாவே,' என் 'பிதாவே' என்கிற பதங்கள் அவருடைய வாயில் பல சமயங்களில் வந்தன. தம்முடைய பிதா என்று இயேசு கண்டுணர்ந்ததால் அவர் 'உங்கள் பிதா' என்றும் சொன்னார் ஆகையால் பழைய ஏற்பாட்டில் கண்டிப்பாய்ப் பேசப்படும் தேவநீதிக்கும் பரிசுத்தத்திற்கும் பதிலாக நமது நாதர் தேவ அன்பை பரலோகத்தின் உன்னத அடையாளமாக அழுத்திக்காட்டினார். அது பரிசுத்தமும் நீதியுமுள்ள அன்பு. ஆயினும் அது தேவகுணத்தை சிம்மாசனமாகக் கொண்டதும் மற்றெல்லாவற்றையும் நிரப்புகிறதுமான அன்பு! ஏனெனில் தேவன் அன்பாகவே இருக்கிறாரென்று அவர் போதித்தார்.

Digitized by Google

## தியானம்.

## MEDITATION.

*தேவன் பிதா என்பதற்கும், தேவன் இராஜா என்பதற்கும் வித்தியாசமென்ன? நீ தேவனை எப்படிப் பார்க்கிறாய்? அன்பு நமது மார்க்கத்தின் சாரமும் பிதாத்துவமும் அதன் தோற்றமுமாயிருக்கிறது. இயேசுவின் இந்த வெளிப்படுத்தல் உலகத்தை அதிசமாய் இறுகப்பிடித்து மனுக்குலத்தாருக்கு சொல்லற்கரிய ஆசிர்வாதத்தைக் கொண்டுவருகிறது.*

——:0:——

## II-ம் பாடம்.

## STUDY II.

## இந்த பிதாத்துவத்தின் அர்த்தமென்ன?

## WHAT DOES THIS FATHERHOOD MEAN?

*இந்த உபதேசத்தில் சில குறிப்புகள் அடங்கும்.*

1. **தேவன் நமது பிதாவாயிருப்பதினால் நமது சரீரத்துக்கு அடுத்த எல்லா நன்மைகளையும் கொடுக்க சித்தமுள்ளவர்** என்று அவர் போதித்தார். "என்னத்தை உண்போம், என்னத்தைக்குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போமென்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள். ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்..............." அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார். அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களல்லவா? ............ இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். "மத். 6: 25—34, அடைக்கலான் குருவிகளுக்காக கவலைப்படுகிறவர் உங்கள் தலையிலுள்ள மயிரை எல்லாம் எண்ணிவைத்திருக்கிறார். (மத். 10: 29—31.) காட்டுப்புல்லையும் புஷ்பங்களையும் உடுத்துவித்து அடைக்கலான் குருவிகளுக்கு ஆகாரமளிக்கிறவர் தமது பிள்ளைகளைப் பராமரியாமல் விட்டுவிடுவாரோ? நமது தேவையாவையும் இவ்வகையான பிதா கவனித்து வருகையில் மட்டுக்கு மிஞ்சிய கவலையானது அவிசுவாசமே. எல்லாவற்றையும் ஆராயும் கண்கள் நமது பிதாவின் கண்களே.

Digitized by Google

2 அவர் பரம பிதாவாயிருப்பதால் தமது பிள்ளைகளினுடைய உள்ளான ஜெபங்களுக்குச் செவிகொடாமலிருக்கமாட்டார். இயேசுவானவர் இதை அடிக்கடி வற்புறுத்திப் பேசினார். "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள் தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக்கொடுக்க அறிந்திருக்கிறபோது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா? (மத். 7: 7–11). நாம் நம்முடைய பிள்ளைகளுக்குத் தேவையும் மிகவும் பிரயோஜனமுமானவைகளைக் கொடுக்க அவைகள் நம்மிடமிருக்கிறதினால் மாட்டோமென்று ஒருக்காலும் சொல்லமாட்டோமல்லவா ? எல்லா ஆசீர்வாதங்களையும் உடையவரும் கொடுக்கக்கூடியவருமான பிதாஉண்டு. அவர் நாம் நமது பிள்ளைகளுக்குச் சின்ன நல்ல காரியங்களைக் கொடுப்பதைப் பார்க்கிலும் நல்ல ஈவுகளை நமக்குக் கொடுக்க அளவற்ற மனதுடையவர். ஆகையால் நம்பிக்கையோடே அவரைக் கேட்க வேண்டும். ஜாக்ரதையோடே தேடவேண்டும். விடாமல் தட்ட வேண்டும், ஏனெனில் பிதாவானவர் உங்கள் தேவை யெல்லாவற்றையும் கொடுக்கச் சர்வவல்லமையும் ஆசையுமுள்ளவராயிருக்கிறார். இந்த வார்த்தைகள் நமது விசுவாசத்திற்கு எவ்வளவு உறுதியான அஸ்திபாரம்.

## தியானம்.

### Meditation.

பிதாருத்துவத்தைப்பற்றிய விசுவாசம் உன் கவலைகளை நீக்குகிறதா? குமாரன் என்ற அறிவு உன் ஜெபத்தில் நிச்சயத்தையும் நம்பிக்கையும் கொண்டுவருகிறதா? பிதாவின் அன்பு அவரது சர்வ வல்லமையாலும் சர்வ ஞானத்தாலும் வற்புறுத்தப்படுகிறது. பிதாவுடைவான அவரது அன்பு சொல்லுகிறதை யெல்லாம் அவர் கொடுக்கக்கூடும்.

———:o:———

Digitized by Google

## III-ம் பாடம்.
## STUDY III

### பிதாத்துவத்தின் தன்மை (தொடர்ச்சி).
### WHAT DOES THIS FATHERHOOD MEAN? (*Continued*).

3 **தம்மைத் தேடிவருகிற ஒவ்வொருவருக்கும் தம்மைத்தாமே கொடுக்க, தமது ஆவியைக் கொடுக்க ஆசையுள்ளவர்.** இதுதான் அவருடைய பிரதான ஈவு. "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்தாவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (லூக். 11: 13.) இவ்வளவு நிச்சயமான வாக்குத்தத்தம் நமக்கு இருக்கிறபடியினால் ஊக்கமான வேண்டுதலோடே ஜெபிப்போமானால் தேவன் தமது ஜீவனையும் திவ்ய சுபாவத்தையும் நமக்கு அளிப்பார்!

4. பாவத்தினின்று மனிதனை இரட்சிக்க அவர் ஆவலுடன் தேடுகிறார். அன்பு நிறைந்த இந்தத் தகப்பன் பாவத்திலே கிடக்கிற தமது பிள்ளைகளைப் பார்க்கும்போது கவலையற்றிருப்பாரா? தீவிரமாய் அவர்களைத் தேடி இரட்சிக்க வருவாரல்லவா? இழந்துபோனவர்களைப் பற்றிய மூன்று உவமைகளில் தேடுகிற பிதாவைப்பற்றிய காட்சி எவ்வளவு ஆச்சரியமானது! தேவன் மனிதனை இரட்சிக்கத் தேடும் இந்த மூன்று படமும் தேவனுடைய வசனத்திலுள்ள எல்லா மணிகளைப் பார்க்கிலும் துலக்கமுள்ளது.

தேவன் யாவர்க்கும் பிதாவா? இது எக்காலத்திலும் தர்க்கிக்கப்பட்ட பொருள். கெட்ட குமாரனுடைய உவமை இதற்கு இயேசு சொன்ன மறுமொழி. கெட்டகுமாரன் தூரதேசத்திலே கந்தையும் கரிக்கோலமுமாயிருந்தபோதிலும் அவன் பரமபிதாவின் பிள்ளையாய்த் தனித்திருந்தான். அவன் திரும்பிவந்தபோது அன்புள்ள தகப்பன் அவனைத் தன் அரண்மனையில் ஏற்றுக்கொண்டு அவனைக் கொண்டாடினான்.

ஆயினும், மனிதன் தன் பரமசுதந்தரத்தை இழந்துபோகக்கூடியவனென்றும் அவன் தன் தத்துவங்களையெல்லாம் கெடுத்து பிசாசின் பிள்ளையாகக் கூடுமென்றும் இயேசு போதித்தார். யூதனைப் பார்த்து, அவர்: "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள். உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதா

Digitized by Google

யிருக்கிறீர்கள்" என்றார். (யோ. 8: 44.) இன்னொரு சமயத்தில் அவர் தமது சீஷரைப் பார்த்து: "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். நன்மை செய்யுங்கள். கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள். அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்" என்றார். (லூக். 6: 35.) நீங்கள் மற்றவர்களைப் பகைத்துத் துன்பப்படுத்தும் நாளெல்லாம் பிசாசின் பிள்ளைகளாயிருப்பீர்கள். அதைவிட்டு ஒய்ந்து, மற்றவர்களை நேசித்து அவர்களுக்கு மன்னிக்கும்போதோ பரமபிதாவின் பிள்ளைகளாயிருப்பீர்களென்று அவர் சொன்னதுபோலிருந்தது. மெய்யாகவே மனிதன் தேவனுடைய பிள்ளைதான். ஆகிலும் அவன் காணாமற்போன பிள்ளை. பிதாவின் சாயலை இழந்து காட்டுமிருகத்துக்கு ஒப்பாயிருக்கலாம். ஆகிலும் அந்த ஆழமான குழியிலும் பாவச்சேற்றிலும் கிடந்து உழலும்போதும் தேவசாயலைக் குறிப்பிடும் குணங்கள் அவனைவிட்டு முற்றிலும் அழிந்துபோகவில்லை. கெட்ட குமாரனைப்போல அவன் புத்திதெளிந்து, எழுந்து தன் தகப்பனிடம் சேர்வான். இப்படி அவன் தேவவம்சத்தைச் சேர்ந்தவனானதால் தேவன் அவனை இரட்சிக்க மிகவும் ஆவலாயிருக்கிறார். இந்தப் பரமராஜாவின் பிள்ளை மனந்திரும்பும்போது பரலோகத்தில் மிகுந்த சந்தோஷமுண்டாயிருக்கும்.

## தியானம்.

### MEDITATION.

தேவனுடைய பிதாத்துவத்தைப்பற்றிய உன் தரிசனம் நீ அதிக தகுதியுள்ள குமாரனாகும்படி உன்னைத் தூண்டுகிறதா? எல்லா மனிதருக்குள்ளும் பிதாவின் சாயல் இருக்கிறதைக் காண நீ பிரயாசப்படுவாயா?

நமது பிதா வரையறையில்லாமல் தமது பிள்ளைகளுக்குக் கொடுக்கிறார். மிகவும் இழிவான பிச்சைக்காரனும் கொடும்பாவியும் அவருடைய பிள்ளைகளே. ஆயினும் அவர்கள் தங்கள் புத்திர பாகத்தை எப்படி விற்றுப்போட்டார்கள்?



Digitized by Google

## IV-ம் பாடம்.
## STUDY IV.

### யோவான் சுவிசேஷத்தில் காணப்படும் பிதாத்துவம்.
### FATHERHOOD IN JOHN'S GOSPEL.

யோவான் சுவிசேஷத்தில், இந்த விஷயத்தோடு இயேசுவானவர் தமது குணசீலங்களினுலும் தமது சொந்தஜீவியத்தினுலும் பிதாவை வெளிப்படுத்தினர் என்ற உபதேசம் சேர்க்கப்பட்டிருக்கிறது. "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்," என்று பிலிப்புவைப் பார்த்து கடிந்து பேசினர். (யோ. 14: 9, 10.) தம்முடைய சீஷர்களிலொருவன் தமது ஊழியத்தின் கடைசிகாலத்தில் அவரைநோக்கி "ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும்" என்று கேட்டபோது. அவர் மனவருத்தமடைந்து: மூன்று வருஷகாலமாக நித்தம் அவரை உனக்கு வெளிப்படுத்தவில்லையா? என் கிரியை, நான் பேசிய வார்த்தை யாவும் நீ தேடுகிற பிதாவை உனக்கு வெளிப்படுத்தி வந்தன. நீங்கள் என்னுடைய முன்மாதிரியைப் பின்பற்றுவீர்களானல் என் பிதாவின் பிள்ளைகளாயிருப்பீர்கள் என்ருர். "இப்படிச் செய்வதினுல் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்" என்ருர். (மத் 5: 45.) மனிதாவதாரம் எடுத்து சிலுவையிலறையுண்டு எழுந்த ஆண்டவரில்தான் நித்திய பிதாவினுடைய பூரண காட்சியைப் பார்க்கிருேம் என்ற ஆச்சரியமான கருத்தை எண்ணிப்பார்.

இதுவுமன்றி, இன்னெரு உபதேசமும் இதோடுகூடவருகிறது. அதாவது, மனுக்குலத்தார் யாவரும் உடன் சகோதரரென்று நாம் நித்தம் படித்துவருகிருேம். ஒரே தகப்பன், ஒரே குடும்பம், ஒரே சகோதரத்துவமாக நமது மூத்த சகோதரனுகிய இயேசுவின் இரத்தத்தினுல் நாமனைவரும் ஒன்ருயிணைக்கப்பட்டிருக்கிருேம்.

### தியானம்.
### MEDITATION.

குமாரனிலுள்ள பிதாவை நாம் எப்படி நன்ருயறியலாம்? பிதாவுக்கு வழி இயேசுவே. பிலிப்புவைப் பார்க்கிலும் யோவான் ஆழமாய்க்கண்டான். அவனுடைய கழுகின் கண்கள் கிறிஸ்துவினுடைய ஒவ்வொருவார்த்தையிலும் செய்கையிலும் நினைவிலும் பிரதிவிம்பிக்கப்பட்டவராக பிதாவைக் கண்டது.

Digitized by Google

## III-ம் அதிகாரம்.
## CHAPTER III.

# இயேசு பரிசுத்தஆவியானவரைப்பற்றிப் போதித்தது.
# JESUS' TEACHING ABOUT THE HOLY SPIRIT.

### I-ம் பாடம்.
### STUDY I.

### பழைய ஏற்பாட்டிலுள்ள பரிசுத்தஆவியானவர்.
### *The Holy Spirit in the Old Testament.*

பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியின் ஊழியத்தைப்பற்றி வாசிக்கிறோம். "ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்" என்று ஆதியாகமம் தொடங்கி பழைய ஏற்பாட்டு ஆகமங்களின் கடைசிவரை இந்த ஆவியானவர் மனிதருடைய இருதயத்திற்குள் தம்முடைய வரங்களை ஊதியருளுகிறார் என்று அவரைப்பற்றிச்சொல்லியிருக்கிறது. ஆகிலும் பழைய ஏற்பாட்டில் அவருடைய வேலை தனித்தாளுக்குரியதாயிராமல் பொதுவான ஜனங்களுக்குரியதும் தெளிவற்றதுமாயிருந்தது. குறிக்கப்பட்ட சில தீர்க்கதரிசிகளும் பரிசுத்தவான்களுமாத்திரம் அவரால் நடத்தப்பட்டார்கள். இயேசுவின் உபதேசத்திலோ தேவனுடைய ஒவ்வொரு பிள்ளையின் ஜீவியத்திலும் அவர் நெருங்கிய சம்பந்தமும் அவசியமான வல்லமையுமுடையவராயிருக்கிறாரென்று நாம் காண்கிறோம். சினொப்டிக் சுவிசேஷங்களைப் பார்க்கிலும் யோவான் சுவிசேஷம் ஆவியானவரின் கிரியைகளைப்பற்றி அதிகமாய்ச் சொல்லுகிறது. அதினிமித்தம் இது ஆவியானவரின் சுவிசேஷம் என்னப்படும். என்றாலும், திரித்துவத்தின் மூன்றாவதாளாகிய ஆவியானவரைப்பற்றி எல்லா சுவிசேஷங்களிலும் பல வசனங்கள் வருவதுண்டு

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களில் ஆவியானவர் புதிய ஏற்பாட்டின் காலத்தில் விசேஷித்த ஆளாயிருப்பாரென்று வாக்க

Digitized by Google

ளிக்கப்பட்டிருக்கிறது. "நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும், குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்." (யோவேல் 2: 28.) இந்த வசனங்கள் பெந்தெகோஸ்து நாளிலே நேராகவும் திட்டமாகவும் நிறைவேறின. இது தான் திருச்சபை பிறந்த நாள்.

## தியானம்.

## MEDITATION.

பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்டு, புதிய ஏற்பாட்டுத் துவக்கத்தில் அனுப்பப்பட்ட அவர் உன் ஜீவியத்தில் வல்லமையாயிருக்கிறாரா? பழைய ஏற்பாட்டின் எழுத்தின் பிரமாணமோ, அல்லது புதிய ஏற்பாட்டின் ஜீவபிரமாணமோ, எது உன்னுடையது?

பழைய ஏற்பாட்டில் அபூர்வமாய்க் காணப்பட்டது, ஆவியின் ஜீவனாகிய புதிய ஏற்பாட்டில் சாதாரண ஜீவனாயிற்று. இஸ்ரவேலருக்குள் வேளாவேளைகளில் வந்திருந்தவர் உயிர்ப்பிக்கிற வல்லமையாக தமது சபையில் நிலைவரமாய் வாசஞ்செய்கிறார்.

——:o:——

## II-ம் பாடம்.

## STUDY II.

## பரிசுத்த ஆவியானவர் ஒரு ஆள்.

## THE PERSONALITY OF THE HOLY SPIRIT.

பரிசுத்த ஆவியானவர் ஒரு ஆளுக்குரிய சகல இலட்சணங்களுமுள்ள பிரத்தியேகமான ஆள் என்று ஆண்டவர் காட்டினார். (லூக். 12: 13.) நீங்கள் பேசவேண்டியவைகளைப் பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்திலே உங்களுக்குப் போதித்தார்.

ஒரு ஆளுக்குரிய பிரதான இலட்சணங்களை நாம் திட்டமாய் அறியவேண்டுமானால் நமது கர்த்தர் மேலறையிலே செய்த அருமையான பிரசங்கத்தைப் படிக்கவேண்டும். (யோ. 14: 16.)

Digitized by Google

ஆண்டவர் அவருக்குக் கொடுத்த நாமங்களினால் அவருடைய இலட்சணங்களை அறியலாம். அவர் பரிசுத்த ஆவியானவர், மனிதரைப் பரிசுத்தமாக்குகிறவர். அவர் சத்திய ஆவி. சத்தியத்தையுடையவர்; அதை வெளிப்படுத்திக் கண்டித்துணர்த்துகிறவர். அவர் தேற்றரவாளன் (Paraclete), அதாவது நமது பக்கத்திலே நின்று நமக்காகப் பரிந்துபேசி நம்மை ஆற்றித்தேற்ற அழைக்கப்பட்டவர்.

பரிசுத்த ஆவிக்கு விரோதமான தூஷணம் எல்லாப்பாவங்களிலும் பயங்கரமானதென்றும், அவர் பாவத்தைக் கண்டித்துணர்த்துகிற ஒரு ஆள் என்றும் ஆண்டவர் போதித்தார். (மத். 12: 28, 31.)

அதுபோலவே, ஞானஸ்நானப்பத்ததியிலே ஆண்டவர் அவரைச் சேர்த்து வைத்திருப்பதினால் அவர் ஒரு ஆள் என்று திட்டமாய்க் காட்டுகிறார்.

## தியானம்.

## MEDITATION.

நீ உன்னுடைய ஜெபங்களில் ஆவியானவரை ஒரு ஆளாகப் பாவிக்கிறாயா? அல்லது ஒரு சக்தியாகப் பாவிக்கிறாயா? அவர் உனக்குள்ளே என்ன வேலை செய்திருக்கிறார்?

ஒருவன் பரிசுத்த ஆவியானவரை ஒரு ஆளாகப்பாவித்து அவருக்குக் கீழ்ப்படியாவிட்டால் அவர் துக்கப்படக்கூடியவர் என்று எண்ணினால் மாத்திரம் ஆவியானவரின் ஐக்கியம் அவனுக்குக் கிடைக்கும்.

———:o:———

## III-ம் பாடம்.

## STUDY III.

## கர்த்தருடைய ஜீவியத்தில் பரிசுத்த ஆவியானவர்.

## THE HOLY SPIRIT IN THE LIFE OF OUR LORD.

நமது ஆண்டவருடைய ஜீவியத்திலும் ஆவியானவர் எவ்வளவு விசேஷமாய்க் காணப்படுகிறார் என்பதைக் கவனி. அவர் ஞானஸ்நானம் பெற்றபோது ஆவியானவர் புறாவைப்போல் அவர்மேல் தங்கினார். (மத். 3: 16) பிசாசோடு போர்புரிந்து ஜெயங்கொள்ள அவர் இயேசுவை வனாந்தரத்துக்குத் துரத்தினார் (மாற். 1: 12; மத். 4: 1.) இந்த அனுபவத்தை அவர் தமது சீஷர்களுக்கு வெளிப்

Digitized by Google

படுத்தாமல் இருந்திருக்கமாட்டார். தமது ஜீவியத்தின் இரகசியங்களில் அநேகத்தை அவர் அவர்களுக்கு வெளிப்படுத்தியே வந்தார்.

லூக்கா சுவிசேஷகன்தான் மத்தேயு, மாற்கு என்பவர்களைப் பார்க்கிலும் அதிகமாய் ஆவியானவரைப்பற்றி எழுதினான். ஆவியினால் விசேஷித்த பிரகாரம் நடத்தப்பட்ட பவுலின் பிரசங்கங்களினால் ஏவப்பட்டு இப்படி எழுதினான் என்பதற்குச் சந்தேகமில்லை.

இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார். (லூக். 4: 14.) ஊழியஞ்செய்யும்படிக்கு ஆவியானவர் அவருக்கு வல்லமையின் ஊற்றாயிருந்தார். தேவனுடைய ஆவியினால்தான் அவர் பிசாசுகளைத் துரத்தினார். (மத். 12: 28.) சுவிசேஷத்தைப் பிரசங்கித்து மனிதருக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொடுக்கும்படி அவர் ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டவராயிருந்தார். (லூக். 4: 18.) இந்தப் பரமாவியிலே அவர் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்தார். (லூக். 10: 21.) வேறெந்த மனுஷனும் நடவாத அளவாய் அவர் பரிசுத்த ஆவிக்குள் நடந்து திவ்ய கிரியைகளை இடைவிடாமல் நடப்பித்துவந்தார்.

சீஷர்களுடைய ஜீவியத்திற்குப் பரிசுத்த ஆவியானவர் இன்றியமையாத அவசியமென்று இயேசு வற்புறுத்திக் காட்டினார்.

ஆவியானவர் எப்போதும் இயேசுவை மகிமைப்படுத்தினது போல இயேசுவும் ஆவியானவரை மகிமைப்படுத்தினார்.

"நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும், நான் போகாதிருந்தால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்." (யோ. 14: 18; 16: 7.) சரீரப்பிரகாரம் நான் உங்களோடிருப்பதைப் பார்க்கிலும் அவரது ஆவிக்குரிய பிரசன்னமே உங்களோடிருப்பது நலம் என்றார்.

## தியானம்.

### MEDITATION.

ஆவியானவர்பேரில் கிறிஸ்து முழுதும் சார்ந்திருந்தது கிறிஸ்தவ ஜீவியத்துக்கு வல்லமையான பெரிய பாடமல்லவா?

ஆண்டவருக்கும் ஆவியானவருக்குமிருந்த இன்பமான நெருங்கிய ஐக்கியம் கவனிக்கப்படத்தக்கதும், பின்பற்றத்தக்கதுமானது. எல்லாவிஷயங்களிலும் அவர் ஆவியானவரால் நடத்தப்பட்டாரானால், நாம் எவ்வளவு அதிகமாய் நடத்தப்படவேண்டும்.

———:o:———

Digitized by Google

## IV-ம் பாடம்.
## STUDY IV.

# பரிசுத்த ஆவியின் கிரியை.
# THE WORK OF THE SPIRIT.

சீஷர்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் ஆவியானவர் செய்யும் வேலையைக்குறித்து இயேசு விபரமாய்ப்பேசினார்.

(a) அவர் மனுஷருடைய பாவங்களைக் கண்டித்து உணர்த்தி அவர்களைக் குணப்படுத்தி கிறிஸ்தவ வழிக்குக் கொண்டுவருகிறவர். செத்துப்போன அவர்களுடைய இருதயத்திலே அவர் பிரவேசித்து அவர்களை உயிர்ப்பித்ததினால்தான் புதுப்பிறப்பு அவர்களுக்குண்டானது. "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டான்......... .....ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்" (யோ 3: 5, 6). மேலும் அவர் பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், இனிவரும் நியாயத்தீர்ப்பைக்குறித்தும் கண்டித்து உணர்த்துவார் (யோ. 16: 8—11). பாவத்தின் தன்மையை அவர் வெளிப்படுத்தி சாவுக்கேதுவான அதின் வல்லமையை அவர்களுக்குத் தெரிவித்து பாவத்தை வெறுக்கிற வெறுப்பை அவர்கள் மனதிலே உண்டாக்குவார்

(b) கிறிஸ்துவானவர் செய்த வேலையை இவர் மனிதருடைய இருதயத்தில் தொடுத்து நடத்தி ஆத்துமாவுக்குள் இரட்சிப்பின் ஆசீர்வாதத்தைக் கொண்டு வருவார். இயேசு செய்யும் ஒவ்வொரு அன்பின் முயற்சியையும் சீஷருக்கு உயிருள்ளதாக்குவார். "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் (யோ. 16: 14.)

(c) அவர் எல்லாவற்றையும் உங்களுக்குப் போதிப்பார். (யோ. 14: 26.) கிறிஸ்து மார்க்கத்துக்குரிய ஆச்சரியமான சத்தியங்களையும் கிறிஸ்தவ ஜீவியத்தின் நிறைவான ஆசீர்வாதங்களையும் ஆவியானவர் அவர்களுக்கு மறுரூபப்படுத்தி பிரகாசிப்பார்.

(d) இயேசு போதித்தவைகளனைத்தையும் ஆவியானவர் நினைப்பூட்டுவார். "நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்." (யோ. 14: 26.) கிறிஸ்தவர்களுடைய ஞாபகசக்தியை அவர் பெலப்படுத்தி இயேசு அவர்களுக்காக நடப்பித்த கிரியைகளைக் காட்டத்தக்க படங்களை அவர்களிருதயத்தில் வரைந்து அவர்களை அனலாக்குவார். ஆகையினால் ஆவியானவர் கிறிஸ்தவனுடைய பரம ஞாபகசக்தியாயிருப்பார்.

Digitized by Google

(*e*) அவர் சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். **(16: 13.)** அவர் அவர்களை நல்ல மேய்ச்சலுக்கும் அமர்ந்த தண்ணீர்களண்டைக்கும் நடத்தி இரட்சிப்பின் சத்தியங்களை அவர்களுக்குக் காட்டுவார். சத்தியத்தை புதிது புதிதாய் அவர்களுக்கு நித்தம் எடுத்துக்காட்டி அவர்களை சந்தோஷிப்பார். ஏனெனில் அவர் சத்திய ஆவியானவரல்லவா?

## தியானம்.

## MEDITATION.

நமது அருமை மீட்பர் உயிர்விடுமுன்னே, நம்மோடு வசிக்கும்படி வழி காட்டியும், தேற்றரவாளனுமானவரை சாதனமாகக் கொடுத்தார்.

சாயங்காலத்தில் வீசும் காற்றைப்போன்ற அவரது மெல்லிய சத்தத்தைக் கேட்கிறோம். அது ஒவ்வொரு எண்ணத்தையும் தடுத்து பயத்தை அமர்த்தி பரலோகத்தைப்பற்றி பேசுகிறது. நமக்குள்ள ஒவ்வொரு நற்குணமும், நாமடைந்திருக்கும் ஒவ்வொரு ஜெயமும், பரிசுத்தத்தைப்பற்றிய ஒவ்வொரு எண்ணமும் அவருடையதே.

———:o:———

## V-ம் பாடம்.

## STUDY V.

## பரிசுத்த ஆவியின் கிரியை (தொடர்ச்சி).

## THE WORK OF THE SPIRIT (*Continued*).

(*f*) வரப்போகிற காரியங்களை அவர் உங்களுக்கு அறிவிப்பார் (யோ. 16: 13). பரலோகத்தின் இன்பங்களை அவர்களுக்கு முன்னதாகவே எடுத்துக்காட்டி அவர்களை தைரியப்படுத்துவார். கிறிஸ்து நமக்காக ஆயத்தம்பண்ணப் போயிருக்கிற அந்த மேலான வாசஸ்தலங்களை நமக்கு அச்சாரமாகத் தெரிவித்து அதற்கென்று நம்மை வழி நடத்துவார். வரப்போகிற காரியங்களை மனிதருக்குத் தெரிவிக்கும் வல்லமை ஆவியானவருக்குத்தானுண்டு.

(*g*) என்னை மகிமைப்படுத்துவார். (யோ. 16: 14.) உலகத்தாருக்கு முன்பாக கிறிஸ்தவர்களுடைய இருதயத்திலும் ஜீவியத்திலும் நமது கர்த்தரை மகிமைப்படுத்துவதே ஆவியானவரின் பிரதான ஊழியம். பிதாவை மகிமைப்படுத்துவது கிறிஸ்துவின் காரியம்.

Digitized by Google

கிறிஸ்துவை மகிமைப்படுத்துவது ஆவியானவரின் காரியம் அப்படியே ஆவியை மகிமைப்படுத்துவது சீஷனுடைய கடமை.

(h) அவர் என்னைக்குறித்து சாட்சிகொடுப்பார். (15: 26). கிறிஸ்துவானவர் பிதாவைப்பற்றிச் சாட்சிகொடுத்துத் தமது ஜீவியத்திலே அவரை வெளிப்படுத்தினார். அதுபோலவே, பரிசுத்த ஆவியானவர் ஆண்டவரைக்குறித்து நமது இருதயங்களில் நித்தம் சாட்சியிடுகிறார். நமது இருதயங்களில் இருக்கிற நிலையான சாட்சி அவரே. பரிசுத்தவான்களின் இருதயத்திலே அவர் இந்தச் சாட்சியைச் சொல்லுகிறது மாத்திரமல்ல, ஒவ்வொருவரும் கர்த்தருக்காக இந்தச்சாட்சியைச் சொல்லும்படி வல்லமை கொடுத்து அவர்களை ஏவுகிறார். "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சியாயிருப்பீர்கள்." (அப். 1: 8.) சாட்சியாயிருக்கிற இந்த வல்லமை பரிசுத்த ஆவி அருளும் வல்லமைதான். சீஷன் தன் ஆண்டவருக்குச் சொல்லும் ஒவ்வொரு சாட்சியமும் பரிசுத்தஆவியின் ஏவுதலினால் சொல்லும் சாட்சியே.

## தியானம்.

## MEDITATION.

*வரப்போகிற எந்தக் காரியங்களை ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்? ஆவியானவரின் ஏவுதலினாலே கிறிஸ்துவுக்காக நாம் எம்மட்டுக்குச் சாட்சிசொல்லுகிறோம்?*

*ஆவியானவர் உலகத்துக்குக் கொண்டுவர இருக்கிற ஒவ்வொரு ஆவிக்குரிய ஆசீர்வாதமும் தேவனுடைய ஜனங்களின் வழியாக வரவேண்டுமென்பதை நினை. நமது உத்திரவாதம் எவ்வளவு பெரிது!*

———:o:———

## VI-ம் பாடம்.

## STUDY VI.

## ஆவியானவரின் கிரியை (மு.டிவு).

## THE WORK OF THE SPIRIT (*Concluded*).

"என்றென்றைக்கும் உங்களுடனே கூடயிருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்." (யோ. 14: 16. லூக். 12: 11, 12ஐயும் பார்க்க.)

Digitized by Google

இங்கே உபயோகிக்கப்படும் 'பாரக்லீட்' (Paraclete) என்ற பதம் தேற்றரவாளன் என்று மொழிபெயர்க்கப்படுகிறது. 1 யோ. 2: 1-ல் அது பரிந்துபேசுகிறவர் என்பதாய்த் திருப்பப்பட்டது. எழுத்தின்படி, பக்கத்திலே நின்று அவனுக்காகப் பேசும்படி அழைக்கப்பட்டவர் என்று அதற்கு அர்த்தமாம். பரிசுத்த ஆவியானவருக்கும் ஒவ்வொரு சீஷனுக்கும் இருக்கவேண்டிய சம்பந்தம் இதுவே. அவனுடைய பக்கத்திலே நின்று பேசி அவனுக்கு ஞானத்தையும் வல்லமையையுங் கொடுத்து அவன் சத்துருக்களை வெல்லுவதினுலே அவனுக்கு ஆறுதலையும் தேறுதலையும் அருளுகிருர்.

கிறிஸ்து மகிமைப்படுமளவும், அதாவது சிலுவையில் அறையப்படுமளவும் பரிசுத்தஆவியானவர் வல்லமையோடே அருளப்படவில்லையென்பது மெய்தான் (யோ. 7: 39).

பரிசுத்தஆவியானவர் அவர்கள்மேல் இறங்கி வருமட்டும் எருசலேமில் காத்திருக்கும்படிக்கு இயேசு தமது சீஷர்களுக்குக் கட்டளையிட்டார். "நீங்களோ, உன்னதத்திலிருந்து வரும் பெலனுல் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" என்ருர். (லூக். 24: 49)

விசுவாசிக்கிற ஒவ்வொருவனுடைய இருதயத்திலும் ஆவியானவர் ஜீவஊற்ருய் ஊறிக்கொண்டேவருவார் என்று இயேசு போதித்தார். "நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்ருயிருக்கும்." (யோ. 4: 14.) ஆவியானவர் இருதயத்தைப் புதுப்பிக்கிறவரென்று நமது கர்த்தர் அடிக்கடி வற்புறுத்திக் காட்டியிருக்கிருர். இவைகளெல்லாவற்றிற்கும் மேலாக, பரிசுத்தஆவியானவர் ஒவ்வொருவனுடைய இருதயத்திலிருந்து நதிநதியாகப் புரண்டோடி மற்றவர்களைச் செழிப்பித்து சுத்தப்படுத்தி அவர்கள் தாகத்தைத் தீர்க்கும் வல்லமையுடையவரென்று இயேசு காட்டினுர். "அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும்." (யோ. 7: 38, 39.)

அதுவுமன்றி, தேவன் தமக்குச் சொந்தமானவர்களுக்கு, எல்லா ஈவுகளுக்குமேலான இந்த வரத்தைக் கொடுக்க எப்போதும் ஆயத்தமாயும் ஆசையாயும் இருக்கிருரென்று இயேசு போதித்தார். "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்தஆவியானவரைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?" (லூக். 11: 13). எவ்வளவு அதிகமாய்!

Digitized by Google

## தியானம்.
### MEDITATION.

*ஆவியானவருடைய இரண்டு பெரிய ஆசீர்வாதங்களை நீ பெற்றிருக்கிறாயா? "நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்று." "அவன் உள்ளத்திலிருந்து நதிகள் ஓடும்." பரிபூரணமான ஜீவியமும் வழிந்தோடும் ஜீவியமும் பெற்றிருக்கிறாயா?*

*தம்மைத்தாமே நமக்குக் கொடுக்க பிதாவுக்கு இருக்கும் சொல்லற்கரிய ஆவலைக் கவனி!*

Digitized by Google

# IV-ம் அதிகாரம்.
# CHAPTER IV.

## தேவனுடைய இராச்சியத்தைப்பற்றி இயேசு போதித்தது.
## JESUS' TEACHING ABOUT THE KINGDOM OF GOD.

### I-ம் பாடம்.
### STUDY I.

### இந்த இராச்சியத்தின் பெயர்.
### *The Name of the Kingdom.*

ஒரு விசேஷித்த விஷயத்தில் தேவனுடைய இராச்சியமே நமது கர்த்தருடைய பிரசங்கங்களின் முக்கிய பொருள். தேவனுடைய இராச்சியம் சமீபமாயிருக்கிறது என்பதுதான் அவருடைய முதற் பிரசங்கம். சிலுவையிலறையப்படுவதற்கு முன்னதாக என்னுடைய இராச்சியம் இவ்வுலகத்துக்குரியதல்ல வென்றார். பரலோகத்துக்கு ஏறிச்செல்லும் சமையத்தில் அவர் தமது சீஷர்களுக்குத் தரிசனையளித்து, தேவனுடைய இராச்சியத்துக்கடுத்தவைகளை அவர்களுடனே பேசினார் என்றும் எழுதியிருக்கிறது. (அப். 1: 3.) இராச்சியமே அவருக்குப் பிரதான காரியம். அவருடைய எண்ணங்களெல்லாவற்றையும் பரவசப்படுத்தினது இதுவே. அவருடைய தூதிகையின் மொத்தப்பொருள் இதுதான். இந்த இராச்சியம் நிறைவேறவேண்டுமென்பதே அவருடைய ஆத்தும வாஞ்சை.

அவருடைய முன்தூதனாகிய யோவானுடைய பிரசங்கப்பொருள் இதுதான். "மனந்திரும்புங்கள், பரலோக இராச்சியம் சமீபமாயிருக்கிறது." இந்த இராச்சியத்தின் வருகை சமீபித்துவிட்டதென்று அவன் கண்டு அதைக்குறித்தும் அவன் பிரசங்கித்தான்.

Digitized by Google

யோவானுடைய பிரசங்கமும் கிறிஸ்துவின் பிரசங்கமும் ஒரே பொருளில்தான் ஆரம்பம் பெற்றது. (மாற் 1: 15.) அதிலிருந்து துவங்கி, இந்த இராச்சியத்தின் தன்மை, இலட்சணங்கள் இன்னதென்று காட்டினார். திருச்சபையைக்குறித்து இரண்டுதரம் மாத்திரம் பேசினார். தேவனுடைய இராச்சியத்தைப்பற்றிய கருத்தை அவர் எப்போதும் பேசி விஸ்தரித்தார்.

மத்தேயு சுவிசேஷத்தில், "தேவனுடைய இராச்சியம்" என்கிற பதத்திற்குப் பதிலாக "பரலோக இராச்சியம்" என்ற பதம் உபயோகித்திருக்கிறது. இந்த வார்த்தையோடு சினொப்டிக் சுவிசேஷத்தின் வாக்கியங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் தேவனுடைய இராச்சியமென்பதும் பரலோக இராச்சியமென்பதும் ஒரே அர்த்தங்கொள்ளும். "பரலோக இராச்சியம்" பரம உற்பத்தியையும், "தேவனுடைய இராச்சியம்" இதை ஸ்தாபித்தவராகிய தேவனையும் பிரதானமாய்க் காட்டுகிறது.

தேவனே இந்த இராச்சியத்தின் தலைவர் "உமது இராச்சியம் வருவதாக" என்று ஜெபிக்கும்படி இயேசு போதித்தார். இதற்கு இசைவாக மேசியாவாகிய இயேசுவே இதை ஸ்தாபிக்கிறவர், அவரே இதின் இராஜ பிரதிநிதி. அவரே இதின் காரியகர்த்தர் என்று சொல்லலாம். உலகத்தில் இது நடந்தேறும்படி செய்கிறவர் அவர்தான். ஆகிலும் சில சமையங்களில் இயேசு இந்த இராச்சியம் தமது சொந்த இராச்சியம் என்று பேசினார் "மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவருடைய இராச்சியத்திலிருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் கூட்டிச்சேர்ப்பார்கள்." (மத். 13: 41.) அவர் விசாரிக்கப்பட்டபோது "என் இராச்சியம் இவ்வுலகத்துக்குரியதல்ல" என்றார். உள்ளபடியே அவர் இன்றைக்கும் தமது அன்பின் கொடியை அவர்களுக்குக் காண்பித்து அவர்களை ஜெயத்துக்கு நடத்துகிறார்.

## தியானம்.

### MEDITATION.

நமது ஆண்டவருடைய இரண்டு பிரதானமான வெளிப்படுத்தல்கள் பிதாத்துவமும், தேவனுடைய இராச்சியமுமே. முந்தினது அன்பையும் பிந்தினது நீதியையும் கிறிஸ்துமார்க்கத்தின் இரட்டைத் தூண்களாக வற்புறுத்துகின்றன.

—:o:—

Digitized by Google

பிசாசுகளைத் துரத்துகிறபடியால் தேவனுடைய இராச்சியம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே" என்றார் (லூக் 11: 20; 17: 20, 21). இது வாஸ்தவமே. கிறிஸ்து எப்போது வந்தாரோ, தேவனுடைய இராச்சியமும் அப்போதே வந்துவிட்டது அதின் ஆவியின் பிரசன்னம் அவரே. அவர் அதின் மூலசத்தியங்களைப் பிரசங்கிக்கவும் ஜனங்கள் அதை ஏற்றுக்கொள்ளும்படி அவர்களை அழைக்கவும் வந்தார். தேவனுடைய இராச்சியத்திற்குரிய ஜீவியத்தை நடப்பிக்கவும் மற்றவர்கள் அதின்படி நடக்க அவர்களை ஏவவும் வந்தார். புளித்தமாவாகிய அதின் சத்தியங்களைக் கணக்கற்ற இருதயங்களில் பரவச்செய்தார். அவர் இராஜாவாகவும் வந்தார். தமது அதிகாரத்தைக் கூறி யாவரும் தமக்கு இராஜபக்தி காட்டும்படி சொல்லி இந்த இராச்சியத்தின் பாடுகளிலும் ஜெயத்திலும் மகிமையிலும் எல்லா மனிதரும் பங்கடையும்படி அவர்களை அழைக்க வந்தார். இவ்விதமாக அவர் தமது இராச்சியத்தின் சத்தியங்களைக் கொண்டுவந்து சகல மனிதருக்கும் வெளிப்படுத்தித் தங்கள் ஜீவியத்தையும் ஆட்சிகொள்ளும்படியாக அதின் வல்லமையை அவர்களிருதயத்தில் நிலைப்படுத்திவைத்தார்.

ஆயினும் அது இனிவரப்போகிற இராச்சியம் என்றும் போதித்தார். தாம் சொல்லிக்கொடுத்த ஜெபத்தில் "உம்முடைய இராச்சியம் வருவதாக" என்ற ஜெபத்தை முக்கியப்படுத்தினார். (மத். 7: 21—23; 8: 11.) இவ்விதமாய் இந்த இராச்சியம் விசேஷித்த கருத்தில் இனி வரப்போகிற இராச்சியம் என்று போதித்தார். இது ஆவிக்குரிய வல்லமையால் வேரூன்றி உன்னத மகிமையடையும்படிக்குக் காலம் செல்லவேண்டியதாயிருக்கிறது. இந்தக் கருத்தை ஆண்டவர்தாமே உவமைகளினால் வர்ணிக்கிறார். ஆரம்பத்தில் இது கடுகு விதையைப்போல அற்பமானதாய்க் காணப்படும். (மத். 13: 31.) அறியப்படாத பன்னிரண்டு சீஷர்கள்தான் இந்த இராச்சியத்தின் வல்லமையை ஆரம்பத்தில் வெளிப்படுத்தினார்கள் ஆகிலும் அச்சிறு விதை வளர்ந்து பெரிதாகி அதின் நிழலில் இலட்சக்கணக்கானபேர் வந்தடையததக்கதாக அவ்வளவுக்குப் பரம்பத்தக்கதான ஜீவனுள்ளதாயிருந்து அதோடு அது படிப்படியாய் வளருகிறதென்பதைக் காட்டும்படி அதை வசந்த காலத்திற்கு ஒப்பிடுகிறார். (மாற். 4: 26—29) "நிலமானது முன்பு முளையையும் பின்பு கதிரையும் கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகத் தானாய்க் கொடுக்கும்." மெய்யாகவே இந்த இராச்சியம் பிரத்தியட்சமாய் வராது. ஆடம்பரமானதுமல்ல. வித்துப்போல அது இரகசியமாய் முளைத்துப் பயிராகி விருத்தியடைந்து கடைசியில பலன் கொடுக்கும்.

Digitized by Google

இந்த இராச்சியம் எல்லாவல்லமையோடு இப்போது ஜனங்களுடைய இருதயத்திலே தங்கியிருக்கிறது. பாக்கியத்தோடு முடியாத மார்க்கத்தின் எந்த அனுஷ்டானத்தையும் நம்பாதே. இந்த இராச்சியத்தின் இராஜா சர்வ மகத்துவமுள்ளவரும் நித்தியருமானதால் இது வளர்ந்து சர்வதேச மார்க்கமாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. பரிசுத்தாவியினுடைய நடத்துதலால் அது விருத்தியடைந்து தேவனுடைய நாளிலே பூரணமாய்ஜொலிக்குமட்டும் பிரகாசித்துக்கொண்டேவரும்.

## தியானம்.

## MEDITATION.

ஒருவன் எந்த சடங்காசாரத்தையும் அனுசரித்துவந்தாலும் நமது மார்க்கத்தின் பாக்கியமுள்ள குணங்களை அவன் அணிந்துகொள்ளும்படி அது உதவிசெய்யாவிட்டால் அது அவனுக்குத் தீமையாயிருக்கும். இந்த இராச்சியத்தின் இராஜா சர்வவல்லமையும் நித்தியமுமுள்ளவரானதால் இந்த இராச்சியம் வளர்ந்து சர்வஜன இராச்சியமாகிறது நிசமும் அவசியமுமான காரியமே.

——— :O:———

## IV-ம் பாடம்.

## STUDY IV.

## இந்த இராச்சியத்தின் தன்மை (தொடர்ச்சி).

## THE NATURE OF THIS KINGDOM (*Cotinued*).

### 3. சர்வஜன இராச்சியம்.

ஒரே ஒரு ஜாதிக்குள் அடங்கினதல்ல. இது பூமியெங்கும் படரும்படி ஸ்தாபிக்கப்பட்டது. இதின் உள்ளான ஆவிக்குரிய தன்மையை, அல்லது இதை ஸ்தாபித்தவருடைய திவ்விய இலட்சணங்களைக் கவனித்தால் இது சர்வஜன இராச்சியமாகுமென்று எதிர்பார்க்கவேண்டியதாயிருக்கும். இருதயக் குணத்துக்கும் ஆவியின் கிருபைக்கும் தேசவரையறை கிடையாது.

நமது ஆண்டவர் யூதர்களுக்குள் தமது ஊழியத்தை நடப்பித்தாரென்பது மெய். அவரது ஊழியம் குறிக்கப்பட்ட தேசத்திற்கும்


Digitized by Google

ஜனத்துக்கும் மாத்திரம் உரியதாயிருக்கிறது. கானானியஸ்திரீ அவ ரைநோக்கி வேண்டிக்கொண்டபோது "காணமற்போன ஆடுகளாகி ய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி மற்றப் படியல்ல" வென்றார். (மத். 15: 21—24.) இவைகளையும் மற்ற வார்த்தைகளையும் கவனிக்கும்போது, ஆண்டவர் யூதரை மாத்திரம் தேடிவந்தாரென்றும், அவர்கள்பேரில் மாத்திரம் அனுதாப சிந்தை யுள்ளவராயிருந்தாரென்றும் தோன்றும். அவர் தமது சீஷர்களை அனுப்பியபோது, "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும் சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும் காணமற்போன ஆடுக ளாகிய இஸ்ரவேல் வீட்டார் இடத்திற்குப் போங்கள்" என்றார். (மத். 10: 5, 6.) இந்த வார்த்தைகளைக் கவனித்தாலும் அவரது ஆ சை நல்லதாயினும் மிகவும்நெருக்கமாயிருந்ததென்று நினைக்கத்தகும்.

ஆகிலும் தாமே எல்லாருக்கும் பிரசங்கிக்க நோங்காமல் (Extensive work) சில ஆட்களைத் தெரிந்துகொண்டு, அவர்கள் மூல மாய்த் தமது இராச்சியத்தைப் பிரபலியப்படுத்தச் சித்தங்கொண் டதே இந்த விபரீதத்துக்கு முகாந்திரம். இதற்கிசைய, தமது இராச் சியத்தின் வித்துக்களைத் தமது சீஷர்களின் மனதிலேபோட்டு ஜீவ னும் வல்லமையுமுள்ளதாக்கிப் பின்பு, தமது தூதாட்களாக நாலுதி சைகளிலும் அவர்களை அனுப்பி, தமது இராச்சியத்தின் சத்தியத்தை எல்லா ஜாதியாருக்கும் தெரிவிப்பது அவரது நோக்கம். அப்படியே அவர்கள் பரவசப்படுத்தப்பட்டவர்களாய் எங்கும்போய்ச் சுவிசேஷத் தைப் பிரசங்கித்தார்கள். அவர் யூதர்க்குரியவைகளால் சூழப்பட்டு மட்டுப்படுத்தப்பட்டிருந்தபடியால், புறஜாதிகளுக்குத் தாமே பிரசங் கிக்கும் முறையைக் கையாடாமல், இப்படிப்பட்ட ஒழுங்கினால் தமது இராச்சியத்தை எங்கும் பலமாகவும் சீக்கிரமாகவும் ஸ்தாபிக்கக்கூடு மென்று கண்டார்.

## தியானம்.

MEDITATION.

கிறிஸ்து மார்க்கத்துக்கும் இந்து மார்க்கத்துக்கும் உள்ள பேதத்தைப் பார். ஒன்று எல்லாமனிதரையும் தேடிப்போய் அவர்களை கிறிஸ்துவின் இராச் சியத்துக்குள் கொண்டுவரும்படி நோக்குகிற ஜெயமுள்ள மார்க்கம்; மற்றதோ ஒரே ஒரு ஜாதிக்குரியதாய் மாத்திரமிருப்பதால் சிதைவுள்ள மார்க்கம். மற்ற வர்கள் யாவரும் அதில் பிரவேசிப்பதற்கு அதில் வழியில்லை.

Digitized by Google

## V-ம் பாடம்.
## STUDY V.

# இந்த இராச்சியத்தின் தன்மை (தொடர்ச்சி).
# THE NATURE OF THIS KINGDOM. (*Continued.*)

### (3) சர்வஜன இராச்சியம் (தொடர்ச்சி).

அப்போஸ்தலரை பல ஜாதிகளுக்குள்ளும் அனுப்பினார். தாமோ, எல்லா நாடுகளிலுஞ் சிறியது என்னப்பட்ட பலஸ்தீனாவை விட்டு எங்கும் போகாமல் தமது சொந்தஜனமாகிய யூதருக்குள் தமது ஊழியத்தை நடப்பித்தார். இவ்விதமாய் அவர் வேலைசெய்வதினால் தமது வல்லமை பூமியின் கடைசி பரியந்தமும் எதிர்க்கக்கூடாத விதமாய் செல்லக்கூடுமென்று கண்டார். ஆயினும் அவர் புறச்சாதியாரை அசட்டைபண்ணவில்லை. (மத். 8: 5—12.) நூற்றுக்கதிபதியின்மேல் அவர் அன்புகூர்ந்து அவனுடைய விசுவாசத்தைக்குறித்து வியந்துகொண்டார். அதுவுமன்றி, யூதர் அதிகமாய்ப் பகைத்துவந்த சமாரியரிடம்போய்த் தமது அன்பையும் ஜீவனுக்கேதுவான நற்செய்தியையும் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். சமாரியா ஸ்திரீக்கு தம்மை மேசியாவென்று முதல்முதல் வெளிப்படுத்தினாரல்லவா? சிரோபேனிக்கேய ஸ்திரீ தேடின ஆசீர்வாதத்தைத் தாராளமாய் அவர் அவளுக்கு அளித்தார்.

இந்த இராச்சியம் சர்வஜனத்துக்குமுரியதென்று நாலாம் சுவிசேஷத்தில் வற்புறுத்திக் காட்டப்படுகிறது. பரிந்து பேசுதலான அவரது அருமையான ஜெபத்தைக் கவனித்துப்பார். (அதி. 17.) தம்முடையவர்களினிமித்தம் அவர் அனல்கொண்டு நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல் இவர்களுடைய வார்த்தைகளினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன் என்றார். (வா. 20.)

## தியானம்.
## MEDITATION.

யூதருக்குள்ளேயிருந்தாலும் உலகமெங்கும் பரவிய சக்கரவானத்தையுடையவரும், சிறிதான பலஸ்தீனாவிலிருந்தாலும் எல்லாத் தேசங்கள்மீதிலும் தமது ஆசீர்வாதங்களை ஊதினவரும், இஸ்ரவேலில் பிறந்து வளர்ந்து சிலுவையிலறையுண்டாலும் தமது ஜீவன் மரணமாகிய வித்து மூலமாய் பூமியெங்கும் இரட்சிப்பின் அறும்பைப் பிறப்பித்தவருமான மனிதனைப்பற்றி நினை.

Digitized by Google

# VI-ம் பாடம்.
# STUDY VI.

## இந்த இராச்சியத்தின் தன்மை (முடிவு).
## THE NATURE OF THIS KINGDOM (*Concluded*).

### 3. சர்வஜன இராச்சியம் (முடிவு).

இதின் சம்பந்தமாய் இரண்டு காரியங்கள் அவருடைய உபதேசத்தில் விளங்கும்.

1. **இந்த இராச்சியத்தின் சத்தியங்களும் ஆசீர்வாதங்களும் ஒரேயொரு ஜனத்திற்குரியதாயிராமல் சர்வஜனத்திற்குமுரியது.** அவர் ஸ்தாபிக்கும் இராச்சியம் பூலோகமெங்கும் பரவிய இராச்சியம் (மத். 13 37, 38). நிலம் உலகமென்று தமது சீஷருக்குச்சொன்னார். "இராச்சியத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்கும் சகல ஜாதிகளுக்குள்ளும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்." (மத். 22: 14). சீஷர்களுக்குக் கடைசியாகக் கொடுத்த கட்டளையில் 'நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள், என்றார். (மத் 28: 19, 20.)

மரியாள் அவருக்குச் செய்த அன்பின் அபிஷேகத்தைக்குறித்து சந்தேகப்பட்டு அவர் சொன்ன வார்த்தைகளைப் பாருங்கள். "இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்" என்றார். மாற். 14: 9.

இவ்வசனங்களை நாம் கவனிக்கும்போது இந்த இராச்சியம் சர்வஜனத்திற்குமுரியது. இது எல்லா ஜனத்தாருடைய தேவைக்கும் ஏற்றது என்று அறிகிறோம் சர்வஜனத்துக்குமுரிய இந்த இராச்சியத்தின் தன்மைதான் இதின் திவ்விய உற்பத்தியையும் இலட்சணங்களையும் மனுக்குலத்தாருக்குத் தெளிவோடும் வல்லமையோடும் அறிவிக்கிறது.

2. தவிரவும், இந்த இராச்சியம் விஸ்தீரணமாகும்படிசெய்யும் வல்லமையைக்குறித்து ஆண்டவர் இரண்டு உவமைகளைச் சொன்னார். கடுகுவிதை, புளித்தமா. கடுகுவிதை மெத்தச்சிறிதாயிருந்தாலும் ஜீவன் அதற்குள்ளிருப்பதினால் அது ஆச்சரியமாக வளரத்தக்க வல்லமை பொருந்தியது.

Digitized by Google

புளித்தமா தனக்கன்னியமாயிருக்கிற எந்தப் பொருளையும் தனதாக்கிக்கொள்ளும் தன்மையுடையது. (மத். 13: 31—33). தன்னோடுசேரும் மற்றவஸ்துக்களைத் தன்னுடைய தன்மைக்கு வரும்படி மாற்றும் சக்தியுள்ளது. தன்னைப்புதுப்பித்து வளரக்கூடிய சக்தியும், தனக்கினமில்லாத மற்றவைகளைத் தன்னுடைய தன்மைக்குக் கொண்டுவரும் சக்தியுமான இந்த இருதன்மைகளும் தேவனுடைய இராச்சியம் நித்தியமானதென்றும் சர்வஜனத்துக்குமுரியதென்றும், 'நான் எல்லாரையும் என்னிடமாய் இழுத்துக்கொள்ளுவேன்' என்று சிலுவையிலறையுண்ட கர்த்தர் சொன்ன வாக்குத்தத்தம் நிச்சயமாய் நிறைவேறுமென்றும் காட்டுகின்றன.

## தியானம்.

## Meditation.

*நீங்கள் புறப்பட்டுப்போய் ஜாதிகளைச் சீஷராக்குங்களென்றும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருங்கள் என்றும் ஆண்டவர் கடைசியில் சொன்ன இந்த இரண்டு கட்டளைகளையும் கவனித்துப்பார். இப்போது இந்தியாவில் இந்த இரண்டு விதமான வேலைகளும் அவசியம்.*

———:o:———

## VII-ம் பாடம்.

## Study VII.

## இந்த இராச்சியத்தின் அங்கத்தாராவதற்கு அவசியமான நிபந்தனைகள்.

## The Conditions of Membership in this Kingdom.

இந்த இராச்சியத்தின் அங்கங்கள் ஆகும்படி நமது கர்த்தர் எல்லாரையும் வருந்தி அழைக்கிறார். அக்காலத்திலும் எக்காலத்திலும் இதுவே அவரது அழைப்பு.

ஆகிலும் சில பக்குவம் அடைந்தவர்கள் மாத்திரம் இதில்பிரவேசிக்கக்கூடும்.

1. ஆண்டவர் சொன்ன முதல் நிபந்தனை **மனந்திரும்புதல்.** மனந்திரும்புங்கள், பரலோகஇராச்சியம் சமீபமாயிருக்கிறது என்பதுதான் அவருடைய பிரசங்கப் பொருள். (மத். 4: 7.)

Digitized by Google

அவரது ஊழியத்தின் பின்பாகத்திலே மாறுபாடான வேதபாரகர், பரிசேயரைப் பார்த்து: யோனாவின் பிரசங்கத்தைக்கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கேயிருக்கிறார்! ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்துநின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவார்கள், என்றார். (மத். 12: 41; லூக். 15: 7.) ஒருவன் தேவனுடைய இராச்சியத்தில் பிரவேசித்து அதின் சலாக்கியங்களை அனுபவிக்கவேண்டுமானால் அவன் முதலாவது மனந்திரும்பவேண்டுமென்பதே இந்த இராச்சியத்தின் விளம்பரம். உலக சிநேகத்தையும் பாவத்தையும் விட்டு தேவனையும் அவரது இராச்சியத்தையும் நோக்கிவரவேண்டும். இதுவே மனந்திரும்புதல். மனந்திரும்புதல் இல்லாதவனுக்கு தேவனுடைய இராச்சியத்தின் கதவு பூட்டப்பட்டிருக்கும்.

2. யோவான் சுவிசேஷத்தில் மனந்திரும்புதலுக்கு அனுசரணையான இன்னொரு நிபந்தனை சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராச்சியத்தைக் காணமாட்டான் என்பதுதான். (யோ. 3: 3.) இந்த புதுப்பிறப்பு தேவனுடைய செயல். மனந்திரும்புதலோ மனிதனுடைய செயல். இந்த இரண்டும் ஒரே காரியத்தை, அதாவது, தேவனுடைய இராச்சியத்தில் பிரவேசிப்பதற்கு அவசியமான ஒரே பக்குவத்தைக் குறிப்பிடும்.

ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறதென்று ஆண்டவர் இதைக்குறித்து நேர்த்தியாய்ச் சொன்னார்.

## தியானம்.

## MEDITATION.

"தேவனுடைய இராச்சியம்" என்ற பதம் யோவான் சுவிசேஷத்தில் இரண்டுதரம் மாத்திரம் வந்திருக்கிறது. ஆனால் அதற்குப் பதிலாக "நித்திய ஜீவன்" என்பது இச்சுவிசேஷத்தில் அடிக்கடி வருகிறது கவனிக்கப்படத்தக்கது. ஆகவே தேவனுடைய இராச்சியத்திற்குள் பிரவேசிப்பது நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பதாகும். அந்த ஜீவனுக்குள் பிரவேசிப்பது "புதுப் பிறப்பு" என்று இயேசு சொன்னது எவ்வளவு ஏற்றது!

Digitized by Google

## VIII-ம் பாடம்.
## Study VIII.

### நிபந்தனைகள் (தொடர்ச்சி).
### Conditions (*Continued*).

3. இன்னொரு நிபந்தனை விசுவாசம். இது யோவானுக்கு மெத்தப்பிரியமான வார்த்தை. 90 தடவைக்குமேல் இதை உபயோகிக்கிறான். இது இந்த இராச்சியத்தின் உபதேசத்திலல்ல கிறிஸ்துவினிடத்தில் அல்லது தேவனிடத்தில் வைக்கும் விசுவாசத்தையே குறிக்கும். இரட்சகரிடத்தில் வைக்கும் விசுவாசமே இந்த விசுவாசம். ஒருவனுக்கு இந்த விசுவாச கிரியை இல்லாவிட்டால் தேவனுடைய இராச்சியத்தின் கதவு எப்போதும் அடைக்கப்பட்டிருக்கும். குமாரனைக் கண்டு அவரில் விசுவாசிக்கிறவன் எவனோ அவன் நித்திய ஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும் என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது" (யோ. 6: 40; 5: 24).

4. தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதே அடுத்த நிபந்தனை. "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராச்சியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி: கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை." (மத். 7: 21.) வெறும் விசுவாசம், கர்த்தருக்கு அருவருப்பு. நமது ஜீவியத்தையும் விசுவாசத்தையும் சோதித்துக் காட்டும் கருவி கீழ்ப்படிதல்தான். ஆகட்டும் என்று வாயினால் சொல்லி, உள்ளத்தில் வேறு நோக்கமும் சிந்தையுமுள்ளவர்களாயிருப்பது தேவனுக்குப் பிரீதியல்ல. தேவனுடைய சித்தத்தைக் கேட்பதும் அதைச் செய்வேனென்று வாக்களிப்பதும் ஒன்றுமில்லை. அதின்படி செய்வதே காரியம். தேவனுடைய இராச்சியத்தில் நித்தியத்திற்கேதுவான ஜீவியத்தைக் காட்டுவதற்கு வேண்டிய அஸ்திபாரக் கன்மலையிதுவே. (மத். 7: 24—27.) கிரியையற்ற விசுவாசமுடையவர்களைப்பார்த்து "நான் உங்களை அறியேன்" என்று ஆண்டவர் சொல்லுவார் (வாக். 23).

### தியானம்.
### Meditation.

பரலோகத்திலிருந்து நீட்டப்பட்ட அன்பின் கையை விசுவாசத்தினாலே

Digitized by Google

ஆத்துமா பிடிக்கிறது; அது தேவனுடைய இராச்சியத்துக்குள் கொண்டுவரப்படுகிறது.

வெறும் வசனிப்புள்ள சோம்பேறிக்கு பரலோக இராச்சியத்தில் இடமில்லை.

———:o:———

## IX-ம் பாடம்.
## Study IX.

### நிபந்தனைகள் (முடிவு)
### Conditions (Concluded).

5. **பிள்ளைத்தன்மை.** தேவனுடைய இராச்சியத்தின் கதவைத்தட்டுகிறவனுக்கு பிள்ளைக்குரிய தன்மையவசியம். "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போலாகாவிட்டால் பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். (மத். 18: 3). "எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல தேவனுடைய இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். (மாற். 10: 14, 15.)

பிள்ளைக்குரிய கபடமின்மையும் நம்பிக்கையும் மனத்தாழ்மையும் ஒருவனுக்கில்லாவிட்டால் அவன் பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்கமுடியாது.

6. ஒருவன் தன்னை முற்றிலும் கிறிஸ்துவுக்குத் தத்தம்பண்ணி முழுமனதோடும் அவரை நேசிக்கவேண்டும் "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்ல; தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப்பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரனல்ல. (மத். 10: 37—39.)

நாம் கிறிஸ்துவின்பேரில் வைக்கும் அன்பு மற்றவர்கள்பேரில் வைக்கும் அன்புக்கு நிகரற்றதாயிருக்கவேண்டும். மற்றவர்களை நேசிக்கும்நேசம் கிறிஸ்துவின்பேரில் வைக்கும் அன்பைத் தடுக்கவாவது கெடுக்கவாவது கூடாது. சீஷனானவன் தன் இருதயத்திலும் தன் ஜீவியத்திலும் அவருக்கு முதலாசனங் கொடுக்கவேண்டும். "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலுங்கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. (மத். 6: 24.) கிறிஸ்துவுக்கு நமது முழு இருதயமும் வேண்டும்: அதைத்

Digitized by Google

தவிர வேறு இடம் அவருக்கு வேண்டியதிராது. இருபக்கநேசத்தை அவர் ஏற்றுக்கொள்வதில்லை.

## தியானம்.

## MEDITATION.

பிள்ளைக்குரிய கபடற்ற தன்மையையும் மனிதனுக்குரிய பெருந்தன்மையையும் உடைய கிறிஸ்தவன் பாக்கியவான்.

எல்லாவற்றிலும் மேலான மார்க்கம் எல்லாவற்றிலும் கடினமான பரீட்சையை விதிக்கிறது. மார்க்கத்தை ஸ்தாபித்தவர்க்கு மற்றயாருக்கும் காட்டாத உன்னத அன்பும் உண்மையும் காட்டவேண்டுமென்பதே அந்தப்பரீட்சை.

———:o———

## X-ம் பாடம்.

## STUDY X.

## 5. தேவனுடைய இராச்சியத்தின் அங்கத்துவத்திற்குரிய குறிப்புகள்.

## MEMBERSHIP IN THE KINGDOM.

இந்த இராச்சியத்தில் பிரவேசித்து உண்மையுள்ள கிறிஸ்தவனாயிருக்கிறவன் எவனோ அவன் இந்த இராச்சியத்தின் இலட்சணங்களைத் தன் நடக்கைகளினால் காட்டவேண்டியவன்.

"நீதி" என்ற வார்த்தையில் இவைகள் ஒன்றாய்த் திரட்டிச் சொல்லப்படும். இருதயத்தில் பிரதானமாய் ஆராய்ச்சிசெய்யும் நீதியே இந்த இராச்சியத்தின் பொருள். இதின் அஸ்திபாரமும் மேற்கட்டடமும் சன்மார்க்கத்துக்கு (Ethical) அடுத்ததே. கர்த்தர் தமது சிஷர்களைப்பார்த்து நீங்கள் நீதியுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று சொன்னது மாத்திரமல்ல, "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றும் சொன்னார். (மத். 5: 20.) பரிசேயருடைய நீதி உடம்பின்மேல் தோலுக்கு ஒப்பாகவும், புறம்பான சடங்காசாரங்களுக்கு உரியதாயும் இருந்தது. தேவன் பரிசுத்தராயிருக்கிறதுபோல அவருடைய இராச்சியத்தின் அங்கத்தாரும் பரிசுத்தராயிருக்கவேண்டும். பரிசுத்தமே அவருடைய இராச்சியத்துச் சிம்மாசனத்

தின் அஸ்திபாரம் இந்த நீதியினாலேதான் இந்த இராச்சியத்தார் பிரகாசிக்கவேண்டும். இந்தப் பிரகாரமே அவருடைய இராச்சியத்தின் மேன்மையிருக்கும்.

**இந்த நீதி உள்ளான ஜீவியத்துக்குரியது.** "மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும். பொல்லாதவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" என்று சொன்னார். (மாற். 7: 21, 23.) இது சடங்காசார சுத்தத்திறகு முற்றும் வித்தியாசமானது. இது மனுஷருடைய இருதயத்தின் ஆழத்திலே வேரூன்றி அவர்களின் கிரியா நோக்கம் அனைத்திற்கும் உற்பத்தியாயிருக்கின்றது. தேவன் மனுஷனுடைய உள்ளான ஜீவியத்தையும் நோக்கங்களையும் மாத்திரம் கண்ணோக்குகிறார். நீயோ தர்மம் செய்யும்போது உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக்கடவது. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார். (மத். 6: 1—4.)

## தியானம்.

## MEDITATION.

நீதியானது அன்பைப்போல நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்றமாயிருக்கிறது. கிறிஸ்துமார்க்கத்தை ரூபிப்பதற்கு நீதியே இப்போது மேலான பரீட்சை. சடங்குகளும் பிரமாணங்களும் நீதிக்குப் பிந்தி வந்துவிட்டன.

———:o:———

## XI-ம் பாடம்.

## STUDY XI.

## தேவனுடைய இராச்சியத்தில் அங்கத்துவம் (முடிவு).

## MEMBERSHIP (*Concluded*).

இந்த நீதியின் அஸ்திபாரம் **அன்புதான்.** இதுதான் கையை நீட்டி மற்றவர்களுக்குதவிசெய்யப் பிரயாசப்படுகிறது கர்த்தர் போதித்தபடி அன்பே நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதல்.

Digitized by Google

(லூக். 10: 27, 28.) இந்த வார்த்தை மாயமற்றது. மற்றவர்களுக்கு உதவிசெய்யும் உருக்க சிந்தையுள்ளது. ஆண்டவர் தமது இராச்சியத்தின் உள்ளான நீதித்தன்மையைக் காட்டும்படிக்கு நல்லசமாரியனைப் பற்றிய மகா அருமையான உவமையைச் சொன்னார். (லூக். 10: 30—37.) இந்த நீதி தன்னைவெறுத்து தன்னை மறந்து, குலத்தையும், ஜாதியையும், மதத்தையும் பாராமல் அன்பான கரத்தை நீட்டி யாவருக்கும் உதவிசெய்யுங் கரிசனையுடையது. தன்னைப் பகைக்கிறவர்களுக்குங்கூட நன்மை செய்யும், சபிக்கிறவர்களுக்காக ஜெபிக்கும். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: “உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள் அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். (மத். 5: 43—48.)

இன்னும், இந்த நீதி பாவத்தையும் மாய்மாலத்தையும் வெறுக்கிற நீதி. அது கபடற்றது. (யோ. 1: 47.) சுத்த இருதயத்துக்குரிய தெளிவும் உண்மையுமுள்ளது.

இந்த நீதியுடையவர்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறார்களென்று ஆண்டவர் போதித்தார். “நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்” (மத். 5: 13). உப்பின் மூன்று வகையான உபயோகத்தைக் கவனியுங்கள். பொருட்களைச் சுத்தம்பண்ணவும், பாதுகாக்கவும் அவைகளுக்கு ருசியுண்டாக்கவும் அது உபயோகிக்கப்படுகிறது இந்த திவ்விய இராச்சியத்தின் ஒவ்வொரு அங்கமும் தன் நீதியினால் சகல ஜனங்களுக்குள்ளும் சுத்திகரிப்பை யுண்டாக்கும் சக்தியையுடையவனாயிருக்கவேண்டும். அவனுடைய செல்வாக்கு துர்நாற்றமான பாவங்களையும் பொல்லாப்புகளையும் ஜனங்களின் நடுவிலிருந்து வேரோடே பிடுங்கி எறிய ஏதுவாயிருக்கும். அவன் மனிதனைப் பாவத்தினின்று தடுத்து அவர்களைப்பாதுகாக்கக்கூடிய சக்தியுடையவனாயிருக்கவேண்டும். அவனுடைய செல்வாக்கு தயாளம் நிறைந்ததாயிருக்கும். அவனுடைய முன்மாதிரி எங்குமுள்ள மனிதரின் ஜீவியத்தை இனிதாக்கி தனக்கும் அவர்களுக்குமுள்ள சம்பந்தத்தைப் பிரகாசிப்பித்து, அவர்களுக்குச் சந்தோஷத்தைப் பிறப்பிக்கவேண்டும்.

ஆண்டவர் இந்த இராச்சியத்தின் அங்கங்களைப்பார்த்து உலகத்தின் ஒளியென்று சொன்னார்...........இவ்விதமாய் மனுஷர் உங்

Digitized by Google

கள் நற்கிரியைகளைக்கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள்முன் பிரகாசிக்கக் கடவது. (மத். 5: 14—16.) இவ்விதமாய் அவர்களுடைய ஜீவியத்தில் கிருபையும் சத்தியமும் நிறைந்திருப்பதினால் மனிதர்கள் பரலோகத்திலிருக்கிற பிதாவினது வெளிச்சத்தின் பிரதிவிம்பத்தை இவர்களிடத்தில் கண்டு அவரது சௌந்திரியத்தின் தரிசனையை அடைந்து அவரை நேசித்து அவரை கனம்பண்ணுவார்கள்.

## தியானம்.

## MEDITATION.

*நாம் நல்ல சமாரியனைப்போல ஜீவிக்கிறோமா? நமது நீதி பரிசுத்தத்தின் அன்பையும் வெளிச்சத்தையும் ஒன்றாய்ச் சேர்க்கிறதாயிருக்கவேண்டும். பேதமற்ற அன்பே பரம அன்பு. இந்த அன்பை வழங்குகிறவன் தேவனுடைய பிள்ளையும் தேவனுடைய இராச்சியத்தின் மெய்யான அங்கமுமானவன்.*

———:o:———

## XII-ம் பாடம்.

## STUDY XII.

## இந்த இராச்சியத்தின் ஆசீர்வாதங்கள்.

## THE BLESSINGS OF THE KINGDOM.

இது பாக்கியமுள்ள இராச்சியம் என்று முன்னே பார்த்தோம் இந்த இராச்சியத்தின் வாசலுக்குமேல் எழுதப்பட்டிருக்கும் 'பாக்கியவான்கள்' என்கிற வார்த்தை மகா கருத்துள்ளது. இந்த இராச்சியம் மனிதன் உணர்ந்தறியக்கூடிய ஆசீர்வாதங்களிலெல்லாம் மகா பெரிய ஆசீர்வாதமாயிருக்கிறது. விலையேறப்பெற்ற முத்துக்கு இது ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஒருவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு போய்த் தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று அதைக் கொள்ளுகிறான். (மத். 13: 45, 46.) மெய்யாகவே அது பாக்கியமுள்ள இராச்சியம். மனுஷன் அதிலே பூரண அங்கத்துவமாகிறதற்கும் அதின் சிலாக்கியங்களுக்கும் பூரண பாத்தியஸ்தனாகிறதற்கும் தடையானதெதுவோ அதை நீக்கிப்போடவேண்டும்.

நமது கர்த்தர் இந்த இராச்சியத்தை ஒரு இராஜகுமாரனுடைய கலியாணவிருந்துக்கு ஒப்பிடுகிறார். இந்த விருந்தில் சகலமும் சம்பிரமமாய்ச் சவதரிக்கப்பட்டிருக்கிறது. எல்லாரும் இந்த விருந்துக்கு

Digitized by Google

அழைக்கப்பட்டார்கள். (மத். 22: 1—14.) இந்த இராச்சியத்தின் ஆசீர்வாதங்கள் இலவசமும் பூரணமுமானவை. இந்த அழைப்பு எல்லாவகையான ஜனங்களுக்கும் சொல்லுகிறது. பரம இராஜாவின் சேவகர்கள் போய் வளமைபொருந்திய இதின் நன்மைகளைச் சகலருக்கும் விளம்பரம்பண்ணுகிறார்கள். எல்லா தேசத்திலும் எல்லா யுகத்திலுமுள்ள மானிடரின் ஆவிக்குரிய பசி தாகத்தைத் திருப்திபண்ணுவதற்கு அவர் ஆயத்தம் பண்ணியிருக்கிற இந்த விருந்தின் ஆசீர்வாதங்களுக்கு அளவுசங்கையில்லை.

புறம்பான நன்மைகளும் இந்த இராச்சியத்துக்குரியவைகள்தான். "என்னத்தை உண்போமென்று உங்கள் ஜீவனுக்காகவும் என்னத்தை உடுப்போமென்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் .. ......தேவனுடைய இராச்சியத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்" என்றார். (லூக். 12: 22—31.) இம்மைக்குரிய இந்த ஆசீர்வாதங்கள் குறைவுறா ஆவிக்குரிய வரங்களின் சம்பூரணத்திலிருந்து மனுக்குலத்தாருக்குப் புரண்டோடிவருகிறது. ஆயினும் மனிதர் இம்மைக்குரிய இந்த நன்மைகளைத்தான் பிரதானமாய் நாடித்தேடுகிறார்கள். இந்த இராச்சியத்தின் ஆத்தும நன்மைகளை அவர்கள் பிரதானமாய்த் தேடுவார்களானால் இந்தப் புறம்பான நன்மைகள் எல்லாம் அவர்களுக்குக் கூடக்கொடுக்கப்படும். (மத். 6: 33.) அவைகள் நமது இரட்சகர் மனிதருக்குக் கொடுக்கும் ஈவுகளில் வழிந்தோடும் ஈவுகளே.

## தியானம்.

### MEDITATION.

மிகவும் உயர்ந்தவைகளைத் தெரிந்துகொள்ளவேண்டுமானால் மிகவும் தாழ்ந்தவைகளை ஒப்புக்கொடுக்கவேண்டும். கப்பர்நாகூம் ஊரிலுள்ள வாலிபன் தன் ஆஸ்தியைத் தெரிந்துகொண்டதினால் நித்திய இராச்சியத்தை இழந்துபோனான். கிறிஸ்துவிலுள்ள இச்சுதந்தரத்தைப் பெறுவதற்குச் செல்லும் செலவை நினைத்துப்பார்.

———:O:———

## VI-ம் பாடம்.
## STUDY VI.

### இந்த இராச்சியத்தின் தன்மை (முடிவு).
### THE NATURE OF THIS KINGDOM (Concluded).

#### 3. சர்வஜன இராச்சியம் (முடிவு).

இதின் சம்பந்தமாய் இரண்டு காரியங்கள் அவருடைய உபதேசத்தில் விளங்கும்.

1. இந்த இராச்சியத்தின் சத்தியங்களும் ஆசீர்வாதங்களும் ஒரேயொரு ஜனத்திற்குரியதாயிராமல் சர்வஜனத்திற்குமுரியது. அவர் ஸ்தாபிக்கும் இராச்சியம் பூலோகமெங்கும் பரவிய இராச்சியம் (மத். 13 37, 38). நிலம் உலகமென்று தமது சீஷருக்குச்சொன்னார். "இராச்சியத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்கும் சகல ஜாதிகளுக்குள்ளும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்." (மத். 22: 14). சீஷர்களுக்குக் கடைசியாகக் கொடுத்த கட்டளையில் 'நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள், என்றார். (மத் 28: 19, 20.)

மரியாள் அவருக்குச் செய்த அன்பின் அபிஷேகத்தைக்குறித்து சந்தேகப்பட்டு அவர் சொன்ன வார்த்தைகளைப் பாருங்கள். "இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்" என்றார். மாற். 14: 9.

இவ்வசனங்களை நாம் கவனிக்கும்போது இந்த இராச்சியம் சர்வஜனத்திற்குமுரியது. இது எல்லா ஜனத்தாருடைய தேவைக்கும் ஏற்றது என்று அறிகிறோம் சர்வஜனத்துக்குமுரிய இந்த இராச்சியத்தின் தன்மைதான் இதின் திவ்விய உற்பத்தியையும் இலட்சணங்களையும் மனுக்குலத்தாருக்குத் தெளிவோடும் வல்லமையோடும் அறிவிக்கிறது.

2. தவிரவும், இந்த இராச்சியம் விஸ்தீரணமாகும்படிசெய்யும் வல்லமையைக்குறித்து ஆண்டவர் இரண்டு உவமைகளைச் சொன்னார். கடுகுவிதை, புளித்தமா. கடுகுவிதை மெத்தச்சிறிதாயிருந்தாலும் ஜீவன் அதற்குள்ளிருப்பதினால் அது ஆச்சரியமாக வளரத்தக்க வல்லமை பொருந்தியது.

Digitized by Google

புளித்தமா தனக்கன்னியமாயிருக்கிற எந்தப் பொருளையும் தனதாக்கிக்கொள்ளும் தன்மையுடையது. (மத். 13: 31—33). தன்னோடுசேரும் மற்றவஸ்துக்களைத் தன்னுடைய தன்மைக்கு வரும்படி மாற்றும் சக்தியுள்ளது. தன்னைப்புதுப்பித்து வளரக்கூடிய சக்தியும், தனக்கினமில்லாத மற்றவைகளைத் தன்னுடைய தன்மைக்குக் கொண்டுவரும் சக்தியுமான இந்த இருதன்மைகளும் தேவனுடைய இராச்சியம் நித்தியமானதென்றும் சர்வஜனத்துக்குமுரியதென்றும், ‘நான் எல்லாரையும் என்னிடமாய் இழுத்துக்கொள்ளுவேன்’ என்று சிலுவையிலறையுண்ட கர்த்தர் சொன்ன வாக்குத்தத்தம் நிச்சயமாய் நிறைவேறுமென்றும் காட்டுகின்றன.

## தியானம்.

### MEDITATION.

நீங்கள் புறப்பட்டுப்போய் ஜாதிகளைச் சீஷராக்குங்களென்றும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருங்கள் என்றும் ஆண்டவர் கடைசியில் சொன்ன இந்த இரண்டு கட்டளைகளையும் கவனித்துப்பார். இப்போது இந்தியாவில் இந்த இரண்டு விதமான வேலைகளும் அவசியம்.

———:o:———

## VII-ம் பாடம்.

## STUDY VII.

# இந்த இராச்சியத்தின் அங்கத்தாராவதற்கு அவசியமான நிபந்தனைகள்.

## THE CONDITIONS OF MEMBERSHIP IN THIS KINGDOM.

இந்த இராச்சியத்தின் அங்கங்கள் ஆகும்படி நமது கர்த்தர் எல்லாரையும் வருந்தி அழைக்கிறார். அக்காலத்திலும் எக்காலத்திலும் இதுவே அவரது அழைப்பு.

ஆகிலும் சில பக்குவம் அடைந்தவர்கள் மாத்திரம் இதில்பிரவேசிக்கக்கூடும்.

1. **ஆண்டவர் சொன்ன முதல் நிபந்தனை மனந்திரும்புதல்.** மனந்திரும்புங்கள், பரலோகஇராச்சியம் சமீபமாயிருக்கிறது என்பது தான் அவருடைய பிரசங்கப் பொருள். (மத். 4: 7.)

Digitized by Google

அவரது ஊழியத்தின் பின்பாகத்திலே மாறுபாடான வேதபாரகர், பரிசேயரைப் பார்த்து: யோனுவின் பிரசங்கத்தைக்கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினுர்கள். இதோ, யோனுவிலும் பெரியவர் இங்கேயிருக்கிருர்! ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்துநின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவார்கள், என்ருர். (மத். 12: 41; லூக். 15: 7.) ஒருவன் தேவனுடைய இராச்சியத்தில் பிரவேசித்து அதின் சலாக்கியங்களை அனுபவிக்கவேண்டுமாஞல் அவன் முதலாவது மனந்திரும்பவேண்டுமென்பதே இந்த இராச்சியத்தின் விளம்பரம். உலக சிநேகத்தையும் பாவத்தையும் விட்டு தேவனையும் அவரது இராச்சியத்தையும் நோக்கிவரவேண்டும். இதுவே மனந்திரும்புதல். மனந்திரும்புதல் இல்லாதவனுக்கு தேவனுடைய இராச்சியத்தின் கதவு பூட்டப்பட்டிருக்கும்.

2. யோவான் சுவிசேஷத்தில் மனந்திரும்புதலுக்கு அனுசரணையான இன்னெரு நிபந்தனை சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராச்சியத்தைக் காணமாட்டான் என்பதுதான். (யோ. 3: 3.) இந்த புதுப்பிறப்பு தேவனுடைய செயல். மனந்திரும்புதலோ மனிதனுடைய செயல். இந்த இரண்டும் ஒரே காரியத்தை, அதாவது, தேவனுடைய இராச்சியத்தில் பிரவேசிப்பதற்கு அவசியமான ஒரே பக்குவத்தைக் குறிப்பிடும்.

ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறதென்று ஆண்டவர் இதைக்குறித்து நேர்த்தியாய்ச் சொன்னுர்.

## தியானம்.

### Meditation.

"தேவனுடைய இராச்சியம்" என்ற பதம் யோவான் சுவிசேஷத்தில் இரண்டுதரம் மாத்திரம் வந்திருக்கிறது. ஆனல் அதற்குப் பதிலாக "நித்திய ஜீவன்" என்பது இச்சுவிசேஷத்தில் அடிக்கடி வருகிறது கவனிக்கப்படத்தக்கது. ஆகவே தேவனுடைய இராச்சியத்திற்குள் பிரவேசிப்பது நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பதாகும். அந்த ஜீவனுக்குள் பிரவேசிப்பது "புதுப் பிறப்பு" என்று இயேசு சொன்னது எவ்வளவு ஏற்றது!

Digitized by Google

## VIII-ம் பாடம்.
## Study VIII.

### நிபந்தனைகள் (தொடர்ச்சி).
### Conditions (*Continued*).

3. இன்னொரு நிபந்தனை விசுவாசம். இது யோவானுக்கு மெத்தப்பிரியமான வார்த்தை. 90 தடவைக்குமேல் இதை உபயோகிக்கிறான். இது இந்த இராச்சியத்தின் உபதேசத்திலல்ல கிறிஸ்துவினிடத்தில் அல்லது தேவனிடத்தில் வைக்கும் விசுவாசத்தையே குறிக்கும். இரட்சகரிடத்தில் வைக்கும் விசுவாசமே இந்த விசுவாசம். ஒருவனுக்கு இந்த விசுவாச கிரியை இல்லாவிட்டால் தேவனுடைய இராச்சியத்தின் கதவு எப்போதும் அடைக்கப்பட்டிருக்கும். குமாரனைக் கண்டு அவரில் விசுவாசிக்கிறவன் எவனோ அவன் நித்திய ஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும் என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது" (யோ. 6: 40; 5: 24).

4. தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதே அடுத்த நிபந்தனை. "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராச்சியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி: கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை." (மத். 7: 21.) வெறும் விசுவாசம், கர்த்தருக்கு அருவருப்பு. நமது ஜீவியத்தையும் விசுவாசத்தையும் சோதித்துக் காட்டும் கருவி கீழ்ப்படிதல்தான். ஆகட்டும் என்று வாயினால் சொல்லி, உள்ளத்தில் வேறு நோக்கமும் சிந்தையுமுள்ளவர்களாயிருப்பது தேவனுக்குப் பிரீதியல்ல. தேவனுடைய சித்தத்தைக் கேட்பதும் அதைச் செய்வேனென்று வாக்களிப்பதும் ஒன்றுமில்லை. அதின்படி செய்வதே காரியம். தேவனுடைய இராச்சியத்தில் நித்தியத்திற்கேதுவான ஜீவியத்தைக் காட்டுவதற்கு வேண்டிய அஸ்திபாரக் கன்மலையிதுவே. (மத். 7: 24—27.) கிரியையற்ற விசுவாசமுடையவர்களைப்பார்த்து "நான் உங்களை அறியேன்" என்று ஆண்டவர் சொல்லுவார் (வாக். 23).

### தியானம்.
### Meditation.

பரலோகத்திலிருந்து நீட்டப்பட்ட அன்பின் கையை விசுவாசத்தினாலே

Digitized by Google

ஆத்துமா பிடிக்கிறது; அது தேவனுடைய இராச்சியத்துக்குள் கொண்டுவரப்படுகிறது.

வெறும் வசனிப்புள்ள சோம்பேறிக்கு பரலோக இராச்சியத்தில் இடமில்லை.

——:o:——

## IX-ம் பாடம்.
## Study IX.

### நிபந்தனைகள் (முடிவு)
### Conditions (*Concluded*).

5. **பிள்ளைத்தன்மை.** தேவனுடைய இராச்சியத்தின் கதவைத்தட்டுகிறவனுக்கு பிள்ளைக்குரிய தன்மையவசியம். "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போலாகாவிட்டால் பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். (மத். 18: 3). "எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல தேவனுடைய இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். (மாற். 10: 14, 15.)

பிள்ளைக்குரிய கபடமின்மையும் நம்பிக்கையும் மனத்தாழ்மையும் ஒருவனுக்கில்லாவிட்டால் அவன் பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்கமுடியாது.

6. ஒருவன் தன்னை முற்றிலும் கிறிஸ்துவுக்குத் தத்தம்பண்ணி முழுமனதோடும் அவரை நேசிக்கவேண்டும் "தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்ல; தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப்பின்பற்றுதவன் எனக்குப் பாத்திரனல்ல. (மத். 10: 37—39.)

நாம் கிறிஸ்துவின்பேரில் வைக்கும் அன்பு மற்றவர்கள்பேரில் வைக்கும் அன்புக்கு நிகரற்றதாயிருக்கவேண்டும். மற்றவர்களை நேசிக்கும்நேசம் கிறிஸ்துவின்பேரில் வைக்கும் அன்பைத் தடுக்கவாவது கெடுக்கவாவது கூடாது. சீஷனானவன் தன் இருதயத்திலும் தன் ஜீவியத்திலும் அவருக்கு முதலாசனங் கொடுக்கவேண்டும். "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலுங்கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. (மத். 6: 24) கிறிஸ்துவுக்கு நமது முழு இருதயமும் வேண்டும்: அதைத்

Digitized by Google

தவிர வேறு இடம் அவருக்கு வேண்டியதிராது. இருபக்கநேசத்தை அவர் ஏற்றுக்கொள்வதில்லை.

## தியானம்.

## MEDITATION.

பிள்ளைக்குரிய கபடற்ற தன்மையையும் மனிதனுக்குரிய பெருந்தன்மையையும் உடைய கிறிஸ்தவன் பாக்கியவான்.

எல்லாவற்றிலும் மேலான மார்க்கம் எல்லாவற்றிலும் கடினமான பரீட்சையை விதிக்கிறது. மார்க்கத்தை ஸ்தாபித்தவர்க்கு மற்றயாருக்கும் காட்டாத உன்னத அன்பும் உண்மையும் காட்டவேண்டுமென்பதே அந்தப்பரீட்சை.

———:o———

## X-ம் பாடம்.

## STUDY X.

## 5. தேவனுடைய இராச்சியத்தின் அங்கத்துவத்திற்குரிய குறிப்புகள்.

## MEMBERSHIP IN THE KINGDOM.

இந்த இராச்சியத்தில் பிரவேசித்து உண்மையுள்ள கிறிஸ்தவனாயிருக்கிறவன் எவனோ அவன் இந்த இராச்சியத்தின் இலட்சணங்களைத் தன் நடக்கைகளினால் காட்டவேண்டியவன்.

"நீதி" என்ற வார்த்தையில் இவைகள் ஒன்றாய்த் திரட்டிச் சொல்லப்படும். இருதயத்தில் பிரதானமாய் ஆராய்ச்சிசெய்யும் நீதியே இந்த இராச்சியத்தின் பொருள். இதின் அஸ்திபாரமும் மேற்கட்டடமும் சன்மார்க்கத்துக்கு (Ethical) அடுத்ததே. கர்த்தர் தமது சீஷர்களைப்பார்த்து நீங்கள் நீதியுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று சொன்னது மாத்திரமல்ல, "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றும் சொன்னார். (மத். 5: 20.) பரிசேயருடைய நீதி உடம்பின்மேல் தோலுக்கு ஒப்பாகவும், புறம்பான சடங்காசாரங்களுக்கு உரியதாயும் இருந்தது. தேவன் பரிசுத்தராயிருக்கிறதுபோல அவருடைய இராச்சியத்தின் அங்கத்தாரும் பரிசுத்தராயிருக்கவேண்டும். பரிசுத்தமே அவருடைய இராச்சியத்துச் சிம்மாசனத்

Digitized by Google

தின் அஸ்திபாரம் இந்த நீதியினுலேதான் இந்த இராச்சியத்தார் பிரகாசிக்கவேண்டும். இந்தப் பிரகாரமே அவருடைய இராச்சியத்தின் மேன்மையிருக்கும்.

**இந்த நீதி உள்ளான ஜீவியத்துக்குரியது.** "மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும். பொல்லாதவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" என்று சொன்னூர். (மாற். 7: 21, 23.) இது சடங்காசார சுத்தத்திறகு முற்றும் வித்தியாசமானது. இது மனுஷருடைய இருதயத்தின் ஆழத்திலே வேரூன்றி அவர்களின் கிரியா நோக்கம் அனைத்திற்கும் உற்பத்தியாயிருக்கின்றது. தேவன் மனுஷனுடைய உள்ளான ஜீவியத்தையும் நோக்கங்களையும் மாத்திரம் கண்ணோக்குகிறூர். நீயோ தர்மம் செய்யும்போது உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக்கடவது. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார். (மத். 6: 1—4.)

### தியானம்.

### Meditation.

*நீதியானது அன்பைப்போல நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்றமாயிருக்கிறது. கிறிஸ்துமார்க்கத்தை ரூபிப்பதற்கு நீதியே இப்போது மேலானபரீட்சை. சடங்குகளும் பிரமாணங்களும் நீதிக்குப் பிந்தி வந்துவிட்டன.*

———:o:———

## XI-ம் பாடம்.

## Study XI.

## தேவனுடைய இராச்சியத்தில் அங்கத்துவம் (முடிவு).

## Membership (*Concluded*).

இந்த நீதியின் அஸ்திபாரம் அன்புதான். இதுதான் கையை நீட்டி மற்றவர்களுக்குதவிசெய்யப் பிரயாசப்படுகிறது கர்த்தர் போதித்தபடி அன்பே நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதல்.

Digitized by Google

(லூக். 10: 27, 28.) இந்த வார்த்தை மாயமற்றது. மற்றவர்களுக்கு உதவிசெய்யும் உருக்க சிந்தையுள்ளது. ஆண்டவர் தமது இராச்சியத்தின் உள்ளான நீதித்தன்மையைக் காட்டும்படிக்கு நல்லசமாரியனைப் பற்றிப மகா அருமையான உவமையைச் சொன்னார். (லூக். 10: 30—37.) இந்த நீதி தன்னைவெறுத்து தன்னை மறந்து, குலத்தையும், ஜாதியையும், மதத்தையும் பாராமல் அன்பான கரத்தை நீட்டி யாவருக்கும் உதவிசெய்யுங் கரிசனையுடையது. தன்னைப் பகைக்கிறவர்களுக்குங்கூட நன்மை செய்யும், சபிக்கிறவர்களுக்காக ஜெபிக்கும். நான் உங்களுக்குச் சொலலுகிறேன்: "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள் அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். (மத். 5: 43—48.)

இன்னும், இந்த நீதி பாவத்தையும் மாய்மாலத்தையும் வெறுக்கிற நீதி. அது கபடற்றது. (யோ. 1: 47.) சுத்த இருதயத்துக்குரிய தெளிவும் உண்மையுமுள்ளது.

இந்த நீதியுடையவர்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறார்களென்று ஆண்டவர் போதித்தார். "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" (மத். 5: 13). உப்பின் மூன்று வகையான உபயோகத்தைக் கவனியுங்கள். பொருட்களைச் சுத்தம்பண்ணவும், பாதுகாக்கவும் அவைகளுக்கு ருசியுண்டாக்கவும் அது உபயோகிக்கப்படுகிறது இந்த திவ்விய இராச்சியத்தின் ஒவ்வொரு அங்கமும் தன் நீதியினால் சகல ஜனங்களுக்குள்ளும் சுத்திகரிப்பை யுண்டாக்கும் சக்தியையுடையவனாயிருக்கவேண்டும். அவனுடைய செல்வாக்கு துர்நாற்றமான பாவங்களையும் பொல்லாப்புகளையும் ஜனங்களின் நடுவிலிருந்து வேரோடே பிடுங்கி எறிய ஏதுவாயிருக்கும். அவன் மனிதனைப் பாவத்தினின்று தடுத்து அவர்களைப்பாதுகாக்கக்கூடிய சக்தியுடையவனாயிருக்கவேண்டும். அவனுடைய செல்வாக்கு தயாளம் நிறைந்ததாயிருக்கும். அவனுடைய முன்மாதிரி எங்குமுள்ள மனிதரின் ஜீவியத்தை இனிதாக்கி தனக்கும் அவர்களுக்குமுள்ள சம்பந்தத்தைப் பிரகாசிப்பித்து, அவர்களுக்குச் சந்தோஷத்தைப் பிறப்பிக்கவேண்டும்.

ஆண்டவர் இந்த இராச்சியத்தின் அங்கங்களைப்பார்த்து உலகத்தின் ஒளியென்று சொன்னார்...........இவ்விதமாய் மனுஷர் உங்

Digitized by Google

கள் நற்கிரியைகளைக்கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள்முன் பிரகாசிக்கக் கடவது. (மத். 5: 14—16.) இவ்விதமாய் அவர்களுடைய ஜீவியத்தில் கிருபையும் சத்தியமும் நிறைந்திருப்பதினுல் மனிதர்கள் பரலோகத்திலிருக்கிற பிதாவினது வெளிச்சத்தின் பிரதிவிம்பத்தை இவர்களிடத்தில் கண்டு அவரது சௌந்திரியத்தின் தரிசனையை அடைந்து அவரை நேசித்து அவரை கனம்பண்ணுவார்கள்.

## தியானம்.

## MEDITATION.

நாம் நல்ல சமாரியனைப்போல ஜீவிக்கிறுேமா? நமது நீதி பரிசுத்தத்தின் அன்பையும் வெளிச்சத்தையும் ஒன்ருய்ச் சேர்க்கிறதாயிருக்கவேண்டும். பேதமற்ற அன்பே பரம அன்பு. இந்த அன்பை வழங்குகிறவன் தேவனுடைய பிள்ளையும் தேவனுடைய இராச்சியத்தின் மெய்யான அங்கமுமானவன்.

———:o:———

## XII-ம் பாடம்.

## STUDY XII.

## இந்த இராச்சியத்தின் ஆசீர்வாதங்கள்.

## THE BLESSINGS OF THE KINGDOM.

இது பாக்கியமுள்ள இராச்சியம் என்று முன்னே பார்த்தோம் இந்த இராச்சியத்தின் வாசலுக்குமேல் எழுதப்பட்டிருக்கும் 'பாக்கியவான்கள்' என்கிற வார்த்தை மகா கருத்துள்ளது. இந்த இராச்சியம் மனிதன் உணர்ந்தறியக்கூடிய ஆசீர்வாதங்களிலெல்லாம் மகா பெரிய ஆசீர்வாதமாயிருக்கிறது. விலையேறப்பெற்ற முத்துக்கு இது ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஒருவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு போய்த் தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று அதைக் கொள்ளுகிறுன். (மத். 13: 45, 46.) மெய்யாகவே அது பாக்கியமுள்ள இராச்சியம். மனுஷன் அதிலே பூரண அங்கத்துவமாகிறதற்கும் அதின் சிலாக்கியங்களுக்கும் பூரண பாத்தியஸ்தனுகிறதற்கும் தடையானதெதுவோ அதை நீக்கிப்போடவேண்டும்.

நமது கர்த்தர் இந்த இராச்சியத்தை ஒரு இராஜகுமாரனுடைய கலியாணவிருந்துக்கு ஒப்பிடுகிருர். இந்த விருந்தில் சகலமும் சம்பிரமமாய்ச் சவதரிக்கப்பட்டிருக்கிறது. எல்லாரும் இந்த விருந்துக்கு

Digitized by Google

அழைக்கப்பட்டார்கள். (மத். 22: 1—14.) இந்த இராச்சியத்தின் ஆசீர்வாதங்கள் இலவசமும் பூரணமுமானவை. இந்த அழைப்பு எல்லாவகையான ஜனங்களுக்கும் சொல்லுகிறது. பரம இராஜாவின் சேவகர்கள் போய் வளமபொருந்திய இதின் நன்மைகளைச் சகலருக்கும் விளம்பரம்பண்ணுகிறார்கள். எல்லா தேசத்திலும் எல்லா யுகத்திலுமுள்ள மானிடரின் ஆவிக்குரிய பசி தாகத்தைத் திருப்திபண்ணுவதற்கு அவர் ஆயத்தம் பண்ணியிருக்கிற இந்த விருந்தின் ஆசீர்வாதங்களுக்கு அளவுசங்கையில்லை.

புறம்பான நன்மைகளும் இந்த இராச்சியத்துக்குரியவைகள் தான். "என்னத்தை உண்போமென்று உங்கள் ஜீவனுக்காகவும் என்னத்தை உடுப்போமென்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் .. .......தேவனுடைய இராச்சியத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்" என்றார். (லூக். 12: 22—31.) இம்மைக்குரிய இந்த ஆசீர்வாதங்கள் குறைவுறு ஆவிக்குரிய வரங்களின் சம்பூரணத்திலிருந்து மனுக்குலத்தாருக்குப் புரண்டோடிவருகிறது. ஆயினும் மனிதர் இம்மைக்குரிய இந்த நன்மைகளைத்தான் பிரதானமாய் நாடித்தேடுகிறார்கள். இந்த இராச்சியத்தின் ஆத்தும நன்மைகளை அவர்கள் பிரதானமாய்த் தேடுவார்களானால் இந்தப் புறம்பான நன்மைகள் எல்லாம் அவர்களுக்குக் கூடக்கொடுக்கப்படும். (மத். 6: 33.) அவைகள் நமது இரட்சகர் மனிதருக்குக் கொடுக்கும் ஈவுகளில் வழிந்தோடும் ஈவுகளே.

## தியானம்.

## MEDITATION.

மிகவும் உயர்ந்தவைகளைத் தெரிந்துகொள்ளவேண்டுமானால் மிகவும் தாழ்ந்தவைகளை ஒப்புக்கொடுக்கவேண்டும். கப்பர்நாகூம் ஊரிலுள்ள வாலிபன் தன் ஆஸ்தியைத் தெரிந்துகொண்டதினால் நித்திய இராச்சியத்தை இழந்துபோனான். கிறிஸ்துவிலுள்ள இச்சுதந்தரத்தைப் பெறுவதற்குச் செல்லும் செலவை நினைத்துப்பார்.

———:0:———

Digitized by Google

## XIII-ம் பாடம்.
## STUDY XIII.

### இந்த இராச்சியத்தின் ஆசீர்வாதங்கள் (தொடர்ச்சி).
### BLESSINGS (*Continued*).

ஆகிலும் இந்த இராச்சியத்தின் பிரதானமான ஆசீர்வாதங்கள் **ஆவிக்குரியவைகளே.** ஆண்டவருடைய காலத்தில் இந்த இராச்சியம் இவ்வுலகத்துக்குரியவைகளென்றும் அதின் நன்மைகள் லௌகீகமானதென்றும் யூதர் எண்ணினார்கள். கர்த்தருடைய சீஷருங்கூட இப்படி அடிக்கடி நினைத்ததுண்டு. இப்படிப்பட்ட எண்ணங்கொண்டிருந்த பேதுருவைப்பார்த்து இயேசு: "என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் வீட்டையாவது, சகோதரனையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும் இப்பொழுது இம்மையிலே துன்பங்களோடே நூறத்தனையாக வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையுமடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். (மாற். 19: 29, 30.) ஆம், இந்த இராச்சியத்தினிமித்தம் தன்னைத்தானே வெறுக்கிறவனெவனோ அவன் இம்மையில் நூறுமடங்கான ஆவிக்குரிய நன்மைகளையும், மறுமையில் நித்தியஜீவனையும் சொல்லற்கரிய ஆசீர்வாதங்களையும் அடைவான். இந்த இராச்சியத்தினிமித்தம் அவன் படும் உபத்திரவங்களுங்கூட வாக்கிலடங்காத நன்மைகளாக மாறிவிடும்.

இந்த இராச்சியத்தில் விசேஷமாய்க் குறிப்பிடப்படும் ஆசீர்வாதம் **பாவமன்னிப்புத்தான்.** (லூக். 7: 47.) தம்மிடத்தில் நன்மையைத்தேடிவந்தவர்களுக்கு இந்த ஈவை ஆண்டவர் அளித்தார். தமது இராச்சியத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரையும் பார்த்து, மகா பிரதானமான இந்த நன்மைக்காக ஜெபிக்கும்படி சொன்னார். "எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்." முற்காலத்தில் நடந்த பாவங்களினடிமைத்தனத்திலிருந்து விடுதலையையும், தேவனுடைய சமுகத்தில் புதுச்சமாதானத்தையும் அடைந்து, இவ்விதமாய் பாவமன்னிப்பைப்பெற்ற ஆத்துமா மிகுந்த பாக்கியமுள்ளதாயிருக்கும். நாம் முன் பார்த்தபடி யோவான் சுவிசேஷத்தில் 'நித்திய ஜீவன்' என்கிற பதம் தேவனுடைய இராச்சியம் என்கிற பதத்திற்குச் சமமாக உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அது இந்த இராச்சியத்தின் உசிதநன்மைகளை, அதாவது தேவனுக்குள்ளான ஜீவன், தேவனோடிருக்

கிறஜீவன், பரலோகத்தின் முடிவற்றசந்தோஷம், வழிந்தோடும் நித்திய ஜீவன் இவைகளையே குறிக்கும். இந்த இராச்சியத்தில் பிரவேசிக்கிறவர்களுக்குக் கிடைக்கும் பரம நன்மை இதுதான். "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது, நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது, நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன், அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை. (யோ. 10: 27, 28.)

## தியானம்.

### Meditation.

பாவமன்னிப்பின் சமாதானம் நமது மார்க்கத்தின் தெளிவான ஆசீர்வாதம். இந்துக்களும் புத்தமார்க்கத்தாரும் அனுசரிக்கும் இரக்கமில்லாத அஞ்ஞானக்கொள்கையாகிய கர்மக்கொள்கையோடு இதை எதிர்வைத்துப்பார். பாவிக்கு மன்னிப்பைத் தராத மார்க்கம் நிலையும் உண்மையுமுள்ள மார்க்கமாயிருக்கமாட்டாது.

———:o:———

Digitized by Google

## V-ம் அதிகாரம்.
## CHAPTER V.

## மனிதனைப்பற்றி இயேசு போதித்தது.
## JESUS' TEACHING COMCERNING MAN.

### I-ம் பாடம்.
### STUDY I.

### இவ்வுலகத்திலுள்ள சிருஷ்டிகளில் மனிதனே தேவனுடைய பார்வையில் மேலானவன்.
*Man Supreme amony God's Creatures.*

காட்டுப் புஷ்பங்களுக்காக தேவன் கவலைப்படுவதுமெய். அவர் அவைகளை அலங்கரித்துச் சௌந்திரியப்படுத்துகிறார். ஆயினும் பிதாவடைவாக அவர் மனுஷனை நித்தம் பராமரித்து அவனுக்குப் பிழைப்பூட்டும்படி அவர் எடுத்துக்கொள்ளும் கவலைக்கு அது எம்மாத்திரம்! அற்ப விசுவாசிகளே, இன்றைக்கிருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால் உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? (மத். 6: 28–30).

அடைக்கலான் குருவிகளுக்காகவும் அவர் கவலைப்படுகிறார். "ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல் அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது; உங்கள் தலையிலுள்ளமயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது." (மத். 10: 29—31).

ஆடுகளுக்காக மனிதன் கவலைப்படுகிறதுபோல கர்த்தரும் மனுஷனுக்காக கவலைப்படுகிறாரே. ஆட்டைப்பார்க்கிலும் மனுஷனானவன் எவ்வளவோ விசேஷித்திருக்கிறான். (மத். 12: 12.) தராசின் ஒரு தட்டில் உலகமுழுவதையும் வைத்தாலும் அது மறுதட்டில் வைக்கப்பட்ட ஒரேயொரு ஆத்துமாவின் அருமைக்குச் சமமானது. "மனுஷன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மத். 16: 26).

Digitized by Google

லூக்கா சுவிசேஷம் 15-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற அருமையான உவமைகளை மறுபடியும் பாருங்கள். மனுஷாத்துமாவை இரட்சிப்பதே பரலோகத்தின் சர்வ பிரயத்தனத்திற்கும் முயற்சிக்கும் ஏற்றவேலையாயிருக்கிறதென்றும், அதின் மீட்பு பரலோகவாசிகளின் பார்வையில் மிகவும் பாக்கியமுள்ள காரியமென்றும் அதிலே தெளிவாய்க் காண்கிறோம்.

ஆத்துமாவினருமையை இயேசு எவ்வளவாய் மதித்தாரோ அவ்வளவாகவே அவர் மெய்யாய் அவனுக்காகத் தம்மைத் தாழ்த்தி வெறுமையாக்கிப் பாடுகளுக்குட்பட்டார்.

## தியானம்.

## MEDITATION.

*மனிதனுடைய ஆத்துமாவின் மனதுக்கெட்டாவிலை தேவனுடைய இராச்சியத்துக்கு அஸ்திபாரக்கல்லென்று சொல்லலாம். அவன் விலைமதிக்கப்படாதவனென்று சொல்லி, தமது சிலுவையின் மரணத்தால் அவனுக்குரிய விலையைக் கொடுத்தார்.*

*மனிதனுடைய ஜீவியத்தின் காரியங்களைப் பார்த்து நாம் அவனுடைய விலையை மதிக்கிறோம். கிறிஸ்து மாத்திரம் ஆத்துமாவின் சரியான விலையை அறிந்தார்.*

———:O:———

## II-ம் பாடம்.

## STUDY II.

## மனிதன் தேவனுடைய குமாரன்.

## MAN IS THE SON OF GOD.

**1. மனிதன் தேவனுடைய குமாரனென்று இயேசு போதித்தார்.** கெட்டகுமாரனுடைய உவமை இதைத் தெளிவாய்க்காட்டும். தேவன் சர்வ ஜனத்திற்கும் பிதாவாயிருக்கிறார். மனுஷனுடைய பிள்ளைத்துவமும் தேவனுடைய பிதாத்துவமும் நெருங்கிய சம்பந்தமுள்ள உபதேசங்கள். இவை இரண்டும் விசேஷித்தவை.

கெட்டகுமாரன் கந்தைத்துணியை உடுத்திக்கொண்டு பன்றிகளோடே சஞ்சரித்துப் பாவப்பீடையினாலும் ஆவிக்குரிய பசிதாகத்தினாலும் உடல் மெலிந்து உருப்படி தெரியாதவனாயிருந்தபோதிலும்



Digitized by Google

கிறிஸ்து அவனை நமது கண்ணுக்குமுன்பாகக் கொண்டுவந்து அவன் தேவனுடைய பிள்ளையென்றும் அவன் தேவகுலத்தைச் சேர்ந்தவனென்றும் உறுதியாய்ச் சொல்லுகிறார். அசட்டையாய் மறந்துவிடப்பட்ட அவனது குமாரத்துவத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் அரிய வாக்குத்தத்தங்களையும் வல்லமையையும் அவர் வெளிப்படுத்துகிறார். பாவமயக்கங்கொண்டு நிர்ப்பந்ததோஷியாய்ப் போனபோதிலும் ஒரு காலத்தில் 'அவன் புத்தி தெளிந்து' திரும்பி வரக்கூடுமென்றும் அவன் எவ்வளவாய்ச் சீர்கெட்டுப்போனபோதிலும் தனக்கும் தேவனுக்குமுள்ள திவ்விய உறவின் சம்பந்தத்தையும் அவன் முற்றிலும் மறக்கிறதில்லை. ஏனென்றால், "நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப்போவேன்" என்று சொல்ல அவனுக்கு மனம் வருகிறது. கொரோமான தன் பாவநிலைமையை அவன் உணர்ந்து தன் பாவத்துக்காக மனங்கசந்து அழுது, இனி தகப்பனிடம் போய் மன்னிப்புக் கேட்கவேண்டியதைத்தவிர வேறு வழி இல்லையென்று எண்ணி அவனிடம் வந்து, "தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்; இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கும் நான் பாத்திரனல்ல" என்றுசொன்னனல்லவா? (லூக். 15: 18, 19).

மனுஷதன்மையின் மாட்சிமையையும் அதின் பரமசக்தியையும் கிறிஸ்து காட்டினதுபோல வேறெந்த குருவும் காட்டினதேயில்லை. மனிதன் நித்திய சம்பந்தத்தினல் தேவனேடு இணைக்கப்பட்டவன். அவன் இழந்துவிட்ட வீடும் சுதந்தரமும் தேவனுடைய வசத்தில் தான் காணப்படும். அவன் மறுபடியும் அந்த வீட்டுக்குப் போகவேண்டும். அங்கேதான் அவனுக்கு நித்திய சந்தோஷமும் ஆசீர்வாதங்களும் உண்டு என்கிறார்.

## தியானம்.

## MEDITATION.

பாவத்தில் விழுந்த மனிதனுடைய மிகவும் தாழ்ந்த நிலைமையையும் அவன் எழுந்து பெற்றுக்கொள்ளக் கூடிய மிகவும் உயர்ந்த நிலைமையையும் தேவன் மாத்திரம் அறிகிறார். மிருக நிலைமையிலிருந்து பரலோக சஞ்சாரத்தையடைய பகுத்தறிவுள்ள ஜீவியத்தின் முழு சுரக்கிரமத்தையும் மனிதன் விளக்கக்கூடியவன்.

———:O:———

Digitized by Google

## III-ம் பாடம்.
## Study III.

### அவன் கேட்டகுமாரன்.
### He is a Lost Son.

2. **ஆகிலும் அவன் சீர்கேட்ட குமாரன்** என்றும், காணமற் போன மகன் என்றும் இதே உவமையில் அழுத்திச் சொல்லுகிருர். அவன் பரலோகத்தின் பிள்ளையென்பது மெய்தான். ஆனாலும் அவன் தன் சொந்த அடங்காத குணத்தினாலும் தன்னயத்தினாலுமே இன்னும் லௌகீகனும் சிற்றின்பப் பிரியனுமாகி தன் பரம சுதந்தரத்தை இழந்துவிட்டான். கலகமும் முரட்டுக்குணமுமுள்ளவனாய் நரகத்தின் சகல நிர்ப்பந்தங்களுக்கும் தன்னை ஆளாக்கிக்கொண்டான். இப்படிப்பட்டவனை இரட்சிக்கத்தான் அவர் உலகத்திற்கு வந்து மனிதரோடு சஞ்சரித்துக் கூடாரம் போட்டார். "இழந்து போனதைத் தேடவும்" (லூக். 19: 10).

தாம் இரட்சிக்க வந்த மனிதனைப்பற்றி கர்த்தர் விபரித்துச் சொல்லுகிறதைப்பாருங்கள்.

(*a*) **அவன் பாவம்நிறைந்தவன்......அநீதியில் மூழ்கினவன்.** "எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" என்றார். (மாற். 7: 21—23.) இந்த விபர ஜாப்தாவினாலே மனிதனுடைய நிறைவான சீர்கேடு இன்னதென்று தெளிவாய்த் தெரிகிறது. அவன் கந்தையை உடுத்தினவன் மாத்திரமல்ல, பன்றிகளின் தோழனாய் அவைகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசைப்பட்டவன்.

(*b*) **இவன் பாவத்திற்கு அடிமை என்று** கர்த்தர் சொன்னார். "பாவஞ் செய்கிறவன் எவனும் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான். குமாரன் என்றைக்கும் நிலைத்திருக்கிறார்." (யோ. 8: 34, 35.) கொடுமையான எல்லாவற்றிலும், குரூரமான எல்லா எஜமான்களிலும் பாவமே பிரதானம். அதின் இருப்புச்சங்கிலிகள் மகா பலமும் காயமுண்டாக்குகிறவைகளுமா

62065A

யிருக்கின்றன. நீடித்த காலமாக பாவச்சங்கிலிகளால் கட்டப்பட்டிருக்கிற நிர்ப்பந்தமும் ஆதரவுமற்ற இந்த மனுஷஜென்மியைப்போல் வேறெந்த வஸ்துவும் பூமியில் இல்லை. இந்த அடிமைத்தனம் பெருகப்பெருக அதே விலங்குக்குத் தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்து அதைவிட்டு விலகப் பிரியமற்றவனாய்ப் போய்விடுகிறான்.

## தியானம்.

## MEDITATION.

*தமது இருதயத்தில் ஒரு பாவத்தையும் அறியாதவர் பாவத்தின் அருவருப்புகளைப்பற்றி இவ்வளவு திட்பமாய் விஸ்தரிப்பது நூதனமே. தாம் சொஸ்தமாக்க வந்த வியாதியையும், தாம் கழுவ வந்த அசுத்தத்தையும் அறிந்தவராயிருந்தார்.*

———:O:———

## IV-ம் பாடம்.

## STUDY IV.

## பிசாசின் பிள்ளை.

## HE IS THE SON OF THE DEVIL.

(*c*) **மனுஷன் பிசாசின் பிள்ளையென்றும்** கர்த்தர் சொல்லுகிறார். தம்மைக் குற்றம்பிடிக்கத் தினவுகொண்டு திரிந்த பரிசேயரைப்பார்த்து, "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினாலுண்டானவர்கள். உங்கள் பிதாவினுடைய இச்சையின்படியே செய்ய மனதாயிருக்கிறீர்கள்" என்று சொல்லிக் கண்டித்தார். (யோ 8: 43.) ஒரு ஏழை மனுஷனுடைய பிள்ளை ஓர் பெரிய பட்டணத்தின் குப்பைக்கிடங்கிலே, அல்லது காட்டுமிராண்டிகளான அஞ்ஞானிகளின் நடுவிலே பிறந்து வளர்ந்து, சேற்றிலும் சகதியிலும் உழன்று கிடப்பது விசனமே. ஆனால் ஒரு இராஜாவின் குமாரன் ஒரு பிச்சைக்காரனால் வளர்க்கப்பட்டு அசுத்தமான இடத்துக்குரிய சகல துர்ப்பழக்கங்களுக்கும் ஆளாய்ப்போவது அதிலும் மிகவும் விசனமே. ஆயினும் இதுவே மனிதனுடைய நிலைமை. இராஜ இராஜாவின் குமாரனாயிருந்தும் தானே கெட்டு நரகத்தின் மகனாய்ப்போனவன். தானே தேவகுலத்தைச் சேர்ந்தவனென்று அறிந்திருந்தும் தன் தகப்பனாகிய பிசாசின் சித்தப்படி உல்லாசமான பாவ ஜீவியம் செய்யவே விரும்புகிறான். இவன் பொல்லாங்கனாகிய பிசாசின் குணத்தைச் சுதந்த

Digitized by Google

ரித்துக்கொண்டபடியால் கர்த்தர் இவனுக்கும் பிசாசுக்குமுள்ள சம்பந்தத்தை அழுத்திக் காட்டுகிறார். ('தகப்பனைப்போல பிள்ளை').

இவ்விதமாய் மனுஷன் தன் சுய இச்சைகளினால் இழுப்புண்டு பாவத்தில் மூழ்கி பிசாசின் துர்க்குணங்களினாலும், துர்ப்பழக்கங்களினாலும் கட்டப்பட்டுப்போனான். இப்படிப்பட்டவனுக்கு மறுபிறப்பாகிய புதுப்பிறப்பு மிகவும் அவசியம். ஆகையினால்தான் இயேசு எல்லா மனிதருக்கும் சொன்னதுபோல் சன்மார்க்கமும் பக்தியுமுள்ள நிக்கொதேமுவையும் பார்த்து "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராச்சியத்தைக் காணமாட்டான்," என்று வற்புறுத்திக் கூறினார். (யோ. 3: 3.)

வேறொரு சமையத்தில், ஆயக்காரரோடு அவர் சிநேகமாயிருக்கிறார் என்று எதிரிகள் அவரை இகழ்ந்தபோது "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை! நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன்" என்றார். (மத். 2: 15, 16.) நீதிமான்களையல்ல, அதாவது, சன்மார்க்கத்தின்படி சுகமுள்ளவர்களென்று தங்களைச் சொல்லிக்கொள்ளுகிறவர்களையல்ல, பாவிகளென்று புறக்கணிக்கப்பட்டவர்களையே அழைக்கவந்தேன் என்றார். வேறுவிதமாய்ச் சொல்லப்போனால், மறுபிறப்பு இல்லாத மனிதன் ஆத்துமநோய் கொண்டவன்; அவனுக்கு வைத்தியன் தேவையென்பதே. இப்படிப்பட்ட ஆத்துமாவைச் சொஸ்தப்படுத்துவதே அவர் தமது திவ்விய பரிகாரங்களைக் கொண்டுவரவேண்டியதாயிற்று.

சீரழிந்த மக்களுக்கும் கெட்டுப்போன மனிதருக்கும் (ஏழைகள், ஊனர், குருடர், சப்பாணிகள் (லூக். 14: 21.) இந்தச் சுவிசேஷம் அனுப்பப்பட்டிருக்கிறது.

## தியானம்.

### MEDITATION.

இகழப்பட்டு, தள்ளப்பட்ட பாவிகளைப்பார்த்து ஆண்டவர் மட்டில்லா பரிதாபத்தோடு உருக்கமான வார்த்தைகளைப் பேசுகிறார். வெளிக்கு உபசாரமும், மரியாதையுமுள்ளவர்களைப்போல் காணப்பட்ட பெருமையுள்ள மாயக்காரரைப் பார்த்தோ வெறுப்பும் கசப்புமான வார்த்தைகளைப் பேசினார். பாவியைப்பார்த்து "வா, இனிப்பாவஞ்செய்யாதே" என்றும், மாயக்காரரைப்பார்த்தோ "விரியன்பாம்பின் குட்டியே, உனக்கு ஐயோ" என்றும் கூறினார். ஏன் இந்த வித்தியாசம்!

Digitized by Google

## V-ம் பாடம்.
## STUDY V.

### சிறுபிள்ளைகளைப்பற்றி இயேசு போதித்தது.
### JESUS' TEACHING ABOUT CHILDREN.

இதற்குச் சம்பந்தமாய், இயேசு சிறுபிள்ளைகளைப்பற்றி உபதேசித்தது இங்கே கவனிக்கப்படத்தக்கது. மனிதன் தேவனுடைய பிள்ளையென்று போதித்ததற்கு இசைவாக சிறுபிள்ளைகள் தேவனுடைய இராச்சியத்திற்கு உரியவர்கள் என்று காட்டினன் "சிறுபிள்ளைகள் என்னிடத்திற்கு வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவர்களைத் தடைபண்ணுதிருங்கள், தேவனுடைய இராச்சியம் அப்படிப்பட்டவர்களுடையது." (மாற். 10: 14.) சிறுபிள்ளைகளை அவர் மிகவும் அருமையாய்நேசித்து அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள் மேல் கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்தார். (வாக். 16.) தமது சீஷர்களின் பெலவீனங்களையும், அற்பத்தனங்களையுங்குறித்துச் சலிப்புற்று "ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி, நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போலாகாவிட்டால் பரலோக இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இந்தப் பிள்ளையைப்போல தன்னைத் தாழ்த்துகிறவனெவனே அவனே பரலோக இராச்சியத்தில் பெரியவனுயிருப்பான். இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறுன்" என்றுர். (மத். 18: 2—6.) இன்னெரு சமையத்தில் அவர்களுடைய பெருமைக் குணத்தைக் கண்டிக்கும்படிக்கு, ஒரு சிறுபிள்ளையை எடுத்து அதைத் தமது அருகே நிறுத்தி, அவர்களை நோக்கி: "இந்தச் சிறுபிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறுன். என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறுன். உங்கள் எல்லாருக்குள்ளும் எவன் சிறியவனுயிருக்கிறுனே அவனே பெரியவனுயிருப்பானென்றுர். (லூக். 9: 48.)

இந்த வார்த்தைகளினுல், சிறுபிள்ளைகளுக்குரிய தன்மையும், ஜீவியமும் கர்த்தருடைய பார்வையில் மிகவும் அவசியமாயிருந்ததென்று அறிகிறேம். இப்படிப்பட்டவர்கள்தான் பரலோக இராச்சியத்துக்குரிய வரங்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளப் பாத்தியமுடையவர்களென்று கர்த்தர் போதித்தார்.

Digitized by Google

## தியானம்.

### MEDITATION.

சிறு பிள்ளையின் மனதும், சிறு பிள்ளையின் ஜீவியமும் ஆண்டவருடைய கவனத்தை இழுத்தது. எல்லாப் பிள்ளைகளையும் அவர் தமது கரத்திலும் இருதயத்திலும் வைத்து, ஆசீர்வதித்தார். அவர் ஆசீர்வதித்தவர்களை மனிதன் சபியாதிருப்பானாக. தேவனுடைய இராச்சியம் அப்படிப்பட்டவர்களுடையதென்று அவர் யாரைப்பற்றிச் சொன்னாரோ, அவர்களை மனிதன் அழிவுக்கு ஒப்புக்கொடாதிருப்பானாக.

Digitized by Google

# VI. அதிகாரம்.
# CHAPTER VI.

## சீஷனைப்பற்றி இயேசு போதித்தது.
## OUR LORD'S TEACHING CONCERNING THE DISCIPLE.

### 1-ம் பாடம்.
### STUDY I.

### சீஷன்.
### *The Disciple.*

விசுவாசியானவன் பாவத்திலிருந்தும் சாத்தானுடைய கரத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டவனென்றும் பரலோக இராச்சியத்தின் அங்கத்தானென்றும் இயேசு காட்டினார்.

ஆயினும் அவன் தமது சீஷனாயிருக்கிறானென்பதையே பிரதானப்படுத்திப் போதித்தார். அவர் சற்குருவாயிருக்கிறபடியால் தம்முடையவர்களை அந்த இராச்சியத்தின் பிள்ளைகளாயிருக்கும்படி நித்தம் அவர்களுக்குப் போதித்து அவர்களைப் பயிற்சிக்க நோக்கமுள்ளவராயிருந்தார்.

ரபிக்கும் சீஷனுக்குமுள்ள இந்தச் சம்பந்தமே நாலுசுவிசேஷங்களில் எங்கும் விளங்கும் காரியம். யூத ரபிமார்களில் ஒவ்வொருவனும் தனக்கென்று சிலரைச் சீஷர்களாகச் சேர்த்து அவர்களை எப்போதும் தன்னைச் சூழ வைத்துக்கொண்டு அவர்களுக்கு ஒழுங்காய் உபதேசம் செய்வது வழக்கம் அவ்விதமாகவே இயேசுவும் பன்னிருவரைத் தமக்குச் சீஷர்களாகத் தெரிந்துகொண்டு அவர்களை ஆவிக்குரிய விஷயத்தில் பயிற்சிக்கவே தம்மை ஒப்புக்கொடுத்து வந்தார். தமது ஊழியத்தின் கடைசிப் பாகத்தில் இதையே அவரது பிரதான காரியமாக வைத்துத் தமது நாட்களைச் செலவழித்தார்.

அவர் தமது சீஷர்களுக்குப் போதித்த உபதேசம் இருவகையானது. பிரதானமாய் அவர் வாய்மொழியினாலும் நெருங்கிய சம்பந்

தத்திற்குரிய அன்பின் சக்தியினாலும் அவர்களுக்குப் போதித்துவந்தார். அவர் திருவுளம்பற்றின வார்த்தைகள் அவர்களுக்கு ஒரு நூதன இராச்சியத்தைக் காட்டினதுமன்றி அவர்களுடைய மனதில் புதிய நோக்கங்களையும் எண்ணங்களையும் ஆசைகளையும் எழுப்பின. நித்தம் அவர்கள் திருவசனங்களைக் கேட்டுவருவதினால் அவருடைய ஆவிக்குரிய ஜீவியத்திலே அவர்கள் பங்குள்ளவர்களாகவேண்டுமென்றும் தமது மார்க்கத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தினுள்ளே அவர்கள் பிரவேசித்து அதின் உன்னத இரகசியங்களையும் அறியப்படாத அந்தரங்கங்களையும் அவர்கள் அறிந்துகொள்ளவேண்டுமென்றும் விரும்பிப் போதித்துவந்தார். அவருடைய வார்த்தைகளைக் கேட்பது அவருடைய ஐக்கியத்தில் பங்குபெறுவதாயும், இந்த ஐக்கியம் அவரது வார்த்தைகளின் கருத்தை விளங்கிக்கொள்வதற்கான அறிவை உண்டாக்குகிறதாயும் இருந்தது. பிறருக்கு அறிவைப் புகட்டுவதற்கு ஏற்ற முதற்கருவி ஐக்கிய சிநேகந்தான். இதை அவருடைய சீஷர்கள் நன்றாய் உணர்ந்து அவரில் அமைந்திருந்த ஆவிக்குரிய தன்மைகளும் சத்துவங்களும் இன்னதென்று அனுபவமாய் அறிந்துகொண்டார்கள்.

இவ்விதமாக இயேசு தமது சீஷர்களை நித்தம் தமது பரம ஞானத்தின் ஒளியினாலும் தமது அன்பின் அனலினாலும் இராச்சியத்தின் காரியங்களைத் தெளிவாக்கினார். இதினால்தான், இயேசுவைப் பின்பற்றுகிறவர்களுக்கு சீஷர் என்கிற பெயர் தலைமுறை தலைமுறையாக வழங்கப்பெற்றது.

இப்படியே இயேசுவைத் தன் இரட்சகராக ஏற்றுக்கொண்டு தேவனுக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் ஏற்ற ஜீவியஞ் செய்யும்படிக்கு அவருடைய திவ்விய ஞானத்தையும் நடத்துதலையும் ஆசிக்கிற சீஷனைப்பற்றிய உபதேசத்தின் சில குறிப்புகளைக் கவனிப்போம்.

## தியானம்.

## MEDITATION.

பன்னிருவரைப்போல நாமெல்லாரும் அப்போஸ்தலராகுமுன்னே, முதலாவது சீஷர்களாகவேண்டும். அவருடைய பாதத்தண்டையிலுள்ள தாழ்ந்த இடத்திலிருந்து தமது ஊழியத்துக்கு நம்மை அனுப்புவார். ஆனால் படிக்கிறதை நாம் ஒருக்காலும் விட்டுவிடப்படாது. திறந்த காதும், படிப்பிக்கப்படக்கூடிய இருதயமுமாகிய பதமையின் முக்கியத்தை கிறிஸ்தவர்கள் உணருகிறார்களா?

Digitized by Google

## II-ம் பாடம்.
## Study II.

### சீஷன் படிப்பிக்கப்படக் கூடியவனுயிருக்கவேண்டும்.
### The Disciple must be Teachable.

**1. சீஷன் செவிகொடுத்துக் கற்றுக்கொள்ளத்தக்கவனுயிருக்கவேண்டும் என்பது முதல் குறிப்பு.**

*மரியாள்தான் உத்தம சீஷனுக்கு உதாரணம்.*

*மார்த்தாள் மிகவும் சுறுசுறுப்புள்ள ஊழியக்காரி. மரியாளோ இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். (லூக். 10: 39.) அவர் திருவுளம்பற்றிய ஒரு வார்த்தையையும் விடாமல் உற்றுக்கேட்டுப் படிக்கிற குணம் இவளுக்கு இருந்தது.*

*ஆண்டவர் தமது பிரசங்கத்தைக் கேட்கிறவர்களிடத்தில் இப்படிப்பட்ட குணத்தைத்தான் தேடுகிருர். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று எத்தனைதரமோ அவர் சொன்னுர். (மத். 11: 15.) தமது சீஷர்களின் அசமந்தத்தைக்குறித்து அவர் அடிக்கடி விசனமடைந்தார். ஒரு சமையத்தில் விதைக்கிறவனுடைய உவமையினுல் அவர்களுக்குப் புத்தியுண்டாக்கினுர். (மத். 13: 12). திருவசனத்தை விதைக்கும் கரிசனையோடும் கருத்தோடும் அதற்குச் செவிகொடுத்தவர்கள் மிகச்சொற்பம்.*

*வசனத்தைக் கேட்டவர்களில் மிகுதியானவர்களின் இருதயம் வழியோரத்திற்கும் மண்ணில்லாத கற்பாறைக்கும் முள் நிறைந்த இடத்திற்கும் ஒப்பாயிருந்தது. சீஷருடைய மனதும் இவ்வகைப்பட்டதுதான். அதிக மதிப்பும் கவனமுமுள்ள மனதாகிய நல்ல நிலத்தைப் பார்க்கிலும் இந்த மூன்றுவகையான மனமே சீஷருக்கு இருக்கிறதென்று சொல்லவேண்டும். சீஷனனவன் நல்ல நிலத்திற்கு ஒப்பாய் வசனத்தைக்கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து நூருகவும், அறுபதாகவும் முப்பதாகவும் பலன் கொடுக்கிறவனுயிருக்கவேண்டும் என்று போதித்தார்.*

*கோதுமையையும் களைகளையும் பற்றிய உவமையைக் கவனித்துப் பாருங்கள். சீஷனனவன் திருவசனத்தைக் கேட்டும் கேளாமலும் இருக்கிற சமயத்திலே பிசாசானவன் களைகளாகிய தீயஎண்ணங்களை அவனிருதயத்தில் விதைக்கிருன். அவைகள் விதைக்கப்பட்ட சத்தியத்தைக் கெடுத்து பலன் கொடாதபடி தடுத்துப்போடுகின்றன. (மத். 13: 24—30.)*

Digitized by Google

ஒரு சமயத்தில் சீஷர்கள் சுவிசேஷத்தின் முதல் உபதேசங்களைத்தானும் அறிந்துகொள்ளக்கூடாதபடிக்கு மந்தம் பிடித்தவர்களாயிருந்தபோது, கர்த்தர் உடனே எழுந்துநின்று கிரியா உவமையினாலே அவர்களுக்குத் தாழ்மையைப் படிப்பித்தார். தமது வஸ்திரங்களைக் கழற்றிவைத்து ஒரு சீலையை எடுத்து அரையிலே கட்டிக்கொண்டு மனம் பொருந்த சீஷர்களின் கால்களைக் கழுவினார். திரும்ப உட்கார்ந்து அவர்களை நோக்கி, "நான் உங்களுக்குச் செய்திருக்கிறதை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் என்னை போதகரென்றும் ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள். நீங்கள்சொலலுகிறதுசரியே. நான் அவர்தான். ஆண்டவரும், போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால் நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக்காண்பித்தேன் என்றார். (யோ. 13: 4—16.) இவ்விதமாய் இயேசு படிப்பிக்கப்படும் தன்மை, தமது போதனைகளையும், முன்மாதிரிகளையும் உற்சாகமாய்த் தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளுகிற குணம், சீஷர்களுக்கு இருக்கவேண்டுமென்று விரும்பினார்.

சத்தியத்திற்கும் ஜீவியத்திற்கும் அடுத்த போதனைகளைத் தமது சீஷர்களுக்குப் புகட்ட அவர் எவ்வளவோ ஆசைப்பட்டவராயிருந்தார். ஆகிலும் அவர்களுடைய மந்தமான புத்திக்குத்தக்கதாக கொஞ்சம் கொஞ்சமாய்ப் படிப்பிக்கவேண்டியதாயிருந்தது. "இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் தாங்கமாட்டீர்கள்" என்றார். (யோ. 16: 12.)

## தியானம்.

## MEDITATION.

ஆ! நாயகா! நான் உம்மோடே
தாழ் பாதையில் செல்லட்டுமே;
உம்வேலையின் எத்தீமையும்
சகிக்கும் வகை போதியும்.

விஸ்வாசம் ஓங்கும் வேலையில்
ஜெயங்கொள்ளும் நம்பிக்கையில்
உம்மோடெந்நாளும் தங்கவும்
உம் பொறுமையைப் போதியும்.

———:O:———

Digitized by Google

## III-ம் பாடம்.
## STUDY III.

### சீஷன் இயேசுவுக்குப் பின்சேல்லுகிறவன்.
### THE DISCIPLE A FOLLOWER OF JESUS.

2 தம்மிடத்தில் ஜீவனைத்தேடி வருகிற யாவருக்கும் அழைப்பாகவும் கட்டளையாகவும் கூறுகிற தென்னவென்றால் "என்னைப் பின்பற்றிவா" என்பதே. ஆத்துமாக்களை நித்திய சம்பந்தமாய்த் தம்மோடு இணைத்துக்கட்ட விருப்பமுடையவராய், 'என் பின்னே வாருங்கள்' என்று எத்தனைதரமோ கூறினார். (மத். 4: 19, 8: 22, 9: 9; யோ. 1: 43.)

இயேசுவைப் பின்பற்றுகிறதாவதென்ன?

(a) இயேசுவைத் தனக்கு மாதிரியாகக்கொண்டு அவரது ஜீவியத்தின் அடிச்சுவடுகளில் நடந்து போவது.

"இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காக பாடுபட்டு நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்" என்று அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லுகிறான். (1 பேது. 2: 21.) சீஷன் தன் போதகனைப்போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப்போலவும் இருப்பது போதும் என்று சொன்னார். (மத் 10: 25.) ஆண்டவருக்குண்டான துன்பங்களும், விரோதங்களும், சீஷனுக்கு வரவேண்டியதாயிருக்கும். அவருடைய இராச்சியத்தில் உயர்ந்த உத்தியோகங் கொடுக்கவேண்டுமென்று அவரிடத்தில் கேட்ட இரண்டு சீஷர்களுடைய காரியத்தைப் பாருங்கள். இயேசு அவர்களைச் சோதிக்கும்படி "நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான்பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமோ? என்று கேட்டார் (மத். 20: 22.) அதாவது, எனக்கு வரப்போகிற இந்தப் பாடுகள் யாவற்றுள்ளும் பங்குபெற உங்களால கூடுமா, என்பதாய்ச்சொன்னார். தாங்கள் கேட்டது இன்னதென்று அறியாமல் கேட்டார்கள் என்பது மெய் கர்த்தரோ, அவர்கள் தம்மைப் பின்பற்றித் தமது பாடுகளிலும் துன்பங்களிலும் பங்கடைவதினால்தான் தமது இராச்சியத்தில் கனம்பெறக் கூடியவர்களாயிருப்பார்கள் என்றார். 'அவருடைய அடிச்சுவடுகளில்' 'In His Steps' அல்லது 'இயேசு என்ன செய்திருப்பார்' (What would Jesus do) என்ற அருமையான புஸ்தகத்தை வாசித்திருக்கிறோமே. அதில், இயேசுவின் அடிச்சுவடுகளைச் சரிவரப் பின்

தொடரும்படி விரும்புகிறவர்களுக்கு வரும் துன்பங்கள், தொல்லைகள் இன்னதென்று வாசித்தறியலாம்.

ஆகிலும் சீஷனாயிருப்பதென்பது இன்னதென்று இதில் வருகிறது. இயேசுவின் ஜீவியத்தில் காணப்படும் சிறுசிறு காரியங்களைப் பின்பற்றுவதாயிராமல், நம்மைப்போல ஒருவராய் இருக்கும் விஷயத்தில் அவர் என்னென்ன செய்வாரென்று உத்தேசித்து அவைகளைச் செய்வதுதான் அந்தக்காரியம்.

தம்முடைய பிதாவின் சித்தத்தைச் செய்வதே நமதாண்டவரின் ஜீவியத்தில் காணப்படும் விசேஷித்த குறிப்பு.

அவரது சீஷனும் பிதாவின் சித்தத்தையே தனக்குச்சட்டமாக்கிக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய ஜெபத்தில், உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக என்று ஒவ்வொரு சீஷனும் நித்தம் ஜெபிக்கும்படி போதித்தார். இந்த விஷயத்திலும் சீஷனானவன் தன்னுடைய ஜீவியத்தை இயேசுவின் ஜீவியத்தோடு ஒப்பிட்டுப்பார்த்து அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி வருவதே அவனுடைய முழு நோக்கமாயிருக்கவேண்டும்.

## தியானம்.

## MEDITATION.

இயேசுவைப் பின்பற்றுதலாலுண்டாகும் பெரிய வருத்தத்தைக் கவனி. ஜீவியத்தின் ஒவ்வொரு கடினமான காரியத்திலும் அவருடைய சித்தத்துக்காக ஜெபத்தோடு காத்திருந்து முழுமனதோடு உண்மையாய்ப் பின்பற்றவேண்டும். நமது சொந்த இஷ்டத்துக்கும் சௌகரியத்துக்கும் விரோதமாய் அவர் தமது ஞானத்தின்படி நடத்தும் இடமெங்கும் திடமான தீர்மானத்தோடு அவரைப் பின்செல்லவேண்டும்.

———:0:———

## IV-ம் பாடம்.

## STUDY IV.

## சீஷன் இயேசுவுக்குப் பின் செல்லுகிறவன் (தொடர்ச்சி).

## THE DISCIPLE A FOLLOWER OF JESUS (*Continued.*)

(*b*) சீஷனானவன் தனக்குப் பதிலாக, இயேசுவையே தன் ஜீவியத்தின் நோக்கமாய் வைத்துக்கொள்வான். தன்னைத் திருப்திசெய்துகொள்ளவல்ல, தன்னை மகிமைப்படுத்தவல்ல, கர்த்தனையே மகிமைப்படுத்தி அதினால் தன் நடக்கைகளையும் ஜீவியத்தையும் இணை

Digitized by Google

தாக்கிக்கொள்ளுவான். ஒருபக்கத்தில் உலகமும் அதினின்பங்க ளும், மறுபக்கத்தில் கிறிஸ்துவும் அவரது இராச்சியமும் சீஷனுக்குத் தென்படும்போது. யாதொரு சந்தேகமுமின்றி முந்தினதைத்தள்ளி, பிந்தினதையே அவன் ஏற்றுக்கொள்ளுவான். தம்மைப்பின்பற்றி வரும்படி அவர் பேதுருவையும் அந்திரேயாவையும் அழைத்தபோது அவர்கள் எல்லாவற்றையும்விட்டு அவருக்குப் பின்சென்றார்களல்லவா? (லூக். 5: 11). அப்படியே லேவியும் எல்லாவற்றையும் விட்டுப் பின்சென்றான். (வாக். 28.) கப்பர்நகூமில், தலைவனான வாலிபனொருவன் தன் ஜீவியத்தில் தனக்குப் பெரிய இடறுகட்டையாயிருந்த தன் ஆஸ்திகளை விட்டுவிட்டு இயேசுவைப் பின்பற்ற மனமில்லாதவனாய்ப்போனான். இயேசுவைப் பார்க்கிலும் தன் ஆஸ்திகளை அவன் அதிகமாய் நேசித்தான் (லூக். 18: 18.) நமக்கு உசித மாதிரிகளையும் சிநேகங்களையும் எஜமான்களையும் தெரிந்துகொள்வதிலே எல்லாருக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுவை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்ல, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரனல்ல, என்றார். (மத். 10: 37, 38) லூக்கா சுவிசேஷத்தில் இது இன்னும் பலமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும சகோதரிகளையும் தன் ஜீவனையுங்கூட வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். (லூக். 14: 26.) எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்துவையே இருதயத்தின் சிங்காசனத்தில் உயர்த்திவைத்து ஜீவியத்துக்கு ஒரே எஜமானாகவும் இராஜனாகவும் அவரைப் பாவிக்கவேண்டும். இதுதான் சீஷனுக்குரிய மேலான தன்மை.

## தியானம்.
## Meditation.

திருப்தி, வல்லமை என்பவைகளின் இரகசியத்தை இயேசுவினிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும்படி அவரை நோக்கிப் பார்ப்போமாக.

சிலுவை சுமந்தோனாக
யேசு, உம்மைப்பற்றினேன்
ஏழைப் பரதேசியாக
மோட்ச வீடு நாடுவேன்
உற்றார், மேன்மை, ஆஸ்தி, கல்வி,
ஞானம், லோகம் அனைத்தும்
அற்ப குப்பை என்று எண்ணி
வெறுப்பேனே முற்றிலும்.

Digitized by Google

## V-ம் பாடம்.

## Study V.

### சீஷன் இயேசுவுக்குப் பின்சேல்லுகிறவன் (முடிவு).
### The Disciple a Follower of Jesus (*Concluded*).

(*c*) **சீஷனானவன் தன் ஜீவியத்திற்கு ஞானவழிகாட்டியாக இயேசுவின் வார்த்தைகளையே ஏற்றுக்கொள்வான்.** ஒரு தடவை யூதரைப் பார்த்து அவர், "நீங்கள் என் உபதேசத்தில நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்," என்றார். (யோ. 8: 31.)

மலைப்பிரசங்கத்திலே அவர் தமது இராச்சியத்தின் பிரமாணங்களைக் குறித்தும் உண்மையான சீஷத்துவத்தைக்குறித்தும், 'நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்ற வார்த்தைகளுடன் அழுத்திப் பேசியபோது யூத கிரந்தகர்த்தாக்களும் மோசேயும் போதித்த போதனைகளைவிடத் தமது உபதேச வார்த்தைகளே அதிமேலானதென்று தெரிவித்தார். அவர் அப்படிச் சொன்னது தகுதியே. ஏனென்றால் மற்ற இடங்களில் அவர் சொன்னதுபோல, "நான் உங்களுக்குச்சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" என்றார். (யோ. 6: 63.) இதற்கு எதிரொலியாக, "ஆண்டவரே யாரிடத்தில் போவோம் நித்திய ஜீவவசனங்கள் உம்மிடத்தில் உண்டே" என்று பேதுரு அறிக்கையிட்டான். (யோ. 6: 68.)

**தமக்குப் பின்சென்று வருவது அவசரமான காரியமென்று** கர்த்தர் போதித்தார். ஒரு தடவை ஒருவன் அவரை நோக்கி, "ஆண்டவரே, முன்பு நான்போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்" என்றான். கர்த்தரோ அவனைப்பார்த்து, "மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்; நீ என்னைப் பின்பற்றிவா," என்றார். (மத். 8: 21, 22.) மனுஷருக்குரிய புறம்பான அவசரங்களும் ஆத்திரமான கடமைகளும் இந்தக் காரியத்துக்குத் தடையாகக்கூடாது. (லூக். 9: 59.)

இந்தச் சீஷத்துவத்துக்குத் தடையாக வேறே ஆசைகளும் நோக்கங்களும் ஊடே வருவது தகாது என்று போதித்தார். ஒரே நோக்கத்தோடு முழு ஆத்துமாவுடன் அவரைப் பின்பற்றவேண்டும். வேறொருவன் ஒருவனை நோக்கி ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன், ஆனாலும் முன்பு நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக்கொண்டு வரும்படி என்க்கு உத்தரவுகொடுக்கவேண்

மென்முன். அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய இராச்சியத்திற்குத் தகுதியுள்ளவனல்ல என்றார் (லூக். 9: 61, 62).

## தியானம்.

## Meditation.

மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். கிறிஸ்து சொன்ன இந்த வார்த்தைகள் ஜீவியத்துக்குரிய காரியங்களில் எம்மட்டுக்கு நமது ஆத்துமாவுக்கு உபாத்தியாயராகவும் வழிகாட்டியாகவுமிருக்கின்றன.

———:o:———

## VI-ம் பாடம்.

## Study VI.

## சீஷன் சிலுவை சுமக்கிறவன்.

## The Disciple a Cross-Bearer.

3. **சீஷன் தன்னைத்தான் வெறுத்துத் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு பின்பற்றவேண்டும்.** சுயவெறுப்பு கிறிஸ்துமார்க்கத்தின் முக்கிய இலட்சணங்களில் ஒன்று. சிலுவையே நமது விசுவாசத்தின் அடையாளக் குறிப்பு. கிறிஸ்து நமது பாவங்களை சிலுவையிலே சுமந்ததினால் மாத்திரமல்ல, சிலுவையைச் சுமப்பதே கிறிஸ்தவ ஜீவியமென்று சொல்லலாம். ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அவனவன் சுமக்கவேண்டிய சிலுவையுண்டு. அதை அவன் தைரியத்துடன் எடுத்துக்கொண்டு இயேசுவைப் பின்செல்லவேண்டும். ஒருவன் என் பின்னேவர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். (மாற். 8: 34; மத். 10: 38; லூக். 14: 27.)

சிலுவையை எடுத்துக்கொள்ளுகிறதாவது என்ன? சுயவெறுப்பின் பள்ளத்தாக்கினடியிலே சென்று அங்கே தன்னை முற்றிலும் மறந்து சுயநன்மைகளைக் கிஞ்சித்தும் நினையாமல் கிறிஸ்துவுக்குப் பின்செல்லுவதுதான்.

Digitized by Google

## சிலுவை பூரண சுயவெறுப்பைக் காட்டும்.

(a) இது ஒருவன் தன் ஜீவியத்தில் நோக்கவேண்டிய பொருள். சுயமுயற்சியின் முழு நோக்கமாகிய தற்பொழிவு முற்றிலும் நீங்கிப்போகவேண்டியது ஒருவனுடைய ஆசைகள் கவைகாரியங்களெல்லாம் இதைப்பற்றினதாக இருக்கவேமாட்டாது.

(b) சிலுவை யென்பது, ஒருவன் தன் ஜீவியத்தை வழிநடத்தும் வல்லமைக்காகத் தன்னை, அதாவது சுயசித்தத்தை வெறுத்துவிடலாம்.

தன்னை வெறுக்கும் சீஷன் தன்னுடைய பெருமைக்குணத்தையும் சுயசித்தத்தையும் புதைத்து அதன் கல்லறையின்மேல் கிறிஸ்துவின் சித்தத்தையே தன் ஜீவியத்தை ஆட்கொள்ளும் வல்லமையாக்கிக்கொள்ளவேண்டும்.

நான் என்னும் ஆணவம், தற்சிநேகம், தற்பொழிவு என்பவைகளே சீஷனுக்குப் பெருத்த சத்துருக்களாயிருந்து சகல விதமான துன்பத்தையும் உண்டாக்கிவிடுகிறது.

சுயவெறுப்பு இந்துக்கள் நினைக்கிறபடி சந்நியாசத்துவம் அல்ல இந்துக்களும் அநேகங் கிறிஸ்தவர்களும் சந்நியாசமே சுயவெறுப்புக்கு விசேஷித்த அடையாளம் என்று நினைக்கிறார்கள்.

கிறிஸ்துவோ தமது முன்மாதிரியினாலேயே அது அப்படியல்லவென்று போதித்தார். தமது காலத்திலிருந்த கடுந்துறவிகளோடே அவர் கூடவில்லை. இதினிமித்தமே ஜனங்கள் அவரை, போஜனப்பிரியனும் மதுபானப்பிரியனுமானமனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன், என்றார்கள். (மத். 11: 9.) ஒரு சமையத்தில் ஆண்டவருடைய சீஷர்கள் மற்றவர்கள் செய்ததுபோல சந்நியாசம் பூண்டு ஏன் உபவாசிக்கவில்லையென்று யோவானுடைய சீஷர் குற்றம்பிடித்தார்கள். கர்த்தரோ கிறிஸ்துமார்க்கம் சந்தோஷத்தின் மார்க்கம். அந்த மார்க்கத்திற்குச் சந்நியாசமும் சுயவதையும் அவசியமேயில்லையென்று சொல்லி பலமாய் அவர்களை எதிர்த்தார். (மாற். 2: 18:19.)

ஒருவனுடைய ஆவிக்குரிய மேலான நோக்கங்களும் சிந்தைகளும் பூரணப்பட்டு விளங்கத்தக்கதாக அவன் தன் தாழ்வான இச்சைகளையும் இழிவான நோக்கங்களையும் மேற்கொண்டு நடக்கவேண்டியதென்று மாத்திரம் போதித்தார்.

**சிலுவை, கிறிஸ்தவனுடைய பூரண பிரதிஷ்டைக்கு அடையாளம்.** கிறிஸ்துவின் சிலுவை யூதர்காலத்தில் நடந்த பாவநிவாரணபலியின் நிறைவேற்றம். ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய சிலுவையோ கிறிஸ்துவாகிய பலிபீடத்தின்மேல்தான் ஆத்துமா முழுவதை


Digitized by Google

யும் சர்வாங்க தகனபலியாக ஒப்புக்கொடுக்கும் தற்பிரதிஷ்டையைக்குறிக்கும்.

ஊழியத்தில் தன்னை மறுப்பதில்தான் சீஷன் தன்னுடைய பூரண பாக்கியத்தையும் முழு வளர்ச்சியையும் கண்டடைகிறுன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான். என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான். (மத். 16: 25; மாற். 8: 35.)

இவ்விதமாக, சிலுவையானது தன்னுடைய பரிபூரண நிறைவேறுதலை ஜீவ கிரீடத்தில்தான் பெறுகிறது. சிலுவையைத் தன் தோளின்மேல் உண்மையாய்ச் சுமக்கிறவனுடைய சிரசிலே கடைசி காலத்தில், ஜீவ கிரீடத்தின் ஒளி பிரகாசியாமற் போகாது. "சிலுவையின்றி ஜெயமில்லை. கிரீடமுமில்லை."

## தியானம்.

## MEDITATION.

*நமது சிலுவையும் இயேசுவின் சிலுவையும் ஒன்றல்ல. இயேசு தமது சிலுவையின்மேல் பாவத்துக்காக மரித்தார். நமது சிலுவையின்கீழே நாம் பாவத்துக்குச் சாகிறோம். நமக்கு முன்மாதிரியாக கிறிஸ்து தமது சிலுவையைச் சுமந்தார். நமது பலியும் மீட்பருமாக அவர் தமது சிலுவையில் சுமக்கப்பட்டார்.*

———:o:———

## VII-ம் பாடம்.

## STUDY VII.

## சீஷனும் உண்மையும்.

## THE DISCIPLE AND SINCERITY.

4. **சீஷனானவன் இருதயத்தில் உண்மை (Sincerity) யுள்ளவனுயிருக்கவேண்டும்.**

கர்த்தர் மாய்மாலத்தையும் வஞ்சகங்களையும் அரோசித்தார். அவர் வாயிலிருந்து பிறந்த மகா பயங்கரமான சாபவார்த்தைகளெல்லாம் மாய்மாலம் நிறைந்த வேதபாரகர் பரிசேயருக்கு விரோதமாய்த்தான் கூறப்பட்டன. வேறெந்த நூல்களிலும் இவ்வளவு பயங்கரமான சாபவார்த்தைகள் காணமுடியாது. (மத். 23: 13; லூக். 11:

Digitized by Google

44.) வஞ்சகம் தன்னில்தானே மிகவும் கேடாயிருப்பதுமாத்திர மல்ல, ஆயிரக்கணக்கான பாவத்திற்கும் அதுவேஉற்பத்தி. அது சன் மார்க்க நிலைமையும் கெடுத்து ஆத்துமாமுழுவதையும் சீரழித்துப் போடும்.

தேவனுடைய இராச்சியத்தைவிட்டு மனிதரை அப்புறப்படுத்தி அவர்களை நரகத்தின் புத்திரராக்கிவிடுகிறது வஞ்சகமே. (மத். 23: 15.)

மலைப்பிரசங்கத்தில் ஆண்டவர் ஆவிக்குரிய ஜீவியத்தில் தெளி வான உண்மையின்னதென்று காட்டும்படி மாய்மாலத்திற்கு இடமா யிருக்கிற மூன்று காரியங்களுக்கு விரோதமாய் மூன்று குறிப்புகளை வற்புறுத்திக்காட்டினார்.

(a) மத். 6: 2—4ல் அவர் சீஷரைப்பார்த்து மனுஷர் காண வேண்டுமென்று தர்மஞ்செய்யக்கூடாதென்று கற்பித்தார். நமக் குள்ள நிலைமையை மறைத்து, டம்பமாகக்காட்டுவதற்கு தர்மம் இலே சான வழிதான். மனுஷர் தாங்கள் அதிகமான தர்மத்தைச் செய்கிற தை மற்றவர்கள் கண்டு தங்களைப் புகழ்ந்துகொள்வதை விரும்புகிறார் கள். தாங்கள் செய்வதற்கெல்லாம் மனிதரிடமிருந்து புகழ்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அநேகர் விரும்புகிறது மாத்திர மல்ல, தாங்கள் பெறவேண்டியதற்கு மிஞ்சியும் புகழடைய விரும்புகி றார்கள். மனிதர் புகழ்ச்சியை இப்படி நாடுவது மாய்மாலத்திற்கல்ல, சாதாரணமான எந்தச் சீஷனும் இந்தச் சோதனையில் விழுந்து அமிழ்ந்திப்போவான் என்று கர்த்தர் கண்டு அவர்களை ஏற்கனவே எச்சரித்து வைத்தார். ஒரு நாள் ஆண்டவர் தேவாலயத்தில் கா ணிக்கைப்பெட்டியண்டை நின்று, அங்கே காணிக்கைபோடுகிறவர் களின் இருதயத்தை ஆராய்ந்துபார்த்தார் பார்வைக்குப் பரிசுத்த வான்களாய்த் தங்களைக் காண்பித்த ஐசுவரியவான்களின் டம்பமான காணிக்கைகளின்பேரில் வெறுப்புற்றார். அந்தச்சமயத்தில் ஏழை யான ஒரு விதவை வந்து உற்சாகமாய் உண்மையான மனதோடே தனக்கிருந்த ஒரே யொரு துட்டைக்கொண்டுவந்து காணிக்கையாகப் போட்டாள். தனக்குள்ளதை அவள் தேவனுக்குக் கொடுத்தாள். தன் வறுமையைக் குறித்து அவள் ஒன்றும் சொல்லவில்லை. அதிக தேவபக்தியுள்ளவளென்று தன்னைக் காட்டவுமில்லை. கர்த்தர் இதை நன்றாயறிந்து அவளைப் புகழ்ந்துகொண்டு அவளுடைய உண் மையும் நன்றியறிதலுமான காணிக்கையைக்குறித்து பூலோகத்தா ரெல்லாருக்கும் தெரிவித்து அவளை மகிமைப்படுத்தினார். மரியாள் இயேசுவுக்கு அன்பான காணிக்கை செலுத்தியபோது, தரித்திரர் பேரில் அதிக கவலையுள்ளவன்போல நடித்த யூதாசின் மாய்மாலத்

Digitized by Google

திற்கும் இந்த ஏழை விதைவையின் உண்மைக்கும் எவ்வளவோ வித்தியாசம்! கர்த்தரோ வஞ்சகத்தையும் அறிந்துகொண்டார் தாரை ஊதுவியாமலும் பிறர் புகழ்ச்சியை நாடாமலும் அந்தரங்கத்தில் செய்கிறவனுக்கு வரும் ஆசீர்வாதங்கள் இன்னதென்று இயேசு கூறினுர். "அந்தரங்கத்தில்பார்க்கிற உன்பரமபிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்."

## தியானம்.

## MEDITATION.

உண்மை பக்திக்கு உறைகல், அதில்லாமல் ஆவிக்குரிய ஜீவியம் செய்ய முடியாது. உண்மையின்மை மார்க்கத்தின் காக்காப்பொன். அலங்காரத்துக்கு உற்பத்தியும் ஆவிக்குரிய எல்லா ஈவுகளுக்கும் சத்துருவுமானது. மற்றவர்கள் காணவேண்டுமென்று சற்றுகிலும் விரும்பாமலும் தங்களுக்குரிய புகழ்ச்சிக்கு மிஞ்சிய புகழ்ச்சி கிடைக்கும்படி ஆசைப்படாமலும் செய்யப்படுகிற கிறிஸ்தவ முயற்சிகளும் செலுத்தப்படுகிற காணிக்கைகளும் எத்தனை.

———:o:———

# VIII-ம் பாடம்.

# STUDY VIII.

## சீஷனும் உண்மையும் (தொடர்ச்சி).

## THE DISCIPLE AND SINCERITY (*Continued*).

(*b*) 4—15 வாக். ஜெபத்தில் மாய்மாலங்காட்டுகிற தீமையைக்குறித்து இதிலும் அதிகத்தெளிவாய்க் காட்டினுர். பக்திக்குரிய வேறெந்த ஆசாரத்தைப்பார்க்கிலும் தேவனேடு நெருங்கின இந்த ஜெப பழக்கந்தான் மாய்மாலமும் வம்புமற்றதாயிருக்குமென்று ஜனங்கள் நினைப்பது சகஜம். ஆயினும் இதுவுங்கூட வீண் வசனிப்பாய் மாறிவிடுமென்று பரிசேயருடைய வழக்கத்தைக்கொண்டு சொன்னுர். ஜெபத்திற்கு மறுமொழி கிடைக்குமென்று இந்துக்களைப்போலவே யூதரும் கிறிஸ்தவர்களும் விசுவாசிப்பார்களென்று அவருக்குத்தெரியும். ஒரு இந்து தன் மந்திரங்களையும் அரிஹர என்ற வார்த்தையையும் அடிக்கடி உச்சரிப்பதினுல் தன் தேவர்களிடம் அதிகமான புண்ணியம் சம்பாதித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிருன். ரோமான் மதத்தைச்சேர்ந்தவனும் அப்படியே, தன் ஜெபமாலையை உருப்போட்டுக்கொண்டே அவிமரியாள் அவிமரியாள் என்று திரும்பத்திரும்பச்சொல்லுவதினுல்தனக்குஆசீர்வாதங்கள்பெருகிக்கொண்

Digitized by Google

டே போகுமென்று நினைக்கிறான். நமது கிறிஸ்தவர்களுங்கூட அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நம்பி மோசம்போகிறார்கள். இப்படிப்பட்ட ஜெபங்கள் தேவனை நோக்காமல் மனிதரை நோக்கிக்கொண்டேயிருக்கின்றன. இது வெறும் மாய்மாலமும் டம்பமுமே. இப்படிப்பட்ட ஜெபம் தேவனிடத்தில செல்லாது. அதைச் செல்லுகிறவர்களின் வாய்க்கு அப்பால்தானும் போகாது. பிதாவானவர் கேட்டு மறுமொழிகொடுக்கிற ஜெபமே உண்மையுள்ள ஜெபம். இப்படிப்பட்ட ஜெபம் பகிரங்கமானதாயிராமல் தேவன்மாத்திரம் இருதயத்தையறிந்து சத்தத்தைக் கேட்கக்கூடிய அந்தரங்கமான இடத்தில் செய்யப்படும். ஆகையால் ஆண்டவர்: நீயோ ஜெபம் பண்ணும்போது உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து உன் கதவைப் பூட்டி அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு, அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார் என்றார்.

## தியானம்.

## MEDITATION.

நமது ஜெபங்களை அலங்கரிக்கும்படி செல்லுகிற அநேகம் வெறும்வார்த்தைகளை தேவன் நமக்கு மன்னிக்கிறார். இருதயத்திலிருந்து வராத வார்த்தைகளை உபயோகித்துக் காதுக்கினிமையான பொய்யான வசனிப்பாகிய பொய்யாகிய வஸ்திரத்தால் நமது ஆவிக்குரிய குறைவுகளை மூடி ஜெபத்தில் நேர்மையின்மையைக் காட்டுகிற சோதனைதான் சாதாரணமாய்க் காணப்படும் சோதனை.

———:o:———

## IX-ம் பாடம்.

## STUDY IX.

## THE DISCIPLE AND SINCERITY (*Concluded*.

## சீஷனும் உண்மையும் (முடிவு).

(*c*) உபவாசிக்கிற விஷயத்திலும் உண்மையிருக்கவேண்டுமென்று காட்டினார். (வாக். 16—18.) உபவாசிக்கவேண்டுமென்று நமது கர்த்தர் தமது சீஷருக்குக் கட்டளையிடவேயில்லை. ஆனால் உபவாசிக்கப் பிரியமானவர்கள் மனிதர் பார்க்கவேண்டுமென்றல்ல, தேவனுக்கென்றே கபடில்லாமல் செய்யவேண்டுமென்று போதித்

Digitized by Google

தார். மனிதர் பார்த்து வியந்துகொள்ளவேண்டுமென்று உபவாசியாதிருங்கள். இருதயத்தை ஒடுக்கித் தாழ்த்தவேண்டுமேயொழிய சாப்பிடாமல் இருந்துகொண்டு முகவாடலாய் இருப்பதினால் யாதொரு பிரயோஜனமுமில்லை. தேவனுடைய பார்வையில் அது பாவம். மனிதர் பார்த்து புகழ்ந்துகொள்ளும்படிக்கு நீங்கள்காட்டுகிற உங்கள் உபவாசகுறிப்புகளைப்பார்க்கிலும் உங்கள் உள்ளான துக்கத்தை மறைக்கும்படி நீங்கள் காண்பிக்கும் சந்தோஷமும் களிப்பும் உத்தமம் என்று அவர் சொன்னாற்போலிருந்தது. நீயோ உபவாசிக்கும்போது அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல் அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக உன் தலைக்கு எண்ணெய் பூசி உன் முகத்தைக் கழுவு.

இந்த மும்மடியான போதனையில், சீஷனானவன் தன் ஆவிக்குரிய ஜீவியம் சடங்குகளெல்லாவற்றையும் மனிதருடைய உள்ளிந்திரியங்களை ஆராய்ந்தறிகிற தேவனுக்கென்றே உண்மையாய்ச் செய்யக்கடவன் என்ற பெரிய பாடத்தை கர்த்தர் கற்பித்தார். மனிதருடைய புகழ்ச்சியைத் தேடலாகாது. ஒருவருடைய பக்திமுயற்சியின் உள்ளான ஆழ்ந்த நோக்கத்திற்குத்தக்கதாக மாத்திரம் தேவன் பலனளிக்கிறார். சீஷனுடைய உள்ளத்திலே உண்மை (Sincerity) யிருக்க வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். மாய்மாலத்திற்கும் வஞ்சகத்திற்கும் எதிரிடையான உண்மையே ஒவ்வொரு சீஷனுக்கும் முதற்காரியமாயிருக்கவேண்டும். "சத்தியத்தையறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்றார். (யோ. 8: 32.) தேவனுடைய சமூகத்தில் ஒருவன் உண்மையாயிருந்தால் அதுவே அவனுக்கு ஆத்தும விடுதலையையும் சமாதானத்தையும் கொடுக்கும். "உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங் காலம் வரும்; அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்." (யோ. 4: 23.)

## தியானம்.

### MEDITATION.

இந்த உண்மையில்லாத புத்தியீனமென்னவென்றால், தேவனைப் பிரியப்படுத்துகிறதற்குப் பதிலாக மனிதனைப் பிரியப்படுத்தப் பார்ப்பதே.

உபவாசிப்பது நல்லதென்று நீ கண்டால், இருதயத்தைப் பார்த்து பதிலளிக்கிற தேவனுக்குப் பிரியமாயிருக்கிறதற்காக உன் உபவாசம் இருக்கட்டும். இரட்டுடுத்திக் சாம்பலிலிருந்த நீண்டமுகமுள்ள பரிசேயன், தற்காலத்து திரனான மாய்மாலக்காரருக்கு முன்னடையானமே.

Digitized by Google

## X-ம் பாடம்.
## STUDY X.

# சீஷனும் ஊழியத்தில் உண்மையும்.
## THE DISCIPLE AND FAITHFULNESS.

5. சீஷனானவன் ஊழியத்தில் உண்மை (Faithfulness) யுள்ளவனாயிருக்கவேண்டும். இது சீஷனிடத்தில் காணப்படவேண்டிய மூலக்குறிப்புகளில் ஒன்று. உக்கிராணக்காரனிடத்தில் காணப்படவேண்டிய பிரதானலட்சணம் இதுவேயென்று இயேசு போதித்தார். (மத். 25: 21.) ஒலிவமலையில் ஆண்டவர் தமது சீஷர்களுக்குத் திருவுளம்பற்றின அந்த மூன்று உவமைகளின் மூலச்சொல் உண்மையே.

(a) பத்துக்கன்னிகைகளைக்குறித்த உவமையில் (மத். 25: 1—13), சீஷன் தனக்குத்தானே உண்மையுள்ளவனாயிருக்கவேண்டுமென்றகடமையை அழுத்திக்காட்டுகிறார். மனிதர் தங்களை எவ்வளவு இலேசாய் வஞ்சித்து மோசத்திற்குட்பட்டுப்போகிறார்கள். தேவனுக்கு முன்பாக தங்கள் இருதயத்தின் நிலைமையை யுணர்ந்து தங்களைத் தாங்களே உற்று ஆராய்ந்து அறியாமல் கடைசிகாலத்தில் தீமைசம்பவிக்கும் வரைக்கும் தங்கள் மனச்சாட்சியை அமர்த்தி அடக்கிப்போடுகிறார்கள். புத்தியில்லாக் கன்னிகைகள் மணவாளனுக்காக எல்லாவற்றையும் ஆயத்தம்பண்ணினார்கள். ஆனால் ஒன்றை மறந்துபோனார்கள். இந்தக்குறைவு அற்பமானதல்ல. அது எண்ணெயை ஏற்கனவே அவர்கள் சவதரிக்கிறதற்குப் பதிலாக மணவாளன் வரும்போது எந்த வகையாலாவது எண்ணெய் வாங்கிக்கொள்ளலாமென்றோ அல்லது எண்ணெய் அவசியமாயிருக்கமாட்டாதென்றோ அவர்கள் புத்தியீனமாய் நினைத்தார்களாக்கும்!

எத்தனையோபேர் இவ்விதமாய்த் தங்கள் கடமையில் உண்மைக் குறைவுள்ளவர்களாயிருக்கிறார்கள். தேவனோடு சமாதானம்பண்ணி தங்கள் இருதயமாகிய தீபத்திற்கு எண்ணெய் வார்க்காமலிருந்துகொண்டு அநேக வீணான சாக்குப்போக்குகளினால் காலதாமதம் செய்கிறார்கள். கடைசியிலோ மணவாளன் வந்துவிடுகிறார். சமையம் போய்விட்டது. ஆக்கினைத்தீர்ப்பு விதிக்கப்பட்டு முத்திரையும் இடப்பட்டது.

(b) பரம எஜமானிடம் உண்மை காட்டல் (அதி. 25: 14–30). தாலந்தின் உவமைகள் பரம எஜமானுக்கு சீஷன் செய்யவேண்டிய உண்மையான கடமையைத் தெரிவிக்கிறது. எஜமான் ஊழியக்

Digitized by Google

காரனை அழைத்து அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக சில தாலந்துகளை ஒப்புவித்துத் தானில்லாத காலத்தில் ஒவ்வொருவனும் உண்மையுள்ள உக்கிராணக்காரனுயிருக்கவேண்டுமென்று சொல்லிவிட்டுத் தூரதேசம் போகிறுன். எஜமான் வந்தபோது அவர்களில் இரண்டுபேர் தங்கள் உண்மையுள்ள ஊழியத்தின் பலனை அவனிடம் ஒப்புவித்தார்கள். எஜமான் சந்தோஷப்பட்டு ஒவ்வொருவனையும் பார்த்து: நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அனேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றுன். பரமஎஜமான் சிலபல வரங்களையும் ஆசீர்வாதங்களையும் ஒவ்வொரு சிஷனுக்கும் கொடுத்திருக்கிறுர். அவைகளைக் கொண்டு அவர்கள் பெரும்பெரும் காரியங்களை நடப்பிக்கவேண்டுமென்று அவர் கூறுகிறதில்லை. அவன் தன் கடமையில் உண்மையுள்ளவனுய் மாத்திரம் இருக்கவேண்டுமென்று விரும்புகிறுர். அவனவனுடைய உண்மைக்குத்தக்கதாகத்தான் கடைசிநாளில் தன் பரம எஜமானிடத்தில் வாழ்த்துதல் பெறுவான். ஒவ்வொருவனிடத்திலும் எஜமான் கணக்குக் கேட்பார். ஒரு தாலந்தை வாங்கினவன் சொற்பத் திராணியுள்ளவனுயிருந்தாலும் தன் எஜமானின் ஊழியத்தில் உண்மையுள்ளவனுய் இருந்திருந்தால் அவனுங்கூட அருமையான வாழ்த்துதலுடன் ஏற்றுக்கொள்ளப்படுவான்.

## தியானம்.

## Meditation.

உண்மை நல்ல ஜீவியத்தின் முதற்பிரமாணம். ஒவ்வொருநாள் ஜீவியத்திலும் வரும் பற்பல விஷயங்களுக்கும் செலுத்தப்படும் சரியான கவனமே உண்மையாகும். தேவன் ஒவ்வொருவனிடத்திலும் போட்டுவைத்திருக்கிற முதலுக்கு நியாயமான வட்டிதான் கேட்கிறுர். அது அதிகமாயிருந்தாலுஞ்சரி கொஞ்சமாயிருந்தாலுஞ்சரி முதலும் வட்டியும் சேர்த்து நாம் அவரிடத்தில் திரும்பக் கொடுக்கும்போது நாம் உண்மையுள்ளவர்களாய்க் காணப்படவேண்டுமென்பதே அவா கேட்கும் காரியம்.

———:o:———

Digitized by Google

## XI-ம் பாடம்.
## STUDY XI.

## சீஷனும் ஊழியத்தில் உண்மையும் (முடிவு).
## THE DISCIPLE AND FAITHFULNESS (*Concluded*).

### (c) மனிதருக்குச் செய்யும் ஊழியத்தில் உண்மை.

கடைசி நியாயத்தீர்ப்பைக்குறித்த உவமையில் அநேக விசேஷித்த போதனைகள் உண்டு. உடன் தோழர்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமையில் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும் என்பதைப்பார்க்கிலும் மேலான போதனை இதில் அழுத்திச் சொல்லப்படவில்லை. அந்த மேலான கடமை அன்பு என்னும் ஒரே வார்த்தையிலடங்கும். நமது உடன் சகோதரரில் மிகவும் சிறியவர்களுக்கு நாம் அன்பு பாராட்டுகிறதற்குத்தக்கபடி நமக்குக் கடைசி நியாயத்தீர்ப்புச் செய்யப்படும். நமது எஜமான்களுக்கும் உடன் ஒத்தவர்களுக்கும் நமக்குச் சமமான இஷ்டர்களுக்கும் செய்யும் உபசாரங்களின் நிமித்தமாக நாம் நம்மை தயாளசிந்தையுள்ளவர்களென்று எண்ணி மோசம் போகிறோம். ஆனால் நம்முடைய கிரியைகளை உற்று ஆராய்ந்து பார்க்கையில் அவைகளில் அன்பில்லை. அவைகள் அனேகமாய் லோகோபசாரமும் தன்னயமும் நிறைந்தவைகள். நல்ல நிலைமையிலிருக்கிற அயலகத்தான் ஒருவனுக்கு ஒரு உபகாரம் செய்யும்பொழுது தான் அவனிடமிருந்து முன்னே பெற்றுக்கொண்ட நன்மைகளை நினைத்து, அல்லது இனிமேல் தான் அவனிடம் பெற்றுக்கொள்ளப் போகிற உதவிகளைக் கருதி, அல்லது ஜனசங்கத்துக்குரிய கடமைகளை நிறைவேற்றவேண்டுமேயென்று எண்ணிச்செய்கிறதேயல்லாமல் அன்பினால் மற்றவர்களுடைய க்ஷேமத்தைக் கருதுகிறது அபூர்வம். அப்படியானால் அவனுக்கும் அவனுடைய அயலகத்தானுக்குமுள்ள சம்பந்தத்தை நாம் அறிவது எப்படி? சுயநய நாட்டத்தினால் ஏவப்பட்டுச் செய்கிறானோ, பிறர்நன்மை தேடுகிற வாஞ்சையோடே செய்கிறானோ? எளியவர்களுக்கும் உதவியற்றவர்களுக்கும் தாழ்ந்தவர்களுக்கும் இவன் செய்யும் அன்பின் கிரியைகளினால் இதை நாம் அறியவேண்டும். நமது குலத்தைச்சேர்ந்த இவ்வகை ஏழையனாதிகளைப் பட்சமாய் நடத்தி, நம்மையும் நமது பணத்தையும் அன்போடும் தயாளசிந்தையோடும் அவர்களுக்குத் தத்தம்செய்கிறோமா? அப்படிச் செய்வோமானால் நமது சமுதாயக்கடமைகளில் நாம் பாராட்டும் உண்மை சந்தேகிக்கப்படத்தக்கதாயிராது. "மிகவும் சிறியவராகிய என்

சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்குச் செய்தீர்கள்." சிறியவர்களுக்காகவும் ஏழை எளியவர்களுக்காகவும் நீங்கள் எடுத்துக்கொண்ட பிரயாசங்களையும் உடன் தோழர்களுக்கு செய்யவேண்டிய கடமைகளில் நீங்கள் காண்பித்த உண்மையான உங்கள் அன்பையும் நான் அறிந்து அவைகளை ஏற்றுக் கொண்டேன். அவர்களுக்கு எவைகளைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அற்ப காரியங்களில் உண்மை காட்டுவது மகா விசேஷம். மிகுதியானபேர் இதில் தவறிப்போகிறார்கள். பெருங்காரியங்களில் உண்மை செலுத்திவருவது அவர்களுக்கு ஆசைதான். ஆனால் ஜீவியத்தின் அன்றாடக கடமைகளில் அற்பமாய் எண்ணப்படும் காரியங்களில் உண்மைத்தாழ்ச்சி காட்டுகிறார்கள். கிறிஸ்தவர்களின் ஜீவியத்திலே இதற்கு ஒப்பான சோதனையும் தீமையும் வேறில்லை. இதைத்தவிர வேறொன்றும் கிறிஸ்தவர்களின் அனுகூலத்தைக் கெடுத்து நாசப்படுத்துகிறதில்லை. "கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் அநேகத்தில் உண்மையாயிருக்கிறான். கொஞ்சத்தில் அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்" என்று கர்த்தர் சொல்லுகிறார். (லூக். 16: 10). ஒருவனுடைய ஜீவியம் நல்லதோ கெட்டதோவென்று காட்டுவது அவன் செய்யும் பெருத்தகாரியங்களல்ல. ஒவ்வொருநாளும் அவனுக்குக் கிடைக்கும் உத்திரவாதமான சிறுசிறு கடமைகள்தான். உள்ளபடி சொன்னால் மனிதனுடைய ஜீவியத்திலே அற்பமானதென்பவைகளில்லை. அற்பமாய்க் காணப்படுகிறவைகளுங்கூட அவனுடைய ஜீவியத்தில் அஸ்திபாரமட்டும் சென்று அவனுக்கு நன்மை அல்லது தீமைசெய்யும்

## தியானம்.

## MEDITATION.

"எனக்கே அதைச் செய்தீர்கள்," ஆச்சரியமான வார்த்தைகள்! தாழ்ந்தவர்களுக்காகச் செய்யும் ஊழியம் இயேசுவுக்காகச் செய்யும் உயர்ந்த ஊழியம். மிகவும் சிறியவர்களான என் சகோதரர்கள் என்னப்பட்டவர்களுக்குள்ளே நாம் அவரைக் காண்கிறோம். அவர்களுக்குச் செய்யும் ஒவ்வொரு நன்மைக்கும் அவரே பலனளிக்கிறார்.

ஜீவியத்தின் எந்தக் கிரியையும் முக்கியமற்றதென்று சொல்லுவது மனிதனுடைய சுத்தப்புத்தியீனம். ஒவ்வொரு வார்த்தையும், செய்கையும் நித்தியத்தில் வேரூன்றியிருக்கிறது; அது தரும் இன்பக்கனி, அல்லது கசப்புக்கனி, மறுமையில் சந்தோஷத்தை அல்லது துக்கத்தைக் கொண்டுவரும்.

———:o:———

Digitized by Google

# XII-ம் பாடம்.

# STUDY XII.

## சீஷனும் ஜெபமும்.

## THE DISCIPLE AND PRAYER.

சீஷனானவன் ஜெபவாஞ்சை யுள்ளவனாயிருக்கவேண்டும். ஆத்துமா தேவனிடத்தில் சார்ந்திருப்பதைக் காட்டும் அடையாளம் ஜெபந்தான். ஜெபத்தின் மூலமாய் ஒருவன் தேவனிடத்தில் கிட்டிச்சேர்ந்து அவரோடு ஐக்கியமாகிறான். ஆத்துமாவுக்கு வேண்டிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுகிறதற்கு ஏற்றவழி ஜெபந்தான்.

தேவன் ஜெபத்தைக்கேட்கிறாரா? சந்தேகப்படுகிற கிறிஸ்தவர்களுங்கூட இப்படிப்பட்டகேள்வி கேட்கிறதுண்டு. தேவன் தம்முடைய பிள்ளைகளின் ஜெபத்தைக்கேட்டு மறுமொழிகொடுக்கிறதற்காக இயற்கைப் பிரமாணத்தை மீறுவார்என்பதே இவர்களுடைய கலக்கம். இதற்கு ஒரேயொரு மறுமொழிதான் உண்டு. தேவன் இயற்கைப் பிரமாணத்தை மீறமாட்டார். ஆனால் இந்தப்பிரமாணங்களை உபயோகிக்க அவருக்கு வல்லமையுண்டு. அப்படியே தம்முடையவர்களின் ஜெபத்தைக் கேட்பதில் அவர் அவைகளை இடைவிடாமல் உபயோகித்தும் வருகிறார். அவர் தம்முடைய ஜனங்களின் ஜெபத்திற்கு மறுமொழியாக அப்படிப்பட்ட காரியங்கள் நடக்குமென்று அவர்களுடைய ஜீவியத்தில் காட்டுகிறார். சகல தேசத்தாரான தமது ஜனங்களின் ஊக்கமான வேண்டுதலுக்கு இசைவாக இயற்கைப்பிரமாணங்களை அவர் உபயோகித்து வருகிறார் மனுஷன் இந்த இயற்கைப்பிரமாணத்தை மீறாமல் ஒருவனுக்கொருவன் உதவி செய்யக்கூடுமானால் இந்த இயர்கையைச் சிருஷ்டித்து ஆண்டு நடத்துகிறவர் தமது பிள்ளைகள் தம்மை நோக்கிக்கூப்பிடும்போது அதைச் செய்யக்கூடாதவரா? கிறிஸ்து தாமே ஜெபபுருஷனாயிருந்தார். பிதாவோடே அவர் ஓயாமல் சகவாசம் செய்துவந்தார். அவரது ஜெபப்பழக்கமே மிகவும் பலமுள்ளதாயிருந்தது. சில சமயங்களில் இராமுழுவதும் பிதாவோடே ஜெபத்தில் தரித்திருந்தார் என்று வாசிக்கிறோம். கெத்சமனே தோட்டம் அவருக்கு வழக்கமான ஜெபஸ்தலமாயிருந்தது. (யோ. 18: 2.) அந்தவிசேஷமான இரவில் அவர் கெத்சமனே தோட்டத்தில் ஒலிவமரங்களினிழலடியில் மகாகொடூர வேதனையுடன் ஜெபஞ்செய்தாரென்று பார்க்கிறோம்.

Digitized by Google

## தியானம்.
## MEDITATION.

*ஜெபத்தின் உறுதியையும் அதன் வல்லமையையும் சந்தேகிப்பது ஒருவன் தன் ஆவிக்குரிய குறைவை அறிக்கையிடுவதாகும். குருடன் இயற்கையின் அழகையும், செவிடன் பாட்டின் தேற்சியையும் மறுப்பதுபோலாகும்.*

*ஒருகாலம் ஜெபம்பண்ணுதவன் மனிதனிலும் சிறியவன். அவன் எக்காலத்திலுமுள்ள மிகவும் நல்லோரடைந்த சந்தோஷமாகிய ஆவிக்குரிய வெளிச்சத்தினின்றும் ஆசீர்வாதத்தினின்றும் அடைக்கப்பட்டவன்.*

———:o:———

## XIII-ம் பாடம்.
## STUDY XIII.

### சீஷனும் ஜெபமும் (தொடர்ச்சி).
### THE DISCIPLE AND PRAYER (*Continued*).

(*a*) *ஜெபத்தினவசியமும் ஆசீர்வாதமும் இன்னதென்று இயேசு தாமே அனுபவமாய் அறிந்து தமது சீஷர்களுடைய ஜீவியத்திற்கு அது மெத்தவும் தேவையானதென்று போதித்தார். "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்" (மத். 26: 41; மாற். 13: 33). ஜெபத்தின் வழியாய் நாம் பெற்றுக்கொள்ளும் ஆவிக்குரிய போஜனம் நமக்குச் சமாதானத்தையும் சந்தோஷத்தையும், எந்த பலத்த சோதனையையும் ஜெயித்து மேற்கொள்ளுகிறதற்கான வல்லமையையும் கொடுக்கும்.*

(*b*) *சீஷர் கேட்டுக்கொண்டபடி, ஜெபம்பண்ணவேண்டியவிதம் இன்னதென்று அவர் அவர்களுக்குப் போதித்தார். (மத். 6: 9; லூக். 11: 1, 2) தாம் அவர்களுக்கு அந்தச் சமையத்தில் சொல்லிக்கொடுத்ததும் அநேக நூற்றுண்டுகளாய் கோடிக்கணக்கான சீஷர்களின் ஜீவியத்திற்கு சுவாசாதாரமாயிருந்ததுமான இந்த ஒப்பற்ற ஜெபம் வாஞ்சையுள்ள ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் ஏற்றதாயும் திருப்திகரமானதாயும் இருக்கிறது. இந்த ஜெபத்தில் முதற்பாகம் தேவனையும் அவர் இராச்சியத்தையும் குறித்த மூன்று விண்ணப்பங்களும்,*

Digitized by Google

இரண்டாம் பாகம் ஜெபிக்கிறவனுடைய ஆத்துமாவுக்கடுத்த மூன்று விண்ணப்பங்களும் அடங்கியிருக்கிறது. முந்தினது தேவமகத்துவமும் மனிதருடைய வாழ்வுக்கென்று அவர் உண்டாக்கியிருக்கும் சகல ஏற்பாடுகளும் சதாகாலமும் உலகமெங்கும் பெருகவும், பிந்தினது ஜெபிக்கிறவன் பூமிக்குரிய ஆசீர்வாதங்களையும் முன்செய்த பாவங்களுக்கு பாவமன்னிப்பையும் இனிமேல்வரும் சோதனைகளை வெல்லத் தக்க உதவியையும் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திக்க ஏவுகிறது.

(c) எந்தெந்த நன்மைகளுக்காக நாம் ஜெபிக்கவேண்டும்? சோதனைக்குட்படாமலிருக்கும்படி வேறொரு இடத்திலும் போதித்தார். சோதனை நிறைந்த உலகத்தில் நாம் வசிக்கிறோம். பொல்லாங்கனின் வலைகள் நம்மைச் சூழ்ந்திருக்கின்றன. ஆகையால் நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார். (மத். 26: 41) உலக இன்பம் புறம்பேயிருந்து நம்மை இழுத்துக் கொள்ளப் பார்க்கிறது; நமது மனது சிற்றின்பத்திற்கு இலேசாய் இடங்கொடுக்கக்கூடியதாயிருக்கிறபடியால் அதைமேற்கொள்ளுவது மெத்த வருத்தந்தான். ஆகையால் ஆத்துமா எப்போதும் விழிப்பும் ஜெப சிந்தையுமுள்ளதாயிருக்கவேண்டும்.

சத்துருக்களுக்காகவும் ஜெபிக்க இயேசு போதித்தார். பகை சாதிப்புக்கு முறிவு இதுதான். பகையென்னும் நோயைத் தீர்க்கும் ஔஷதம் இதுவே. கிறிஸ்தவன் தீமைக்குத்தீமைசெய்யாமல் மன்னிக்கும் சிந்தையோடு பகைஞருக்காக ஜெபித்து துன்பத்தை வெல்லவேண்டும். மத். 5: 43—48.)

தேவனுடைய இராச்சியத்தின் வருகைக்காகவும் ஜெபிக்க ஆண்டவர் போதித்தார். உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக என்று ஜெபிக்கச் சொன்னது மாத்திரமல்ல, அநேக ஆத்துமாக்கள் அவரது இராச்சியத்தில் கூட்டிச்சேர்க்கப்படுவதற்காகவும் சீஷர்கள் ஜெபிக்கவேண்டும் என்றார். அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், ஆதலால அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார். (மத். 9: 37, 38.) திரளான ஜனங்கள் தம்மைத் தேடிவந்தபோது அவர்கள் ஆவிக்குரிய போதனையற்று ஆத்தும பசிதாகம் நிறைந்தவர்களாயிருந்ததைக்கண்டு அவர்கள்மேல் மனதுருகி அவர்களுக்காக ஜெபிக்கும்படி சீஷர்களுக்குக் கற்பித்தார். அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல தொய்ந்துபோனவர்களும் சிதறடிக்கப்பட்டவர்களுமாயிருந்தபடியால் அவர்கள்மேல் மனதுருகினார். (வாக். 36.)

Digitized by Google

## தியானம்.

## MEDITATION.

*கர்த்தருடைய ஜெபம் என்று நாம் சொல்லுகிறதை எம்மட்டுக்கு நம்முடையதாக்கியிருக்கிறோம்? அது இருதயத்தின் வாஞ்சையைத் தெரிவிக்கும் ஜெபமாக இருக்கிறதா? நமக்கு மேலேயும் நமக்குப் பக்கத்திலும் நமக்குள்ளேயும் தேவனுடைய இராச்சியமானது நமது ஆத்துமா செய்யும் விண்ணப்பங்களின் பெரிய பொருளாயிருக்கவேண்டும்.*

*நீ தானாய்ச் செய்யும் ஜெபங்களின் தன்மையால் உன் பக்தியை அளந்து அதன் நிறத்தை அறிந்துகொள்ளக்கூடும். நமது நடக்கையைப்போல ஜெபமும் தன்னயமுள்ளதாயிருக்கக்கூடுமாகையால் அதைப்பற்றி விழிப்பாயிருக்கவேண்டும்.*

———:o:———

## XIV-ம் பாடம்.

## STUDY XIV.

## சீஷனும் ஜெபமும் (*தொடர்ச்சி*).

## THE DISCIPLE AND PRAYER (*Continued*).

(*d*) *பலிதமுள்ள ஜெபத்தின் தன்மையின்னதென்றும் ஆண்டவர் போதித்தார். பரலோகத்தின் தேவன் தமது செவியைச் சாய்த்து கேட்கத்தக்கதாகவும் மனிதருக்குப் பேர் ஆசீர்வாதங்களைக் கொண்டுவரத்தக்கதாகவும் சீஷன் தன் ஜெபத்தை ஏறெடுக்கவேண்டும். ஆகையால் சித்தியுள்ள ஜெபத்தின் இலட்சணங்கள் இன்னதென்று ஒவ்வொரு சீஷனும் கற்றுக்கொள்வது அவசியம்.*

1. *நமது ஜெபம் கபடற்றதாயிருக்கவேண்டும்.* (மத். 6: 7, 8.) *சிறு பிள்ளையைப்போலத் தெளிவாயும் தாராளமாயும் நமக்கு வேண்டியவைகளை பிதாவினிடத்தில் கேட்கவேண்டும். மட்டுக்குமிஞ்சின வார்த்தைகள் வேண்டாம். தன்னுடைய தேவையின்னதென்று காட்டத்தக்க வார்த்தைகளே போதுமானது. பசியுள்ள பிள்ளை தன் தாயிடத்தில் வளவளவென்று கேட்கிறதில்லை. தனக்கு வேண்டியதைத் தாபமாயும் குறிப்பாயும் கேட்கிறது. சீஷனானவன் தான் கேட்கும் ஆசீர்வாதத்தின வசியத்தை மிஞ்சின வார்த்தைகளினாலும் வீண் வசனிப்பினாலும் மறைத்துப்போடுகிறான்.*

2. *விசேஷித்த ஒரேகாரியத்தை நோக்கி அவன் நேராய் ஜெபிக்கவேண்டும். ஊக்கமான ஜெபத்தின் முக்கிய சங்கேதம் இது*

Digitized by Google

தான். மிஞ்சிய வார்த்தைகளில் ஜெபிக்கிறவன் தனக்கு வேண்டியது இன்னதென்று திட்டமாய் அறியாமல் வாயில் வந்ததையெல்லாம் கொட்டுகிறான். சித்தியுள்ள ஜெபத்திற்கு ஒரே நோக்கமும் ஒரே கருத்தும் ஒரே ஆத்திரமுமிருந்தால்தான் அது வல்லமைபொருந்தியதாயிருக்கும். வேட்டைக்காரன் ஒரே ஒரு குறிப்பை நோக்காமல் சுடவேமாட்டான்.

3. விசுவாசமே ஜெபத்திற்கு அவசியம் என்று ஆண்டவர் ஓயாமல் போதித்தார். "உன் விசுவாசத்தின்படி உனக்கு ஆகக்கடவது" என்பதே அவருடைய வழக்கமான சொல். "இதைச் செய்ய வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா? ............ உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது." (மத். 9: 28, 29.) "தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்............என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ அவைகளைப் பெற்றுக்கொள்ளுவோமென்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகுமென்று சொல்லுகிறேன்" என்றார். (மாற். 11: 22—24,) அப்போஸ்தலர் கர்த்தரை நோக்கி எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும் (லூக். 17: 5) என்று கேட்டது சரியே. ஜெபிக்கிறவன் தன்னுடைய விசுவாசத்தின் அளவுக்குத் தக்கதாகத்தான் தேவனிடத்தில் பலன் பெறுவான் என்று இயேசு காட்டினார்.

## தியானம்.

## MEDITATION.

மனிதனுடைய உதவி அற்றுப்போகும்போது தேவனுடைய கண்ணையும் கரத்தையும் அன்பையும் மனிதன் இழுக்கக்கூடியதான ஓர் வல்லமை உண்டு; அந்த வல்லமை ஜெபமே. அது இயேசுவின் மூலமாய்ச் சிங்காசனம் வரைக்கும் உன்னதத்துக்குப் பறந்துபோய், பூமியை அசைக்கிற கையை இரட்சிப்பைக் கொண்டுவரும்படி வசப்படுத்துகிறது.

———:0:———

## XV-ம் பாடம்.

## STUDY XV.

## சீஷனும் ஜெபமும் (தொடர்ச்சி).

## THE DISCIPLE AND PRAYER (*Continued*).

4. பலன்கிடைக்குமட்டும் விடாப்பிடியாய் ஜெபிக்கவேண்டுமென்று அநீதியுள்ள நியாயாதிபதியையும் விதவையையும் குறித்த உவமை

Digitized by Google

யின் மூலமாய் ஆண்டவர் வற்புறுத்திக்காட்டினார். (லூக். 18: 1—8.) உறுதியும் விடாப்பிடியுமான ஜெபத்திலேதான் ஒருவனுடைய உள்ளான பூரண உண்மை விளங்கும். ஒரு பெரிய ஈவுக்காக ஜெபிக்கிறவன்தான் பண்ணிய ஜெபத்தை ஒரு மணிநேரத்துக்குள் மறந்துவிட்டால் அவன் ஜெபம்பண்ணவில்லையென்றே சொல்லவேண்டும். அந்த ஜெபம் உள்ளான இருதயத்திலிருந்து வந்ததல்ல. நியாயாதிபதி நீதிசெய்யவேண்டுமென்று அந்த விதவை ஓயாமல் அவனைத் தொந்தரவு செய்தாள். தனக்கு நீதி கிடைச்குமட்டும் அவள் அவனைத் தொந்திரவு செய்தாள். தனக்கு நீதி கிடைக்குமட்டும் அவள் அவனை விடவில்லை. அவனை அலட்டிக்கொண்டேயிருந்தாள். யாக்கோபு இராமுழுதும் தேவனோடு போராடினான். ஒரு நன்மை, ஆசீர்வாதம் வேண்டுமானால் அது கிடைக்குமட்டும் விடாப்பிடியாய் அதைத்தேடவேண்டும். "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய நான் உம்மை விடமாட்டேன்" என்பதே மேற்கொள்ளுகிற வல்லமையான ஜெபம்.

தேவன் ஜெபத்தைக் கேட்க மனமற்றவரென்று இந்த உவமையைக்கொண்டு எவ்விதத்திலும் நினைக்கலாகாது. நாம் கேட்கப்பிரியமாயிருப்பதைப்பார்க்கிலும் அவர் கொடுக்க அதிகப் பிரியமாயிருக்கிறார். நாம் கேட்கிறதைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவர்களென்று விளங்குமட்டும் நாம் கேட்கிறதை நமக்குக்கொடாமல் நிறுத்தி நமது உறுதியையும் வாஞ்சையையும் அவர் சோதிக்க விரும்புகிறார். வேண்டுதல் கேட்கப்பட்டு மறுமொழி கிடைக்க எவ்வளவு காலஞ் செல்லுமோ அவ்வளவு காலம் பொறுமையோடே கேட்டு கடைசியில் கிடைத்தபொழுது சந்தோஷிக்கிறவனுடைய ஜெபமே பெலனுள்ள ஜெபம்.

## தியானம்.

## MEDITATION.

விடாப்பிடியாய் ஜெபியாதது விசுவாசக்குறைவே. மனிதகுமாரன் வரும்போது, "பூமியில் விசுவாசத்தைக் (ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும் விசுவாசத்தை) காண்பாரோ?"

நாம் செய்யும் அநேக ஜெபங்களுக்கு மறுமொழி கொடுக்க தேவன் இறங்குவாரானால், நமது அவிசுவாசத்தினாலே நமது இருதயங்கள் அடைக்கப்பட்டதாகக் காண்பார். எதற்காகவாவது எவ்வளவு காலம் வாஞ்சையோடு நீ ஜெபித்திருக்கிறாய்!

Digitized by Google

## XVI-ம் பாடம்.
## Study XVI.

### சீஷனும் ஜெபமும் (தொடர்ச்சி).

### The Disciple and Prayer (*Continued*).

5. சித்தியுள்ள ஜெபத்திற்கு மனத்தாழ்மை அவசியம். ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப்போன பெத்தரிக்கமுள்ள பரிசேயனையும் ஏழையான ஆயக்காரனையும் குறித்த உவமையில் ஆண்டவர் இதை நன்ருய் விளக்குகிருர். (லூக் 18: 9—14) "தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தாழ்த்துகிறவனெவனும் உயர்த்தப்படுவான்" ஜெபிக்கிறவன் தன்னை அபாத்திரனென்றும் பாபிஷ்டியென்றும் உணர்ந்து கிருபாசனத்தண்டை சேரவேண்டும். தனக்குக் கிடைத்திருக்கும் சித்திகளைக்குறித்தும் தன் திறமைகளைக் குறித்தும் பெத்தரிக்கமும் பேரெண்ணமுங்கொண்டு தேவனிடத்தில் ஒருவன் கிட்டிச்சேர்வது தீமையை விளைவிக்கும். ஜெபிக்கிறவன் இருக்கவேண்டிய இடம் தேவனுடைய பாதத்தண்டை கிடக்கும் புழுதியுள்ள இடமே. தன் கண்களை வானத்துக்கு ஏறெடுக்கத்துணியாமல் தன் பாவத்திற்காக உத்தம மனஸ்தாபப்பட்டுத் தன்னைத் தனைமட்டாகத் தாழ்த்தித் தனக்குவேண்டிய நன்மைகளைத் தேவனிடத்தில் கேட்பதே தாழ்மையுள்ள ஜெபம். இப்படிப்பட்ட ஜெபந்தான் வானத்திற்கேறிச்சென்று ஆசீர்வாதத்தையும் நன்மையையும் சோனைமாரியாய்ப் பெய்யச்செய்யும்.

6. கிறிஸ்துவின் நாமத்தினலே செய்யும் ஜெபம் பெலனுள்ளது. நீங்கள் என் நாமத்தினலே எதைக்கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன், என் நாமத்தினலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்." (யோ. 14: 13, 14.) கிறிஸ்துவினிமித்தம் நாம் மேலான முயற்சிகளைச் செய்கிறதுபோலவே நமது ஊக்கமான ஜெபங்களையும் அவரது நாமத்தினலேயே செய்யவேண்டும். அவரது நாமத்தை உச்சரித்து அதைச் சரியாய் உபயோகிப்பதே, நமது ஜெபம் கேட்கப்படும் என்பதற்கு உறுதிப்பாடாகிறது. பரம ஆசீர்வாத பாங்கிக்கு முதலாளி போட்டுக் கொடுக்கும் கையெழுத்து இதுவே. பரலோக சிம்மாசனத்தின்முன் இதற்கு எக்காலத்திலும் கண்ணியமுண்டு.

ஆனல் எல்லா மனிதருக்கும் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் இயேசுவின் நாமத்தைச்சொல்லி ஜெபிக்கப் பாத்தியமில்லை. நித்தம் மன


Digitized by Google

தாரப் பாவத்தை நடப்பித்து அவரைத் துக்கப்படுத்துகிறவனுக்குப் பரிசுத்தநாமத்தைச் சொல்லிக்கூப்பிட பாத்தியமுண்டென்று எண்ண இடமேது? இராஜ துரோகம்பண்ணின ஒருவனுக்கு ஒரு இராஜா தன் பெயரை உபயோகிக்க இடங்கொடுப்பானு? ஜெபத்தில் கர்த்தருடைய நாமத்தை வல்லமையாய் உபயோகிக்க ஒருவனைத் தகுதியாக்குவது என்னவென்ருல், அவன் கிறிஸ்துவுடன் ஐக்கியப்பட்டுத் தன் சித்தத்தை முற்றிலும் அவருக்கு ஒப்புக்கொடுப்பதுதான். தன்னுடைய எண்ணங்களையும் நோக்கங்களையும் கிறிஸ்துவின் சித்தத்திற்குக் கீழாக்கித் தன் ஜீவியத்தில் அவரது காரியத்தையே நிறைவேற்றும்படிக்குப் பலமாய் ஏவப்படும் ஆத்துமாவுக்குத்தான் அவரது நாமத்தைச் சொல்லவும் அவருடைய நாமத்தினுல் **கேட்டுக்கொண் வடுதேதுவோ** அது நிச்சயமாய்க் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அதை உபயோகிக்கவும் பாத்தியமுண்டு. கிறிஸ்து இப்படிப்பட்ட ஜெபங்களுக்கு யாதொரு நிபந்தனையுமின்றி நிச்சயமாய் மறுமொழி கொடுக்கிருர்.

## தியானம்.

## MEDITATION.

நமது ஜெபங்களின் முடிவிலே "இயேசுவின் நாமத்தினுலே" என்றவார்த்தைகளைக் கருத்தற்றதாக எத்தனையோதரம் உபயோகிக்கிருேம்; ஆயினும் அந்த ஜெபங்கள் கேட்கப்படுமென்று எண்ணுகிறதில்லையா? நாம் தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள நாம் வைத்திருக்கும் பத்திரத்தில் கிறிஸ்து வைத்திருக்கும் கையெழுத்தே இந்த வார்த்தைகள். நாம் அதை உபயோகிக்கப் பாத்தியதையுண்டா? அதை உணர்ந்து அன்போடு உபயோகிக்கிருேமா? இல்லாவிட்டால் நமது ஜெபங்களைப் பரலோகத்துக்குக் கொண்டுபோகிற வல்லமையாயிராமல், அவைகளைத் தடுக்கிற தடையாய் அது இருக்கும்.

———:o:———

## XVII-ம் பாடம்.

## STUDY XVII.

## சீஷனும் ஜெபமும் (தொடர்ச்சி).

## THE DISCIPLE AND PRAYER (*Continued*).

7. ஒருவன் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்தால் அவன் ஜெபம் கேட்கப்படும். "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும்

Digitized by Google

நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.'' (யோ. 15: 7.) இதிலே இரண்டு காரியங்களுண்டு. ஒருவன் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருத்தல், கிறிஸ்துவின் வார்த்தைகள் அவனில் நிலைத்திருத்தல், இவை இரண்டும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டது. இங்கேதான் விசுவாசத்தின் இரகசியம் இருக்கிறது. அவருடைய வார்த்தைகள் என்னில் நிலைத்திருக்கத்தக்கதாக நான் அவரில் நிலைத்திருக்கவேண்டும். இதுசீஷனுக்கும் குருவுக்குமுள்ள பூரண ஐக்கிய சிநேகத்தைக்காட்டுகிறது. மண்ணுலகில் சஞ்சரிக்கும் ஆத்துமா தேவனோடு ஐக்கியப்பட்டிருக்கும்போது, கேட்கத்தகாதவைகளை ஆண்டவருடைய சித்தத்திற்குவிரோதமாக கேட்கத்துணியாது. இப்படிப்பட்ட ஐக்கியத்தினாலும் ஆவியின் ஏவுதலினாலும் உண்டாகிற வேண்டுதல்களுக்குத் தேவன் மௌனமாயும் அசதியாயுமிரார். "ஆகையினால் நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" என்று கர்த்தர் மறுபடியும் உறுதிவாக்களித்தார்.

(c) தமது சீஷர்களின் ஜெபம் நிச்சயமாய்க் கேட்கப்படும் என்று சொன்னார்.

சீஷனுடைய ஜெபம் கேட்கப்படாமல் போகாதென்று ஆண்டவர் திரும்பத்திரும்பச் சொன்னது ஆச்சரியமே.

நமது ஜெபம் கேட்கப்படுமென்பதற்கு எத்தனையோ வகையான உறுதிவாக்கு இருக்கும்போது, சில கிறிஸ்தவர்கள் தங்கள் ஜெபம் கேட்கப்படவில்லையே என்று சொல்லுவதற்கு நாம் சமாதானம் சொல்லுவதெப்படி?

அவர்கள் செய்யும் ஜெபம் ஏற்ற ஜெபமல்ல. இதுதான் விசேஷித்த முகாந்திரம். மேற்சொல்லிய இலட்சணங்களை உடையவர்களாயிராததினால் அவைகள் கேட்கப்படவில்லை. தக்க விசுவாசத்துடன் ஜெபிக்காதவன் தன்னுடைய ஜெபங்களை தேவன் கேட்கவில்லையென்று சொல்லுவதற்கு என்ன நியாயமுண்டு.

## தியானம்.

### MEDITATION.

உன் ஜெபங்களிலநேகம் ஏன் கேட்கப்படவில்லை! முகாந்திரங்களை உள்ளே தேடிப்பார். உனக்கு நன்மையானதெதையும் கொடுப்பதற்கு உன் பரமபிதா ஆயத்தமாயிருக்கிறதைப்பற்றி ஒருக்காலும் சந்தேகிக்காதே. தம்முடைய பிள்ளை செய்யும் உண்மையான ஜெபங்களுக்கு விடையளிக்க திரியேக தேவனுடைய சகல ஆதரவுகளும் ஆயத்தமாயிருப்பது நிச்சயம் என்பதைப் பற்றி கிறிஸ்து எவ்வளவு உறுதியாய்ச் சொல்லக்கூடுமோ அவ்வளவு உறுதியாய்ச் சொன்னார்.

Digitized by Google

## XVIII-ம் பாடம்.
## STUDY XVIII.

### சீஷனும் ஜெபமும் (தொடர்ச்சி).
### THE DISCIPLE AND PRAYER (*Continued*).

நாம் கேட்கிற ஒவ்வொரு ஜெபத்திற்கும் அவர் பலன் கொடாமலிருப்பதினால் அவர் ஜெபத்தைச் கேட்கிறதில்லையென்று நாம் நினைக்கலாகாது; சில சமயங்களில் நாம் அறிவீனமாய்க் கேட்ட காரியத்துக்கு எதிரான காரியத்தைத் தேவன் நமக்குக் கொடுப்பதுண்டு ஏனென்றால் நாம் கேட்ட அந்தக் காரியம் நமக்குத் தீமையாயிருக்குமென்று அவர் அறிகிறார். முற்காலத்தில் நமக்கு அவசியமானதென்று ஆத்திரமாய் நாம் தேவனிடத்தில் கேட்டவைகளை அவர் கொடுத்திருந்தால் அவைகள் நமக்கு மெத்தக் கெடுதியை விளைவித்திருக்குமென்று நாம் கண்டு அவைகளைக் கொடாததற்காக நமது ஜீவியத்தில் எத்தனைதரமோ அவருக்கு நன்றிசெலுத்தியிருக்கிறோம்.

ஜெபத்தின் வல்லமையைப்பற்றி ஆண்டவர் பேசியபோது, தேவன் அன்புள்ளவராயிருக்கிறபடியினால்தான் தமது பிள்ளைகளின் ஜெபத்தைக்கேட்க அதிக வாஞ்சையுடையவராயுமிருக்கிறாரென்பதை உறுதிப்படுத்திப்பேசினார். "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் (மகா பிரதானமான ஈவாகிய பரிசுத்தாவியை) கொடுப்பது அதிக நிச்சயமல்லவா? (மத். 7: 7—11). இதே பிரகாரம் அநீதியுள்ள நியாயாதிபதியையும் விதவையையும் பற்றிய உவமையில், தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடியபொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (லூக். 18: 7, 8) என்ற கருத்துள்ள வார்த்தைகளை ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளினார். நமது பரமபிதா இவ்விஷயத்தில் தாமதமாயிருக்கலாம். ஆகிலும் தமது ஆசீர்வாதங்களை நமக்குக்கொடாமலிருக்கமாட்டார். அவர் நமது விசுவாசத்தைச் சோதிப்பது மெய். ஆனால் பிதாவுடைவான அவரது அன்பில் நாம் வைக்கும்

Digitized by Google

நம்பிக்கையையும் பிரியத்தையும் அவர் கெடுக்கமாட்டார். உலகப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு மிகவும் அவசியமாயிருக்கிறவை களைக் கொடுக்க விரும்பும்போது நமது பரமபிதாவானவர் தமது பிள் ளைகள் தக்கபடி கேட்கும் விஷயத்தில் அளவற்ற வல்லமையும் அன் பும் நிறைந்த தமது பொக்கிஷத்திலிருந்து அவர்களுக்கு அவசியமும் உசிதமுமான நன்மைகளைக் கொடுக்கமாட்டாரா?

அதுவுமன்றி, தமது சீஷர்கள் தங்கள் ஜெபத்தை ஏறெடுக்கும் போது அதற்கு பெலனுண்டாகும்படி இயேசு தாமும் அவர்களோடு கூடவே ஜெபிப்பதாகச் சொல்லுகிறார். "உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தா கிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகுமென்று உங்களுக்குச் சொ ல்லுகிறேன்; ஏனெனில் இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நா மத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என்றார். (மத். 18: 19, 20.) இங்கே 'ஏனெனில்' என்கிற பதத்தினாலே, இதின் காரண சம்பந்தத்தைப் பாருங்கள். சீஷர்களுடைய மனதிலே ஜெபவாஞ்சை உண்டாயிருக்கும்படி அவர் களுடைய ஜெபங்களோடு தம்முடைய ஜெபத்தையும்கூட்டி அவை களைப் பெலனுள்ளதாக்கவே, கிறிஸ்து பரிசுத்தாவியின் மூலமாய் நித் தம் அவர்களோடுகூடயிருக்கிறார். அதே கிறிஸ்து தமது பிதாவின் வலதுபாரிசத்திலிருந்துகொண்டு தமது சீஷர்களின் விண்ணப்பங்க ளோடு தமது பரிந்துபேசுதலான வேண்டுதல்களையும் கூட்டிச்சேர்க் கிறார்.

## தியானம்.

### MEDITATION.

பிதாவின் வலதுபாரிசத்தில் பரிந்துபேசுகிற கிறிஸ்து ஒருவர் தேவனு டைய ஜனங்களுக்கு உண்டு என்ற அருமையை நாம் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை.

என் ஜெபம் குறைவுள்ளதாயிருக்கலாம்; ஆனால் பிதாவின் சமுகத்திலி ருக்கிற என்னுடைய "பரிந்து பேசுகிறவர்" எவ்வளவு வல்லமையைக்கூட்டி அதை பிதாவுக்குமுன் கொண்டுவருகிறார்.

———:O:———

Digitized by Google

## XIX-ம் பாடம்.
## STUDY XIX.

### சீஷனும் ஜெபமும் (முடிவு).
### THE DISCIPLE AND PRAYER (*Concluded*).

ஒரு சமையத்தில் பரிந்துபேசுதலான ஜெபத்தின் முக்கியத்தை அவர் வற்புறுத்திக் காட்டினார்.

அவர் செய்த ஜெபங்களெல்லாவற்றிலும் பெரியதும் உன்னதமுமானது யோ 17-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற அவரது பரிந்துபேசுதலான ஜெபந்தான். இதிலே அவர் உலகத்திலுள்ள தம்முடையவர்களுக்காகப் பூரண அனுதாபங்கொண்டவராய்ப் பிதாவினிடம் பரிந்துபேசுகிறார். தமது சீஷர்களும் அப்படியே தாங்கள் உடன்சகோதரர்களுக்காகப் பரிந்துபேசும்படி போதிக்கிறார்.

நடுஜாமத்தில் ஒருவன் தன் சிநேகிதனுக்காகப் பரிந்துபேசினதாக ஆண்டவர் சொன்ன உவமையில் ஒவ்வொரு சீஷனும் தன் சிநேகிதனுடைய நன்மைகளை விரும்பி அவனுக்காக பெரிய சிநேகிதரிடத்தில் பரிந்துபேசவேண்டுமென்று கற்பித்தார். (லூக். 11: 5—13.)

தேவன் மெய்யாகவே ஜெபத்தைக் கேட்கிறவரென்று காட்டும்படிக்கு லூக்கா சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறபடி "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்ற வார்த்தைகள் பரிந்துபேசும் ஜெபம்செய்ய இயேசு சீஷர்களுக்குச் சொன்ன சமயத்தில் சொல்லப்பட்டன.

நமக்காகக் கேட்கும் ஜெபத்தைப்பார்க்கிலும் மற்றவர்களுக்காகச் செய்யும் ஜெபத்தைக் கேட்க தேவன் அதிக வாஞ்சையும் ஆவலுமுள்ளவராயிருக்கிறாரென்று அவர் போதித்ததாகத் தெரிகிறது.

### தியானம்.
### MEDITATION.

இயேசுவே உம்முடைய ஜனங்கள் கூடும் இடமெங்கும் உமது கிருபாசனத்தை அவர்கள் காண்கிறார்கள். அவர்கள் உம்மைத்தேடும் இடமெங்கும் நீர் காணப்படுகிறீர். விசுவாசத்தைப் பலப்படுத்தவும் துன்பத்தை இன்பமாக்கவும் பரலோகம் முழுவதையும் நமது கண்முன் கொண்டுவரவும் ஜெபத்தின் வல்லமையை இங்கே நாம் காட்டலாம்.

Digitized by Google

மனிதர் தேவனை அறிந்தும் தங்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் ஜெபிக்காவிட்டால் குருட்டு ஜீவியமுள்ள ஆட்டைப்பார்க்கிலும் அவர்கள் விசேஷித்தவர்களோ? பூமிமுழுவதும் ஒவ்வொரு பக்கமும் தேவனுடைய பாதத் தண்டையில் தங்கச் சங்கிலிகளாகிய ஜெபங்களால் கட்டப்பட்டிருக்கிறதே.

——:o:——

## XX-ம் பாடம்.

## Study XX.

## சீஷனும் ஐசுவரியமும்.

## The Disciple and Wealth.

ஐசுவரியத்தைப்பற்றி ஆண்டவர் கொண்ட கருத்து என்ன? இயேசு தாமே தரித்திரப்பட்ட புருஷனாயிருந்தார். "மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை." (மத் 8: 20.)

திரவியம் சேர்ப்பது தகாதென்று இயேசு போதித்தாரா? அவர் திருவுளம்பற்றின சில வார்த்தைகள் அப்படிக் காட்டுகிறதுபோலிருக்கும். "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்." (மத். 6: 19.) "உங்களில் எவனாகிலும் தனக்குண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (லூக். 14: 33). வாலிபனைப்பார்த்து: "உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக்கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும், பின்பு என்னைப் பின்பற்றிவா" என்றார். (லூக். 18: 22).

இவ்வகையான அநேக வாக்கியங்களைச் சுவிசேஷங்களில் பார்க்கலாம். இவைகளில் மிகுதியானவைகள் லூக்கா சுவிசேஷத்திலிருக்கிறபடியினால் இதைச் சிலர் "வறுமையின் சுவிசேஷம்" என்றும், இது உலகத்தையும் அதின் நன்மைகளையும் துறந்த எசனேருடைய ஏவுதலினாலே எழுதப்பட்டதென்றும் எண்ணுகிறார்கள்.

ஆனால் ஐசுவரியமுள்ளவர்களாயிருப்பது பாவமென்றாவது ஆஸ்தி தன்னில்தானே தீமையானதென்றாவது அவர் நினைத்து இப்படிப்பேசவில்லை. ஆஸ்தியினாலுண்டாகும் நன்மையின்னதென்று அவர் அறிந்திருந்தார். அவரது உவமைகளில் அநேகம் ஐசுவரியத்தின் மதிப்

Digitized by Google

யைப்பற்றியதாயிருந்தன. ஐசுவரியத்தை யுடையவர்கள் அதைத் துர்ப்பிரயோகம் செய்து பெரிய சோதனைகளுக்குள்ளும் மோசங்களுக்குள்ளும் அகப்பட்டுக்கொள்ளுகிறதினால்தான் அவர் இப்படிப் பேசும்படி நேரிட்டது. ஒருவனுடைய ஐசுவரியத்தையல்ல, அவன் அதை மட்டுக்குமிஞ்சி புத்தியீனமாய்த் தேடுகிற தேட்டத்தையே அவர் கண்டிக்கிறார். ஐசுவரியவான்களிடத்தில் மாத்திரமல்ல, எளியவர்களிடத்திலும் காணப்படும் பண ஆசை தகாதென்று தமது சீஷர்களை எச்சரித்தார். "என்னத்தை உண்போமென்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தைஉடுப்போமென்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள்.........." என்றார். (லூக். 12: 22—31.) உலகப்பொருளை அதிகமாய்ச் சேர்க்கவேண்டுமென்று அநேகர் பரபரத்துத் திரிந்து மோசக்குழியில் விழுந்து நாசமானார்கள். பன்னிரு சீஷர்களில் ஒருவனும் இந்தப்பண ஆசையினாலேயே அற்ப ஆதாயத்திற்குத் தன் ஆண்டவரை விற்றுப்போட்டான். (மத். 26: 14—23.) பண ஆசை அவனைப்பட்சித்துப்போட்டது.

கர்த்தருக்குத் தத்தம்பண்ணப்பட்ட ஐசுவரியம் அதிகப்பிரயோஜனம் உள்ளதாயும் மனிதருக்குப் பேராசீர்வாதங்களைக் கொண்டுவருகிறதாயும் இருக்கிறது. பக்தியுள்ள ஸ்திரீகள் தங்கள் ஆஸ்திகளால் கர்த்தருக்கு ஊழியஞ்செய்தார்கள். (லூக். 8: 3.) தயாளமாய் மரியாள் கொடுத்த விலையுயர்ந்த காணிக்கை ஆண்டவருக்கு அதிகப்பிரியமாயிருந்தது. (யோ. 12: 1—8) நூற்றுக்கதிபதி யூதர்களுக்கு ஒரு ஜெப ஆலயத்தைக் கட்டினதால் அவனுடைய தர்மசிந்தையைக்குறித்து அவர் வியந்துகொண்டார். (லூக். 7: 5.)

## தியானம்.

## MEDITATION.

எக்காலத்திலும் பொருளாசை மனிதருக்கு மிகவும் பிரியமான விக்கிரகமாயிருக்கிறது. ஏழைகளும் ஐசுவரியவான்களும் இந்தப் பாவத்துக்குட்பட்டவர்களே. உலகத்தின் அழிந்துபோகிற பொருள்களால் தங்களுக்குச்சமாதானமும் இளைப்பாறுதலும் கிடைக்குமென்று பொய்யாய் நம்பி அவைகளை மூச்சற்றுத் தேடித்திரிகிறார்கள். தேவனுடைய உக்கிராணக்காரராக அவைகளை உபயோகிக்கவல்ல, ஆஸ்தியுடையவர்களாயிருக்கவேண்டுமென்ற பெருமைக்காகவே தேடுகிறார்கள்.

Digitized by Google

## XXI-ம் பாடம்.
## STUDY XXI.

## சீஷனும் ஐசுவரியமும் (தொடர்ச்சி).
## THE DISCIPLE AND WEALTH (*Continued*).

ஐசுவரியம் வல்லமை பொருந்தியதென்று மற்ற மனிதனைப் போலவே ஆண்டவரும் அறிந்து உலக தாலந்துகளை ஊதாரித்தனமாய்ச் செலவழிக்காமல் ஞானமாய்ச் செலவிடுகிறவன் எவனோ அவன் கடைசிக் காலத்தில், "நல்லது, உத்தமமும் உண்மையும் உள்ள ஊழியக்காரனே" என்று எஜமானால் வாழ்த்தப்படுவான் என்றார்.

உலக ஐசுவரியம் நிலையற்றதென்றும் எவ்வளவு சம்பாதித்தாலும் மனுஷனுக்குத் திருப்திகொடாதென்றும் இயேசு சீஷர்களுக்குப் போதித்தார். "பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தியிருந்தாலும் அது அவனுக்கு ஜீவனல்ல" என்றார். (லூக். 12: 15.) ஐசுவரியம் நிலையுள்ளதல்ல, ஜீவனே நித்தியமானது "மனுஷன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக்கொடுப்பான்?" (மத். 16: 26). ஆஸ்தியினாலுண்டாகும் மனமயக்கமே சாத்தான் வனாந்தரத்தில் கர்த்தருக்குக் கொண்டுவந்த மூன்றாம் சோதனை. ஆனால் உலகமுழுவதும் ஜீவனுக்கும் நற்குணத்திற்கும் நிகராகாதென்பது அவருக்குத் தெரிந்த காரியமே.

இதன் சம்பந்தமாய்த்தான் மதிகெட்ட ஐசுவரியவானைப்பற்றிய உவமைகளைச் சொல்லி, ஐசுவரியம் நிலையுள்ளதென்று எண்ணி ஜீவியம் செய்கிறவர்கள் மதிகேடர்களென்றும், தேவனுக்குமுன்பாக அவர்கள் ஐசுவரியவான்களாகார்களென்றும் போதித்தார். (லூக். 12: 16—21.)

ஐசுவரியம் மாய்கையானதென்று ஆண்டவர் போதித்தார். (மத். 13: 22; மத். 6: 19—24.) தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ் செய்யலாமென்று எத்தனையோபேர் தைரியங்கொண்டு திரிகிறார்கள். இது முற்றிலுங் கூடாதகாரியமென்று இயேசு போதித்தார்.

ஐசுவரியம் தேவபக்திக்குப் பெரிய தடை என்று இயேசு சொல்லுகிறார். ஆத்துமப் பயிற்சிக்கும் தேவபக்திக்கும் தடையாயிருக்கிறயாவும் கொடிய சாபமே. வாலிபனை ஒருவன் கர்த்தருடைய கட்ட

Digitized by Google

ளையைக்கேட்டு அவரைப் பின்பற்றிவரக் கூடாதவனாயிருந்தபோது அவர் தமது சீஷர்களைப் பார்த்து, ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது என்று சொன்னார். இதை விளக்கிக் காட்டும்படி ஐசுவரியத்தில் நம்பிக்கை வைக்கிறவர்கள் பரலோக இராச்சியத்தில் பிரவேசிப்பது எவ்வளவு வருத்தம் என்றார் (மாற். 13: 23; லூக். 18: 24)

திரண்ட ஐசுவரியம் சோதனையும் தேவபக்திக்குப் பெருத்த தடையுமாயிருக்கிறதென்பது உண்மையே. இதற்குக்காரணம் இன்னதென்று கர்த்தர் தாமே சொல்லுகிறார். "உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்." (மத். 6: 21) உலகப்பொருட்கள் ஒருவனுடைய மனதையும் எண்ணத்தையும் கவர்ந்து அவனுடைய காலத்தை வீணாகப்போக்குவித்து அவனது ஆத்துமாவை சகலவித கவலைகளிலும் தொல்லைகளிலும் சிக்கவைத்து பக்தியைக் கெடுக்கிறது. அந்த வாலிப அதிகாரியின் ஐசுவரியம் அவனது ஜீவனை முற்றிலும் நஷ்டப்படுத்தி நித்திய மோசத்துக்குட்படுத்திவிட்டதென்று புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது எவ்வளவு பரிதாப காட்சி! (லூக். 18. 18—25).

## தியானம்.

## MEDITATION.

ஏழையானவன் ஐசுவரியத்தைப்பற்றிய கவலைகளாலும் தொல்லைகளாலும் தான் பாரமடையாமலும், மயக்கும் அதன் சோதனைகளால் சூழப்படாமலும் இருப்பதற்காக தேவனைத் தோத்திரிக்கக்கடவன்.

ஐசுவரியவான் தன் சொத்துத் தொடரும் பாவத்தைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து தனக்கொப்புவிக்கப்பட்டதை தேவனுக்குப் பிரியமாகவும் மனிதனுக்கு உதவியாகவும் உண்மையாய்ச் செலவிடும்படி ஜெபிக்கக்கடவன்.

———:o:———

# XXII-ம் பாடம்.

# STUDY XXII.

## சீஷனும் ஐசுவரியமும் (முடிவு).

## THE DISCIPLE AND WEALTH (*Concluded*).

பணத்தை ஞானமாய்ச் செலவு பண்ணவேண்டுமென்பதைப் பற்றி ஆண்டவர் திட்டமாய்ப் போதித்தார். அநீதியுள்ள உக்கிரா

Digitized by Google

ணக்காரனைப்பற்றி அவர் சொன்ன உவமையில் (லூக். 16: 1—12) பணத்தை எப்படி நல்லுபயோகஞ் செய்யவேண்டுமென்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. "நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்ளுவார் உண்டாகும்படி அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள். கிறிஸ்தவ முறைப்படி தயாளசிந்தையுடன் தர்மசகாயமும் ஜனுபிமானமுமுள்ள காரியங்களுக்கு நான் கொடையளித்து அநேக ஆத்துமாக்களை மரணத்தினின்று ஜீவனுக்குக் கொண்டுவரும்படி பணத்தை உபயோகிக்கவேண்டும். கடைசி நாளில் அநேகர் எழும்பி இப்படிச் சற்பாத்திரத்தில் தங்கள் ஐசுவரியத்தைச் செலவிட்டவர்கள்பேரில் ஆசீர்வாதங்களைக் குவித்து பூமியில் தங்களுடைய ஆத்தும இரட்சிப்புக்கென்று தங்கள் பணத்தை வாரி இறைத்ததினிமித்தம் அவர்களை வாழ்த்திக் கொண்டாடுவார்கள்.

இவ்வண்ணமாய் உபயோகிக்கப்பட்ட ஆஸ்தி பூலோகத்தாருக்குச் சொல்லிமுடியாத ஆசீர்வாதமாயும் பரலோகத்திலே இவர்களுக்கு மட்டற்ற நன்மையாயுமிருக்கும்.

நாமும் நமக்களிக்கப்பட்டிருக்கும் வரங்களும் நமக்குச் சொந்தமல்லாததுபோல உலகச்செல்வமும் நமக்குச் சொந்தமல்ல. உலகத்தில் நாம் தேவனுடைய உக்கிராணக்காரர்மாத்திரம். தாலந்தின் உவமையினுலும் (மத். 25) பத்துஇராத்தல் உவமையினுலும் (லூக். 19: 13—27) ஆண்டவர் இதைப் பலப்படுத்தினூர். இந்த உவமைகளின் போதனைகளினுல் மாத்திரமல்ல, சுவிசேஷத்தின் மற்ற பலஉபதேசங்களினுலும் மனிதனுடைய உக்கிராணத்துவத்தை வற்புறுத்திப் பேசினூர். நமது ஊழியர்களாகிய நம்மைக்குறித்தும், நமக்குரியவைகளைக்குறித்தும் நான் வருமட்டும் இதைக்கொண்டு வியாபாரம் பண்ணுங்கள். நீங்கள் உங்களுக்குச் சொந்தமானவர்களல்ல, உங்களுக்குள்ளவைகளெல்லாம் உங்களுக்குரியவையல்ல, நீங்கள் தேவனுடைய உக்கிராணக்காரர், அவருடைய மகிமைக்கென்றே இவ்வித வரங்களும் ஈவுகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன என்று கர்த்தர் சொல்லுகிருர். நமது குலத்தைச்சேர்ந்த ஒவ்வொருவருக்கும் விசேஷமாய் ஒவ்வொரு சீஷனுக்கும், 'உன் உக்கிராணக் கணக்கை ஒப்புவி' என்ற விசேஷித்த கட்டளை பிறக்கும் என்பது மெய்.

## தியானம்.

### Meditation.

கர்த்தருக்குக் கொஞ்சம் தசமபாகம் கொடுத்தால் அதைப்பற்றிப் பெருமைபாராட்டுகிறவர்கள் எத்தனையோபேர் ஆத்துமாவின் தயாளகுணமுள்ள

Digitized by Google

ஈகையென்றும் பரோபகாரமென்றும் அதை அழைக்கிறார்கள்! இப்படிச் சொல்வதினால் பணம் தங்களுடைய சொந்தம் என்றும், தங்களுக்கு இஷ்டமானால் அதைக் கொடுக்கலாம் அல்லது கொடாமலிருக்கலாமென்றும் அவர்கள் எண்ணிக்கொள்ளுகிறார்களல்லவா? இதுதான் அநேக கிறிஸ்தவர்கள் சொல்லாமல் சொல்லும் பொய். நாம் சொந்தக்காரரல்ல! உக்கிராணக்காரர். நமக்கு ஒன்றும் சொந்தமல்ல. எல்லாம் அவருக்குச் சொந்தம்.

என்தன் ஆஸ்தி தேவரீர்
முற்றும் அங்கிகரிப்பீர்
என்தன் நெஞ்சில் தங்குவீர்
அதை நித்தம் ஆளுவீர்.

———o:———

## XXIII-ம் பாடம்.
## Study XXIII.

### சீஷனும் உலகமும்.
### The Disciple and the World.

உலகம் என்பது புறம்பான இயற்கையை, விசேஷமாய்த் தேவனுக்கு துரோகம்பண்ணி பாவக்கட்டில் அகப்பட்டு ஜீவிக்கிற மனுக்குலத்தாரைக் குறிப்பதாக இயேசு தெரிவித்தார். அவர் உலகத்திலிருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை (யோ. 1: 10). அவரது பரிந்துபேசுதலான ஜெபத்தில்: நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை என்கிறார். (யோ. 17: 25.) இடறல்களினிமித்தம் உலகத்துக்கு ஐயோ, (மத். 18: 7). இவ்விதமாகக் கர்த்தர் அவிசுவாசிகளெல்லாரையும் தமது இராச்சியத்துக்குப் புறம்பேயிருக்கும் உலகமக்கள் என்று கூறினார்.

இன்னும் உலகம் அவருடைய சத்திய ஆவியை ஏற்றுக்கொள்ளமாட்டாது என்று கர்த்தர் சொன்னார். (யோ. 14: 7.) தாம் உலகத்தை ஜெயித்த நிச்சயத்தினால் தமது சீஷர்களைத் தேற்றுகிறார். (யோ. 16: 33.)

சீஷன் உலகத்திலிருந்தாலும் அவன் உலகத்தானல்ல, என்று சொல்லுகிறார். "நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும் நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும் உலகம் உங்களைப் பகைக்கிறது. (யோ. 15: 19.) பரிந்துபேசுதலான பெரிய ஜெபத்தில் அவர், நான் உலகத்தானல்லாததுபோலவே

Digitized by Google

அவர்களும் உலகத்தாரல்ல என்கிறார் (யோ. 17: 16) இவ்விதம் சீஷனானவன் உலகத்தில் மனுக்குலத்தினயில் ஜீவிக்கவேண்டியவ னாயிருந்தாலும், ஆவிக்குரிய விஷயமாய் உலகத்தோடு சாராமலும் ஒட்டாமலும் இருக்கவேண்டியவன். அவனது வாசஸ்தலம், சுதந்த ரம், வாஞ்சை யாவும் மேலோகத்தைச் சார்ந்தது அவைகள் இந்த உலகத்திற்கு முற்றிலும் அந்நியமும் அறியப்படாதவைகளுமானவை. ஆகையால் சீஷன் "உலகத்திலே அன்னியனும் பரதேசியுமாயிருக் கிறான்."

## தியானம்.

MEDITATION.

*உலகத்தோடு மட்டுக்குமிஞ்சி பற்றுதலாயிருப்பது பெரிய மோசம். உன் வீடும் வாசஸ்தானமும் மேலே இருக்கிறதானால் பூமியின் கட்டுகளை இ லேசாய்ப்பிடி. நாம் இங்கே அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிறோம்.*

———:o:———

## XXIV-ம் பாடம்.

## STUDY XXIV.

## சீஷனும் உலகமும் (முடிவு).

## THE DISCIPLE AND THE WORLD (*Concluded*).

சீஷன் உலகத்தால் கறைப்பட்டுப்போகக்கூடாதென்று போ திக்கப்படுகிறான். துன்மார்க்க ஜீவியத்திலும் பாவ வழக்கபழக்கத்தி லும் உலகத்தாரோடே பங்குபெறாமல் அவர்களை விட்டு விலகவேண் டும். "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல் நீர் அவர்களைத் தீமையின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்." "அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத் தமாக்கப்பட்டவர்களாகும்படி அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்" (யோ. 17: 15—19.)

சீஷன் உலகத்தை ஜெயிக்கவேண்டும், கிறிஸ்துவும் அப்படியே ஜெயித்தார். (யோ. 16: 33.) கிறிஸ்து அடைந்த வெற்றி உண் மையுள்ள ஒவ்வொரு சீஷனும் உலகத்தை ஜெயிப்பான் என்பதற்குப் பலத்த அத்தாட்சி.

ஆகிலும் சீஷன் உலகத்தை நேசிக்கவேண்டும். அதின் தீமை யையல்ல; அந்தத் தீமையில் சிக்குண்டு அதின் இச்சைகளினால் இழுக்

Digitized by Google

தைத் துவக்கும்படிக்கு சாத்தாஞேடுபோராடும் "போராட்டத்தின் ஸ்நானத்தைப்" பெறும்படியாக பரிசுத்தாவியானவரால் வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். இந்த மூன்று சோதனைகளும், தமது ஊழியத்தின் நாட்களிலெல்லாம் தாம் செய்யவேண்டிய போராட்டங்களுக்கு முன்னடையாளமாயிருந்தன. இவை யோவான் சொல்லுகிற போராட்டங்களுக்கு ஒப்பானவை. "மாம்சத்தின் இச்சையும் கண்களின் இச்சையும் ஜீவனத்தின் பெருமையும்." (1 யோ. 2: 16.) முதலாம் சோதனை பிதாவின் பேரில் அவநம்பிக்கை கொள்ளுதல். 2-வது துணிகரமான மிதமிஞ்சின நம்பிக்கை. 3-வது உலகநேசமும் பொருளாசையும் இதைப்பற்றி இன்னும் தெளிவாய்ப் பார்ப்போம்.

1. சுயநம்பிக்கைக்கென்று தமது அற்புத வல்லமையை உபயோகித்தல். ஒருபோதும் அவர் அப்படிச் செய்யவில்லை. 2-வது. தமது ஊழியத்தை தேவசித்தப்படி செய்யாமல் ஜனங்களைப் பிரியப்படுத்தப் பார்க்கும் சோதனை. (1) அவர் ஒருக்காலும் மனிதனைப் பிரியப்படுத்தப் பார்க்கவில்லை. (2) மனிதனைப் பிரியப்படுத்துவது ஊழியத்தின் சரியான வகையல்லவென்று அவர் வற்புறுத்திப் போதித்தார். (3) தமது ஊழியத்தை அனுகூலமாய் நிறைவேற்ற உலகப்பொருளையும் வல்லமையையும் தேடுதல்.

இந்தச் சோதனைகள் எல்லாவற்றிலும் அவர் பிசாசை எதிர்த்து அவன் தந்திரங்களைக் கெடுத்து அவனை மேற்கொண்டு ஜெயகெம்பீரத்துடன் தமது ஊழியத்தில் பிரவேசித்தார்.

## தியானம்.
## MEDITATION.

மனிதனுடைய இருதயமே பாவத்திற்குக் காரணமென்று யாக்கோபு சொன்னது சரியே. மனிதன் தன் சுய இச்சையால் இழுக்கப்பட்டுச் சோதிக்கப்படுகிறான் (யாக். 1: 13—15). தன் சொந்த இருதயத்தை நன்றாய்க் காக்கிறவன், மனிதர், சாத்தான் என்பவர்களுடைய தந்திரங்களினின்று தன்னைக் காத்துக்கொள்ளுகிறான்.

உள்ளே வாசமாயிருக்கிற கிறிஸ்துவின் ஆவியானவரே எந்தச் சோதனையும் வராமல் தடுக்கும் மருந்து.

———:O:———

Digitized by Google

## XXVI-ம் பாடம்.
## STUDY XXVI.

### சீஷனும் சோதனையும் (முடிவு).
### THE DISCIPLE AND TEMPTATION (*Concluded*).

நம்மைப்போல எல்லா விஷயங்களிலும் அவர் தாமே சோதிக்கப்பட்டு இருக்கிறபடியால் சோதிக்கப்படுகிற தமது சீஷருக்கு உதவிசெய்ய எப்போதும் தயாராயிருக்கிறார். தமக்குச் சொந்தமானவர்கள் யாவரும் தமது அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து வரும்படிக்கு கறையற்ற பரிசுத்தமும் ஜெப ஆவியும் நிறைந்த ஜீவியத்தை நமக்கு முன் வைத்துப்போனார்

சோதனைக்கு இடங்கொடாமலிருக்கும்படி சீஷன் போதிக்கப்படுகிறான். "சோதனைக் குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான்; மாம்சமோ பலவீனமுள்ளது" என்றார். ஜீவியத்திலும் ஊழியத்திலும் நேரிடுகிற சோதனைகளினின்று தன்னைப் பாதுகாத்துக்கொள்ள சீஷனுக்கு 'விழிப்பு,' 'ஜெபம்' என்ற இரண்டு அருமையான ஆயுதவர்க்கமுண்டு. "அக்காலத்தை நீங்கள் அறியாதிருக்கிறபடியால் எச்சரிக்கையாயிருங்கள். விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்." (மாற். 13: 33—37). சோதனை திடீரென்று வருகிறபடியால் எப்போதும் விழித்திருப்பதே அவசியம். இந்த ஆவிக்குரிய விழிப்பு அதாவது சோதனைக்காரன் நம்மை சகதியில் பாவத்தில் அழுத்தாதபடிக்கு ஜாக்கிரதையும் உறுதியுமாயிருப்பது நாம் ஜெயம்பெறுவதற்கு முதல் ஆதாரம் சோதனைக்காரனே நம்மிலும் பலசாலி. தன்னுடைய தந்திரத்தினாலே நம்மை இலேசாய் ஜெயித்துப்போடக்கூடும். அவனுடைய பொல்லாங்கிலிருந்து நம்மை விடுவித்து நமக்கு ஜெயங்கொடுக்கிறவர் ஒருவர் மாத்திரம் உண்டு. அவர் தேவன்தான். ஆகையால் அவரை நோக்கி ஜெபிப்பதே நாம் கைக்குமெட்டாய் ஜெயமடைவதற்கு ஏற்ற இரண்டாம் ஆதாரம்.

இந்த விஷயத்திலே நமக்கு ஆறுதலான ஒரு காரியமுண்டு. கர்த்தர் நமக்கு உதவி செய்கிறவராய் மாத்திரமல்ல, நாம் சோதனைக் குட்படாதபடிக்கு நமக்காக எப்போதும் வேண்டுதல் செய்கிறவராயுமிருக்கிறார். (லூக். 22: 31, 32.) ஒவ்வொரு சீஷனையும் அவர் தம்முடைய உள்ளங்கையிலே பாதுகாத்து வைத்திருக்கிறார். 'என் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலுங் கூடாது.'

தேவனில் நிலைத்திருக்கிற ஆத்துமாவை பிசாசு துன்பப்படுத்த மாட்டான். சோதனை அவனைக் கிட்டாது, கெடுக்காது.



Digitized by Google

ஒரு விசேஷித்த வகையாக தேவன் ஆத்துமாக்களைச் சோதிப்பதுண்டு. அவர் தம்முடையவர்களை நடத்துகிறதில் சோதனைகளின் வழியாகவே அவர்களை தைரியப்படுத்திப் பலப்படுத்தவேண்டுமென்று அவைகளை அவன் வழியிலே கொண்டுவருகிறார். ஆயினும் அவன் பக்கத்திலே அவர் நின்று சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்யச் சித்தமும் வல்லமையுமுடையவராயிருக்கிறார். அதிகமாய்ச் சோதிக்கப்பட்ட பவுலப்போஸ்தலன் சொல்லுகிறதைப் பாருங்கள்: "மனுஷனுக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவர். உங்கள் திராணிக்குமேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல் சோதனையைத் தாங்கத்தக்கதாக சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார். (1 கொரி. 10: 13).

## தியானம்.
## MEDITATION.

யுத்த வீரனானவன் ஒரு யுத்தத்திலே எத்தனை பேரைக் கொன்றுபோடுகிறானோ அத்தனை பேருடைய ஆவிகளும் அவனுக்குள் நுழைந்து அவன் வல்லமையை அதிகப்படுத்தும் என்பதாம். அப்படியே சோதனையை ஜெயித்த வல்லமை நமது வல்லமையிலே நிலையான பாகமாகும். சீஷன் ஜெயிக்கும் ஒவ்வொரு சோதனையும் அவனுடைய பலத்தை அதிகப்படுத்தும். அவன் சோதனையைத் தேடிப்போகவேண்டியதில்லை. சோதனை வரும்போதோ யாதொரு பயமின்றி அதை எதிர்த்து தேவவல்லமையினால் அதை மேற்கொள்ள வேண்டும்.

———:o:———

## XXVII-ம் பாடம்.
## STUDY XXVII.

## சீஷனும் விசுவாசமும்.
## THE DISCIPLE AND FAITH.

விசுவாசமானது சீஷனானவன் தேவனிடத்தில் வைக்கவேண்டிய மனச்சார்பு. விசுவாசத்தைக் குறித்து சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருக்கிறவைகளெல்லாம் ஒருவன் தனக்கு வேண்டிய

Digitized by Google

யாவற்றுக்காகவும், விசேஷமாய் தன் ஆத்துமாவுக்கு அவசியமான இரட்சிப்புக்காகவும் தேவன்பேரில் சார்ந்து அவரில் முழு நம்பிக்கையும் வைக்கவேண்டுமென்று காட்டுகின்றன.

சீஷர்களிடத்திலும் மற்றவர்களிடத்திலும் இப்படிப்பட்ட விசுவாசம் இருக்கவேண்டுமென்று ஆண்டவர் விரும்பினார். அப்படிப்பட்ட விசுவாசத்தைக்கண்டு அவர் மிகவும் சந்தோஷப்பட்டார். நூற்றுக்கதிபதியினிடத்தில் அவரதைக்கண்டபோது அவர் எவ்வளவாய் சந்தோஷித்து இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லையென்று ஆச்சரியப்பட்டார். அப்பால் அவர்: அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து பரலோக இராச்சியத்திலே, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடு பந்தியிருப்பார்கள் என்பதை முன்னுரைத்தார். (மத். 8: 10—12.)

தமது அற்புதக்கிரியைகளை மனிதருக்குள் நடப்பிக்கவேண்டுமானால் மனிதர் தம்மிடம் விசுவாசங்காட்டவேண்டுமென்று அவர் விரும்பினார். அவர்களிடத்தில் அதைக்கண்டபோது தமது வல்லமையான கிரியைகளை மிகவும் சந்தோஷமாய் நடப்பித்தார். தமது சொந்த ஜனமாகிய நாசரேத்தூராருடைய அவிசுவாசத்தினிமித்தமோ அவர் அற்புதம் செய்யவில்லை. (மத். 13: 58; 9: 2ஐயும் பார்க்க.)

விசுவாசத்திலே மிகுந்த வல்லமையுண்டென்றும், சீஷர்கள் அதைத்தேடிக் கண்டடையவேண்டுமென்றும் கற்பித்தார். (மாற். 11: 22; லூக். 17: 19; 18: 42.) சீஷர்கள் தங்கள் ஊழியத்தில் பலமும் பலனுமற்றவர்களாயிருப்பதற்கு அவிசுவாசமே காரணமென்று ஆண்டவர் சொன்னார். (மத். 17: 19, 20)

## தியானம்.

### Meditation.

விசுவாசமானது தேவனுடைய பிரசன்னமும் ஆசீர்வாதமும், ஆத்துமாவுக்குள்ளேபோக வைக்கப்பட்டிருக்கும் திறந்த வாய்க்கால்போலும்.

அது நமது ஜீவியத்துக்குள் வல்லமையாயும் இனிமையாயும் ஊற்றும்படியாக நமது ஜீவியத்தை தேவனோடு இணைக்கிற சக்தியுமே. தேவன் தமது மகிமைக்காக உபயோகிக்கும்படி வைத்திருக்கும் இருதயத்தின் பூரண நிபந்தனை இதுதான். நமது இருதயங்கள் எம்மட்டுக்கு இந்த நிபந்தனையைக் காட்டுகிறது?

———:o:———

Digitized by Google

## XXVIII-ம் பாடம்.
## Study XXVIII.

### சீஷனும் விசுவாசமும் (முடிவு).
### The Disciple and Faith (Concluded).

சீஷனுடைய விசுவாசம் பல விஷயங்களிலும் வெளிப்படும்.

(1) அவன் சித்தத்தில் காணப்படும். பட்டுப்போன அத்தி மரத்தைக்குறித்தும் விசுவாசத்தினவசியத்தைக்குறித்தும் இயேசு தமது சீஷர்களை நோக்கி: எவனாகிலும் இந்த மலையைப்பார்த்து, நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோவென்று சொல்லி தான் சொன்னபடியே நடக்குமென்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால் அவன் சொன்னபடியே ஆகுமென்றும்........., எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ அவைகளைப் பெற்றுக்கொள்ளுவோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள உங்களுக்கு உண்டாகுமென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றும் சொன்னார். (மாற். 11: 23, 24.)

சீஷனானவன் உண்மையான விசுவாசத்திற்குத் தன்னை முற்றும் ஒப்புக்கொடுக்கவேண்டும். ஆண்டவர் தமது விரோதிகளைப் பார்த்து, நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள் என்றார். (யோ. 4: 48.) அவர்கள் சன்மார்க்கத்தில் குறைவுள்ளவர்களாயிருந்ததே அவர்களுடைய அவிசுவாசத்திற்குக் காரணம். விசுவாசமானது சீஷனுடைய சித்தத்தை தேவ சித்தத்திற்கு இசைவாகக் கொண்டுவரும் தேவ நடத்துதலுக்கு அவனை இணங்கச்செய்து தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கும். பவுலப்போஸ்தலன் அறிந்துகொண்டதுபோல அறிந்துகொள்ளும்படி அவனை நடத்திக் கொண்டுபோகும். ஆண்டவர் கெத்சமனேயில் செய்ததுபோல துன்பத்திலும் துயரத்திலும், சீஷனானவன், என் சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபிப்பான். தன் காரியங்களெல்லாம் பிரதிகூலமாகிக் கெட்டுப்போகும் என்று நினைக்கத்தக்கதாயிருக்கும்போதும், தேவன் தாமே அவைகளைச் சரிப்படுத்தி நல்ல முடிவுக்குக் கொண்டுவருவாரென்று உறுதியாய் நம்புவான். அவன் ஜீவியத்தின் கடற்கொந்தளிப்பையும் பெருங்காற்றையும் அடக்குகிறவர் அவரே. ஏன் இப்படிப் பயப்படுகிறீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற் போயிற்றென்று மனக்கலக்கமுள்ள ஆத்துமாக்களைப் பார்த்துச்சொல்லுகிறார் (மாற். 4: 40).

Digitized by Google

(2) அவனுடைய ஜெபத்திலும் அது விளங்கும். ஜெபத்திற்கு மெய் விசுவாசமே அவசியமென்று நாம் முன்னே பார்த்தோம். நமது விண்ணப்பங்களுக்கு விசுவாசம் சிறகுகளையுண்டாக்குகிறது. அது தேவனுடைய கரத்தைத் தாவிப்பிடித்து ஜீவனுக்கு வல்லமையையும் ஆசீர்வாதத்தையும் கொடுக்கின்றது.

(3) பூரணமாய் இரட்சிக்கப்படுவதில் அவனுடைய விசுவாசம் காணப்படும். கர்த்தர் தம்முடையவர்களைப் பார்த்து: உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன் என்று சொன்னார். (யோ. 14: 42.) விசுவாசமானது ஆத்துமாக்களுக்கு அன்றன்றைக்குக் கிறிஸ்து கொடுக்கும் ஆசீர்வாதங்களைக் கைப்பற்றிக்கொள்ளுகிறதுமன்றி, நித்தியத்திற்கென்று மேலே அவர் தயார்பண்ணியிருக்கும் வாசஸ்தலத்தையும் சந்தோஷ பாக்கியங்களையும் எதிர்நோக்கிக்கொண்டேயிருக்கிறது.

(4) தேவனுடைய இராச்சியத்தின் வருகையையும், அது சர்வ ஜனத்துக்கும் பரம்பி அவர்களைப் பரவசப்படுத்தும் என்பதையும் விசுவாசம் உறுதியாய் நம்பும்.

உண்மையான விசுவாசம் கடுகுவிதை, புளித்தமா என்பவைகளைப்பற்றிய உவமைகளின் தாற்பரியத்தைத் தெளிவாய் சீஷனுக்கு வெளிப்படுத்துகிறது. (மத். 13: 31—33.) சீஷர்களுக்கு கர்த்தர் கடைசியாகக் கொடுத்த கட்டளையின் விசாலமான கருத்தும் அந்தக் கட்டளையின் அவசியமும் அவசரமும் இன்னதென்று மெய்விசுவாசத்திற்கு நன்றாய்த் தெரியும். (மத். 28: 18—20.) அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கும்படிக்கு, மேலறையிலே அவர் செய்த அருமையான ஜெபத்தின் எதிரொலியைத் தினசரி விசுவாசமானது கூர்ந்து கேட்டு, உலகத்தின் இராச்சியங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய இராச்சியங்களாயின. அவர் சதாகாலங்களிலும் இராச்சியபாரம் பண்ணுவார், என்னும் கீதத்தின் கெம்பீர சத்தம் கேட்கும் நாள் நிச்சயமாய் வருமென்று சொல்லி மகிழ்ச்சியுடனே புறப்பட்டுச் செல்லும். (வெளி. 11: 15.)

அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவை நோக்கி வேண்டிக்கொண்டதுபோல இக்காலத்தில் உள்ள ஒவ்வொரு சீஷனும், ஆண்டவரே எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டுமென்று நித்தம் பிரார்த்திக்கவேண்டியவனாயிருக்கிறான்.

Digitized by Google

## தியானம்.

## MEDITATION.

1. சத்ரு எதிர்த்தும் அஞ்சாதே,
துன்பம், வறுமையும்
நெருங்கினும் கலங்காதே,
விசுவாசமே வேணும்.
2. இந்த விசுவாசம் எனக்கு
கர்த்தாவே, தாருமே:
என்ன வந்தாலும் மோட்சத்து
இன்பம் ருசிப்பேனே.

——:0:——

## XXIX-ம் பாடம்.

## STUDY XXIX.

### சீஷனும் மனத்தாழ்மையும்.

### THE DISCIPLE AND HUMILITY.

எல்லாப் பாவங்களிலும் கர்வமே ஏராளமும் அதிகப்பிடிவாதமுமானது. மனிதருடைய மிகுதியான பெலவீனங்களுக்கும் கோணலான குணங்களுக்கும் இதுவே மூலம். பரிசேயர், வேதபாரகர் முதலியவர்களுடைய பெருமையை ஆண்டவர் மிகவும் அருவருத்தார். தற்காலத்துப் பிராமணனைப்போல முற்காலத்துப் பரிசேயன் சர்வ கர்வத்தின் அவதாரமாயிருந்தான். ஆண்டவர் கூறின சாபங்களும் அவரது எச்சரிப்புகளும் பரிசேயனுடைய பெருமையைக் குறித்ததே.

அப்போஸ்தலருக்குள்ளும் கர்வமே வெகுகாலமாய்க் குடிகொண்டு அவர்களைக் கெடுத்துவந்தது. கர்த்தர் தமது திவ்ய நற்கருணையை ஸ்தாபித்த அந்த பயபக்தியான நேரத்திலுங்கூட அது அவர்களை எழுப்பி அசுசிப்படுத்திற்று. (யோ. 1'.)

அதற்கு எதிராயிருக்கிற மனத்தாழ்மையானது ஆத்துமாவுக்கு அதிக சுகமும் உதவியும் பரலோக வரங்களில் விசேஷித்ததுமானது. பரலோக ஆசீர்வாதங்களைப் பெறும்படி சீஷனைத் தகுதியாக்குவது இந்த இலட்சணமே.

மனத்தாழ்மையும் ஆத்துமத்தின் ஈனத்தனமும் ஒன்றல்ல. தன் வரத்தையும் வல்லமையையும் அறிந்து மதிக்கக்கூடாத தன்மையும்

Digitized by Google

மனத்தாழ்மையல்ல. ஒருவன் தன் அற்பத்தன்மையையும் உள்ளபடி அறிந்து மதித்து அத்தன்மையினால் தேவனுக்கும் மனிதனுக்குமுன்பாக நிற்கத்தகாதவனென்று உணர்ந்து தான் நடக்கவும் செய்யவும் வேண்டியவைகள் எவையென்று உணருகிற குணமே மனத்தாழ்மையாம். இதைப்பற்றி அப்போஸ்தலன் உங்களில் எவனாகிலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல் அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டுமென்று சொல்லுகிறான். (ரோ. 12: 3.)

## தியானம்.

### MEDITATION.

*பெருமை பிசாசின் பரதேசு. அது கொஞ்ச நேரத்துக்கு மாத்திரம் இன்பத்தைக் கொடுக்கிறது. அதின் கனியோ சோதோமின் கனியைப்போன்றது. தேவனுக்கு அதில் இடமில்லை. சந்தேகம், பெருமை, பகை முதலிய விரியன் பாம்புகளுக்கு அது தாய். மனத்தாழ்மையுள்ள இருதயம் தேவன் வசிக்கும் இடம். அது அவர் தெரிந்துகொண்ட ஸ்தானம்.*

———:0:———

## XXX-ம் பாடம்.

## STUDY XXX.

### சீஷனும் மனத்தாழ்மையும் (தொடர்ச்சி).

### THE DISCIPLE AND HUMILITY (*Continued*).

1. இயேசுவின் போதனைப்படி உள்ளான மேன்மையும் மனத்தாழ்மையிலடங்கும். அவர் ஒரு பிள்ளையை எடுத்துக்கொண்டு இந்தச் சிறுபிள்ளையைப்போலத் தன்னைத்தாழ்த்துகிறவனெவனோ அவன் பரலோக இராச்சியத்தில் பெரியவனாயிருப்பான். (மத். 18: 1—6; மாற். 9: 33—36.) உங்களெல்லாருக்குள்ளும் எவன் சிறியவனாயிருக்கிறானோ அவனே பெரியவனாயிருப்பான் (லூக். 9: 48.) என்றார்.

சிறு பிள்ளையின் இனிய தாழ்மைக்குணத்தை அறியாதவன் மகாத்துமாவாயிருக்கக்கூடாது.

2. மனத்தாழ்மை விசேஷமாய்த் தாழ்மையான ஊழியத்தில் விளங்கும். உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். (மத். 23: 11, 12.) தான் மனத்தாழ்மையுள்ளவனென்று அறிக்கைசெய்வது ஒருவனுக்கு இலேசு. வறி

Digitized by Google

ஞர்களுக்கும் சிறியவர்களுக்கும் தாழ்மையுள்ள ஊழியஞ்செய்து அதை ரூபிப்பது வருத்தம். மிகவும் சிறியவர்களாகிய இவர்களுக்கு நீங்கள் என்ன செய்கிறீர்களோ அதை எனக்கே செய்தீர்களென்று ஆண்டவர் தமது சீஷர்களின் கால்களைக் கழுவின அந்தத் தாழ்மையான ஊழியத்தை இன்னமொருமுறை பாருங்கள். (யோ. 13). "ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானல் நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்."

தாழ்மையான ஊழியத்தைச் செய்துவந்தால்தான் சீஷன் ஆண்டவருக்கு உள்ளான பக்தி காட்டவேண்டும். வறுமை, துன்பம், அறிவீனம் உள்ள மன்னுயிர்களுக்குப் பணிவிடை செய்வதினல்தான் ஆழ்ந்த மனத்தாழ்மை விளங்கும் அங்கேதான் அது திவ்விய பிரகாசத்துடன் இலங்கி தனக்கும் பரலோகத்துக்குமுள்ள சம்பந்த சிநேகத்தை வெளிப்படுத்தும்.

## தியானம்.

## MEDITATION.

*ஆதியிலே தேவனோடு மனிதனை இணைத்துக் காட்டிய இச்சம்பந்தம் மனத்தாழ்மையே. இழந்துபோன மனத்தாழ்மையைத் திரும்பவும் பெற்றுக் கொள்வதே இரட்சிப்பு. ஆகவே நாம் மனத்தாழ்மையை அடைந்துகொள்ளவும் அதினல் நம்மை இரட்சிக்கவும் வேண்டுமென்ற நோக்கமாய் மனத்தாழ்மையைத் திரும்பவும் உலகத்துக்குக் கொண்டுவர இயேசு வந்தார்.*

*அவர் இரட்சிப்பு நமது மனத்தாழ்மை. இந்த வரம் உனக்குக் கிடைத்திருக்கிறதா?*

—— :o:——

## XXXI-ம் பாடம்.

## STUDY XXXI.

## சீஷனும் மனத்தாழ்மையும் (முடிவு).

## THE DISCIPLE AND HUMILITY (*Concluded*).

3. தேவனுடைய இராச்சியத்தின் முதற்பாகஙியம் மனத்தாழ்மை. "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக இராச்சியம் அவர்களுடையது" (மத். 5: 3). ஆவியில் எளிமையுள்ள

Digitized by Google

வர்களென்கிற பதம் உண்மையான மனத்தாழ்மையை வெகு அலங்காரமாய்க் காட்டுகிறது. தன் எளிமையை உணர்ந்து பெருமைக்குணத்தை இருதயத்தை விட்டொழித்து தேவனின் திருவடி அடைந்து, தான் ஒன்றுமில்லாதவன் என்று அறிக்கைசெய்யுங்குணமே ஆவியில் எளிமையாம். இப்படிப்பட்ட ஆத்துமாவுக்குத்தான் பரலோக பாக்கியங்களெல்லாம் பொக்கிஷமாய்க்கிடைக்கும். தேவனுடைய இராச்சியத்தின் நன்மைகளில் மனத்தாழ்மையுள்ள இருதயத்துக்குள் புரண்டோடியிராத நன்மை ஒன்றுமில்லை.

4. பெருமையின் பாரமான சுமைகள் யாவையும், கர்வத்தினுலுண்டாகும் சொல்லிமுடியாத வருத்தங்களையும் கர்த்தர்பேரில் போட்டுவிட்டு உள்ளான மனத்தாழ்மையினுல் வரும் திவ்விய சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாக அவர் நம்மை அழைக்கிறார். என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; ஏனெனில் நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு ஆறுதல் கிடைக்கும். (மத். 11: 28) ஆத்தும இளைப்பாறுதலைப்பற்றிய போதனை இதில் அடங்கியிருக்கிறது. போதகர் இயேசுதான். அவர் காண்பித்த சாந்தமும் மனத்தாழ்மையுமான முன்மாதிரியை ஒவ்வொரு சீஷனும் கற்றுக்கொள்ளவேண்டியதே விசேஷித்த பாடம். நமது ஜீவியத்தில் நமக்கு நேரிடுகிற துன்பம் தொல்லைகளில் முக்காலேயரைக்கால்வாசி நமது இறுமாப்பினுலே வருகிறது. ஆண்டவர் இறங்கிச் சென்ற மனத்தாழ்மையின் பள்ளத்தாக்கிலே போய் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதினுல்தான் நமக்கு விடுதலைகிடைக்கும். அப்படியே பவுலப்போஸ்தலனும் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணுமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு மரணபரியந்தம், ஆம் சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார் என்று சொல்லுகிறான். (பிலி. 2: 5—9)

## தியானம்.

### MEDITATION.

உன்னத கிறிஸ்தவ ஜீவியத்தின் ஆசீர்வாதங்கள் கடையின் ஜன்னலிலே திறந்து வைக்கப்பட்டிருக்கும் சாமான்களைப் போன்றவை. அவைகளை ஒருவன் தெளிவாய்ப் பார்க்கக்கூடும்; ஆயினும் அவைகளைத்தொட முடியாது. ஏனென்றால் இடையிலே கண்ணாடியிருக்கிறது. அப்படியே பூரண சமாதா

Digitized by Google

னம், இளைப்பாறுதல், சந்தோஷம், அன்பு முதலிய பேராசீர்வாதங்களின் வாக்குத்தத்தத்தைக் கிறிஸ்தவர்கள் தெளிவாய்க் காணலாம். ஆயினும் அவைகளைப் பெறக்கூடாதபடிக்கு இடையிலே ஒரு தடையுண்டு. அந்தத் தடை எதாயிருக்கலாம்? இத்தடை பெருமையேயன்றி வேறொன்றல்ல. இது உன் நிலைமையா?

———:o:———

## XXXII-ம் பாடம்.
## Study XXXII.

### சீஷனும் தீமையைச் சகித்தலும்.
### The Disciple and Non-resistance.

மனத்தாழ்மையைச்சார்ந்த வேறே குணங்களுமுண்டு. அவைகளை மொத்தமாய்ப் பார்த்தால் அமைச்சலான குணங்களென்று சொல்லலாம். (Passive virtues). இவைகளுக்கெதிரானவை கிரியை செய்கிற குணங்கள் என்னப்படும் (active virtues). உதாரணமாக: தைரியம் பயமின்றித் தீமையை எதிர்த்தால் தன் மதத்தைக் காத்துக்கொள்ளவும் இதர மதங்களை எதிர்க்கவும்தக்க வைராக்கியம்.

சாந்தம், பொறுமை, நீடியபொறுமை ஆகிய இவைகள் அமைச்சலான குணங்கள். முந்தினவைகள் மேற்கத்தியாரிடத்தில் சாதாரணமாய்க் காணப்படுகிறபடியால் மேற்கத்தியாருடையகுணமென்றும், பிந்தினவைகள் கிழக்கத்தியாரிடத்தில் விசேஷமாய் இந்தியாதேசத்தாரிடத்தில் காணப்படுகிறபடியால் கீழ்தேசத்தாருடைய குணங்கள் என்றும் பேர்பெற்றுவந்திருக்கின்றன. மேற்கத்தியார் எந்தத்தீமைக்கும் பொல்லாங்குக்கும் இடங்கொடார்கள். எதிர்த்துப் போராடித் தங்களைவிட்டு நீக்கிக்கொள்ள தங்களாலானமட்டும் பிரயாசப்படும் இயல்புடையவர்கள். இந்துக்களோ தங்கள் மதத்தினிமித்தம் சகலவகையான தீமையையும் சகிக்க மனமுள்ளவர்கள்.

இந்த அமைச்சலான குணத்திற்கு கிறிஸ்தவமுறைப்படி எதிர்க்காத குணம் (Non-resistance) என்று பெயர் வந்தது.

மலைப்பிரசங்கத்திலும், மற்ற சமையத்திலும் ஆண்டவர் தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாமென்று போதித்தார். (மத். 5: 38—42.)

Digitized by Google

பழைய ஏற்பாட்டின் காலத்தில் இஸ்ரவேலருக்குள் சரிக்குச்ச ரிக்கட்டுதலின் பிரமாணம் (The Law of Retaliation) போதிக்கப் பட்டது. கண்ணுக்குக்கண், பல்லுக்குப்பல் இயேசுவோ தீமைக்குத் தீமை செய்யப்படாதென்று தம்முடைய சீஷருக்குக் கற்பித்தார். "ஒருவன் உன் வலதுகன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறுகன்னத் தையும் திருப்பிக்கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எ டுத்துக் கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒரு தடவை சமாரியர் தங்களை உபசரியாததினிமித்தம் யாக்கோபும் யோவானும் அவர்கள்மேல் பழிவாங்கவேண்டுமென்று விரும்பியபோது, கர்த்தர் அவர்களுடைய தகாத ஆவியைக்கண்டித் தார். (லூக். 9: 54, 55 . அவர் தமது சீஷர்களை அனுப்பியபோது, ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால் மறுபட்டணத் திற்கு ஓடிப்போங்கள் என்று உத்தரவுபண்ணினார் (மத். 10: 23.)

## தியானம்.

### MEDITATION.

பதமையுள்ள இந்துவைப்பார்த்து மேற்கத்தியார் சிரிக்கும் காலம்போய் விட்டது. தீமையைச் சகிப்பது பலவீனமல்ல; அது பலமான நற்குணம்.

தீமையை நன்மையினால் வெல்லுவது ஒவ்வொருவரும் கவனிக்கவேண் டிய கடமை. பதமையான ஸ்திரீ காட்டும் சாந்தமும் அமைதியுமான பொறு மையோ, தீமையாகிய கோட்டையின்மீது மனிதன் உக்கிரமாய்த் தாக்கும் தாக்குதலோ! இந்த இரண்டில் எது அதிகப்பலமும் நன்மையுமானது?

———:o:———

## XXXIII-ம் பாடம்.

## STUDY XXXIII

## சீஷனும் தீமையைச் சகித்தலும் (தொடர்ச்சி).

### THE DISCIPLE AND NON-RESISTANCE (*Continued*).

மலைப்பிரசங்கத்திலே, ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு! உன் னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென் றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு என்று கர்த்தர் சொ ன்னபோது, எழுத்தின்படியே நாம் அதைக் கைக்கொள்ளவேண்டு

Digitized by Google

மென்றிருந்தாரா? இல்லை. ஆயினும், இந்த வாக்கியங்களினாலும் இதைப்போலொத்த வேறுவாக்கியங்களினாலும், தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; அதைச் சகித்துக்கொள்ளவேண்டுமென்கிற பிரமாணத்தின் அவசியத்தையும் முக்கியத்தையும் காட்டவிரும்பினார். ஜீவியத்தின் ஒவ்வொரு கடமையைவிட அதன் பிரதான பிரமாணங்களையே வற்புறுத்திக் காட்டினார். இயேசுவின் வார்த்தைகளையும், அவரது தனித்தனிக் கிரியைகளையும் சொல்லொடுபொருளாய்த் தாற்பரியம்பண்ணி அநேகர் வழிவிலகிப்போனார்கள். சிஷர்களின் கால்களை ஆண்டவர் கழுவினதுபோல ஒருவர் மற்றவர்களுடைய கால்களைக் கழுவவேண்டுமென்று அப்படியே செய்துவருகிற சிறு கூட்டத்தாரும் உண்டு.

இங்கே கர்த்தர் விசேஷித்துக் காட்டும் பிரமாணம் மகா பிரதானமானது. தீமையோடே எதிர்த்து நிற்காமல் அதைப் பொறுமையோடே சகிக்கவேண்டுமென்பது கிறிஸ்தவ ஜீவியத்தில் மூலப்பிரமாணம் என்றுசொல்லவேண்டியது. மேற்கத்தியார் இந்த சற்குணத்தை அற்பமாய் எண்ணிப்பேசுவது தகாது. இது கிறிஸ்தவர்களுடைய பாதி ஜீவியத்துக்குச் சரியென்று சொல்லலாம். இதைப்பற்றி ஆண்டவர் அற்பமாய் நினைக்கவுமில்லை, போதிக்கவுமில்லை. பல சமையங்களில் அவர் அதை வற்புறுத்திக்காட்டிப் பிரதானமாக்கிவந்தார்.

தீமையை எதிர்ப்பதைப் பார்க்கிலும் அதை சகித்துக்கொள்வதே மனுஷத்தன்மை. ஒருவன் தன் கன்னத்தைத் திருப்பிக்கொடுப்பதிலும் தன் கையை நீட்டிச் சத்துருவை அடிப்பது இலேசுதான். பழிக்குப்பழி வாங்குங்குணம் இலேசாய் மனதில் எழும்புகிறது. சகிக்கும் குணமோ மெத்த வருத்தம். தேவனுடைய இராச்சியத்துக்கடுத்தவைகளை எதிர்க்கிற சகலகாரியங்களையும் உடைத்துத் தகர்த்துச் சின்னபின்னமாக்குகிற முரட்டுப் பிரயத்தனங்களைப் பார்க்கிலும் தன்னை அடக்கித் தீமையைப் பொறுக்கிறதில்தான் மேலான கிறிஸ்தவ ஜீவியமும் பூரண மனுஷத்தன்மையும் விளங்கும்.

கர்த்தர் ஊன்றிப்போதித்தபடி, தீமையைச் சகித்து நமக்கு வரும் கஷ்டநஷ்டங்களைப் பொறுத்து நமது சத்துருக்களுக்கு இணங்கிப்போவதில் இந்துதேசத்தார் மேற்கத்தியாருக்கும் பெரிய முன்மாதிரியாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஜீவியத்திற்கு அதிக மேலான வரங்களும் நற்குணசீலங்களும் மிகவும் அவசியம்.

Digitized by Google

## தியானம்.
## MEDITATION.

*அருமையுள்ள கர்த்தாவே, மனுக்குலத்தாரின் பிதாவே! எங்களுடைய சண்டைகளெல்லாம் நிற்கும்வரை, அமைதியாகிய உமது பணியை ஊற்றும்; எங்கள் ஆத்துமாவிலிருந்து இறுக்கத்தையும் நெருக்கத்தையும் நீக்கும்; எங்கள் ஜீவியம் உமது சமாதானத்தின் அலங்காரத்தை அறிக்கைசெய்யட்டும்.*

———:o:———

# XXXIV-ம் பாடம்.
# STUDY XXXIV.

## சீஷனும் தீமையைச் சகித்தலும் (முடிவு).
## THE DISCIPLE AND NON-RESISTANCE (*Concluded*).

தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாமென்று கிறிஸ்து போதித்திருக்க சத்துருக்களுக்கு விரோதமாய் யுத்தம் செய்வது சரியோ தப்பிதமோ வென்று சொல்லமுடியாது. மூர்க்க குணமும் அடங்காததன்மையுமுள்ள சத்துருக்களுக்கு விரோதமாய் நியாயமான யுத்தஞ்செய்யச் செல்லும்போது மாட்டோமென்று எதிர்க்கிறவர்கள் அழிக்கப்பட்டுப்போவதுமுண்டு.

ஆகிலும், யுத்தத்தைத்தடுத்துச் சமாதானத்தைக்கையாடி மனுக்குலத்தைப் பாதுகாப்பது சகல கிறிஸ்தவர்கள் பேரிலும் விழுந்த கடமையாயிருக்கிறது. ஏனென்றால் 'அவர்கள் சமாதானப்பிரபுவின்' சீஷர்களாயிருக்கிறார்களே. உலகம் கொடுக்காத சமாதானத்தைத் தமது சீஷர்கள் பேரில ஊதினது அவர் உலகத்திலிருந்தபோது கொடுத்த கடைசி ஆசீர்வாதங்களில் ஒன்றல்லவா?

தமது ஜீவியத்திலேயே ஆண்டவர் இந்தப் பிரமாணத்தை அனுசரித்துவந்தார். மனிதர் அவரைப் பிடிக்க வகைதேடினபோது அவர்களுக்குத்தப்பி ஓடிப்போய்விட்டார் (லூக். 4: 29, 30; யோ. 8: 59; 10: 39). தமது சத்துருக்களை மடங்கடித்து நிர்மூலமாக்க அவருக்கு வல்லமையிருந்தது. ஆனால அவர் அதை உபயோகிக்கவில்லை. தமது அற்புத வல்லமையைப் பிரயோகிப்பதினாலே தம் சத்துருக்களின் மோசங்களுக்குத்தப்பிக்கொள்ள ஒருபோதும்வழிதேடவில்லை. கடைசியில் அவர் பிடிக்கப்பட்டபோது 12 லேகியோன்களுக்கு அதிகமான தூதர்களைத் தாம் வரவழைக்கக்கூடும் என்றார். ஆயினும்

Digitized by Google

அப்படிப்பட்ட வல்லமையை அவர் உபயோகிக்கவில்லை. அச்சமயத்தில் தம்மை விடுவிக்க முயன்ற சீஷர்களைத்தானும் வெகுவாய்க் கண்டித்தார். (மத் 26: 52.) "தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்." தமது சத்துருக்கள் அவர்மேல் கொக்கரித்தெழும்பினபோது தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும்படியாகத் தமது கரத்தை நீட்டவில்லை.

ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்குத் தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள். (எபி. 12: 3.) கிறிஸ்துவின் போதனைகளைப்பார்க்கிலும் அவருடைய ஒப்பற்ற முன்மாதிரியே தீமையைச் சகித்ததினால் வரும் ஆசீர்வாதமின்னதென்று சீஷனுக்குப்போதிக்கும்.

## தியானம்.

## MEDITATION.

தங்களுக்குள்ள சன்மார்க்க குணங்களின் பிரமாணத்தை மாற்றி, தன்னை அடக்குதலுக்கும் தீமையைப் பொறுமையாய் சகித்தலுக்கும் உன்னத மாதிரியைக் காட்டிய நமது ஆண்டவருடைய முன்மாதிரியைப் பின்பற்றுவது சிலருக்கு அவசியம். அவர் மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலிருந்தார். ஒரு வார்த்தையினால் க்ஷணப்பொழுதில் அவர் தமது சத்துருக்களை அழிக்கக்கூடியதாயிருக்க, நிந்தையையும் மரணத்தையும் சகித்தது அவர் கற்பித்த தெய்வீகப்பாடமே.

———:o:———

## XXXV-ம் பாடம்.

## STUDY XXXV.

## சீஷனும் சத்தியவேதமும்.

## THE DISCIPLE AND THE BIBLE.

நமது ஆண்டவர் தேவனுடைய திருவசனத்தை அதிக அருமையாக மதித்தார். சிறு பிராயத்திலேயே அவர் பழைய ஏற்பாட்டைப் படித்து அதின் உபதேசங்களைக் கவனித்து அவைகளைத் தமக்கு வழிகாட்டியாக வைத்து அவைகளினால் தமது ஆத்துமாவுக்கு நல்

Digitized by Google

ல போஷிப்பைக் கண்டடைந்து எல்லா சமையங்களிலும் உபயோகித்தார். (மாற். 12: 28.) சோதனைக்காரன் அவரை எதிர்த்தபோது ஆவியின் பட்டயமாக அவர் அதை உபயோகித்தார் (மத். 4. லூக். 4: 1—12; மத். 15: 8; 12: 7).

புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டின் நிறைவேற்றம். யூதவேதத்தின் மங்கலான வெளிச்சம் புதிய ஏற்பாட்டினால் பட்டப்பகலின் வெளிச்சம்போல பிரகாசமடைந்தது. நியாயப்பிரமாணத்தையாவது தீர்க்கதரிசனங்களையாவது அழிக்கவந்தேனென்று எண்ணாதிருங்கள்; அழிக்கவல்ல நிறைவேற்றவே வந்தேன் என்றார். (மத். 5: 20) புதிய ஏற்பாட்டில் காணப்படும் கிறிஸ்துவின் உபதேசங்கள் பழைய ஏற்பாட்டு வாக்குத்தத்தங்களின் பூரண நிறைவேற்றமாயிருந்தது. அங்கே அரைகுறையாய்க் காணப்பட்டது இங்கே நிறைவாகவும் பூரண கருத்துள்ளதாகவும் காணப்படுகின்றன. அங்கே ஜாடையாய்க் காணப்படுகிறது இங்கே வெளிப்படையாய்க் காணப்படும்.

ஆண்டவர் தம்முடைய வசனத்தை அதிகமாய் மதித்து, தாம் உலகத்தாருக்குக் கொண்டுவந்த தேவஞானத்தையும், அதின் மேலான சத்தியத்தையும் நன்றாய் அறிந்திருந்தார்.

"வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" (மத். 24: 35; மாற். 13: 31).

தம்முடைய வசனம் வல்லமையுள்ளதென்று அறிந்ததோடு அது மனிதனுக்கு இன்றியமையாத அவசியமென்று கண்டிருந்தார். ஏனென்றால் இந்த வசனத்தை அவமதித்துத் தள்ளுகிறவன் அந்த வசனத்தினாலேயே வெட்கப்படுத்தப்படுவான். அப்படிப்பட்டவனுக்கு மீட்பு கிடையாது. "விபசாரமும் பாவமும் உள்ள இந்த சந்ததியில் என்னைக்குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படுவானோ அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது வெட்கப்படுவார்." (மாற். 8: 38.) பழைய ஏற்பாடு இயேசுவுக்கு அருமையாயிருந்ததைப் பார்க்கிலும் இயேசுவின் வார்த்தைகள் சீஷனுக்கு இப்போது அதிக அருமையானவை அதில் அவருடைய உன்னத பரமசத்தியங்கள் வெளிப்படுத்தப்படுகிறது இதினால்தான் சீஷன் தன் ஆத்துமாவைப் போஷித்துத் தன் ஜீவியத்தில் தனக்கு நேரிடக்கூடிய சோதனைகளினின்றும் பொல்லாங்குகளினின்றும் தன்னைக் காத்துக்கொள்ளத் தன் விசுவாசத்தைப் பலப்படுத்தக் கூடியவனாயிருக்கிறான்.

தேவவசனம் கர்த்தருக்கு ஆவியின் பட்டயமாயிருந்ததுபோலவே சீஷனுக்குமிருக்கவேண்டும். ஜீவியத்தின் கடும்போரில் அவன்

Digitized by Google

அதைச் சுழற்றிவீசப் பழகவேண்டும். சோதனைக்காரனை எதிர்த்து அவனை ஜெயிக்கும்படிக்கு எப்போதும் ஆயத்தமுள்ளவனாயிருக்கத் தக்கதாக அவன் அதை நன்றாய்ப்படித்துத் தன் மனதில் பத்திரப்படுத்திவைக்கவேண்டும்.

கிறிஸ்துவைப்பற்றியும் அவர் சீஷனுக்காக உண்டுபண்ணின பேருபகாரத்தைப்பற்றியும் தெளிவாய் அறிவிக்கும்படிக்கு ஆவியானவர் உபயோகிக்கும் கருவி தேவவசனமே. "பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார்." (யோ. 14: 26; 16: 14.) தேவவசனத்தை ஜெபத்துடன் படிக்கும் சீஷனுக்கு ஆவியானவர் கிட்டத்திலிருந்து அவனுக்குத் தெரியாதவைகளை வெளிப்படுத்தி ஒவ்வொரு வார்த்தையையும் தெளிவாக்குவார்.

தேவவசனம் ஜீவவித்து. இந்த அலங்காரமான வார்த்தையை ஆண்டவர் தமது உவமைகளில் அதிகமாய் உபயோகிக்கிறார். (மத். 13-ம் அதிகாரம் பார்க்க) 'விதை தேவனுடைய வசனம்.' வித்து என்பது ஜீவனுள்ளதும் பலன் கொடுக்கிறதுமான வஸ்து. சீஷனுடைய இருதயத்தில் அது விழுந்து முளைத்துச் செழித்து அநேகருடைய பசிதாகத்தைத் தீர்க்கத்தக்கதாக பலன் கொடுக்கும்.

தேவவசனத்தை உண்மையாய் உபயோகிப்பதினால் சீஷன் வல்லமை அடைவான். ஆவிக்குரிய வளர்ச்சியும் ஜீவியத்தின் வல்லமையும் பெற்று அவன் அவைகளில் பெருகும்படிக்கு இந்த வசனத்தின் மூலமாய் தேவனோடு ஐக்கியப்பட்டிருக்கவேண்டும். ஏனென்றால் அவனுக்கு நித்தம் அவசியமாயிருக்கின்ற ஆசீர்வாதங்களும் நன்மைகளும் இதிலிருந்துதான் புரண்டோடிவரக்கூடும்.

## தியானம்.

### MEDITATION.

தென் இந்தியாவில் புரொட்டெஸ்டாண்டு கிறிஸ்தவர்களுக்கு வேதக்காரர் என்னும் பெயர் வழங்கும். இந்தப் பெயருக்குத்தக்கவர்களாயிருப்பது பெருமை. சத்தியவேதத்திலிருந்து நமக்கு ஒவ்வொருநாளும் புது செய்தியும், ஊழியத்துக்கு புது திரட்சியும், தேவனோடு ஐக்கியமாவதற்கு புது உதவியும் வரும்படி பார்க்கவேண்டும்.

அருமையுள்ள கர்த்தாவே, கடலின் பக்கத்தில் நீர் அப்பங்களைப் பிட்டது போல, ஜீவ அப்பத்தை எனக்குப் பிட்டுத்தாரும்; உமது ஜீவவார்த்தைக்காக என் ஆவி வாஞ்சித்துக் கதறுகிறது.

Digitized by Google

## XXXVI-ம் பாடம்.
## STUDY XXXVI.

### சீஷனும் சத்தியவேதமும் (மு-டி-வு).
### THE DISCIPLE AND THE BIBLE (*Concluded*).

தேவ வசனமே சீஷனுடைய விசுவாசத்திற்கும் அவனது ஜீவியத்திற்கும் ஏற்ற திரவியசாலே. பழைய ஏற்பாட்டைக்குறித்து இயேசு யூதருக்குச் சொன்னதைப்பாருங்கள். "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவனுண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" (யோ. 5: 39). அப்படியானால் தற்காலத்திலுள்ளவர்கள் கிறிஸ்த வேதாகமத்தை எவ்வளவாய் மதித்து அதைக் கையாடவேண்டும்! ஏனென்றால் அதில் தேவனுடைய ஐசுவரியமுள்ள கிருபையானது தெளிவான பிரமாணங்களினாலும் வாக்குத்தத்தங்களினாலும் அடங்கியிருக்கிறதுமன்றி அவை அவரது மகிமைச் சொரூபத்தைப் பிரதிவிம்பிக்கின்றன. 2000 வருஷங்களுக்கு முன்னேயிருந்த எபிரேய வேதாகமத்தைப் பார்க்கிலும் இக்காலத்திய கிறிஸ்த வேதாகமம் எவ்வளவு மகிமைபொருந்தியதாயும் திவ்விய ஞானம் நிறைந்து ஆத்துமாக்களுக்குப் பிரயோஜனமுள்ளதாயுமிருக்கிறது.

### தியானம்.
### MEDITATION.

ஒவ்வொரு முக்கிய மார்க்கத்துக்கும் வேதம் உண்டு. சின்னபின்னமான மற்ற ஒளிகளுக்குள்ளே, சத்தியவேதத்தின் பூரண தெய்வீக பிரகாசம் நிகரற்றதாய்க் காணப்படும். பழைய ஏற்பாட்டு சங்கீதக்காரன் வைத்திருந்த வேதாகமம் எவ்வளவு குறைவானது! ஆயினும் அவன் அதை எவ்வளவு ஆழமாய் நேசித்து அதைப்பற்றி புகழ்ச்சியாய்ப் பேசினன். அவனுடையதைப் பார்க்கிலும் நமது சத்தியவேதம் எவ்வளவோ அதிக ஐசுவரியம் பொருந்தியதும் திருப்தியைக் கொடுக்கக்கூடியதுமாயிருக்கிறது! ஆயினும் நாம் அதை அதிகமாய் நேசித்து உயர்வாய் மதிக்கிறோமா?

---:0:---



Digitized by Google

## XXXVII-ம் பாடம்.
## STUDY XXXVII.

## சீஷன் எல்லா மனிதனையும் நேசிக்கவேண்டும்.
## THE DISCIPLE MUST LOVE ALL MEN.

சீஷனானவன் கிறிஸ்துவின் மூலமாய் தேவனோடு புதிய சிநேகத்தில் பிரவேசிப்பதுபோல மனிதரோடும் புதிய ஐக்கியத்துக்குள்ளானவன். ஆகையால் தேவனிடத்தில் அன்புகூரவேண்டும் என்ற கற்பனையோடு, பிறனிடத்திலும் அன்புகூரவேண்டும் என்ற கட்டளையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. "இதிலும் பெரிய கற்பனை வேறொன்றும் இல்லை." (மாற். 12: 31.) தேவனை நேசிப்பதுபோலவே பிறனையும் நேசிப்பது பிரதானமான காரியம்.

இரண்டாம் கற்பனை முதலாம் கற்பனையிலிருந்து புறப்படுகிறது. நாம் யாரை நேசிக்கவேண்டுமென்பதற்கு, நல்ல சமாரியனைப்பற்றி ஆண்டவர் சொன்ன உவமையே தக்க மறுமொழி. துன்பப்பட்டவர்களுக்கும், தரித்திரருக்குமே சீஷன் அன்புபாராட்டவேண்டும். தேவனுடைய அன்பைப்போல சீஷனுடைய அன்பு சத்துருவுக்கும் சிநேகிதனுக்கும் யாவருக்கும் செல்லவேண்டும். (மத். 5: 46; லூக். 6: 34.) கிறிஸ்துவினுடைய சீஷர்கள் பாராட்டும் அன்பு மாசற்றதும் கலப்பற்றதுமாயிருக்கவேண்டும். பொறாமையும், ஜாதிவித்தியாசமும், பட்சபாதமும் அதோடு கலந்திருக்கக்கூடாது. ஜாதிவித்தியாசமும் ஈனப்பொறாமையும் நிறைந்த இந்த இந்து நாட்டிற்கு இப்படிப்பட்ட உபதேசம் எவ்வளவு அவசியமாயிருக்கிறது.

இயேசு ஜாதிவித்தியாசம் பாராமலிருந்தது மாத்திரமல்ல, ஜாதிக்குரிய எல்லா விகற்பங்களையும் மிதித்தார். பெருமையுள்ள பரிசேயனையும், அந்தஸ்துள்ள சனகரீம் சங்கத்தானையும்பார்த்து, நீ இரட்சிக்கப்படவேண்டுமானால் மறுபடியும் பிறக்கவேண்டும் என்றார். (யோ. 3: 3.) ஜாதியைவிட்டுத் தள்ளப்பட்டிருந்தவனாகிய மத்தேயுவைச் சீஷனாகத் தெரிந்துகொண்டதினால் வேதபாரகரையும் அப்போஸ்தலரையும் பயப்படுத்தினார். ஜனசங்கத்தால் அப்புறப்படுத்தப்பட்டிருந்த ஆயக்காரரையும் பாவிகளையும் ஏற்றுக்கொண்டு அவர்களோடு சாப்பிட்டார். (லூக். 15: 1.) ஈனமாய் எண்ணப்பட்ட சமாரியனை, நன்மை செய்கிறவனுக்கடையாளமாக உயர்த்திப்பேசினார். சிலுவையிலுங்கூட உத்தம மனஸ்தாபப்பட்ட கள்ளனை இரட்சித்தார். இவ்விதமாக அவர் தமது காலத்திலிருந்த ஜனசங்கக் கட்டுப்பாடுகளை முறித்தெறிந்து ஆத்தும பக்குவமுள்ளவர்களை மாத்திரம் தம்முடையவர்களாகத் தெரிந்துகொண்டார்.

Digitized by Google

சீஷனின் அன்பு சகலருக்கும் எட்டவேண்டியதோடு அது மிகவும் அனலும் ஆழமுமாயிருக்கவேண்டும். இந்த அன்பு பழிவாங்குதலுக்கு இடங்கொடாது. உண்மையான அன்பின் அடையாளம் என்னவென்றால், பிறருடைய குற்றத்தை மன்னித்தல்தான். எளியவர்களுக்கும் தாழ்ந்தவர்களுக்கும் அவர்களுடைய அவசியத்துக்குத் தக்கதாக ஆழமும்அமைதியும் ஊக்கமுமுள்ள அன்புபாராட்டவேண்டுமென்று கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். நாம் பார்த்தபடிக்கு கடைசி நியாயத்தீர்ப்பு நாளின் உரைகல் இந்த பரோபகார அன்புதான். மத். 25: 34............ இந்த அன்பு மனிதர்மேல் கவலையும் அனுதாபமும்கொண்டு குடும்பத்திலும் பற்பல ஜாதியாரிடத்திலும் தேசத்தாரிடத்திலும் குலத்தாரிடத்திலும் செல்லுகிறது. மனுஷருக்குரிய சகல நிலைமையுமுள்ளவர்களுக்கு கிறிஸ்தவன் எல்லா விதத்திலும் அன்புபாராட்டவேண்டுமென்று சீஷன் கற்பிக்கப்படுகிறான். தற்காலத்தில் கிறிஸ்துமார்க்கம் போதிக்கிற விசேஷித்த சத்தியம் இதுவே. வேறெந்த மார்க்கமும் இப்படிப்பட்ட அன்பைக்குறித்துப் போதிக்கிறதில்லை. "மனிதர் உங்களுக்கு எவைகளைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்ற பொற்பிரமாணத்தில் ஆண்டவர் இந்த அன்பை அடக்கிச் சொன்னார்.

### தியானம்.

### Meditation.

*மனுக்குலத்தார் யாரையும் தேடும் விசாலமான அன்பும் அனுதாபமுமின்றி கிறிஸ்துமார்க்கம் நிலைத்திருக்கமாட்டாது. இதினாலேயே அது, இந்தியாவில் இப்போது தன் ஜீவனைக் காத்துக்கொள்ளுகிறதாயிருக்கிறது. தன் நன்மையையே பார்த்து ஜீவிக்கிற கிறிஸ்தவன் வளராத நிலைமையுள்ளவன் அல்லது சாகும் நிலைமையுள்ளவன். தன் ஜெபத்திலும் முயற்சியிலும் பூமியைச்சுற்றாத அன்பு இயேசுவின் சீஷனுக்கேற்ற அன்பல்ல.*

———:o:———

## XXXVIII-ம் பாடம்.

## Study XXXVIII.

## சீஷன் எல்லாரிடத்திலும் அன்புகூரவேண்டும் (முடிவு).

## The Disciple must Love all Men (*Concluded*).

எந்த மனிதனையும் நம்முடைய சகோதரனைப் பாவித்து அவனிடத்தில் அன்புகூரவேண்டுமென்று நாம் போதிக்கப்படுகிறோம்.

Digitized by Google

இயேசு போதித்தபடி தேவன் சர்வ ஜனங்களுக்கும் பிதாவானுல் எல்லா மனிதரும் ஒருவருக்கொருவர் சகோதரர்தான் சகோதரரா னுல் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்பது சர்வஜனப் பிர மாணம். (மத். 23: 8; 5: 22; 7: 3—5; 18: 50.) சகலவிதமான கசப் புக்கும் கோபத்திற்கும் இந்த அன்பு நேர்விரோதம். நான் உங்களுக் குச் சொல்லுகிறேன், தன் சகோதரனை அநியாயமாய்க் கோபிக்கி றவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் (மத். 5: 22). ஜனசங் கத்திலும் வியாபாரங்களிலும் இந்த அன்பு இருபிரிவாரையும் இணைத் துக்கட்டும். இது சகல பொருமைக்கும் பகைக்கும் மேலாக மனித னை நிறுத்தி இணக்கமும் சமாதானமுமான ஆவியை அவன்மேல் ஊ தும்.

மனுக்குலத்தாருடைய சகோதரத்துவமே மிஷனெரிவேலை எல் லாவற்றிற்கும் அஸ்திபாரம். மனிதர் யாவரும் சகோதரர் என்பதைக் கிறிஸ்துமார்க்கம் முக்கியப்படுத்தாவிட்டால் அது மிஷனெரி மார்க்க மாயிருக்க முடியாது. இந்து மதத்திற்கும் நமது மதத்திற்கும் உள்ள வித்தியாசம் இதுவே. நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதியாரை யும் சீஷராக்குங்கள்... .... ...பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்று ஆண்டவரும் கடைசிக்கட்டளை கொ டுத்தார் (மத். 28: 19; அப். 1: 8.) புறஜாதியாரின் அப்போஸ்த லனுகிய பவுலும் சர்வஜனத்தையும் நோக்கும் இந்த அன்பின் பிர மாணத்தினுல் தான் ஏவப்பட்டு, நான் கிரேக்கருக்கும் மற்ற அந்நியர் களுக்கும் (மிலேச்சருக்கும்) ஞானிகளுக்கும் மூடருக்கும் கடனுளியா யிருக்கிறேன் என்று கூறினுன். சகல தேசத்தாருக்கும் பாஷைக் காரருக்கும் இந்த அன்பினுலேயே கடமைப்பட்டிருந்ததாக அவன் தன் இருதயத்தின் ஆழத்தில் உணர்ந்தவனுயிருந்தான்.

பாவமுள்ள மனிதனை இயேசுவுக்குள் ஒளியினிடத்திற்குக் கொ ண்டுவரும்படி கண்டங்களையும் கடல்களையும் கடந்து திரிகிற ஒவ் வொரு சீஷனையும் மூலமாய்த் தள்ளிக்கொண்டுபோகிற நோக்கமிது வே அவன் அன்பாயிருந்தாலும் சரி. கிறிஸ்துவின் நாமத்தில் மிக வும் சிறியவனுயிருக்கிற ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறதும் ஆசீர்வாதமுள்ள கடமையாயும் மகிமையுள்ள நற்சம யமாயும் இருக்கிறது.

## தியானம்.

### MEDITATION.

மனுக்குலத்தாருடைய சகோதரத்துவமே கிறிஸ்து கண்டுபிடித்து தமக்கு வைத்துக்காட்டிய அடையாளம். முற்காலத்தில் அந்நியனுயிருந்தவன் சத்

Digitized by Google

துருவாகப் பாவிக்கப்பட்டான். இப்போதோ நாமெல்லாரும் சர்வஜன பிதாவின் விசாலமான கூரையின்கீழ் வசிக்கும் ஒரே சகோதர சம்பந்தராயிருக்கிறோம். கிறிஸ்துவிலே அதைப் பிடித்துக்கொண்டோம்.

———:O:———

## XXXIX-ம் பாடம்.
## Study XXXIX.

### சீஷனும் சகோதர அன்பும்.

### The Disciple and Brotherly Love.

சீஷனானவன் சர்வஜனங்களையும் கட்டுகிற இந்த அன்பின் கட்டை மாத்திரமல்ல, அதிலும் அனலாயிருக்கிற சகோதர சிநேகத்தின் சம்பந்தத்தையும் அறிந்துகொள்ளுகிறவனாயிருக்கிறான். முந்தினது இரத்தத்தின் சம்பந்தமே. பிந்தினது கிருபையினாலும் ஆவியினாலும் உண்டாகும் ஐக்கியம் கிருபையினால் அவர்கள் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் ஆவியினால் ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஆவிக்குரிய நோக்கங்கொண்டவர்களாய் சகலரையும் தேவனுடைய இராச்சியத்திற்குட்படுத்த முயலுவார்கள். அன்னியோன்னிய அன்பிலே சீஷர் அதிக விசேஷித்த கூட்டத்தாராயிருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டிலும்கூட இது காணப்பட்டது. ஆகிலும் நமது கர்த்தர் தமது அன்பின் ஆவியை அதின்மேல் ஊதி அதைப் புதுப்பித்தார். நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன் என்றார். (யோ. 13: 34.) கிறிஸ்துவின் அன்பே சகோதர அன்புக்கு அளவு நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒரு சகோதரன் கிறிஸ்து பாராட்டின அன்பைப்பார்க்கிலும் குறைந்த அன்புபாராட்டுவது போதாது, இரம்மியமாகாது. இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை. ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன். ஏனெனில், என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன் (யோ. 15: 15). இது கிறிஸ்துவோடு ஒன்றித்த அன்பு. இந்த அன்பையே நாம் சகோதரரிடத்திலும் பாராட்டவேண்டும். இந்தச் சிலாக்கியத்திற்கே கிறிஸ்

Digitized by Google

து தமது சீஷர்களை அழைக்கிறார். அவர்கள் கர்த்தருக்கு உடன் சகோதரராயிருக்கிறார்கள். கர்த்தர் தமது சீஷர்களைப்பார்த்து: இதோ, என் தாயும் சகோதரரும் இவர்களே; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனெவனோ அவனே எனக்குச் சகோதரனும் எனக்குச் சகோதரியும் எனக்குத் தாயுமாயிருக்கிறான் என்று தமது சீஷர்களைக் குறித்து ஜனங்களிடத்தில் சொன்னார் (மாற். 3: 34, 35). கர்த்தருடைய குடும்பத்தின் அங்கங்களாக நாம் ஒருவரையொருவர் நேசித்து ஒருவருக்கொருவர் உதவிசெய்யவேண்டும். சீஷர்கள் தேவனுடைய இராச்சியத்தாராயிருப்பதோடு அந்த இராச்சியத்தைப்பிரபலியப்படுத்தும்படி உலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் திருச்சபையின் அங்கங்களாகவுமிருக்கிறார்கள். ஆகையால் திருச்சபையை அன்பிலே பயிற்றுவது அவன்மேல் விழுந்த கடமை. உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால் நீயும் அவனும் தனித்திருக்கையில் அவன் குற்றத்தை உணர்த்து என்றார். (மத். 18: 18.) இன்னொரு இடத்தில், ஆகையால் நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச்செலுத்தவந்து உன்பேரில் உன்சகோதரனுக்குக்குறைவுண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில் அங்கேதானே பலிபீடத்தின்முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய் முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து என்றார். (மத். 5: 23, 24.) இவ்வாக்கியத்திலே சீஷன் தன் உடன் சகோதரனுக்குச் செய்யவேண்டிய சுயமான அன்பின் கடமை சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அன்பு எவர்களிடத்தில் இருக்கிறதோ அவர்களிடத்தில் கிறிஸ்தவ ஜீவியம் தாராளமாய்ப் புரண்டோடும். இது எவர்களிடத்தில் இல்லையோ அவர்களுடைய ஜீவியத்தில் தேவகிருபையின் வாய்க்கால் அடைபட்டிருக்கும். இந்த சகோதர சிநேகம் உலகத்தில் எங்கும் பரம்பி கிறிஸ்தவர்களையும் அன்னியோன்னிய ஐக்கியத்திற் கொண்டுவரும். நமது கர்த்தருடைய பரிந்துபேசுதலான ஜெபத்தின் மொத்தப் பொருள் இதுவே. அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். (யோ. 17: 21.) இந்த அன்பு இப்பொழுது திருச்சபையெங்கும் பரம்பிஜொலித்து கிறிஸ்துவின்காலத்திலிருந்ததுபோல கிறிஸ்துமார்க்கம் மெய்யாகவே தேவனிடத்திலிருந்து உற்பத்தியானதென்று சாட்சிபகர்கின்றது. முதல் நூற்றாண்டிலே கிறிஸ்துவின்வல்லமையினாலும் பெந்தெகோஸ்தின் ஆசீர்வாதத்தினாலும் கிறிஸ்தவர்கள் ஒருவரிலொருவர் யாதொரு வித்தியாசமின்றி அன்புகூர்ந்து தங்

Digitized by Google

கள் திரவியங்களை ஒன்றாய் வைத்தனுபவித்தார்கள். அவர்களைக்குறித்து ஒரு அஞ்ஞானி அறிமுகமில்லாதவராயிருந்தாலும் அவர்கள் ஒருவரிலொருவர் அன்புகூருகிறார்கள் என்றான். அப்போஸ்தலரின் காலத்திற்குப்பின்னுண்டான எல்லா நூற்றாண்டுகளிலும் இந்த அன்பு மிகுந்த வல்லமையுடன் செல்லுகிறது. பல பிரிவாரான கிறிஸ்தவர்களுக்குள்ளிருந்த சகல வித்தியாசங்களும் ஒழிந்து அன்பும் ஐக்கியமும் அவர்களுக்குள்ளே எவ்வளவாய்ப் பெருகிக் கிரியை செய்துவருகிறது.

## தியானம்.

### Meditation.

தேவனுடைய இராச்சியத்திலே கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் நேசித்து மதித்துவருகிறவர்களானதால் விகற்பமும் சந்தேகமுமுள்ளகாலம் ஒழிந்துபோகிறதைக் கண்டு நாம் தேவனைத் தோத்திரிப்போமாக. அன்பின் பரிபூரணமான ஆசீர்வாதத்துக்காக நாம் ஜெபிக்கவேண்டாமா? பரிசுத்த ஆவியே, பெந்தெகோஸ்தில் நீர் அளித்த மற்ற ஆசீர்வாதங்களெல்லாவற்றையும் பார்க்கிலும் பரிசுத்தத்தையும் அன்பையும் அதிகமாய் வாஞ்சிக்கிறோமே.

———:o:———

## XL-ம் பாடம்.

## Study XL.

## சீஷனும் மன்னித்தலும்.

### The Disciple and Forgiveness.

குற்றத்தை மன்னித்தல் அன்பின் விசேஷித்த அடையாளம். சிலுவை மரத்திலே நமது கர்த்தர் இந்தச் சிறந்த குணத்தை துல்லியமாய் விளக்கிக்காட்டினார். தம்மைச் சிலுவையிலறைந்த சத்துருக்களுக்கு மன்னிக்கும்படி அவர் பிதாவை வேண்டிக்கொண்டார். எதிர்க்குங் குணத்தை கிறிஸ்து எப்போதுங் கண்டித்துவந்தார். சகோதரத்துவத்தை எதிர்க்கிறவன் தேவதண்டனைக்குப் பாத்திரன். (மத். 5: 22) பிறர்குற்றத்தை மன்னிக்காத ஆவி பிசாசின் ஆவிதான். அது தேவனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிக்கமாட்டாது.

தேவனுக்கு விரோதமாய்ச்செய்த பாவங்களை அவர் மன்னிக்கும்படி ஆண்டவர் போதித்தார். மாதிரியாக அவர் நமக்குச் சொல்லிக்கொடுத்த ஜெபத்தில் தெளிவாகிறது. இதற்கு அனுபந்தமாக மனு

Digitized by Google

ஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால் உங்கள் பரமபிதா உங்களுக்கு மன்னிப்பார் என்ருர். (மத். 6: 12, 14, 15.) இன்னொரு சமயத்தில் அவர்: நீங்கள் இன்று ஜெபம்பண்ணும்போது ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமாஞல் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள் என்ருர். (மாற். 11: 25.) பிறர் குற்றத்தை மன்னியாதவனுடைய பாவத்தைத் தேவன் மன்னியார் ஜெபத்தைக் குறித்து அவர் தெளிவாகப் போதிக்கிறதும் நாம் அடிக்கடி மறந்துவிடுகிறதுமான போதனை இதிலே அடங்கியிருக்கிறது. மன்னிக்கிற விஷயத்திலே இதைத் தவிர வேறொன்றும் தேவன் செய்யக்கூடாது. பிறர் குற்றத்தை மன்னியாதவன் செலுத்துங் காணிக்கையை தேவன் அங்கிகரியார் என்றும் வேதம் போதிக்கிறது. (மத் 5: 23—26) கவனமாய் வாசிக்க. தேவனிடத்தில் சேர விரும்புகிறவன் முன்பு தன் சகோதரனோடே ஒப்புரவாகிப் பின்பு வந்து தன் காணிக்கையைச் செலுத்த வேண்டுமென்று அதில் எவ்வளவு கண்டிப்பாய்ச் சொல்லியிருக்கிறது. நமக்குள்ளும் நமது சகோதரருக்குள்ளும் சமாதானமும் நேசமுமில்லாவிட்டால் தேவன் தமது மன்னிப்பின் ஆசீர்வாதங்களை நமக்குக் கொடுக்கமாட்டார்.

## தியானம்.

### Meditation.

இரங்கி மன்னிக்காத குணத்தினல் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறக்கூடாதபடிக்கு எத்தனையோ இருதயங்கள் அடைக்கப்பட்டிருக்கின்றன. மன்னித்தாலுங்கூட அரைகுறையாய் பாதிமனதோடு மன்னிக்கிறபடியால் மன்னிப்பால்வரும் பத்திலொரு ஆசீர்வாதங்களை இழந்துபோகிருேமல்லவா? பகை சாதிக்கும் மன்னிக்காத இருதயங்களிலிருந்து எண்ணிறந்த கிறிஸ்தவர்கள் தேவனுடைய மன்னிக்கும் அன்புக்காக தினசரிசெய்யும் ஜெபங்கள் தேவ தூஷணமே! மற்றவர்களுடைய அற்ப சொற்பக் குற்றத்தை மன்னிக்காமல் வர்மம் சாதிக்கிறவன் தேவசமுகத்துக்குப் போகக்கூடாதபடிக்கு வழி அடைபட்டிருப்பது எவ்வளவு பரிதாபமான காட்சி!

———:o:———

Digitized by Google

XLI-ம் பாடம்.

STUDY XLI.

## சீஷனும் மன்னித்தலும் (முடிவு).

## THE DISCIPLE AND FORGIVENESS (*Concluded*).

மேலும் தேவன் நமக்கு மன்னிக்கிறதுபோல நாமும் ஒருவருக்கொருவர் மன்னிக்கவேண்டுமென்று கிறிஸ்து போதிக்கிறார். கெட்டகுமாரனுடைய உவமையிலே தகப்பன் எவ்வளவு சீக்கிரமாயும் இலேசாயும் தன் குமாரனுடைய குற்றத்தை மன்னித்தான். தீங்கையும் நஷ்டத்தையும் அடைந்தவன் அவன்தான். ஆனாலும் மகனை ஏற்றுக்கொண்டான் மூத்த குமாரனோ அவனை ஏற்றுக்கொள்ள மனமற்றவனாயிருந்தான். அன்பின்விருந்துக்குப் போகமாட்டேன் என்றான். மன்னிக்கிற குணம் இல்லாத அந்த வேலைக்காரனைப்பற்றிய உவமையைப் பாருங்கள் (மத். 18: 23—35). அதிலே இந்த சத்தியம் வற்புறுத்திக்காட்டப்படுகிறது. அதுமாத்திரமல்ல, தேவனுடைய அளவற்றஅன்பும் மனிதனுடைய கேவலமான சிந்தையும் இதில்காட்டப்பட்டிருக்கிறது. நாம் தேவனுக்குக் கடன்பட்டிருக்கிற தொகையையும்மனிதர் ஒருவருக்கொருவர்கடன்பட்டிருக்கிறதொகையையும் பாருங்கள். நமது பாவங்கள் கணக்கற்றதாயிருந்தாலும் அவர் எவ்வளவுதாராளமாய்த் தமது கிருபையான மன்னிப்பை நமக்குக் கொடுக்கிறார். நாம் பிறர் குற்றத்தை மன்னியாதிருப்பது எவ்வளவு கேவலமான காரியம். அற்பக்குற்றத்தைக்கூட நாம் மன்னிக்கிறதில்லை. நாம் எத்தனை தரம் மன்னிக்கவேண்டும்? நமது மன்னிப்புக்கு மட்டுண்டா? ஏழுதரம் மாத்திரமல்ல, ஏழு எழுபதுதரம் மன்னிக்கவேண்டும் என்று கர்த்தர் மறுமொழிகொடுத்தார். அதாவது, தன் குற்றத்தை உணர்ந்துவருகிற ஒரு ஆத்துமாவுக்கு சமாதானமும் சந்தோஷமுமாய் மன்னிப்புக்கொடுக்க நாம் எப்போதும் ஆயத்தமாயிருக்கவேண்டும். (மத். 18: 21, 22.) மன்னிக்கிற பழக்கம் நமக்கு அவசியம்.

குற்றஞ் செய்தவன் மன்னிப்பைத் தேடிவருகிறவனாய் இருந்தால் அதுவே போதுமானது. மனஸ்தாபமில்லாத பாவிக்கும் தேவன்தானும் மன்னிப்புக்கொடார். தன் குற்றத்தை உணராத இருதயத்திற்கு பாவமன்னிப்பினால் வரும் சமாதானமும் சந்தோஷமும் கிடையா. அவன் மனஸ்தாபப்பட்டால் அவனுக்கு மன்னிப்பாயாக. (லூக் 17: 3.) சமாதானம் பண்ணிக்கொள்வதற்கு இருகட்சியும் இணங்கவேண்டும். அப்படியே குற்றத்தை மன்னிக்கிறதிலும் தீமைசெய்தவனும் தீமை அனுபவித்தவனும் ஐக்கியமாகவேண்டும்.

Digitized by Google

நாம் நமது சத்துருக்களை எப்போதும் எவ்விடத்திலும் நேசிக்கவேண்டும். (மத். 5: 43—48) ஆனால் தீமைசெய்தவன் மன்னிப்பை ஏற்றுக்கொள்ள விரும்பினாலொழிய நாம் மன்னிப்புக் கொடுக்கலாகாது. அதினால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? பொல்லாங்கை அனுபவித்த சகோதரன் தான் முதலாவது பொல்லாப்புச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவித்து, தீமையை நன்மையினாலே வெல்லுவான்.

மன்னிக்கிற இந்த அன்பு பிறர் செய்த குற்றத்தை மன்னிக்கிறதோடு அதை மறந்துவிடவும் வேண்டும். மன்னிக்கிற சிந்தை பழைய தீமைகளைக் கனவிலும் நினையாது. மன்னிப்பைப் பெற்றவனுக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டாகுமோ மன்னிப்பைக் கொடுக்கிறவனுக்கும் அவ்வளவு சந்தோஷம் உண்டாகும். பாவியான ஸ்திரீ காணிக்கையோடும் கண்ணீரோடும் தன் நன்றியறிதலையும் அன்பையும் ஆண்டவருக்குக் காண்பித்தபோது அவருக்கிருந்த ஆனந்த சந்தோஷம் எவ்வளவென்று பாருங்கள்.

## தியானம்.

## MEDITATION.

மன்னிக்க எனக்கு மனமுண்டு என்று காட்டினால் போதுமென்று எண்ணாதே. தேவன் உனக்கு அப்படிச் செய்திருந்தால் நீ இப்போது எங்கே இருப்பாய்? ஒருவன் மற்றவர்கள் செய்கிற குற்றங்களை மறந்து எல்லாரோடும் சமாதானமாயிருக்கும்போது தான் அவன் மகாத்துமா என்று அறியப்படுவான். சமாதானம் பண்ணுகிறவர்கள் மும்மடங்கு பாக்கியவான்கள்; அவர்கள் தேவபுத்திரர் என்னப்படுவார்கள்.

——:o:——

## XLII-ம் பாடம்.

## STUDY XLII.

## துன்பப்படுகிற சீஷன்.

## THE DISCIPLE UNDER PERSECUTION.

கர்த்தருக்கு உண்மையுள்ள சீஷனாயிருக்கிறவன் எவனோ அவன் துன்பமடையவேண்டும். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குத் துன்பம் வருமென்று ஆண்டவர் முன்னறிவித்தார். சீஷன் தன் போதகனிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்

Digitized by Google

பட்டவனல்ல. சீஷன் தன் போதகனைப்போலவும் வேலைக்காரன் தன் எஜமானைப்போலவும் இருப்பது போதும். வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களானால் அவன் வீட்டாரை அப்படிச்சொல்லுவது அதிக நிச்சயமல்லவா? (மத். 10: 24, 25) அநேக கிறிஸ்தவர்கள் துன்பத்தின் கசப்பை ருசிக்கிறதில்லை. ஒருவேளை அவர்கள் ஜீவியத்தில் காணப்படுகிற உண்மைத்தாழ்ச்சி இதற்குக் காரணமாயிருக்கலாம். அநேகர் அநியாயமான விதமாய் உலகத்தைச் சந்தோஷப்படுத்தப்பார்க்கிறார்கள். துன்பத்தினின்று நீங்கிக்கொள்ள இலேசாய் வழிதேடுகிறார்கள். ஆனால் கிறிஸ்தவ ஜீவியத்தினால் வரும் சந்தோஷத்தையும் வல்லமையையும் இழந்துவிடுவதே அதன் பயன். என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்; முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான் (மத். 10: 22). "உலகம் உங்களைப் பகைத்தால் அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும். நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும் உலகம் உங்களைப் பகைக்கிறது." (யோ. 15: 18—20.) துன்பத்துக்குப் பயந்து ஒருவன் தன்னைத் தப்புவித்துக்கொள்ளக்கூடும். ஆனால் தன் ஆத்துமாவை இழந்துபோவான்; அல்லது துன்பத்திற்கு தைரியமாய்த் தன்னை ஒப்புக்கொடுக்கிறவன் கிறிஸ்துவுடனேகூட வெற்றிப்பயனாகிய சமாதானத்தையும் சந்தோஷத்தையும் அடைவான். தமக்குச் சொந்தமானவர்களின் குணத்தைச் சாதாரணமாய்த் தேவன் பரிசோதிக்கிற கருவி துன்பந்தான். (மத். 13: 21.) துன்பத்தின் உலையினூடாய்ச் சென்றாலொழிய மனிதன் தன்ஜீவனைக்குறித்து நிச்சயமுள்ளவனாயிருக்கக்கூடாது. உண்மையுள்ள சீஷனின் விசுவாசத்தையும் குணத்தையும் பரிசோதிக்கிறது இந்த உலைதான்; இது கிறிஸ்தவ இலட்சணங்களில் விசேஷித்ததாகிய பொறுமையை நீடிக்கச்செய்து அதை உறுதிப்படுத்துகிறது. 'என்நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்; ஆனாலும் உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது. உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்.' (லூக். 21: 17, 18.) துன்பத்தில் பொறுமை கிறிஸ்த ஜீவியத்தை அதிசயமான பிரகாரம் சிறப்பிக்கிறது. "துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக இராச்சியம் அவர்களுடையது.........பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்." (மத். 5: 10—12.) இயேசுவின் சிந்தையுள்ளவர்களாய்த் துன்பத்தைச் சகிக்கிறவர்கள் நிச்சயமான விடுதலையையும் பேராசீர்வாதத்தையும் பெறுவார்கள்.

Digitized by Google

இயேசுவுக்காகவும் அவரது சுவிசேஷத்துக்காகவும் துன்பத்தைச் சகிக்கிற சிலாக்கியம் மேன்மக்களுக்குத்தான் கிடைக்கும்.

## தியானம்.

## Meditation.

*தேவன் இந்தியாவில் தமது ஜனங்களுக்கு மெய்த்தேவபக்தியைக் கொடுக்கவும், துன்பம் வரும்போது அதைச் சகிப்பதினால் அவர்கள் நிலைவரமான விசுவாசத்தையும் பொறுமையையும் உலகத்துக்குக்காட்டி திரளான பேரை கிறிஸ்துவண்டை இழுக்கவும் நாம் ஜெபிக்கவேண்டாமா? இரத்தச் சாட்சிகளின் இரத்தம் இந்தியாவில் திருச்சபையின் வித்தாயிருக்கவேண்டும். துன்பம் வரத்தக்கதாக நமது கிறிஸ்தவர்கள் ஜீவிப்பது அபூர்வம். இந்த உலகத்தின் அதிபதியோடே அவர்கள் அடிக்கடி சிநேகமாயிருக்கிறார்கள்.*

———:o:———

## XLIII-ம் பாடம்.

## Study XLIII.

## சீஷனும் துன்பமும் (முடிவு).

## The Disciple under Persecution (*Concluded*).

*துன்பப்படுகிறவர்களுக்காக ஜெபிக்கும்படி சீஷனானவன் கற்பிக்கப்படுகிறான். (மத். 5: 44.) சரிக்கட்டுதலின் ஆவிக்கு அவன் இடங்கொடாதிருக்கவேண்டும். மிகக் கசப்பான துன்பத்தையும் சகித்து வருவதினால் அவன் ஜீவியத்தின் இன்பத்தை அடையவேண்டும். துன்பத்தில் பொறுமையாயிருப்பது அவனுக்கு அதிக வருத்தமல்ல; ஏனென்றால் என்னிடத்தில் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம்உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள் என்று கர்த்தர் சொன்னார். (யோ. 16: 33.) சீஷனானவன் துன்பத்தைச் சகிக்க எப்போதும் ஆயத்தமாயும் தைரியமாயும் இருப்பதோடு மற்றவர்களைத் துன்பப்படுத்தாமலும் இருக்கவேண்டும். கர்த்தருடைய நாமத்தினாலே பிசாசுகளைத்துரத்தின சீஷனைத் துன்பப்படுத்த யோவான் எவ்வளவாய் ஆத்திரப்பட்டான். (மாற். 9: 38.) கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தினதாக இதுவே முதல்தடவையாக எழுதப்பட்ட சங்கதி. இது கடைசியல்ல. உலகத்தில் கிறிஸ்த*

Digitized by Google

வர்கள் கிறிஸ்தவர்களைக் கடுமையாய்த் துன்பப்படுத்துகிறது மிகவும் சாதாரணம். ஐயோ! கிறிஸ்துமார்க்கத்திலுங்கூட கடும் பகையும் துன்பமும் அதிகமாய் இருக்கிறதில்லையா? ஆனால் இப்பொழுது கிறிஸ்தவர்களுக்குள் அன்பிணைவியும் அன்னியோன்னிய அனுதாபமும் அதிகப்பட்டு வருகிறதற்காகத் தேவனுக்கு ஸ்தோத்திரம். தற்காலத்தில் இந்துதேசத்துக் கிறிஸ்தவர்கள் துன்பத்திற்குப் பயந்து அதை விட்டு ஒடிப்போவது விசனமானகாரியம். இதனால் அநேகர் பக்தியில் குறைவடைந்து அன்பற்றவர்களாய்ப் போயிருக்கிறார்கள். திருச்சபை பக்தியிலும் விசுவாசத்திலும் குறைந்துபோகாமல் அனலும் உண்மையுமாயிருப்பதற்குத் துன்பம் அவசியம் வேண்டியதாயிருக்கிறது.

கடுந்துன்பங்களினாலும் பலத்த சோதனைகளினாலும் பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவிசெய்து ஜெயங்கொடுப்பதாக கர்த்தர் நமக்கு வாக்களித்திருக்கிறார். (மாற். 13: 11.) இந்தியாவில் அஞ்ஞானத்தால் சூழப்பட்டு குழந்தைப்பிராயத்திலிருக்கிற திருச்சபைக்கு, "பயப்படாதே, சிறு மந்தையே, உங்களுக்கு இராச்சியத்தைக்கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" என்ற வார்த்தைகளைவிட ஆறுதலைக் கொடுக்கத்தக்க வேறு வார்த்தைகளுண்டோ? இல்லை. (லூக். 12: 32.)

## தியானம்.

## MEDITATION.

நமது சகோதரரிடத்தில் குற்றம்பிடியாததும், அவரவர்களுடைய இஷ்டத்துக்கும் மனச்சாட்சிக்கும் ஏற்க தேவனை ஆராதிக்க சந்தோஷமாய் இடங்கொடுப்பதுமான சிந்தையை கிறிஸ்துமார்க்கத்தில் நாம் இன்னும் அதிகமாய்ப் படிக்கவேண்டும். தனக்குப் பிரியமானபடி ஒருவன் ஆராதிக்க இடங்கொடுக்கிறதும், மார்க்கத்தினிமித்தம் ஒருவன் துன்பப்படுத்தினால் அவனைத் தடுக்கிறதுமான துரைத்தனம் நமக்குக் கிடைக்கிறதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆயினும் உலகத்தைக் கலக்குவது தேவனுடைய ஊழியக்காரர்மேல் விழுந்த கடமை. இக்கடமையை உண்மையாய்ச் செய்தால், பொல்லாங்கனாலும் அவன் சோதனையாலும் துன்பம் வருவது திண்ணமே.

—:o:—

Digitized by Google

## XLIV-ம் பாடம்.

## STUDY XLIV.

### சீஷனும் தேவனுடைய இராச்சியம் பரம்புதலும்.

### THE DISCIPLE AND THE SPREAD OF THE KINGDOM.

கிறிஸ்துமார்க்கம், பரம்புகிறதும் சகல ஜனங்களேயும் வசப்படுத்துகிறதுமான தன்மையுள்ளதாயிருக்கிறது. உலகத்திலுள்ள மூன்று மிஷனெறி மதங்களில் இதுதான் பிரதானம். இது அன்பின் மார்க்கம். ஆகையால் அது வெளியேறி மனிதர்களைத் தேடித்திரியும். காணமற்போன ஆட்டின் உவமையில் கிறிஸ்துவே பெரிய மேய்ப்பன். சீஷனும் அப்படியே பன்னிருவரை அவர் தெரிந்து அவர்களைப் பயிற்சித்து வந்தபோது தம்முடைய இராச்சியம் சர்வஜன இராச்சியம், சீஷர்கள் அதை சர்வ ஜனத்திற்கும் கொண்டுபோக வேண்டுமென்று அவர்களுக்கு வற்புறுத்திக் காட்டிவந்தார். இதுவே சுவிசேஷத்தின் அடையாளக்குறிப்பு. தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது என்ற வார்த்தைகளில் தமது வேலையின் தன்மையை அவர் எடுத்துக்காட்டினர். கலியாண விருந்தின் உவமையில் எந்த ஜாதியாராலும் எந்த நிலைமைக்குட்பட்டவர்களாயிருந்தாலும் சகலரையும் விருந்துக்கு அழைக்க இராஜா அனுப்பினர். (மத். 22.) விதைக்கிறவனைப்பற்றிய உவமையில், இந்த இராச்சியத்தின் சத்தியங்களை விதைப்பதே சீஷனின் கடமை யென்று காட்டியிருக்கிறது. (மத். 13: 8, 9; 19—23.)

இந்த ஊழியத்திலே தமது சீஷர்கள் பங்காளிகளாயிருக்க வேண்டுமென்று இயேசு வழிகாண்பித்தார். உம்முடைய இராச்சியம் வருவதாகவென்று ஜெபிக்க அவர்களுக்குப்போதித்தார். அதிகமாய் அது பரம்பவேண்டுமென்று சீஷர் எப்போதும் வாஞ்சித்து அதைக் குறித்து ஆத்திரமுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று விரும்பினர். முதலாவது தேவனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் என்று போதித்தார். இதுவே அவர்கள் முதற்கவலையும் கருத்துமாயிருக்கவேண்டும் என்று அவர் விரும்பினர். உடன் சிருஷ்டிகளுக்குள்ளே இந்த இராச்சியத்தைப் பிரபலியப்படுத்தும் உத்திரவாதமான ஊழியத்தில் பழகும்படிக்கு அவர் முதலாவது பன்னிரண்டு பேரையும் பின்பு எழுபதுபேரையும் அனுப்பினர். இது தான் அவர்களின் முதற்கடமை. இந்தக் கடமையை ஆறுவகையாய் அவர் அவர்களுக்கு வெளிப்படுத்தினர்.

Digitized by Google

1. அவர்களுடைய ஜீவியம் அமைதலுள்ளதாக இருப்பதினாலுண்டாகும் வல்லமையினாலே தேவனுடைய இராச்சியத்தைப் பிரபலியப்படுத்தவேண்டும். இதற்கிசைவாக, மலைப்பிரசங்கத்திலே, சீஷன் உலகத்திற்கு உப்பாகவும், ஒளியாகவும் இருக்கிறான் என்று ஆண்டவர் காட்டினார். மற்றவர்களுக்கு உதவிசெய்து வருவதினால் அவர்களை வசப்படுத்துவதே கிறிஸ்தவ ஜீவியத்தின் இயல்பும் வல்லமையுமாம். கிறிஸ்தவ வரங்களும் குணங்களும் இராச்சியத்தைப் பரிபாலனஞ்செய்யும் தன்மையுடையது. தன்னைச் சூழவிருக்கும் ஜனங்களின் அறிவீனத்தை நீக்கி அவர்களைச் சுத்தப்படுத்தமாட்டாத கிறிஸ்தவனிடத்தில் ஏதோ ஒரு பெரிய குறைவுண்டு.

2. பரலோக இராச்சியம் இராஜ விருந்துக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. (மத். 22.) சீஷன் தன் ஆண்டவன் பெயரால் எங்கும் போய்ச் சகலரையும் அந்த விருந்துக்கு அழைத்துவரவேண்டியது. ஜீவனைப் பெறவேண்டுமென்று கிறிஸ்துவைத் தேடிவந்தவன் மற்றவர்களுக்கும் அந்த ஜீவனைக் கொடுக்கும்படி கற்பிக்கப்படுகிறான். மற்றவர்களுடைய பசிதாகத்தை உணராமலும் 'போய் அழைத்துவாருங்கள்' என்று எஜமான் சொல்லும் வார்த்தைகளைக் கவனியாமலும் பந்தியில் வந்து சம்மணங்கூட்டி உட்காருகிறவன் கிறிஸ்தவனேயல்ல.

## தியானம்.

### Meditation.

புறதேசத்தாருக்குப் பிரசங்கிக்க கிறிஸ்தவர்களால் அனுப்பப்பட்டிருக்கிறவர் மாத்திரம் அப்போஸ்தலன் அல்லது மிஷனெரி என்று நினையாதே. அலைந்து திரிகிற ஆத்துமாவைத்தேடி அதற்குச் சமாதானமும் பரிசுத்தமும் தரும்படி கிறிஸ்துவின் அன்பால் ஏவப்பட்டு பரிசுத்த ஆவியால் அனுப்பப்படுகிற ஒவ்வொருவனும் தேவனுடைய அப்போஸ்தலன்தான்.

அழியும் நிலைமையிலுள்ள ஒரு ஆத்துமாவுக்கு, இரட்சிப்பின் செய்தியைக்கூற மனமற்றவன் கிறிஸ்துவுக்குப்பின் செல்லுகிறவன் என்று சொல்லப்படத்தக்கவனல்ல. இந்த வேலை செய்வதற்கு எவ்வளவு அதிகமான தூரத்திற்கு ஒருவன் போகிறானோ அவ்வளவுக்கே அவன் மிஷனெரி என்று அழைக்கப்படுவான்.

—:0:—

Digitized by Google

## XLV-ம் பாடம்.

## Study XLV.

### சீஷனும் இராச்சியமும் (தொடர்ச்சி).

### The Disciple and the Spread of the Kingdom (*Continued*).

3. சீஷன் "மனிதனைப் பிடிக்கிறவன்" என்னப்படுகிறான். (மத். 4: 19.) மற்றவர்களை இந்தக் கிருபையின் இரட்சிப்புக்கு ஒவ்வொருவராக அழைத்துவரும்படி கிறிஸ்து தமது சீஷனுக்குக் கொடுக்கும் சிலாக்கியம் மகா மேன்மையுள்ளது. கிறிஸ்துவினால் போதிக்கப்பட்டு நன்றுஞ் செம்மையுமாய் மனிதனை ஆதாயப்படுத்துவது அவர்களை இரட்சிக்கும் புண்ணிய கிரியையாயிருக்கிறது.

4. சீஷன் ஜீவவசனத்தை விதைக்கிறவன். ஜீவபாதையில் நடக்கிற ஊக்கமுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் தான் போகும் வழியே விதைக்கிற ஒவ்வொரு வார்த்தையும் மற்றவர்களுடைய ஜீவியத்தில் முளைத்தெழும்பி நித்திய ஜீவனைக் கொடுக்கும் வித்தாயிருக்கும்.

5. தன் சுயநன்மைகளை வெறுத்துப் பிறர் நன்மையை விரும்புகிறவனாக சீஷனானவன் எங்கும்போய்ச் சகல பாஷைக்காரரையும் சகல நிலைமையிலுள்ளவர்களையும் இந்த இராச்சியத்தில் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். (மத். 28: 19, 20.) கர்த்தருடைய இந்தக் கடைசிக்கட்டளையில்தான் சீஷனின் முழு உத்திரவாதமும் அடங்கியிருக்கிறது.

"நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்." நமது உலகத்தை இரட்சிப்பதில் கிறிஸ்துவின் உடன் ஊழியக்காரராயிருக்கும் பரிசுத்த கடமையின் ஆழத்தை, திவ்விய சிலாக்கியத்தின் உன்னத மகிமையைப் பூரணமாய் அறிகிறவன் யார்? இது சுவிசேஷத்தைப்பிரசங்கிக்கிற வேலைமாத்திரம் என்று நாம் நினைக்கலாகாது. அதிலும் இது ஆழ்ந்த கருத்துள்ளது. இது சகலரையும் இந்த இராச்சியத்தின் சிலாக்கியங்களுக்கும் உத்திரவாதங்களுக்கும் கொண்டுவந்து நித்திய ஜீவனுக்கென்று அவர்களைப் பயிற்றுவிக்கிற உன்னத ஊழியமென்று சீஷன் அறிந்துகொள்ளவேண்டும். இந்த ஊழியத்திலே அவனுக்கும் பரமாறுதலான வாக்குத்தத்தம் உண்டு. அது என்னவென்றால், இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்று ஆண்டவர் திருவுளம்பற்றின திவ்விய வாக்குத்தத்தம்தான்.

Digitized by Google

## தியானம்.

## MEDITATION.

கடந்த நூற்றாண்டுக்குள் மிஷனெரியின் நோக்கம் அதிகமாய் மாறியிருக்கிறது. தற்காலத்திலுள்ள சில முக்கிய நோக்கங்கள் எவையெனில், புறப்பட்டுப்போய் ஜாதிகளைச் சீஷராக்குங்கள் என்று கட்டளையிட்ட நமது ஆண்டவர்மேலுள்ள அன்பும் பக்தியும், உலகமெங்குமுள்ள மனிதர் யாவரும் சகோதரர் என்ற எண்ணமுமே. சுவிசேஷத்தைக்கூற இந்த நோக்கங்கள் உன்னை ஏவுகிறதா? இந்தியாவிலுள்ள எண்ணிறந்த புறமதஸ்தரை இரட்சிக்க இப்போது பெரிய கதவு திறக்கப்பட்டிருக்கிறதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்.

விண்கிரீடம் பெறப்போருக்கு
க்றிஸ்தேசு செல்கின்றார்:
அவரின் வெற்றிக்கொடிக்கு
கீழாகப் போவோன் யார்?
தன் துக்கப் பாத்ரம் குடித்து
சோராமல் நிற்போன் யார்?
தன் சிலுவையை எடுத்து
அவர் பின் செல்வோன் யார்?

———:o:———

## XLVI-ம் பாடம்.

## STUDY XLVI.

## சீஷனும் இராச்சியமும் (முடிவு).

## THE DISCIPLE AND THE SPREAD OF THE KINGDOM (*Concluded*).

6. கடைசியாக சீஷனானவன் சாட்சிகொடுக்கிறவன். (அப். 1: 8.) இது ஆண்டவர் உலகத்தைவிட்டுப் போகும்போது அவர் கடைசியாகக் கொடுத்த கட்டளை. இது அவர் குறித்த கடைசியான வேலையாயிருப்பதால் இதைச் செய்வது உண்மையுள்ள கிறிஸ்தவனுக்கு இலேசாயும் இருக்கிறது. இதைச்செய்யப் படிப்பும் புறம்பான அந்தஸ்தும் அவசியமில்லை. அவனவன் கிறிஸ்துவைக் குறித்து அனுபவமாய் அறிந்துகொண்டதைப்பற்றி தன் ஜீவியத்தில் தன் இருதயத்துக்குக் கிடைத்த இரட்சண்ணிய சந்தோஷத்தைப் பற்றி உள்ளபடி தெளிவாய்க்கூறச் சீஷனானவன் அழைக்கப்படுகிறான். கிறிஸ்துவின் அன்பையும் கிறிஸ்தவ ஜீவியத்தையும் குறித்துப் படிப்பில்லாத எவனும் இலேசாய்ச் சாட்சிகூறலாம். தற்காலத்தில் அப்படிப்பட்ட சாட்சி உலகத்திலே எவ்வளவு வல்லமையுள்ளதாயிருக்கிறது! சர்த்தனைக்குறித்தும் அவரால் வந்த இரட்சிப்



Digitized by Google

யைக்குறித்தும் தாராளமும் உண்மையுமுள்ள இந்தச் சாட்சி இந்தியாவில் மிகவும் அவசியம். ஆதி அப்போஸ்தலர் முதலாவது சாட்சி கொடுத்தார்கள்.

மற்றெந்த முறையைப் பார்க்கிலும் இந்த முறையை அவர்கள் அனுசரித்ததினுலேயே அவர்கள் அதிகம் சித்தியடைந்தார்கள். நாமும் இந்தியாவிலே கிறிஸ்துவுக்குள்ளான நமது அனுபவசாட்சியினுல் செய்யும் நமது ஊழியம் வேறெந்த ஊழியத்திலும் அதிக மேன்மையானது. இந்தியாவில் கிறிஸ்துவைப்பற்றி சாட்சி கொடுக்க இன்னும் அநேகர் எழும்புவார்களாக. நமது ஜீவியம் சாட்சியத்துக்கு ஒத்திருக்கவேண்டும். ஜீவியமே பெரிய சாட்சி.

இந்தக் கடமைகள் மட்டுப்பட்டவையல்ல. சகல தேசத்தினுள்ளும், சகலதேசத்தாருக்குள்ளும் இவைசெல்லும். சீஷனுக்குக்கிடைத்திருக்கும் இந்த ஊழியம் சர்வஜனத்துக்குமுரியது. 'நிலம் உலகம்' 'சகல ஜாதிகளையும்,' 'பூமியின் கடைசிபரியந்தம்,' 'காணப்படுகிற யாவரையும்,' இந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் சர்வ ஜனத்தையும் குறிக்கிறதென்று காட்டுகிறது.

சீஷனவன் ஆத்துமாக்களை இந்த இராச்சியத்துக்கு அழைத்துவரும்படிக்கு அனுப்பப்படுகிற அப்போஸ்தலனுயிருக்கிறுன்.

அவன் கிறிஸ்தவ ஜீவியத்தில் வளரவளர, கிறிஸ்துவின் அன்பு அவன் இருதயத்தில் பெருகப்பெருக அவன் மனுக்குலத்தார்பேரில் அன்பும் அனுதாபமுங்கொண்டு அவர்களுடைய இரட்சிப்புக்கென்று முயற்சிப்பான். இந்த அன்பு அவன் இருதயத்தில் அதிகமதிகமாய் உறுத்திக்கொண்டேயிருக்கும். 'இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்' என்ற கர்த்தரின் வார்த்தைகள் பூரணமாயும் தெளிவாயும் தொனித்துக்கொண்டேயிருக்கும். (மத். 10: 8.)

இந்த விஷயத்தில் கிறிஸ்துமார்க்கத்திற்கும் இந்துமதத்திற்கும் எவ்வளவோ வித்தியாசம்! பிறத்தியாரைக்குறித்து இது கிஞ்சித்துங் கவலைப்படுகிறதில்லை. உலகத்திலுள்ள எல்லா மார்க்கங்களிலும் கிறிஸ்துமதமே இந்த விஷயத்தில் மேலானதும் திவ்விய அலங்காரமுமுள்ளது.

## தியானம்.

## MEDITATION.

ஐரோப்பா ஆசியாவும்
ஆப்ரிக்கா கண்டமும்
எத்திசை தேசம் தீவும்
பூலோகம் அனைத்தும்

Digitized by Google

இம்மானுவேலைச் சேரும்
சுதந்தர சொந்தமாய்;
மெய்மார்க்கம் வளர்ந்தோங்கும்
மகாப்ரபல்லியமாய்.

இயேசுவினாலுண்டான
நற்செய்தி கூறுவோம்;
பேரன்பின் மகத்தான
மெய்ச் சுடர் காட்டுவோம்;
பூலோக மெங்குமாக
பேரொளி வீசவே
இயேசு மா ராஜாவாக
வந்தரசாள்வாரே.

Digitized by Google

## VII-ம் அதிகாரம்.
## CHAPTER VII.

# திருச்சபையைக்குறித்து இயேசு போதித்தது.
# THE TEACHING OF JESUS ABOUT THE CHURCH.

### I-ம் பாடம்.
### STUDY I.

### திருச்சபையின் தன்மை.
### *The Character of the Church.*

நாம் மேற்கண்டபடி, ஆண்டவர் தேவனுடைய இராச்சியத்தைப்பற்றி அடிக்கடி பேசினாலும் திருச்சபையைக்குறித்துப் பேசினது இரண்டுதரம் மாத்திரம். அதுவும் ஒரேயொரு சுவிசேஷத்தில் தான் காணப்படும். ஆனால் இந்த இரண்டு குறிப்புகளும் மிகவும் கவனிக்கப்படத்தக்கது.

கிறிஸ்துநாதர் இவ்வுலகத்தில் தேவனுடைய இராச்சியத்தை ஸ்தாபிப்பதிலே விடாக்கவலையுள்ளவராயிருந்ததினால் திருச்சபையைக்குறித்துக் கவனிக்க அவருக்கு அதிக சாவகாசமில்லை. ஆயினும் சபையானது ஆவிக்குரிய இந்த இராச்சியத்தின் புறம்பான ஒழுங்கேயன்றி வேறல்ல. பரலோக ஒழுங்கு இதினால் பூலோகத்தில் ஸ்தாபகமானது. இந்த இராச்சியத்தை ஸ்தாபிக்கவே அவர் மிகவும் கவலையெடுத்தார். திருச்சபையை ஸ்தாபித்து ஒழுங்குபடுத்துவதே பரிசுத்தாவியின் வேலை. பெந்தெகோஸ்து நாளில் இது ஆரம்பம் பெற்றது. இயேசுவின் பார்வையில் திருச்சபைக்கும் தேவனுடைய இராச்சியத்துக்கும் வித்தியாசமுண்டு. சபையைக் குறித்த அவருடைய உபதேசத்திலே தற்காலத்திய சபையில் காணப்படுகிற ஆச்சரியமான ஆடம்பரங்களும், கணக்கற்ற சடங்காசாரங்களும், பிரமிக்கத்தக்க ஒழுங்குகளும், பல அந்தஸ்துள்ள சபை உத்தியோகஸ்தரும், இவைகளெல்லாம் அவர் திருச்சபையைக்குறித்துக் கொண்ட எண்ணத்திற்கு எவ்வளவு தூரமாயிருந்தது.

Digitized by Google

நாம் முன் பார்த்தபடி திருச்சபையானது தேவனுடைய இராச்சியம் இவ்வுலகத்தில் பரம்பும்படி வைக்கப்பட்ட ஒழுங்குதான். கிறிஸ்து திருச்சபையைப்பற்றிப் போதித்ததென்ன ?

1. அது தாழ்மையுள்ள ஊழியஞ் செய்யும்படி நியமிக்கப்பட்ட ஒரு சகோதரத்துவம். மனுஷகுமாரன் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியஞ் செய்யவே வந்தார். அவர் யார் யாரைத் தெரிந்துகொண்டாரோ அவர்கள் இந்த ஊழியத்தில் பங்காளிகளாயிருக்கும்படிக்கே அவர்களை அழைத்தார். "நீங்களோ ரபீ யென்றழைக்கப்படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார். நீங்களெல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்" என்றார். (மத். 23: 8—10.) ஆண்டவர் தமது சீஷரைக் கூட்டிச்சேர்த்தபோது அவர்கள் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய தாழ்மையான ஊழியத்தையே முதல் நோக்கமாய் வைத்து அவர்களை அழைத்தார்.

2. திருச்சபை கர்த்தருடைய பார்வையில் மணிகளும் களைகளும் நிறைந்த கலப்பான கூட்டமாயிருந்தது. நன்மையும் தீமையும் கலந்திருந்ததென்று களைகளைப்பற்றிய உவமையினால் ஆண்டவர் காட்டினார். (மத். 13: 24—30.)

பூமியிலிருக்கும் திருச்சபையிலே உண்மையான கிறிஸ்தவர்களும் மாயக்காரரும் காணப்படுவார்கள். கடைசி நாளில்தான் அவர் அவர்களைச் சலித்தரித்துச் சேர்த்துக்கொள்ளுவார். தமது சிறு சபையாகிய அப்போஸ்தருக்குள்ளும் களை கலந்திருந்தது. உங்களில் ஒருவன் பிசாசாயிருக்கிறான் என்றாரே. அந்நாள்முதல் இந்நாள்மட்டாக பிசாசுகள் ஆளோடாளாய்க் கலந்திருக்கின்றன. இன்னொரு இடத்திலே, அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு திரிகிற ஓநாய்கள், ஆட்டுக்குட்டிகளைப் பீறிச் சிதறப்பண்ணுகிறவர்கள், என்றார். ஆயினும் திருச்சபையானது மேன்மேலாகச் சுத்திகரிக்கப்பட்டுவருகிறது.

## தியானம்.

## MEDITATION.

திருச்சபையானது பரிசுத்தாவியால் முக்கியமாய் ஏற்படுத்தப்பட்டது. அது உலகத்தில் அவருடைய தெய்வீக முயற்சியைச்செலுத்தும் விசேஷ வாகனமே. தமது சபையின் உள்ளேயும் அதின் மூலமாயும் உலகத்தாரை ஆசீர்வதித்து இரட்சிக்க அவர் என்றைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார்.

அது ஊழியத்துக்காக ஏற்படுத்தப்பட்ட சகோதரத்துவம்! நமது ஜனங்கள் ஒருவருக்கொருவர் உதவிசெய்யவும், அவர்கள் ஒன்றாய்ச் சேர்ந்து மனிதருக்கு ஊழியஞ்செய்யவும் தக்கதாக தேவன் ஏற்படுத்திய சொந்த ஏற்பாடு.

Digitized by Google

ஒரு சபை தான் செய்யவேண்டிய அன்பும் தாழ்மையுமுள்ள ஊழியத்தை மறந்து அல்லது அதை அற்பமாயெண்ணி, தன் சுயதிருப்திக்கும் சந்தோஷத்திற்கும் முயற்சிக்கும்போது அது ஜீவனுக்கும் வல்லமைக்கும் ஆசீர்வாதத்துக்கும் உறைவிடமில்லாமற் போகிறது.

———:o:———

## II-ம் பாடம்.

## Study II.

### திருச்சபையின் தன்மை (தொடர்ச்சி).

### The Character of the Church (*Continued*).

3. திருச்சபையானது ஐக்கியத்திற்காகவும் ஆராதனைக்காகவும் கிறிஸ்துவின் நாமத்தில் ஒன்ருய்க் கூடுகிற கூட்டமென்று ஆண்டவர் சொன்னுர். இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினுலே எங்கே கூடியிருக்கிருர்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்ருர். (மத். 18: 20.)

ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காகவும் அன்னியோன்னிய விருத்திக்காகவும் அவர் நாமத்தில் ஒன்ருய்க்கூடிவருவதினுல் அவர்கள் தேவப் பிரசன்னத்தை அடைவார்கள். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இந்தப் பிரசன்னத்தினுல்தான் கிறிஸ்தவர்களுக்கு சபையென்று அருத்தங்கொள்ளும் (Ecclesia) என்னும் பேருண்டாயிற்று.

4. அதே வாக்கியத்தில் திருச்சபையானது கிறிஸ்துவின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கான அவருடைய வாசஸ்தலமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பரிசுத்தவான்கள் எங்கெங்கே கூடிவருகிருர்களோ அங்கங்கே அவர் சமூகமாயிருந்து தமது வாக்குத்தத்தத்தின்படி அவர்களுக்குத் தமது ஆசீர்வாதங்களேயும் வல்லமையையும் அருளுகிருர். இது கிறிஸ்துவின் பிரசன்னமென்ருலுஞ்சரி, ஆவியின் பிரசன்னமென்ருலுஞ்சரி, வித்தியாசமில்லை. ஒன்று நிச்சயம். அதாவது, அவருடைய ஜனம் ஒரு சபையாகக் கூடிவந்து அவரை ஆராதித்து அவருடைய ஆசீர்வாதத்தைத் தேடும்போது அவர் சமூகமாயிருந்து அவர்களை ஆசீர்வதிக்கிருர் என்பதே.

5. திருச்சபையானது இயற்கை ஒழுங்கின்படி உண்டானதல்ல. கிறிஸ்து அதை ஸ்தாபித்தார். அவரே அதில் வாசமாயிருக்கிருர். மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன்: நீ பேதுருவாயிருக்கிருய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன் என்ருர். (மத்.

Digitized by Google

16: 18.) இந்தக் கல்லானது (Petra) மேசியாவாகிய இயேசுவைப் பற்றி பேதுரு செய்த அறிக்கையே. இந்த விசேஷித்த அறிக்கை யின்பேரில் நமது கர்த்தர் பூமியிலே தமது சபையாகிய பெரிய ஆல யத்தைக் கட்டினார். அவரது மேசியத்துவமே இந்தச்சபையின் மூலைக்கல். தமது ஆவியின் மூலமாக இந்தப் பரிசுத்த ஸ்தலத்தில் வசித்து அதின் அங்கங்கள் ஒவ்வொருத்தர் பேரிலும் தமது ஜீவ ஆவி யை ஊதுகிறார். பேதுருவின் அறிக்கை இயேசுவின் ஊழியத்தில் ஒரு விசேஷித்த சமயத்தைக் காட்டும். அவருடைய ஜீவியத்தின் நோக்கம் இப்போதுதான் சீஷர்களுக்கு வெளியானது. இதற்கு மறுமொழியாக ஆண்டவர் இந்த அறிக்கையின்மேல்தான், நான் என் சபையைக்கட்டப்போகிறேன் என்று சொல்லி, பேதுருவின் கையில் அதைக் கட்டவும் கட்டவிழ்க்கவும்தக்க திறவுகோலைக் கொடுத்தார். அவனும் மற்றச் சீஷரும் சேர்ந்து செய்த இந்த அறிக்கையின்பேரில் கிறிஸ்து தமது சபையை ஸ்தாபித்தார்.

The Teaching of Jesus by Dr. Stevens, pp. 153 and 154.

## தியானம்.

### MEDITATION.

மனுக்குலத்தவரின் சேதத்திலிருந்து இயேசு தளவாடங்களைத் தெரிந்து அவைகளைத் தமது தெய்வீக அக்கினியின் குகையில் புடமிட்டுச் சுத்திசெய்து தம்மை அஸ்திபாரமாக வைத்து அவைகளைக்கொண்டு தமது திருச்சபையைக் கட்டினார்.

சபையின் அஸ்திபாரம்
நன் மீட்பர் க்றிஸ்துவே;
சபையின் ஜன்மாதாரம்
அவரின் வார்த்தையே;
தன் மணவாட்டியாக
வந்ததைத் தேடினார்.
தமக்குச் சொந்தமாக
மரித்ததைக் கொண்டார்.

எத்தேசத்தார் சேர்ந்தாலும்
சபை ஒன்றே ஒன்றாம்;
ஒரே விஸ்வாசத்தாலும்
ஒரே இரட்சிப்புண்டாம்.
ஒரே தெய்வீக நாமம்
சபையை இணைக்கும்;
ஓர் திவ்ய ஞானாகாரம்
பக்தரைப் போஷிக்கும்.

Digitized by Google

## III-ம் பாடம்.
## Study III.

### திருச்சபையின் தன்மை (தொடர்ச்சி).
### The Character of the Church (*Continued*).

6. கிறிஸ்துவின் சபையானது தன்னுடைய அங்கங்களைச் சிட்சிக்கும் அதிகாரம்பொருந்தியது. கர்த்தர் இதைக்குறித்துத் தெளிவாய்ச் சொல்லுகிறார். உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால் அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில் அவன் குற்றத்தை உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால் உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால் இரண்டுமூன்றுசாக்ஷிகளுடைய வாக்கினாலே சங்கதிகள் எல்லாம் நிலைவரப்படும்படி இரண்டொருவரை உன்னுடன் கூட்டிக்கொண்டுபோ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால் அதைச் சபைக்குத் தெரியப்படுத்து. சபைக்கும் செவிகொடாதிருப்பானானால் அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக என்றார். (மத். 18: 15—17.) திருச்சபையானது தன்னிலுள்ள அசுத்தங்களையும் பொல்லாத மனிதர்களையும் நீக்கிப்போடும்படியான அதிகாரமுள்ளது. இது தேவன் கொடுத்த அதிகாரம். உலகத்துக்கு முன்பாகத் தன்னை மாசில்லாத குற்றமற்ற சபையாக பாதுகாத்துக்கொள்ளும் பரிசுத்த கடமையைத்தவிர வேறு கடமை திருச்சபைக்கு இல்லை.

7. திருச்சபையானது ஒருமனப்பட்ட ஜெபத்திற்காகவும் பொதுவான ஆராதனைக்காகவும் நியமிக்கப்பட்ட ஒழுங்கு. உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால் பரலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்குண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (மத். 18: 19.)

இந்த இரண்டு விஷயங்களிலே திருச்சபை உலகத்தில் நன்மை செய்யத்தக்க வல்லமையுள்ளது. ஒருமனப்பட்ட ஜெபம் எவ்வளவு வல்லமையுள்ளதாயிருக்கிறது. தற்காலத்தில் அது பலவகையான கிறிஸ்தவர்களுக்குள்ளே ஐக்கியத்திலும் அன்னியோன்னியத்திலும் அதிகமாய்ப் பரம்பி, பொறாமை வஞ்சனை படிப்படியே குறைந்து, அனுதாபமும் பரோபகாரமும் பெருகிவருகிறது. கிறிஸ்தவர்களுக்காக ஜெபிக்கும்படி வருஷாவருஷம் நியமிக்கப்படும் வாரங்களும் நாட்களும் எத்தனையோ உண்டு.

Digitized by Google

இப்படிப்பட்ட ஐக்கிய ஜெபக்கூட்டங்களினால் திருச்சபையானது குறையாத வல்லமையோடு கிருபாசனத்தை முற்றிக்கைபோட்டு ஏராளமான ஆசீர்வாதத்தை நமக்குக் கொண்டுவருகிறது. சாத்தானின் கோட்டைகளைத் தகர்த்து எறிகிறதற்கு அன்னியோன்னியமே பலத்த தண்டாயுதம்.

அப்படியே சபையானது ஊழியத்தின் ஆவியையும் மனிதருடைய இருதயத்தில் பிறப்பிக்கும் பலத்த சத்துவமுள்ளது. சபையின் ஏவுதலால்தான் மனிதர் தாழ்மையும் தயாளமுமான எத்தனையோ வகையான பிரயாசங்கள் எடுத்துவருகிறார்கள். முற்காலத்தில் செய்ததைப்பார்க்கிலும் தற்காலத்தில் அது தனித்தனி ஆட்களாகவும் ஐக்கியப்பட்ட கூட்டத்தாராகவும் உலகத்தில் பலமான ஊழியஞ் செய்துவருகிறது.

## தியானம்.

## Meditation.

திருச்சபையின் முதற்பிரமாணமும் அதற்கிருக்கவேண்டிய மேலான இலட்சணமும் பரிசுத்தமே. "கிறிஸ்துவின் மணவாட்டி" உலகத்தால் கறைப்படாதபடிக்கு தன் வஸ்திரத்தைக் காத்துக்கொள்ளவேண்டும். இந்தியாவில் சமாதானமென்னும் பலிபீடத்தில் பரிசுத்தத்தைப் பலியிடுவது திருச்சபையில் அடிக்கடி காணப்படும் தீமை. சமாதானத்தைக் காப்பதினிமித்தம் தீமையைத் தொடாமலும் பாவங்களைக் கண்டிக்காமலும் விட்டுவிடுகிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட சமாதானம் மரணத்தின் சமாதானம். பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது பரிசுத்தமாயும் பிற்பாடு சமாதானமுள்ளதாயுமிருக்கிறது. ஒற்றுமைக்காக சபையிலுள்ள பாவத்தை மறைப்பது நிலையான ஒற்றுமைக்குரிய நம்பிக்கையைக் கெடுப்பதாகும். மனிதருடைய மனம் முறிந்துபோகுமென்று பயந்து பாவத்தை சாடையாய் விட்டுவிடும் சபை, பாவத்துக்குள்ளானோருக்கு கடைசியில் அழிவைக் கொண்டுவரும்! அப்படிப்பட்ட சபை தனக்கு ஒப்புவிக்கப்பட்டதில் உண்மைக்குறைவுள்ளதாய்க் காணப்பட்டால் அழிந்துபோகும்.

———:0:———

Digitized by Google

## IV-ம் பாடம்.
## Study IV.

## திருச்சபை (தொடர்ச்சி).
## The Church (*Continued*).

8. திருச்சபையானது கட்டவும் கட்டவிழ்க்கவுந்தக்க அதிகாரமுடையதென்று கர்த்தர் போதித்தார். பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (மத். 18: 18.) இதின் முழுத் தாற்பரியமும் இன்னதென்று நாம் நிச்சயமாய்ச் சொல்லக்கூடாது. பரலோக இராச்சியத்தின் திறவுகோலென்ற பதத்தின் அர்த்தம் இந்த வசனத்திலும் உண்டு. அதாவது, திருச்சபையானது தன் காரியங்களை நடத்தித் தன்னிலுள்ள தகாதவர்களைச் சிட்சித்து அவர்களைப் புறம்பாக்கத்தக்க ஒழுங்குகளைச் செய்யவும் பிரமாணங்களை உண்டாக்கவும் அவரிடம் அதிகாரம் பெற்றுவந்திருக்கிறது.

அதேவண்ணமாக, ஆண்டவர் தாம் உயிர்த்தெழுந்தபின்பு சபையின் தலைவர்களாகிய தமது சீஷர்களின்மேல் ஊதி, எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும்; எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார். (யோ. 20: 23.) இவ்விதமாக ஆண்டவர் பொதுவான சபைக்கும் அந்தந்த இடத்திலுள்ள சபைகளுக்கும் ஒரேவண்ணமாக விசேஷித்த அதிகாரங்கொடுத்து உலகத்தால் கறைப்படாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளவும், தன் அங்கங்களுக்கு கனத்தையும் பெரிதான ஆசீர்வாதங்களையும் கொடுக்கவும் மேலான வரங்களை ஈந்தருளினார்.

அப்படியே பேதுரு ஆண்டவருடைய மேசியாத்துவத்தை அறிக்கைசெய்தபோது, ஆண்டவர் அவனைப்பார்த்து: பரலோக இராச்சியத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன். பூலோகத்திலே நீ கட்டுகிறதெதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ, அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று சொன்னார். (மத். 16: 19.) இந்த வார்த்தைகளைக்கொண்டு, இந்தச் சமயத்திலேதான் ஆண்டவர் பேதுருவை பிரதானப்படுத்தி, எல்லாச் சபைக்கும் தலைவனாகவும் அதிகாரியாகவும் வைத்தார் என்று சிலர் வாதிக்கிறார்கள். இந்த வி

Digitized by Google

யாக்கியானம் சரியல்ல. மேற்கண்டபடி, மற்ற அப்போஸ்தலருக்கும் ஆண்டவர் இந்த அதிகாரத்தைக் கொடுத்தார். திருச்சபைக்குங்கூட அவர் இந்த அதிகாரத்தைக் கொடுத்தார். பேதுருவுக்கும் மற்ற அப்போஸ்தலர்களுக்கும் திருச்சபைக்கும் இந்தத்திறவுகோலை, அதாவதுசபையை நடத்தும்ஞானத்தையும் கொடுத்தார். இந்த அதிகாரத்தை நன்றாஞ் செம்மையுமாய் நடத்தி, உலகத்தின் கறைகளுக்கு விலகித் தன் அங்கங்களுக்குப் பேராசீர்வாதங்களைக் கொடுத்துவருகிற சபை எதுவோ அதுவே ஆசீர்வாதம் நிறைந்த சபையாம்.

## தியானம்.

## MEDITATION.

*மனிதர் அதிகாரத்தை விரும்புகிறார்கள். புறம்பான விஷயங்களில் இராச்சியத்துக்குரிய அதிகாரத்தை தேவனுடைய சபை அதிகமதிகமாய்த் தேடிவந்திருக்கிறது. ஊழியத்துக்குரிய அதிகாரத்தையோ அது தேடவில்லை. கர்த்தர் இந்தத் தீமையை அறிந்து, நீங்கள் எஜமான்களாக அழைக்கப்படாதிருங்கள் என்றார். திருச்சபையைச் சேர்ந்த ஒரு வகுப்பார் தனக்கும் தன் பின்னடியாருக்கும் இப்போது கொடுத்திருக்கும் தெய்வீக அதிகாரத்தைப் பேதுரு பார்த்திருந்தால் பயப்படுவானல்லவா? சபை ஆளுகைக்குரிய அதிகாரத்தைத் தேடுவது முற்காலத்துச் சபையின் பேராசையும் பிரதான பெலவீனமுமாயிருந்தது.*

*சிங்காசனங்களாலும் செங்கோல்களாலும் அல்ல, மனத்தாழ்மையுள்ள ஊழியத்தினாலேயே தேவனுடைய சபை உலகத்தில் அதிகாரம்பெற்று தேவனுடைய இராச்சியத்தின் திறவுகோல்களைப்பெற பாத்திரமுள்ளதென்று காட்டவேண்டும்.*

———o:———

## V-ம் பாடம்.

## STUDY V.

## திருச்சபை (முடிவு).

## THE CHURCH (*Concluded*).

9. திருச்சபையானது எதிர்க்கப்படாத சபையாய் இருக்குமென்று ஆண்டவர் சொன்னார். பேதுரு அந்த அறிக்கை செய்தபோது அவர் அவனைப்பார்த்து: இந்தக் கல்லின்மேல் (அதாவது தம்முடைய மேசியாத்துவத்தைப்பற்றி அவன் செய்த அறிக்கை.) என்

Digitized by Google

சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை என்று சொன்னார். (மத். 16: 18.) தேவனுடைய ஆவியானவர் திருச்சபையின் நடுவே வாசம்பண்ணி அதன் காரியங்கள் எல்லாவற்றையும் அவரே நடத்திவருகிறார். பிசாசின் தந்திரங்களையும் நரகலோகத்தின் சகல வல்லமைகளையும் எதிர்த்து, சகல பாவங்களையும் தீமைகளையும் நீக்கவும் திருச்சபைக்குச் சர்வாயுதவர்க்கத்தைக் கொடுத்து, அதைத் தமது அன்பினாலும் பரிசுத்தத்தினாலும் நிரப்பிவருகிறார். முற்காலங்களில் காணப்பட்டதைப் பார்க்கிலும் தற்காலத்தில் திருச்சபையானது தேவனுடைய ஆவியினாலும் பரிசுத்தத்தினாலும் அன்பினாலும் அதிகமாய் நிரப்பப்பட்டு வருவதால் அது இப்பொழுது மிகவும் வல்லமைபொருந்தியசபையாயிருக்கிறது.

10. பரிசுத்த ஞானபானங்களை ஆண்டவர் திருச்சபைக்குக் கொடுத்தார். ஒருவன் திருச்சபையில் சேர்ந்து பரிசுத்தாவியினால் சுத்திகரிக்கப்படுவதற்கு அடையாளமாக ஞானஸ்நான தீட்சையை நியமித்தார். ஒருவன் கர்த்தருடைய மரணப்பாடுகளை நினைவுகூர்ந்து கர்த்தருக்காகவும் அவரது ஊழியத்திற்காகவும் புதுப்பிரதிக்கினைகள் செய்து பிரதிஷ்டைபண்ணிக்கொள்ளும் சடங்காக நற்கருணையையும் அவர் ஸ்தாபித்தார். "என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்." (லூக். 22: 19.) பூலோகத்திலுள்ள சபையனைத்திற்கும் இதைக் கற்பனையாகக் கொடுத்தார். இதின் மூலமாகத்தான் திருச்சபையானது ஆண்டவரோடே ஐக்கியப்பட்டு நெருங்கிய சம்பந்தமாய் நடந்துவரவேண்டியது.

## தியானம்.

### Meditation.

தேவனுடைய சபை பூமியில் கடைசியாய் ஜெயமடைவதை சந்தேகிக்கக்கூடுமா? தேவனுடைய மாறாத வாக்குத்தத்தத்தினால் தாங்கப்பட்டதும் பரிசுத்தாவியின் சர்வவல்லமையினாலும் அன்பினாலும் உயிர்ப்பிக்கப்பட்டதுமான பரலோகத்தின் நித்திய சத்தியத்தின்மேல் அது கட்டப்பட்டதில்லையா? இவ்விதமாக, அசைக்கப்படக்கூடாத சீயோன் மலைக்கு அது ஒப்பிடப்பட்டிருக்கிறது.

———:o:———

Digitized by Google

## VIII-ம் அதிகாரம்.

## CHAPTER VIII.

## சாத்தானையும் தீய ஆவிகளையும்பற்றி கிறிஸ்து போதித்தது.

## JESUS' TEACHING CONCERNING SATAN AND THE POWERS OF EVIL.

### I-ம் பாடம்.

### STUDY I.

### தீய ஆவிகளின் வல்லமை.

### *The Power of Evil Spirits.*

அசுத்த ஆவிகளுண்டென்றும், அவைகள் இல்லாத இடமில்லையென்றும், அவைகள் உலகத்தில் அதிக முயற்சிசெய்துவருகின்றனவென்றும் இயேசுவானவர் நம்பிவந்தார். இதைக்குறித்து யூதர் கொண்ட கொள்கையை அவர் பொதுவாக ஏற்றுக்கொண்டார். அந்தக் கொள்கைகளில் தகாதவைகளை மாத்திரம் அவர் நீக்கி அவைகளைச் சுத்தப்படுத்தினர்.

இந்தக் கொள்கையின்படி அசுத்த ஆவிகளுள்ள ஒரு இராச்சியமுண்டென்றும், அந்த இராச்சியத்துக்கு சாத்தான் அல்லது பெயல்செபூல் தலைவனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (மத். 12: 26—37.)

சாத்தானுடைய வல்லமை மிகப் பெரியதென்று வேதத்தில் காட்டியிருக்கிறது.

1. உலகத்திலே தனக்கு இராஜரீக அதிகாரம் உண்டென்று அவன் முதலாவது சாதித்தான். கர்த்தனை அவன் சோதித்தபோது, உலகத்தின் இராச்சியங்களையும் அதின் மகிமைகளையும் அவருக்

Digitized by Google

குக் கொடுக்கத்தக்க அதிகாரம் தனக்குண்டென்று சொன்னான். (லூக். 4: 6.) கர்த்தரும் அவனை உலகத்தின் அதிபதியென்று அழைத்தார். (யோ. 14: 30.)

2. சாத்தானுடைய இராச்சியம் தேவனுடைய இராச்சியத்துக்கு நேர்விரோதமென்று ஆண்டவர் காட்டினார். 'தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்யக் கூடாதென்று' சொன்னார். (மத்: 6: 24.)

3. சரீரத்தின் வியாதிகள் அசுத்த ஆவிகளால் உண்டாயிருக்கிறதென்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார். இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக் கட்டிலிருந்து அவிழ்த்துவிடவேண்டியதில்லையா? என்றார். (லூக். 13: 16.) சகலவகையான வியாதிகளும் சரீரத்துக்குள்ளே வசித்த அசுத்த ஆவிகளால் உண்டாயிற்றென்று யூதர் எண்ணிவந்தார்கள். சுத்தமுள்ள ஆத்துமாவைப்போல சுகமுள்ள சரீரமும் தேவனுக்கேற்ற வாசஸ்தலமென்று ஆண்டவர் போதித்தார்.

## தியானம்.

### Meditation.

ஆவிக்குரிய உலகத்தில் மகத்தான யுத்தம் நடந்துகொண்டுவருகிறது. இயேசு அதை அறிந்திருந்தார்; புத்தியுள்ள எந்த மனிதனும் அதை அறிவான். தீமையின் அதிகாரங்கள் ஒரு பெரிய அதிபதியின் கீழ் நடத்தப்படுகிறதென்பது உண்மையும் தெளிவுமானது. பாவம் விசேஷமாய் இருதயத்துக்குரிய காரியம். ஆயினும் நன்மையின் சத்துவங்களைப்போல தீமையின் சத்துவங்களும் ஒரு பெரிய அதிபதியின்கீழ் இருக்கின்றன என்கிற உலக அபிப்பிராயத்தையும் சத்தியவேத போதனையையும், இயேசு சொன்னதையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். நமது ஆவிக்குரிய ஜீவியத்துக்கு ஒரு சிநேகிதன் இருக்கிறதுபோலவே ஒரு சத்துருவும் உண்டு. எக்காலத்திலுமுள்ள போராட்டம் இதுவே. இந்தத் தலைமை சத்துருவின் வஞ்சகமும் வல்லமையுமே ஆவிக்குரிய இந்தப் போராட்டத்தில் நமக்கு அடிக்கடி துக்கத்தைக் கொண்டுவருகின்றன.

———:o:———

Digitized by Google

## II-ம் பாடம்.

## Study II.

## பிசாசு பிடித்தல்.
## Devil Possession.

4. பிசாசு பிடித்தலும் இந்த அசுத்த ஆவிகளால் உண்டாகும் காரியமென்று ஜனங்கள் சாதாரணமாய்ச் சொல்லிவந்தார்கள். ஆண்டவரும் இதை ஒப்புக்கொண்டார். பல சமயங்களில் அவர் பிசாசு பிடித்தவர்களோடே இருந்தார் என்றும், பிசாசுகளைத் துரத்திவிட்டாரென்றும் வாசிக்கிறோம். அவர் கதரேனருடைய நாட்டிலே லேகியோன் என்னப்பட்ட பிசாசைத் துரத்தினதுதான் (மாற். 5: 1—14) இதைக் காட்டத்தக்க விசேஷித்த திருஷ்டாந்தம். இது மிகவும் கவனிக்கப்படத்தக்க சம்பவம். இது நரம்புக்குரிய வியாதியென்று தற்காலத்தில் அநேகர் நினைக்கிறார்கள். இந்தச் சம்பவமோ அந்தக் கொள்கைக்கு நேர்விரோதம். ஆண்டவர் அக்காலத்திலிருந்த ஜனங்களுடைய வீண்பக்திக்கு ஜாடையாய் இடங்கொடுத்துவந்தாரேயொழிய பிசாசுபிடித்தலை அவர் மெய்யாக ஒப்புக்கொண்டதில்லையென்று அநேகர் சாதிப்பார்கள். ஆயினும் இந்தச் சமயத்திலே அவர் பேசிய வார்த்தைகளும் அவர் நடப்பித்த கிரியைகளும் இவர்களுடைய சாதிப்புக்கு முற்றிலும் விரோதமானது. பிசாசு பிடித்தல் மெய்யென்று அவர் ஒப்புக்கொண்டுவந்ததோடு இந்தச் சமயத்திலே அது நிசக்காரியமென்று ருசுப்படுத்துகிறவருமாயிருக்கிறார். ஏனெனில் லேகியோன் ஆவிகள் பன்றிக்குள்ளே நுழையும்படியாக இடங்கொடுத்தார். இதினிமித்தம் அவைகளெல்லாம் கடலில் மாண்டு போயின. ஆண்டவர் உண்மையுள்ளவரென்று நாம் நம்பினால் பிசாசு பிடித்தலுண்டென்று அவர் ஒப்புக்கொண்டதையும் நாம் நம்ப வேண்டும்.

5. இந்தப் பிசாசுகள் மனிதருடைய இருதயத்தில் தீமையை விதைத்து அவர்களுடைய சன்மார்க்க நெறியைக் கெடுத்துப்போடுகிறது. சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோல சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன் என்று ஆண்டவர் பேதுருவுக்குச் சொன்னார். (லூக் 22: 31, 32.) இந்த விஷயத்தில் ஆண்டவர் உவமையாகப்பேசவில்லை. சாத்தான் மெய்யாகவே மனிதருடைய இருதயங்களில் கிரியைசெய்கிறான் என்று அவர் நன்றாய் அறிந்து

Digitized by Google

இப்படிப் பேசினார். தமது சொந்த இருதயத்திலுங்கூட அவன் எத்தனையோதரம் கிரியைசெய்ய வகைதேடினான். தாம் சொன்ன உவமைகளிலேயும் இவனைப்பற்றி அடிக்கடி பேசியிருக்கிறார். ஒருவன் இராச்சியத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது பொல்லாங்கன் வந்து அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான்." (மத். 13: 19.) களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்: அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு என்று சொன்னார். (மத். 13: 38, 39) இவ்விதமாக சோதனையானது மனிதனுடைய துர் இச்சைகளினால் உண்டாகிறதென்று கர்த்தர் காட்டினார். (மாற் 4: 15.) சோதனையானது சாத்தான் மனிதனுடைய இருதயத்தில் பிரவேசிக்கும் வாசல்.

மனிதனுடைய இருதயத்தை விட்டுப்போய் தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைக் கூட்டிக்கொண்டு வந்த அசுத்த ஆவியைப் பற்றிய உவமையையும் பாருங்கள். (மத். 12: 43—45.)

இது மெய்யாகவே பாவப்பழக்கத்தின் வல்லமையைக் காட்டுகிறது ஆயினும் இந்தத் துர்ப்பழக்கங்களுங்கூட அசுத்த ஆவியினாலே உண்டாகி வல்லமையடைந்து வருகிறதென்று நாம் நினைக்கத்தகும்.

## தியானம்.

### MEDITATION.

இந்தியாவில் இப்போது பிசாசுபிடிப்பது நிச்சயந்தானா? இல்லையென்று சொல்லுகிறவர்கள் சொல்லட்டும். பிசாசு பிடித்தவர்கள் என்னப்பட்ட அநேகரை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் தேகத்துக்குரியதும் நரம்புக்குரியதுமான முகாந்திரங்களைக்கொண்டு விஸ்தரிக்க முடியாதவைகளை நான் கண்டதில்லை. ஆயினும், ஜனங்களுடைய சாதாரண எண்ணத்தையும், இந்தியாவில் இப்போது நடந்துவருகிற ஆவிக்குரிய எழுப்புதலில் காணப்பட்ட அநுபவங்களையும் கவனிக்கும்போது, பிசாசு பிடித்தலைப்பற்றித் திட்டமான தீர்மானம் சொல்ல முடியாது. கிழக்கத்தியருடைய மனது பிசாசுபிடித்தலை நம்ப ஏதுவாயிருக்கிறதுபோல எழுப்புதலுக்குரிய அநுபவத்துக்கும் இடங்கொடுப்பதாகத் தோன்றுகிறது. நம்மைச் சுற்றியிருக்கிற மறைவானவைகளும் சத்துவங்களும் உண்டென்று நாம் பணிவான சிந்தையோடு நம்பி, தீமையின் எல்லா வல்லமைகளினின்றும் கர்த்தர் நம்மைக் காக்கும்படி ஜெபிப்போமாக.

———:o:———

Digitized by Google

## III-ம் பாடம்.

## STUDY III.

# இயேசுவும் சாத்தானும்.

## JESUS AND SATAN.

பொய்க்குத் தகப்பன் என்று ஆண்டவர் சாத்தானை அழைத்தார். பொய்யர் யாவரும் அவனுடைய பிள்ளைகள். சகலவித வஞ்சனையும் அவனிடத்திலிருந்தே உற்பத்தியாகிறது. (யோ. 8: 44.) கர்த்தனை அவன் சோதித்த சமயத்தில் செய்ததுபோல அவன் தேவனுடைய வசனங்களை எடுத்துத் தன் காரியத்துக்கு இசைவாக்கி அவைகளைப் பொய்யாக்குகிறான். மேலும் இந்த வஞ்சகன் தன்னை வெண்மையான தூதனைக் காட்டும் வல்லமையுடையவனென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (2 கொரி. 11: 14.)

இதுவுமன்றி சாத்தான் மனுஷ கொலைபாதகனென்றும், ஆவிக்குரிய மரணத்துக்கு அவன் காரணம் என்றும் ஆண்டவர் போதித்தார். (யோ. 8: 44.) கர்த்தர்தானும் சாத்தானோடு எப்போதும் போராடவேண்டியதாயிருந்தது. ஆரம்பத்தில் அவருக்கு வந்த மூன்று சோதனைகள் அவருடைய ஜீவியமுழுவதிலும் அவர் சாத்தானோடு பண்ணிய போராட்டத்தையும் பொல்லாங்கனை எதிர்த்து மேற்கொண்டு வந்த ஜெயத்தையும் காட்டத்தக்கதே. ஒவ்வொரு போராட்டத்திலுமிருந்து அவர் பழுதற்றவராகவும் புதுப்பெலனடைந்தவராகவும் ஊழியத்துக்குப் புறப்பட்டுச் சென்றார். பிசாசின் கிரியைகளை அழிக்கவே ஆண்டவர் உலகத்துக்கு வந்தார். "பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்." (யோ. 3: 8.) இப்பொழுதே இந்த உலகத்திற்கு நியாயத்தீர்ப்புண்டாகிறது. இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான் என்று அவர் சொன்னார். (யோ. 12: 31.) பரிசுத்தாவியின் கிரியையைக்குறித்து அவர், இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டபடியால் நியாயத்தீர்ப்புக்கேதுவாக அவர் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் என்று சொன்னார். சாத்தான் உலகத்தில் நடப்பிக்கும் பலத்த கிரியைகளை சர்வநாசம் செய்வதே அவர் அனுப்பப்பட்டு வந்த நோக்கம். இப்பொழுதும் அவர் தளரா மனதுடனே அவனுடைய கிரியைகளை அழித்துவருகிறார்.


Digitized by Google

உலகத்திலே தீமைகளை அழிக்கும்படிக்குத் தமது சீஷர்களுக்கு அதிகாரத்தையும் வல்லமையையும் கொடுத்தார். (மாற். 16: 17; லூக். 9: 1.)

இதற்குப்பின் 70 சீஷர்கள் தங்கள் சுவிசேஷ வேலையிலிருந்து சந்தோஷத்தோடே திரும்பிவந்து: ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள் (லூக். 10: 17).

இன்னும் நரகலோகமானது பிசாசுகளுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்ட உலகமென்று ஆண்டவர் சொன்னார். அவர்களோடேதான் துன்மார்க்கர் தங்களுக்கு வரப்போகிற துன்பத்தை அனுபவிப்பார்கள். (மத். 25: 41.)

## தியானம்.

### MEDITATION.

இரட்சிப்பின் ஊழியத்திலே, தாம் பொல்லாத ஆவிகளோடு போராடி அவைகளை வல்லமையோடே மேற்கொண்டபடியால் தமது சீஷர்கள் யாவரும் அவ்விதமாகவே ஜெயமடைவார்களென்று ஆண்டவர் வாக்களித்திருக்கிறார். இந்த வாக்கினாலே அவர்களுக்குப்புதிய உற்சாகமுண்டாவதோடு அவரடைந்த ஜெயங்களினாலும், காண்பித்த அனுதாபமான முன்மாதிரிகளினாலும் அவர்களுக்குத் தைரியமுண்டாகும். "ஆதலால் அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார். நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல் எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால் நாம் இரக்கத்தைப்பெறவும், ஏற்ற சமையத்தில் சகாயஞ்செய்யும கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டை சேரக்கடவோம்" (எபி. 2: 18; 4: 15).

# IX-ம் அதிகாரம்.

# CHAPTER IX.

## மறுமையைக்குறித்து இயேசு போதித்தது.

## Jesus' Teaching about the Future.

### I-ம் பாடம்.

### Study I.

### உயிர்த்தெழுதலும் அழியாமையும்.

### *Resurrection and Immortality.*

கர்த்தருடைய மரணத்திற்குப் பின்பு அவர் செய்யும் வேலையைக் குறித்தும், மனிதனுடைய பிற்கால நிலைமையைக்குறித்தும் சில குறிப்புகளை முன்னமே பார்த்திருக்கிறோம். இப்பொழுது மறுமையைக் குறித்து அவர் போதித்த சில பொதுவான குறிப்புகளைக் கவனிப்போம். ஆத்துமாவின் அழியாமையைக்குறித்து இயேசுவானவர் நேராகப் போதிக்கவில்லை. அந்தக்கொள்கையை அவர் எப்போதும் மனதில்வைத்துக்கொண்டே சாவாமையுள்ள ஆத்துமாவுக்கு தேவன் ஆயத்தம்பண்ணியிருக்கிறவைகள் எவையென்று காட்டுகிறார். உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதித்தசதுசேயரோடு அவர் தர்க்கித்தபோது மரித்தவர்கள் இன்னும் இருக்கிறார்களென்று அவர் போதித்தது மெய்தான். அவர்கள் இனி மரிக்கவும் மாட்டார்கள். "அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய் தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள்." மோசே சொன்னதை ஆண்டவர் தொட்டுக்காட்டி, கர்த்தர் ஆபிரகாமின் தேவனென்றும், ஈசாக்கின் தேவனென்றும், யாக்கோபின் தேவனென்றும் சொல்லியிருக்கிறார். அவர் மரித்தோரின் தேவனாயிராமல் ஜீவனுள்ளோரின் தேவனாயிருக்கிறார். எல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களே என்று சொன்னார். (லூக். 20: 38.) மதபேதிகளான இந்தச் சதுசேயரை எதிர்க்கும்போதுதான் மறுமையைப்பற்றி அவர் தர்க்கிக்க நேரிட்டது.

Digitized by Google

பழைய ஏற்பாடுங்கூட மறுமையைக் குறித்துச் சொன்னது வெகு சொற்பம். அதன் எச்சரிப்புகளும், ஏவுதல்களும் பொதுவாக இம்மைக்குரியவைகளேயொழிய மறுமைக்கடுத்தவைகளல்ல.

கிறிஸ்து உலகத்தில் வந்திருந்தபோது, மறுமையைப்பற்றி பரிசேயருக்குள் சில கொள்கைகள் பரம்பியிருந்தன. இயேசு இந்தக் கொள்கைகளில் தகாதவைகளைத் தள்ளி மீதியான பாகத்தை ஏற்றுக் கொண்டார்.

சகலரும் தங்கள் தங்கள் பிரேதக்குழிகளிலிருந்து எழும்பி இவ்வுலகத்தின் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்பு அடைவார்களென்று இயேசு போதித்தார். "அப்பொழுது நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்." (யோ. 5: 29). சீஷர்களுடைய உயிர்த்தெழுதலின் ஜீவியத்தைத் தம்முடைய உயிர்த்தெழுதலோடு சம்பந்தப்படுத்தி ஆண்டவர் பேசினார். "நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்." (யோ. 14: 19.) சீஷர்களின் உயிர்த்தெழுதலும் ஜீவனும் தாமேயென்று சொன்னார். நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருந்து விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான் என்றார். (யோ. 11: 25, 26.)

இந்த வாக்கியங்களை நாம் கவனிக்கும்போது, மனுஷனுடைய மறுமைக்குரிய ஜீவியம் கிறிஸ்துவின் ஜீவன்பேரில் ஸ்தாபிக்கப்பட்டதாயும் அதின் பாகமாயும் இருக்கிறதென்று நாம் நினைக்கவேண்டியதாயிருக்கிறது.

## தியானம்.

### MEDITATION.

கிறிஸ்து உலகத்துக்கு வந்த சமயத்தில் நித்தியத்தைப்பற்றி ஒன்றும் தெளிவாயிருந்ததில்லை. பூர்வீகத் தீர்க்கதரிசிகளின் போதனையை இயேசுவின் போதனையோடு ஒப்பிட்டு இரண்டுக்குமுள்ள வித்தியாசத்தைப்பார். இவர்தான் முதல் முதலாக நித்தியத்தின் இருளை நீக்கி முடிவற்ற ஜீவியத்தின் பாக்கியத்தை வெளிப்படுத்தினார். நித்திய ஜீவனுக்கு இவரே உற்பத்தியும் வல்லமையுமானவரென்பதை நாம் அறியும்போது இது ஆச்சரியமல்ல. அழிவில்லாப் பாக்கியம் அவர் கொடுக்கவந்த ஈவு. அவர் சமுகத்தில் அதை அநுபவிக்கலாம்.

———:o:———

Digitized by Google

## II-ம் பாடம்.
## Study II.

# பக்தரின் பின்னிலைமை.
## The Future of the Godly.

இந்த ஜீவியத்தைக் குறித்து ஆண்டவர் தெளிவாய்ப்போதித்தார்.

1. ஆண்டவர் தமக்குச் சொந்தமானவர்களுக்கு வாக்குப்பண்ணியதும் கொடுத்ததுமான இந்த ஜீவன் தன்னறிவும் பிரத்தியேகமான இருப்புமற்ற புத்தமதத்தைச் சேர்ந்த நிர்வாணதசையுமல்ல, இந்துமதத்தைச் சேர்ந்த சாயுச்சியபதவியுமல்ல. அது பிரத்தியேகமானதும் பாக்கியம் நிறைந்ததும் வல்லமைபொருந்தியதுமான ஜீவன். அது பரிபூரண ஜீவன் என்று ஆண்டவர் சொன்னார். (யோ. 10: 10.) இது ஆசீர்வாதமும், இன்பமும், ஓயாத சந்தோஷமும், நன்றியறிதலான ஊழியமும் நிறைந்த ஜீவன். இது மரணத்தோடே நின்றுவிடாமல் யாவருக்கும் களங்கமற்ற பாக்கியத்தைக் கொடுக்கத்தக்கதாக மென்மேலும் பெருகிக்கொண்டேவரும்.

2. ஒவ்வொருவனும் தன்தன் ஜீவியத்தில் காண்பித்த உண்மைக்குத் தக்கதாக ஆசீர்வாதங்களைப் பெறுவானென்று ஆண்டவர் போதித்தார்.

இராத்தலின் உவமையைப் பாருங்கள். (லூக். 19: 16.) இங்கே ஒருவன் கொஞ்சத்தில் உண்மையாயிருந்தால் அங்கே அவனுக்கு அதிக சந்தோஷங் கிடைக்கும். அப்படியே தாலந்தின் உவமையில் இம்மையில் கிடைத்திருக்கும் கிருபையின் சிலாக்கியங்களை ஒருவன் உண்மையாய் உபயோகித்தால் அதுவே மறுமைக்குரிய ஜீவனுள்ள செல்வத்திற்கும் அதினுடைய உபயோகத்திற்கும் மூலமாயிருக்குமென்று ஆண்டவர் காட்டினார்.

3. இம்மையில் உண்மையான ஊழியஞ்செய்தவர்கள் மறுமையில் தங்கள் ஊழியத்தை முற்றும் விட்டு இளைப்பாறுவார்கள் என்று ஆண்டவர் போதிக்கவில்லை. இதைவிட அவர்கள் அங்கே மேலான ஊழியஞ்செய்யவேண்டும். நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே என்ற இனியவார்த்தைகளோடுங்கூட அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன் என்ற வார்த்தைகளையும் ஆண்டவர் சேர்த்துச் சொன்னார். (மத். 25: 23.)

Digitized by Google

பத்துப்பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றும் அவர் சொன்னார். (லூக். 19: 17.) ஊழியஞ் செய்வதிலும் இளைப்பாறுதல் உண்டு. வேலையைவிட்டு நீங்கலாயிருப்பதல்ல, வேலைசெய்துகொண்டே இளைப்பாறுவதுதான் நமக்குக் கிடைக்கும் பிரதிபலன். ஊழியத்தின் நற்பலனை இம்மையில் சீஷனுக்குச் சொல்லிமுடியாத சந்தோஷம் உண்டாகும். அந்தப்பாக்கியம் மரணத்தோடு நின்றுவிடாமல் மறுமையிலும் நித்தியகாலமாய் நீடித்து மகிமைப்படுத்தப்படும். சோம்பேறிகளுக்கு மறுமையில் கிரீடமாவது கீதவாத்தியமாவது கிடையாது.

## தியானம்.

## MEDITATION.

*நாம் எதிர்பார்க்கிற மோட்சம் இந்துக்களின் மோட்சத்துக்கும், வேலையினின்று இளைப்பாறுதல் கிடைக்குமென்று நமது பிதாக்கள் நம்பிக்கொண்டிருந்த மோட்சத்துக்கும் வித்தியாசமானது. ஊழியத்தினின்று ஓய்ந்திருப்பதையல்ல, மேலான ஊழியத்தையே தேடுகிறோம். நாம் புது முயற்சிக்குள்ளாவதோடு உசித சமயமும் பொறுப்பும் நமக்குக் கொடுக்கப்படும். தேவனுடைய இராச்சியத்தைப்பற்றி இப்போது நமக்கிருக்கும் கவலைகளும் கரிசனைகளும் இன்பமாக்கப்படும். குறைந்துபோகாது. சொல்லிமுடியாத சந்தோஷமாக அவைகள் மாறும்.*

*நமது ஆண்டவரால் தெரிந்தெடுக்கப்பட்ட இந்த மேலான ஊழியத்துக்கு நாம் ஏற்றவர்களாயிருக்கும்படி இப்போது நாம் ஜீவிக்கிறோமா?*

———:o:———

## III-ம் பாடம்.

## STUDY III.

## பக்தரின் பின்னிலைமை (தொடர்ச்சி).

## THE FUTURE OF THE GODLY (*Continued*).

4. மறுமைக்குரிய இந்த ஜீவியம் நித்தியகாலமுள்ளது. இது பிதாவினாலும் கிறிஸ்துவினாலும் வாக்குத்தத்தஞ்செய்யப்பட்ட நித்திய ஜீவன். "நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன் அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்ளுவதுமில்லை. அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார். அவைகளை

Digitized by Google

என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலுங்கூடாது." (யோ. 10: 28, 29). மோட்சலோகத்தில் நித்தியகாலமாய் நீடித்திருக்கும் இந்த ஜீவியத்தைக் குறித்த இரட்டிப்பான வாக்குத்தத்தம் கர்த்தரால் மனிதருக்குக்கிடைத்த சிலாக்கியமே.

பிதாவும் குமாரனுமாகிய தேவனுடைய உள்ளங்கைகளில் மறைத்துவைக்கப்பட்டிருந்த இந்த ஜீவன் நித்திய நித்தியகாலமாய் நிலைத்திருக்கும்.

5. இது ஆத்துமாவும் சரீரமும் ஐக்கியமாய்ச் சேரும் ஜீவன். ஸ்தூலத்துக்கடுத்த சகல அழுக்குகளினின்றும் சரீரம் சுத்திகரிக்கப்பட்டு மீட்டுக்கொள்ளப்பட்ட நித்திய ஆத்துமாவுக்கு ஏற்ற ஆலயமாயிருக்கும். சரீரத்தோடு சேராத ஆத்துமாவைப்பற்றி நமக்கு ஒன்றும் திட்டமாய்த் தெரியாது. கடைசி நிலைமையில் ஆத்துமா இருக்கும்போது சரீரம் அதற்குச் செய்யும் ஊழியத்தின் அவசியம் இன்னதென்றும் நமக்குத் தெரியாது. தேவனுடைய சமுகத்திலே அது சதாகாலமாய் வசிக்கத்தக்கதென்று மாத்திரம் அறிவோம். இதுவே நமக்குப் போதுமானது.

6 இந்தப் பரம ஜீவனுடைய மேலான தன்மையைப் பாருங்கள். இது இவ்வுலகத்துக்குரிய சம்பந்தமல்ல. ஆண்டவர் இந்த ஜீவனைப் பற்றிப்பேசினபோது, மறுமையையும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ பெண் கொள்வதுமில்லை, கொடுப்பதுமில்லை, அவர்கள் இனி மரிக்கவும்மாட்டார்கள். அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய் தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள் என்றார். (லூக். 20: 35, 36.) தேவதூதருடைய ஜீவியத்தைக்குறித்தும், பரிசுத்தமும் உன்னதமுமான அந்த சம்பந்தங்களைக் குறித்தும் நமக்கு அதிகம் தெரியாது. ஒன்று மாத்திரம் நமக்குத் தெரியும். இம்மைக்குரிய ஸ்தூலத்தின் தன்மை முற்றும் நீங்கிப் போகும். ஸ்தூலசம்பந்தம் முற்றும் பரலோகத்தில் காணப்படமாட்டாது. எல்லாம் ஆவிக்குரிய ஜீவனாயிருக்கும்.

## தியானம்.

### MEDITATION.

"அன்பின் அப்போஸ்தலன்" சொல்லும் ஆச்சரியமான வார்த்தைகளைக் கவனி. "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவருக்கு ஒப்பாயிருப்போம்." மறுமையின் அளவற்ற ஐசுவரியம்! இப்போது நாம் புத்திரர், அப்போது மறுமையில் என்ன? நாம் அறியோம். புத்திரராய் இருப்பதைப்பார்க்கிலும் அதிக

Digitized by Google

அருமையும் மகிமையுமான சம்பந்தம், தேவனுக்கும் நமக்கும் இருக்குமென்பது வெளியாகும். இந்த சம்பந்தத்தின் மெய்யான அடையாளம் நமது ஆண்டவருக்கு ஒப்பாயிருப்பதே. நித்தியகாலமெல்லாம் அது ஆத்துமாவைத் திருப்தி செய்யும். உலக சம்பந்தத்தின் இன்பம் அற்றுப்போம். பரம சம்பந்தமே இருதயத்தின் பேராசையாகும்.

——:o.——

## IV-ம் பாடம்.

## Study IV.

## பக்தரின் பின்னிலைமை (முடிவு).

## The Future of the Godly (*Concluded*).

7. இந்த ஜீவியம் கிறிஸ்துவோடேகூட ஜீவிக்கும் ஜீவியமாயிருக்கும். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்........ நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன் என்று ஆண்டவர் சொன்னுர். (யோ. 14: 2, 3.)

பத்துக்கன்னிகளைக் குறித்த உவமையில், புத்தியுள்ள கன்னிகைகள் மணவாளனோடேகூட கலியாண வீட்டிற்குள் பிரவேசித்தார்கள். உண்மையுள்ள ஊழியக்காரனைப் பார்த்து ஆண்டவர்: "உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று சொன்னுர். (மத். 25: 10—21.) கிறிஸ்துவின் சமுகத்தில் தங்கி அவரது திவ்விய பிரசன்னத்தை அனுபவித்து அதிலிருந்து உண்டாகும் ஒளியையும் ஜீவனையும் பெற்று ஜீவிப்பதே மறுமையில் நமக்குக் கிடைக்கும் பரிபூரண பாக்கியம்

8. இது மோட்சலோகமே. இந்துக்களும் புத்தமார்க்கத்தாரும் தங்கள் மதங்களில் பலவகைப்பட்ட படிப்படியான மோட்சலோகங்கள் உண்டென்று சொல்லுகிறுர்கள். அவை நிலையான ஸ்தலங்களல்ல. ஆண்டவர் தமது பிள்ளைகளுக்கு வாக்குப்பண்ணிய ஸ்தலமோ முடிவற்ற பாக்கியம் நிறைந்த மோட்சலோகந்தான் ஒரேயொரு மோட்சலோகமுண்டென்று அவர் போதித்தாரேயொழிய பல ஸ்தலங்களைப்பற்றி அவர் பேசவில்லை. அவருக்குச் சொந்தமான யாவரும் இந்த லோகத்தில் பிரவேசித்து இதின் பாக்கியங்களைப் பரிபூரணமாய் அறியும்படிக்கு அதின் வாசல் திறந்துவைக்கப்பட்டிருக்கும்.

Digitized by Google

மோட்சலோகமே என் இராச்சியமென்று ஆண்டவர் சொன்னார். (மத். 25: 34). இந்த இராச்சியத்திலே அவர் எந்தத் தடையுமின்றி அரசாளுகிறார். அதிர்ப்தியும் அறிவுமற்ற ஆத்துமா அங்கே கிடையாது.

இது அநேக வாசஸ்தலங்களுள்ள என் பிதாவின் வீடு என்று ஆண்டவர் உரைத்தார். (யோ. 14: 2.)

நாம் பார்த்தபடிக்கு இது கலியாண விருந்துசாலை யென்றும் ஆண்டவர் உவமையாகச் சொன்னார். மணவாளனே அதின் இன்பமும் ஒளியுமாயிருக்கிறார்.

வேதத்தின் மற்ற பாகங்களில் இது பரலோக கானான் என்றும், பரம எருசலேம் என்றும் அழைக்கப்படுகிறது இதின் அலங்காரத்தையும் இதின் பாக்கிய சந்தோஷங்களையும் மனுஷ பாஷையினால் விபரிக்க முடியாது. சகலவிதமான ஆறுதலையும் சந்தோஷத்தையும் ஆசீர்வாதங்களையும் இது குறிக்கும். பரலோகத்தைத் தரிசிக்கும் இந்தத் தரிசனங்களெல்லாம் மறுமையைக்குறித்து நமக்குத்திட்டமாயும் தெளிவாயும் காட்டமாட்டாது. தேவனுடைய பிள்ளைகளுக்கென்று ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இந்த நித்திய சுதந்தரம் நமது புத்திக்கு எட்டாதது. ஆயினும் அது தன்னறிவுள்ள இன்பமும், சந்தோஷமான முயற்சியும், உற்சாகமான ஊழியமும், தேவனோடு ஐக்கியமான துதியும் நிறைந்த லோகமாயிருக்கும்.

## தியானம்.

### Meditation.

மோட்ச மண்டலத்திலுள்ள
மாட்சிமை என் பாக்கியம்,
க்றிஸ்து என்னும் நேசமுள்ள
ரட்சகர் என் பொக்கிஷம்;
மோட்சலோக
நன்மையே என் ஆறுதல்.

அந்த மோட்ச மண்டலத்தில்
நான் என் பங்கடையவே
நீர் தான் இவ்வனாந்தரத்தில்
நீங்கிடாச் சகாயரே,
நான் என்றைக்கும்
உம்முடன் இருப்பேனே.

———:O:———

## V-ம் பாடம்.
## STUDY V.

## அவபக்தரின் பின்னிலைமை.
## THE FUTURE OF THE WICKED.

துன்மார்க்கரின் லோகமாகிய நரகத்தைப்பற்றியும் ஆண்டவர் பலமான சில குறிப்புகளைச் சொல்லியிருக்கிறுர். இம்மையில் கர்த்தனை அசட்டைபண்ணினவர்களுக்கு வரும் நிர்ப்பாக்கியங்களைக் குறித்து அவைகள் சுருக்கமாய்க் காட்டுகின்றன.

1. அது புறக்கணித்துத் தள்ளப்பட்டவர்களுடைய ஸ்தலம். தேவனிடத்திலிருந்தும் ஜனங்களிடத்திலிருந்தும் நன்மையான யாவற்றிலுமிருந்தும் பிரிக்கப்பட்டவர்களின் இடம். பிரயோஜனமற்ற ஊழியக்காரனுகிய இவனைப் புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள் என்று ஆண்டவர் சொன்னுர். (மத். 25: 30.) மனிதன் சகல விதமான சந்தோஷங்கள், உதவிகள், உற்சாகங்கள், அனுதாபங்களிலிருந்து பிரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிலும் அதிகப் பயங்கரமான வேறு நிலைமையில்லை

2. இப்படி அவன் தள்ளப்பட்டிருப்பது அவனுக்குச் சஞ்சலத்தையும், ஆருத் துன்பத்தையும் உண்டாக்கும். அழுகையும் பற்கடிப்பும் என்றும், நித்திய அக்கினி, சாவாத புழு என்றும் இதைக்குறித்துச் சொல்லியிருக்கிறது. (மத். 25: 41.) இவைகள் மனச்சாட்சியின் கடும் வேதனையையும், ஆத்துமாவை ஓயாமல் வாதித்துக்கொண்டிருக்கிற துர் இச்சைகளின் அகோரத்தையும் காட்டுகிற ஒப்பனையான வார்த்தைகள்தான்.

3. துன்பம் நிறைந்த இந்த லோகத்திலே படிப்படியான ஆக்கினைகள் உண்டென்றும் நாம் பார்க்கிறோம். "தன் எஜமானுடைய சித்தத்தையறிந்தும் ஆயத்தமாயிராமலும் அவனுடைய சித்தத்தின் படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான். அறியாதவனுயிருந்து அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனே சில அடிகள் அடிக்கப்படுவான்." (லூக். 12: 47, 48.) பரலோகத்தில் பல அளவான பாக்கிய சிலாக்கியங்கள் இருக்கிறதெப்படியோ அப்படியே நரகலோகத்திலும் அவனவன் குற்றத்துக்குத் தக்கதாக பல மட்டுள்ள ஆக்கினைகள் உண்டு.

இது நீங்காத நித்திய சதாகாலத் தண்டனை.

Digitized by Google

ஆண்டவர் திருவுளம்பற்றிய வசனங்களின் கருத்தை உற்றுக் கவனிப்போமானால், விசுவாசிகளுக்கு வரும் ஆசீர்வாதமும், அவிசுவாசிகளுக்கு வரும் தண்டனையும் முடிவில்லாதவையென்றும் கருத்துள்ளவைகளேயல்லாமல் வேறொரு கருத்து அவைகளில் விளங்காது. அவருடைய வார்த்தைகளெல்லாம் நித்தியத்துக்கு அடுத்தது.

இதைக்குறித்து அவர் நித்திய ஆக்கினையென்றும் (மத். 25: 46). அவியாத அக்கினி யென்றும், அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலும் இருக்கும் என்றும் (மாற். 9: 45, 46). சொல்லுகிறார்.

இவைகளுக்கு ஒரேயொரு கருத்துமாத்திரம் உண்டு. அவிசுவாசியாய் மரிக்கிற ஒவ்வொருவனுக்கும் இந்த வார்த்தைகள் எந்த ஆறுதலையும் நம்பிக்கையையும் கொடாது. ஐசுவரியவானையும், லாசருவையும் பற்றிய உவமையும் இதையே காட்டும். இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும் அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்று ஆபிரகாம் சொன்னதாக ஆண்டவர் சொன்னார். (லூக். 16: 26) பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்ச் செய்யும் பாவத்தைக்குறித்து அவர் சொன்ன வார்த்தைகளும் பயங்கரமானவைகளே. "எவனாலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். எவனாகிலும் பரிசுத்தஆவிக்கு விரோதமாகப்பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை" (மத். 12: 32). நரகலோகத்தின் பாழ்க்கடிப்புகளினால் சூழப்பட்ட ஒரு மனுஷன் பாவமன்னிப்பைத் தேடமாட்டான். தன் சிருஷ்டி கர்த்தாவுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்வதை விடவுமாட்டான்.

## தியானம்.

## MEDITATION.

பிரிப்பதற்கு பெரிய நாள் வரும். நன்மையினின்றோ அல்லது தீமையினின்றோ அந்நாள் நம்மைப் பிரிக்கும். மாறாத் தீர்ப்பும் நித்திய ஆக்கினையும் கிடைக்கும். பாவிக்குக் கொடுக்கப்படும் இந்த நித்தியதீர்ப்பின் காட்சி எல்லாக் காட்சியிலும் மிகவும் பயங்கரமானது. தேவனிடத்திலிருந்தும், எல்லாப் பக்தரிடத்திலிருந்தும், வெளிச்சம் அலங்காரமுள்ளவைகளெல்லாவற்றினின்றும், பூமியின் ஜீவியத்துக்கு இன்பத்தையும் ஆறுதலையும் கொடுத்த எல்லாவற்றினின்றும் அறுதியாய்ப் பிரிக்கப்பட்டு, இழிவும் அருவருப்புமுள்ள எல்லாவற்றோடும் நித்திய சம்பந்தத்துக்குள்ளாவது எவ்வளவு பயங்கரம் ! இதுதான் நரகம். ஐயோ, இலட்சக்கணக்காணபேர், பிடிவாதமாய் வேண்டுமென்று இந்த ஆக்கினையைத் தெரிந்துகொள்ளுகிறார்களே !

Digitized by Google

## VI-ம் பாடம்.

## STUDY VI.

### அவபக்தரின் பின்னிலைமை (முடிவு).

### THE FUTURE OF THE WICKED (*Concluded*).

இந்த உபதேசம் கடினமானதுதான். இதை விசுவாசிப்பதும் இதைப்பற்றிப் போதிப்பதும் நமக்கு வருத்தம். இதினிமித்தம் அநேகர் இந்த உபதேசத்தை மறுத்துத்திரிகிறார்கள் அநேகர் இதை பலவிதமாய் வியாக்கியானம்பண்ணி, அதின் பயங்கரத்தைக் குறைக்கப்பார்க்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டில் வழங்கும் அழிவு என்னும் பதத்தை சுத்த சூனியமாய்ப் போகுதல் என்று சிலர் வியாக்கியானம்பண்ணி, ஜீவனெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள்ளிருக்கிறது, இயற்கையின்படியே மனுஷன் சாவாமையுள்ளவனல்லவென்று சாதிக்கிறார்கள். விசுவாசத்தினாலே கிறிஸ்துவின் ஜீவவித்தைப் பெற்றவன்மாத்திரம் மரணத்திற்குப்பின் ஜீவிப்பான். மற்றவர்கள் யாவரும் தண்டிக்கப்பட்டு படிப்படியே அற்றுப்போவார்களென்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

மறுமையிலே சகலரும் இரட்சிக்கப்படுவார்கள் என்பது இன்னொரு வகையான கொள்கை. எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தைசொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப்பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை. (மத். 12: 32.) என்கிற வசனத்தையும் இதைப்போன்ற வேறு வசனங்களையும் அவர்கள் தங்களுக்கு ஆதாரமாக வைத்துக்கொண்டு, தகப்பன் தன் பிள்ளைகளைச் சதாகாலமாய்த் தண்டித்து என்றென்றைக்கும் தள்ளிப்போடமாட்டார்; அவரது கிருபை, அன்பு அளவற்றது; பாவியாய்ப்போனபோதிலும் முடிவிலே ஆண்டவர் அவர்களை இர

Digitized by Google

ட்சித்துக்கொள்வார் என்று சாதிக்கிறார்கள். நான் உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடமாக இழுத்துக்கொள்வேன் என்று ஆண்டவர் சொன்னபோது மனுக்குலத்தார் யாவரும் இறுதியிலே இரட்சிக்கப்பட்டுப் போவார்கள் என்று சொன்னதாக அவர்கள் தாற்பரியங்கொள்ளுகிறார்கள்.

எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் என்னுங் கொள்கை மெய்யானால் அது நம்மனைவருக்கும் பிரியந்தான். ஆகிலும் ஆண்டவருடைய கருத்துக்கும் போதகத்துக்கும் முற்றிலும் விரோதம். அவபக்தியுள்ளவர்களுக்கு வரும் பலனைக்குறித்து அவர் சொல்லிய வார்த்தைகள் மிகவும் பயங்கரமும் அவ்வளவு தெளிவுமாயிருக்கிறது.

இது மனுஷருக்குத் துக்கத்தையும் திகிலையும் உண்டாக்கிற உபதேசமாயிருந்தாலும் நித்திய காலத்திற்கு நித்திய தண்டனை வருவது நீதிக்கும் புத்திக்கும் விரோதமல்லவென்று அது தெளிவாய்க்காட்டும். ஏனென்றால் ஒருவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்த் தூஷணஞ்சொல்லுவானானால் அவன் என்றென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக் (மூலபாஷையின் அர்த்தம்) குள்ளாயிருப்பான் என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார் (மாற் 3: 29.) ஒருவன் எவ்வளவு காலமாகப் பாவத்தில் நிலைத்திருக்கிறானோ அவ்வளவு காலமாத்திரம் இந்தத் தண்டனை நீடிக்கவேண்டுமென்பது நியாயத்துக்கு விரோதமல்ல அவபக்தருக்கு வரும் பலனைக்குறித்து ஆண்டவர் சொன்ன வார்த்தைகளை வாசித்தறிகிற எவனும் அது மகாபயங்கரமும் துக்கம் நிறைந்ததுமான காட்சியாயிருக்கிறதென்று உணராதிரான். வேறொருவரும் நேசிக்காத அளவாக மனிதர்பேரில் அன்புகூர்ந்து அவர்களுக்காக மரித்தவரே இப்படிச் சொன்னார். முரட்டாட்டமான இந்தச் சந்ததிக்கு ஜீவனைக் கொடுக்கும்படிக்கு அவர் தம்மைத் தாமே மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தாரே.

நரகவேதனையின் பயங்கரமான காட்சியைக் கவனிப்பதைப் பார்க்கிலும்மோட்சலோகத்தின் இன்பசந்தோஷங்களை நாம் கவனிப்

Digitized by Google

பதே அதிக இன்பம். நமது கர்த்தராகிய இயேசுவில் விசுவாசம் வைக்கிற யாவருக்கும் பரம பிதாவின் சமுகத்திலே நிச்சயமும் நித்தியமுமான சந்தோஷம் உண்டு.

## தியானம்.
## MEDITATION.

இதை வாசிக்கிற சிநேகிதனே, கிறிஸ்துவைக்குறித்தும் அவர் உபதேசத்தைக்குறித்தும் நீ என்ன நினைக்கிறாயோ அதே நித்தியத்துக்குரிய உன் முடிவைத் தீர்மானிக்கும் என்பதை நினைத்துக்கொள். கிறிஸ்துவைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்? உன்னைப்பற்றியும் உன் நடக்கையைப்பற்றியும் அவர் என்ன நினைக்கிறார்?

நித்தியமே! நித்தியமே!
உன் கால் நீளம் என்னவோ!
தேவன் இருக்கும் வரைக்கும்
நரகாக்கினையும், துன்பும்
மோட்ச இன்பமும் பாக்கியமும்
சதாகாலமும் இருக்கும்
ஆத்துமாவே, நித்தியத்தை நினை.

முற்றிற்று.

Printed at the A. M. Lenox Press, Pasumalai—1908.

Digitized by Google

# Pasumalai Tamil Devotional Booklet Se

| | | | |
|---|---|---|---|
| No. | 1. | The Still Hour (Exhausted) ... ... | *Phelps.* |
| ,, | 2. | A Manual of Intercession ... ... | *Murray* |
| ,, | 3. | A Spiritual Awakening (3rd Edition) ... | *Finney.* |
| ,, | 4. | The Spirit of Pentecost ... ... | ,, |
| ,, | 5. | The Changed Life (2nd Edition) ... | *Drumm* |
| ,, | 6. | Humility (3rd Edition) ... ... | *Murray.* |
| ,, | 7. | The Greatest Thing in the World (2nd Edition) ... ... | *Drummond.* |
| ,, | 8. | The Old Life of the Flesh and the New Life of the Spirit ... ... | *Meyer.* |
| ,, | 9. | A Holy Life (2nd Edition) ... ... | *Macgregor.* |
| ,, | 10. | Safety, Certainty, and Enjoyment ... | |
| ,, | 11. | The Model Christian Worker (2nd Edition) ... ... | *Eddy.* |
| ,, | 12. | The Winning of Souls (2nd Edition) ... | *Carmichael.* |
| ,, | 13. | On Being a Christian ... ... | *Gladden* |
| ,, | 14. | The Song of our Syrian Guest ... ... | *Knight.* |
| ,, | 15. | The Cross-Bearer (2nd Edition) ... ... | |
| ,, | 16. | Spiritual Songs for Revival Meetings (2nd Edition) ... ... | *V. Santiago.* |
| ,, | 17. | Quiet Talks on Power ... ... | *Gordon.* |
| ,, | 18. | Tithe Giving and its Blessings ... ... | *Wharton.* |
| ,, | 19. | The Teaching of Jesus ... ... | *J. P. Jones.* |

| | | Single Copies. | 100 Copies. |
|---|---|---|---|
| Nos. 5, 7, 10 ... ... | Paper Cover | As. ½ | Rs. 2 |
| | Stiff ,, | ,, 1 | ,, 4 |
| | Cloth ,, | ,, 1½ | ,, 7 |
| Nos. 2, 3, 4, 11, 12, 13, 15, 16, 17, 18. | Paper Cover | ,, 1 | ,, 4 |
| | Stiff ,, | ,, 1½ | ,, 6 |
| | Cloth ,, | ,, 2 | ,, 9 |
| Nos. 6, 8, 9 ... ... | Paper Cover | ,, 2 | ,, 8 |
| | Stiff ,, | ,, 2½ | ,, 10 |
| | Cloth ,, | ,, 3 | ,, 14 |
| No. 14 ... ... ... | Paper Cover, | Pies 2 | 10 As. |

No. 19 { Half bound 6 As. each, per dozen Rs. 4-0-0.
Full cloth 7 ,, ,, ,, ,, ,, 4-8-0.

***Address to Rev. J. P. JONES, D.D.,***
***Pasumalai.***

Digitized by Google